# மஹா பெரியவாள் விருந்து

ரா. கணபதி

திவ்ய வித்யா ட்ரஸ்ட்
106/1, ஹபிபுல்லா ரோடு, தி.நகர்,
சென்னை — 600 017.

முதற்பதிப்பு: அக்டோபர் 1994

விலை: ரூ. 18/-

கிடைக்குமிடம்

பவானி புக் சென்டர்
19, ஸ்டேஷன் ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

அச்சிட்டோர்:

ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ்
158/12, லேக்வியூ ரோடு,
சென்னை – 600 033.



# பதிப்புரை

நமக்கு வெகு அருகிலிருந்து, அன்பான உபசரிப்புடன், நாம் விரும்பும் பொருளை நம்மை உட்கொள்ளச் செய்பவரைத்தானே நாம் விருந்து படைக்கிறார் என்று சிலாகித்து சொல்கிறோம்? மஹா பெரியவாள், நம்முடன் வெகு சமீபத்திலிருந்து நமக்காக சமைத்து அருளிய கருத்துக்களை இங்கு பரிமாறுகிறார், ஆசிரியர் ஸ்ரீ ரா.கணபதி அவர்கள். 'தெய்வத்தின் குரலை' கேட்கும் பாக்கியம் ஏற்படுத்தியவர், தெய்வத்தின் உபசரிப்பில் திளைக்கச் செய்கிறார் இந்நூல் மூலமாக.

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களை நேரில் தரிசித்து அவருடன் சம்பாஷணை செய்தவர்களுக்கு, ஸ்ரீ ரா. கணபதியின் உரைநடையில், அந்த மஹா புருஷருடன் மீண்டும் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் உணர்வு கிட்டும். அப்படி நேரில் காணாத, வரும் தலை முறையினருக்கு இந்நூல் அத்தொடர்பை ஏற்படுத்தித் தரும் அரிய பொக்கிஷம்.

பகவான் ஸ்ரீ ஸத்யஸாயி பாபாவின் நல்லாசிகளுடன் தொடங்கப் பெற்று அவரைக் குறித்த ஸ்ரீ ரா. கணபதியின் நூல்களை வெளியிடும் திவ்ய வித்யா டிரஸ்டினருக்கு ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்கள் குறித்த நூல்களில் முதலாவதாக இந்த 'மஹா பெரியவாள் விருந்'தினை வினியோகிக்கும் பாக்கியம் கிடைத்திருப்பதை அவ்விரு மஹா புருஷர்களின் சித்த அநுக்கிரஹமென்றே உணர்கின்றோம்.

மிகக் குறைந்த காலத்தில் அட்டையை அலங்கரிக்கும் ரம்மியமான ஓவியத்தை வரைந்து தந்த ஓவியர் வினு அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி. சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த சுரபி அச்சகத்திற்கு எங்கள் நன்றி கலந்த வாழ்த்துக்கள். வாசகர்களுக்கு மனம் கனிந்த அன்பு.

அறங்காவலர்கள்
திவ்ய வித்யா டிரஸ்ட்

# முகவுரை

அக்ஷய பாத்திரமான அருளிதயத்திலிருந்து அந்த மஹாவதார மஹா பெரியவாள்தான் அன்றன்றும் எத்தனை அரிய விருந்துகள் படைத்திருக்கிறார்? பட்டமேற்ற பதின்மூன்றாம் பிராயத்திலிருந்து பர வியோமமான நூறாம் பிராயம் வரை எண்பத்தேழு நீண்ட ஆண்டுகளில் நித நிதமும் அவரிடமிருந்து வையத்தின் வித வித மாந்தர் வகை வகையான விருந்துகள் பெற்றனர். அறுசுவைப் பொருள் களைக் கொண்டு நூறு நூறு தின்பண்டங்கள் தயாரிப்பது போல நவரஸ மானுடரைக் கொண்டு அவர் ஆயிரமாயிரம் நிகழ்ச்சிகளை உருவாக்கினார். நவரஸத்திற்கும் மேற்பட்ட அவரது பிரேமாமுதத்தில் பிசைந்து உருவானவை, கணக்கெடுத்து மாளாத அந்த அருள் நிகழ்ச்சிகள். 'கணக்கெடுத்து மாளாத' என்பது மிகைபடக் கூறலே அல்ல; யதார்த்த ஸத்தியம்.

மிகப் பெரும்பாலான நிகழ்ச்சிகள் வெளியுலகுக்குத் தெரிய வராமல் அருள் பெற்ற நபர், அவரது குடும்ப வட்டம் ஆகியவற்றோடேயே முடிந்து போயிருக்கும். அது மட்டுமில்லை. தாங்கள் செய்யாததையெல்லாம் செய்ததாக மார் தட்டிக் கொள்வதே பொதுவியல்பாக உள்ள இவ்வுலகில் தாம் செய்த அருஞ் செயல்களில் தமக்குத் தொடர்பே இல்லாததுபோல மறைத்து வாழ்ந்த அந்த எளிமையவதாரர் எத்தனையோ நபர்களுக்கு அவர்களுமே அறியாதவாறு புரிந்த அருள் லீலைகளும் எத்தனையோ இருக்கும்.

ஆக, கல்வித் தெய்வமாம் சாரதையே ஸர்வகாலமும் எழுதினாலுங்கூட ஈசனின் குணமகிமைக்கு எல்லை காண முடியாது என்று புஷ்பதந்தன் பாடியது ஸ்ரீ பெரியவாளுக்கும் பொருந்தும்.

அப்பேர்ப்பட்ட அருள் விருந்து மலையில் ஒரு பருக்கைக் கல்லே இந்த "மஹா பெரியவாள் விருந்து". உள்ளே ஒரு கட்டுரைக்கு இட்டுள்ள தலைப்பான 'கற்கண்டு மலையில் சில பொடிகள்' என்பது முழு நூலுக்குமே பொருத்தமானதுதான்.

‘பெரியவர்: தர்மத்தின் மறு பெயர்’ என்று நூலினுள் ஒரு சிறு கட்டுரை இடம் பெறுகிறது. அதில், தாம் முகாமிட்டுள்ள வசதி போதாத ஊரில் தமது பரிவாரத்தின் ஆஹாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து தரும் சில உள்ளூர் மக்களுக்குத் தம்மைத் தரிசிக்க வரும் வெளியூர் பக்தர்களும் சுமை கூட்டலாகாதென ஸ்ரீ பெரியவாள் சற்றுக் கண்டிப்பாகவே வலியுறுத்தக் காண்பீர்கள். உள்ளூர்வாசிகளிடம் பரிவாலேயே வெளியூர்வாசிகளிடம் அவர் காட்டிய தர்மக் கண்டிப்பு அது. இப்படி தர்மத்தின் மறு பெயராக இருந்த அவருக்கு மறு பக்கமொன்றும் உண்டு; ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதே போல. அம் மறுபக்கத்தில் அவர் கருணைக் கரிசனத்தின் மறு பெயராக இருப்பார். அதைக் காட்டாமல் கட்டுரையை முடித்தது அரை குறைபோல மனத்தை உறுத்துவதால் இங்கு நிறை செய்கிறேன்.

பசியறியாத அப் பரம ஞானி அதிசயமாகச் சில நாள்களில், அதுவும் வேளை தப்பிய வேளைகளில் தமது பணியாளர்கள் அயர்ந்து ஆயாஸமடைந்திருக்கையில் தமக்கு ஏதாவது நல்ல பலகாரம் வேண்டுமென்று கேட்பாராம். அவரே கேட்டுப் பண்ணிப் போடுவதைப் பரம பாக்கியமாக உணர்ந்து அப் பரிவாரத்தினர் உடனே உற்சாகம் பெற்றுச் சரக்குகள் யாவும் ஸம்ருத்தியாகச் சேர்த்து ஏ–ஒன்னாகப் பலகாரம் தயாரிப்பார்கள். அவர் கேட்டுச் செய்ததில் தாங்களும் சேஷப்பிரஸாதம் பெற வேண்டும், தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் தர வேண்டுமென்பதால் நிறையவே தயாரிப்பார்கள்.

ஆனால் அப்புறம் பெரியவாளோ பலகாரத்தில் வெகு சிறிதளவுதான் அமுது செய்வார். ‘சொல்லி விட்டோமே, ஏமாற்றக் கூடாது’ என்றே அந்தத் ‘துளியூண்டு’க் கொரிப்பும் என்று தெரியும்.

பின் ஏன் அவர்களை மெனக்கிடுத்தினார் என்றால் – அவரது பரிவாரத் தொண்டர்கள் உழைத்துக் களைத்துச் சற்றுக் காலை நீட்டி உட்காரும் அந்தச் சமயத்தில் வெளியூர் பக்தர்கள் எவரேனும் வயிற்றுக்குப் போடாமல் வந்து

சேர்ந்திருப்பார்கள். தொண்டர்களின் ஓய்ச்சல் அந்த அன்பு யஜமானரின் மனத்தைத் தொடும். அதேபோதில், வந்திருப்போரின் வயிற்றுப் பசியும் அந்த அன்னை யிதயத்தைச் சுடும். 'இவர்களுக்குப் பண்ணிப் போடச் சொன்னால் அவர்களுக்குக் கடுப்பாக இருக்கக் கூடுமே! கடுப்பைத் தம்மிடம் காட்டாமல் வந்திருப்போரிடம் காட்டி, ஏதோ வெந்தது வேகாததைப் போட்டுவிடப் போகிறார்களே!' என்று எண்ணுவார். அதன்மேல்தான் அந்த 'ஆம்னி'-அநுதாபர் அன்புச் சூழ்ச்சி செய்வார் – தமக்கே பசித்ததாகச் சொல்லிப் புலகாரம் செய்யச் சொல்வார்! அதை அவர்கள் நிறையவே செய்வார்களென்பதும் அவருக்குத் தெரியுமாதலால் இப்படிச் சூழ்ச்சி! அப்புறம் துளியூண்டுக் கொரிப்புச் செய்து விட்டு வயிறு வாடி வந்த வேற்றூராரைச் சொல்லி, "அவாளுக்கு வயிறு ரொம்பப் போடுங்கோ!" என்பார்.

துளியூண்டானாலும் அந்தத் தெய்வத்தின் குக்ஷியில் விழுந்ததே என்ற மகிழ்ச்சியிலும், அன்புச் சூழ்ச்சியின் ரஸிப்பிலும் அவரது பரிஜனங்கள் வயிறு காய்ந்தவர்களுக்கு இன்முகமாகவே உணவளித்து உபசரிப்பார்கள்.

* * *

நூலில் அடங்கும் ஒன்பது கட்டுரைகளில் முதலாவதும், 'விருந்துக்குப் பின் வெற்றிலை' என்ற கட்டுரையும் தவிர மற்றவை முன்பே சில பத்திரிகைகளிலும், சிறப்பு மலர்களிலும் வெளியானவை. இவற்றிலும் ஏராளமான புதுப் பகுதிகள் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

* * *

என் நல்லன்பர் பலர் – குறிப்பாக ஸ்வாமி ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாவின் அடியார் – நன்கொடை நல்கி உருவான திவ்ய வித்யா ட்ரஸ்டின் அறங்காவலர்கள் இந்நூலின் பதிப்பை மேற்கொண்டு சிறப்புற நிறைவேற்றித் தந்துள்ளனர்.

அச் சகோதரர்களுக்கும், அச்சிட்ட சுரபி அச்சகத்தினருக்கும், முன்-பின் அட்டைப்படங்களில் கைவண்ணம் காட்டி நூலுக்குப் பொலிவு கூட்டியுள்ள ஓவியர் விஜுவுக்கும், முகப்புச் சித்திர நிழற்படம் உதவிய ஸ்ரீ விக்னேஷ் ஃபோட்டாக்ராஃபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் என் பிரார்த்தனாபூர்வமான நன்றி.

பின்னட்டைச் சித்திரம் பற்றிச் சில வார்த்தைகள்: அன்னபூர்ணேச்வரியின் கரண்டி போன்றதொரு பெரிய உத்தரிணியால் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி ஸமேத ஸ்ரீசந்திர மௌளீச்வரனின் தீர்த்தப் பிரஸாதத்தை ஸ்ரீ பெரியவாள் வழங்குகிறார்கள். ஸ்ரீ பெரியவாளே அச் சிவசக்தியரின் அருட்கங்கையின் வடிவுதான். அக் கங்கையிலிருந்து ஓர் உத்தரிணியே இந் நூல்.

முகப்புச் சித்திரம் பற்றியும் சற்று 'பாஷ்யம்' செய்ய வேண்டும். 'அன்னதா' என்பதாக அன்னையை உணவு வழங்குபவளாக லலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகிறது. 'அன்னாத:' என்பதாகத் திருமாலை உணவு உட்கொள்ளு பவனாக விஷ்ணு ஸஹஸ்ரநாமம் கூறுகிறது. ஒரே பரமாத்மன்தான் ஈசனாகவும், ஜீவனாகவும் இருப்பது என்ற அத்வைதமே இது. அந்தப் பரமாத்ம ஸ்வரூபமே ஸ்ரீ மஹா பெரியவாள். விருந்து படைக்கும் அவரினின்று அவ் விருந்தை உண்ணும் நாமும் வேறில்லை. இப்படி அவரொருவரே நூலின் நாயகர், வாசகர் ஆகிய இருவராகவும் இருந்து அன்புப் பரிவர்த்தனை செய்து கொள்வதை நிழற்படம் நயமுறக் காட்டுகிறது. எனவே நூலை நாயகருக்கு ஸமர்ப்பிப்பதே வாசகருக்கும் ஸமர்ப்பணமாகிறது.

* * *

'ஆயிரம் நூல் எழுதினும் முடிவுறாதாம் ஐயனவன் பெருமை'க்கு 'மாதிரி' காட்டும் இந்நூலைப் போலவே இன்னும் இரண்டு தயார் நிலையில் உள்ளன. அவற்றை திவ்ய வித்யா அறக்கட்டளை விரைவே வெளியிட ஸ்ரீவித்யா ராஜராஜேச்வரி அருள்வாளாக!

சென்னை-81. ரா. கணபதி

# பொருளடக்கம்


| | |
|---|---|
| "விநாயகுநி" | 1 |
| "ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே!" | 40 |
| மஹா பெரியவாள் விருந்து | 83 |
| விருந்துக்குப்பின் வெற்றிலை | 112 |
| பெரியவர்: தர்மத்தின் மறுபெயர் | 118 |
| ஒரு வள்ளலும் ஒரு நாணயசாலையும் | 122 |
| கற்கண்டு மலையில் சில பொடிகள் | 128 |
| சிரிக்க வைத்தே சிறக்க வைப்பார்! | 143 |
| பொருந்தக் காட்டும் விருந்து! | 157 |

# "விநாயகுநி"

அந்தப் பொன்னடிகள்தாம் எத்தனை பெயர் தெரியாத ாமங்களில் பட்டு, பல காலங்கூடத் தங்கி, அவற்றைப் த் தலங்களாகப் புகழ்பெற வைத்திருக்கின்றன ?

பொன்னடிகளுக்குரிய அந்தப் புண்ணியர் தவிர னும் படகுப் பயணம் தவிர வேறெந்த முறையிலும் டைய முடியாத ஒரு காட்டுப்பள்ளி கிராமத்தில் மாதங்களுக்கு மேல் ஒரு பெரிய மடத்துப் ரத்துடன் தங்கி வியாஸபூஜை, ஜன்மாஷ்டமி, ளயார் சதுர்த்தி, நவராத்ரி, தீபாவளி ஆகிய கைகள் கொண்டாடியிருக்க முடியுமா ? அதென்ன ாகர்ஷணமோ ?

ாட்டுப்பள்ளியைத் திவ்ய லோகமாக்கிய அந்த 1965–ம் டேலேயே, அதற்கு முன் புண்ணியர், பூஜ்யர், சீரார் ணர், ஸ்ரீ மஹா பெரியவாள் சந்தவேளூர் என்ற யறியாப் பட்டிக்காட்டை சிவலோகமாக்கினார். ஆம், ருஷ சிவராத்ரி பூஜையைக் காஞ்சிக்கும் ஸ்ரீபெரும் க்கும் நடுவிலுள்ள அச் சிறு கிராமத்தில்தான் னார். அதற்கு முன்னும் பின்னும் சுமார் ஒவ்வொரு அங்கேயே வாஸம் செய்தார்.

அச் சமயம் அவரை மும்முறை தர்சிக்க பாக்யம் த்தது. அவற்றிலொன்றின் போது:

பிற்பகல் நாலு மணி இருக்கலாம். பொக்கையும் ரயுமான படிக்கட்டுக்களும் பாசியும் பசலையுமான ீரும் கொண்ட குளக்கரையில் இந்த நூற்றாண்டு ாகக் கண்ட அந்த உண்மையான வேதகால ஸந்நியாஸி திருந்தார். விந்தையாகக் கழுத்தில் மலர் மாலை ந்திருந்தார்.

ஸந்நியாஸிகள் மாலை அணியலாமா என்று ஒரு வாதமே எழுந்ததுண்டு. ஆனால் பெரியவாள் மாலை அணியும் முறையைப் புரிந்து கொண்டு பார்த்தால் அதைத் தமக்கு அலங்காரமாக அவர் தரிக்கவேயில்லை என்று தெரியும். மாலையை அவர் கழுத்தில் போட்டுக் கொள்ளாமல் சிரஸிலேயே வைத்துக் கொள்வது வழக்கம். சிரஸில் குருமூர்த்தியான அம்பிகையின் பாதம் இருப்பதாக சாஸ்திரம். பெரியவாளுக்கோ அந்த சாஸ்திரம் அநுபவமே! அதனால் குரு அஞ்சலியாக, அம்பாள் சரணத்திற்கு அலங்காரமாகத்தான் அவர் 'அலங்கல் அணிந்தருள்'வது. அப்புறம் அது நழுவிக் கழுத்தில் விழும்போதும் அவளது பிரஸாதமேயன்றி சுய அலங்காரமல்ல. கழுத்தில் சரிந்ததை ஓரிரு நிமிஷங்களில் களைந்து விடுவதே அவரது பொது வழக்கம்.

இன்று வழக்கத்திற்கு மாறாக மாலையும் கழுத்துமாகவே மநோஹர தர்சனம் அளித்தார்.

இளைஞரொருவர் அவரது திருமுன் பாடிக் கொண்டிருந்தார்.

நான் செய்த பாக்யம் பெரியவாளை தர்சித்தது மட்டுமல்லை; நான் போகும்போது பாடகர் பாட்டின் முடிவுப் பகுதிக்கு வந்திருந்ததுந்தான்! அப்போது அவர் சரணத்தின் பின்னிரு வரிகளுக்கு வந்து ஓரிரு நிமிஷத்திலேயே அதை முடித்தது என் பாக்யமே! அப்பேர்ப்பட்ட 'தேவ கானம்'!

**கராஜ௱நி ஹ்ருதய ஸரோஜவாஸிநி**
**முராரி ஸோதரி பராசக்தி நநு**

என்று அவர் திருப்பியபோது, நல்ல வேளை, என் கோபம் சிரிப்பாக மாறியது.

முந்தைய பாத இறுதியில் வரும் 'த்யா' என்பதோடு இணைத்து "த்யாகராஜ௱நி ஹ்ருதய ஸரோஜ" என்று பாட

வேண்டியதைத்தான் அந்தப் புண்ணியவான் 'கராஜுநி' என்று அமர்க்களமாகத் தாளம் தட்டிச் சிதைத்துப் பாடினார்.

பெரியவாளின் பெருமைகள் அனந்தம் என்றால் உபசார வாக்கல்ல. ஸத்தியமாகவே அனந்தந்தான் அவருடைய பெருமைகள். அந்தப் பெருமைக்கு இரு கண்மணிகள், அல்லது இரு சுவாஸ கோசங்களே போலப் பொறுமையும் எளிமையும்.

மற்ற விஷயங்களைப் பொறுத்துக் கொண்டாலும் பொறுத்துக் கொள்ளலாம்; ஒரு தேர்ந்த ரஸிகனால் ரஸக்குறைவானதைப் பொறுத்துக் கொள்வது மாத்திரம் ரொம்ப ரொம்ப சிரமமானது.

இந்த சிரம ஸாத்தியத்தைத்தான் நம் பெரியவாள் எத்தனை அநாயாஸமாக சாதித்திருக்கிறார்! அதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் கொத்தமங்கலத்தில் அவர் சிவராத்ரி பூஜை நடத்திய சமயத்தில் ஒரு நாள் இந்த வி–ரஸச் சகிப்பைப் பெரியவாளிடம் கண்டு வியந்த நான் இப்போது, அதற்கும் மேலே, அசந்தே போனேன்! ஏனென்றால் அன்று தன்னுடைய சங்கீதக் (ொ)க(ா)லைத் திறனைக் காட்டியது வீணை வாசித்த ஒரு பத்துப் பன்னிரண்டு வயதுப் பெண். ராகம் மட்டுமே அன்று வதைக்கு ஆளாயிற்று. இன்றோ, வாய்ப்பாடலா? பாட்டுப் பாடுதல் என்ற அந்தப் பாடு படுத்தலுக்கு ராகம் மட்டுமின்றி ஸாஹித்யமும் ஆளாயிற்று. இசைக் கொலை ப்ளஸ் மொழிக் கொலை!

'பராசக்தி நநு' என்று சரணத்தை முடித்தவர்

**விநாயகுநிவலெநு ப்ரோவவே நிநு**
**விநா வேல்புலெவரம்ம**

என்ற பல்லவியை எடுத்து, அதில் எத்தனை அக்ஷரப் பிழை, ஸ்வரப் பிழை செய்லாமோ அவ்வளவும் செய்து ஒரு வழியாகத் தலைகட்டினார்.

பொறுமையின் அவதாரம் (ஆஹா, இந்த பதப் பிரயோகந்தான் அந்த 'விநாயகுநி' கிருதி விஷயமாக எத்தனை அற்புதமாகப் பொருந்துகிறது? 'பிதாமஹு¯டு' எனத் தொடங்கும் அதன் இரண்டாம் சரணத்தில் ஐயர்வாள் ஸ்ரீ காமாக்ஷியை — நம் பெரியவாளின் மூல ரூபத்தைத்தான்! — 'தாளிமிகல அவதாரம்' என்கிறார். அதற்குப் 'பொறுமை நிறைவான அவதாரம்' என்று பொருள்! அதற்கேற்க) நம்முடைய பொறுமையின் அவதார அவதாரமான பெரியவாள் இனித்த முகமாகவே பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

பாடி முடித்தவர் "பாட்டு ஸரியாயிருந்துதா?" என்று கேட்டார்.

'என்ன தைரியம்?' என்று ஆச்சரியப்பட்டேன். ஸ்ரீசரணாள் என்ன பதில் சொல்லப் போகிறாரென்று ஆர்வமாகக் கேட்டேன். அவர் சொன்ன பதில் மேலும் ஆச்சர்யமாயிருந்தது.

"எனக்கு ஸரியாயிருந்துது. ஒனக்கு வேண்டியது அதுதானே?" என்றார்.

"ஆமாம் பெரிவா, எனக்கு வேறே ஒண்ணும் வேண்டாம்" என்று பாட்டுக்காரர் தண்டமாக விழுந்து கும்பிட்டார்.

அவரைப் பற்றி என் மனத்தில் இனியதோர் எண்ணம் சுரந்தது. "பகவான் பாவக்ராஹியே அன்றி பாஹ்யக்ராஹி அல்ல" (மனப்பான்மையை ஏற்பவனேயன்றி அதன் வெளிப்பாட்டை அல்ல) என்பது நினைவில் தெறித்தது.

பாட்டுக்காரரிடம் வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தார் ஸ்ரீசரணர்.

"இது என்ன ராகம்?"

"மத்யமாவதி."

"மத்யமாவதியா? அபூர்வ ராகம்னே சிலதைச் சொல்றதுண்டோன்னோ, அப்படி அபூர்வமாப்பாடினே!"

"பெரிவா அநுக்ரஹம்."

பாட்டுக்காரரிடம் என் கோபமும் சிரிப்பும் போய்ப் பரிவு உண்டாயிற்று. நன்கு பரிசயமான ராகத்தையே உருமாற்றி ஏதோ அபூர்வ ராகம் போல அவர் பாடினார் என்று அந்தப் பொல்லாத கிழவனார் குறும்பில் குத்துவதைப் புரிந்து கொள்ளாத அப்பாவியாயிருக்கிறாரே என்ற பரிவு.

இம்மாதிரி அப்பாவிகளிடம் பெரியவாளின் இயல்பான கருணை இரு மடங்காகப் பெருகும். பின் ஏன் குறும்பிலே குத்தினார் என்றால், அவர்கள் பெறும் கருணையில் பாதியளவே பெறுகின்ற 'புத்திசாலி'களான நம்முடைய புத்திக்கும் வேடிக்கை விநோதம் காட்டத்தான். குத்தல் நமக்குத்தான் தெரியுமே தவிர குத்தப்படுபவர்களுக்குத் தெரியாது. அதுதான் அவர்கள் அப்பாவிகளாச்சே! குழந்தையிடம் நாம் 'அம்மா குத்து, திம்மா குத்து' விளையாடும்போது பிறருக்குத்தான் மிகவும் பலமாகக் குத்துவது போலக் கைவீச்சு தெரியுமேயொழிய அக் குழந்தையின் கையில் குத்து மெத்தாகத்தானே விழும்? பரிஹஸிப்பதாக நமக்குக் காட்டும்போதே, 'இவரைவிட அழகாக உரையாட நவகண்டத்தில் ஒருவர் உண்டா?' எனத் தக்க நாயகர் அந்த அப்பாவிகளுடன் இனிக்க உரையாடி 'இவரைவிட இதமாக உறவாட த்ரிலோகத்திலும் ஒருவர் உண்டா?' என்று அவர்கள் குளிருமாறு செய்வார். அத்தனை பரிவு நெருக்கம் காட்டுவார்.

அன்று அதற்கு அற்புத உதாரணம் படைத்தார்.

"மத்யமாவதின்னா என்ன?" அப்பாவியை விடவும் அப்பாவி போலக் கேட்டார்.

"ராகத்தின் பேரு" என்று பாட்டுக்காரரிடமிருந்து அப்பாவி பதில் வந்தது.

“அதுதான், நான் என்ன ராகம்னு கேட்டப்பவே மத்யமாவதி–னுட்டியே! அதையேதானே மறுபடியும் சொல்றே? மத்யமாவதின்னா என்ன அர்த்தம்னு கேக்கறேன்”

“.................................”

“மத்யமம்–னா ‘நடு’, இல்லியா? நடு பாகம் அவதியா இருந்தா மத்யமாவதியா?”

“பெரிவா எப்படி சொல்றேளோ, அப்படி!”

‘புத்திசாலி’களான நாம் அந்த அப்பாவி போல அப்படிப் பெரியவாள் சொல்வதை வேதவாக்காகக் கொள்வோமா?

அப்போது ஒரு ‘புத்திசாலி’யின் அதிகப் பிரஸங்கத்தைப் பார்க்க ஸ்ரீசரணாள் விரும்பினார் போலும். “எழுத்தாளன்!” என்று என்னைக் கூப்பிட்டு, “மத்யமாவதி–ங்கிறதுக்கு நான் குடுத்த டெஃபனிஷன் கேட்டியோ?” என்றார்.

கை குவித்தேன். அந்த தெய்வத்தால் பார்க்கப்படுவதில், பேசப்படுவதில் மனம் பக்தியில் பணிய, தானாகவே கை குவிந்தது என்பதுதான் பொருத்தம். எவருக்கும் அப்படித்தான் ஆகும்.

பக்தியை ‘புத்தி’ முந்திக் கொண்டு வர, நானும் குறும்புக் குத்தலுக்குக் குட்டி போட்டேன். “பாடத் தெரியாதவா பாடினா மத்யமாவதி மத்யமத்துலே மட்டுமில்லாம, ஆரம்பம் – மத்யமம் – அந்தம் எல்லாமே அவதியாத்தான் இருக்கும்.”

ஸ்ரீசரணாள் புன்னகைத்தார். “பாடத்தெரியாதவா பாடிண்டே போறச்சேயோ, ‘அவதி முடியப் போறது டாப்பா’ன்னு ஆத்தி(ஆற்றி)க் கொடுக்கறதும் மத்யமாவதி தான்” என்று குட்டி போட்டதற்கும் மேலே கூட்டினார்; அல்லது வலியே தெரியாமல் குட்டினார்.

முடிவிலே பாடப்படும் ராகம் மத்யமாவதியாதலால் அப்படிச் சொன்னார்.

என்னிடம் கேள்வி தொடர்ந்தது. "ஹாஸ்ய டெஃபனிஷன் இருக்கட்டும். வாஸ்தவத்துலே மத்யமாவதி-ன்னா என்ன?''

"அழகான இடுப்பை உடையவள்-னு அர்த்தம். 'அழகான'-ங்கறதுக்கு வார்த்தை இல்லாட்டாலும் அது அன்டர்ஸ்டுட்." ('மத்யமம்' என்றால் இடை. இடையை உடையவள் மத்யமாவதி. அப்படி மட்டும் சொல்வதில் பொருள் இல்லாததால் 'அழகான இடையை' என்று கூட்டிக் கொள்ள வேண்டும்.)

"ஸரி. ஸ்திரீகளுக்கு இடுப்பு அழகுன்னா அதுக்கு என்ன லக்ஷணம்?''

"இருக்கறதே தெரியாம அத்தனை மெல்லிசா இருக்கறது."

"ஐயர்வாள் இந்த க்ருதியை மத்யமாவதியிலே பண்ணினதுக்கு எதாவது காரணம் தோணறதா?''

சற்று யோசித்தவுடன் தோன்றிற்று. "ஸஹஸ்ர நாமத்திலேயே 'தநுமத்யா' (மெலிந்த இடையினள்) -ன்னு அம்பாளுக்குப் பேர் இருக்கு. அதோட, முக்யமா, காஞ்சி (ஒட்டியாணம்) இடுப்புக்குத்தான் ஆபரணமானதால காஞ்சீபுரத்து அம்பாளைப் பாடறப்போ மத்யமாவதியிலே பண்ணியிருக்கலாம்!'' என்றேன்.

ஸ்ரீசரணாளின் ஸந்தோஷம் ஸர்வாங்கத்திலும் முலாமிட்டது.

"ஆசார்யாளும், 'க்வணத் காஞ்சீதாமா' (ஒலிக்கும் மேகலை பூண்டவள்) -ன்னு சொன்ன கையோட 'பரிக்ஷீணா மத்யே' (இடைப் பகுதியில் மிகவும் நுண்ணியவள்)-ன்னு சொல்லியிருக்காரோல்லியோ?*'' என்றார்.

* 'ஸௌந்தர்யலஹரி', ச்லோகம் 7

"பாட்டு மத்யமாவதியிலே இருக்கறதுக்கு பெரியவா ஏதாவது காரணம்....?" என்று இழுத்தேன்.

"நீ சொன்னதையேதான் நான் நெனச்சேன்", என்றவர் அதோடு நிறுத்தாமல், "நான் நெனச்சதைத்தான் நீ சொன்னே" என்றார்.

அதில் இருந்த, அல்லது இல்லாத, பொருள்களெல்லாம் கண்டு மனசு கரைந்தேன்.

அப்புறம் மேலும் ஒன்று தோன்றியதையும் சொன்னேன். தியாகையர்வாளுக்கு மூத்தவரான சியாம சாஸ்திரிகள் மத்யமாவதியின் பரிபூர்ண ஸ்வரூப விளக்கமாக 'பாலின்த்ஸு காமாக்ஷி' பாடியிருந்ததும் இளையவருக்கு அதே ராகத்தை நினைவூட்டியிருக்கக்கூடும் என்று தெரிவித்தேன்.

"தீக்ஷிதர் காமாக்ஷி பேர்லே மத்யமாவதியில க்ருதி பாத்திருக்காரோ ?" என்றார்.

"தெரியலை" என்றேன்.

காமாக்ஷி சம்பந்தமான தோத்திரம், கீர்த்தனம் குறித்து ஸ்ரீசரணாள் ஸப்ஜாடா விவரம் தெரிந்தவர் என்பதால் இது விஷயமாகவும் அவர் அறிவார், அறிந்தும் தம் வழக்கப்படி அறியாதது போலக் கேட்கிறார்; கேட்கப்பட்டவரின் அறியாமை தெரிந்ததும் தாமே விஷயத்தை வெளியிடும் வழக்கப்படி இப்போது அவரே சொல்வாரென எதிர்பார்த்தேன். அவர் ஏதும் சொல்லவில்லை.

சட்டென ஏதோ நினைத்துக் கொண்டாற்போலப் பாட்டுக்காரரைப் பார்த்து, "நீ இந்தப் பாட்டுப் பாடினதுக்கு என்ன காரணம் ?" என்றார்.

"**அநாத ரக்ஷகி ஸ்ரீகாமாக்ஷி**—ன்னு வரதுதான்."

"அதனால ?" – அடேயப்பா, என்ன அப்பாவியினும் அப்பாவி நடிப்பு!

"பெரிவாளுக்குக் காமாக்ஷிதான் எல்லாம்; பெரிவாளே காமாக்ஷிதான்–கிறதால."

ஆஹா, அப்பாவி என்ன போடு போட்டுவிட்டார்? 'புத்திசாலி'களால் இயலாத எத்தகைய ஸஹஜ பாவத்துடன் ஸத்தியத்தைச் சொல்லி விட்டார்?

சற்றேனும் இது 'போல' அந்த 'புத்திசாலி'கள் சொன்னாலும் உடனே பேச்சை 'அபௌட் டர்ன்' திருப்பிவிடும் ஸ்ரீசரணர், அன்று அதைத் தாமும் ஸஹஜமாக ஏற்றுக் கொண்டு, "காமாக்ஷிதான் எனக்கு எல்லாம், நானே காமாக்ஷிதான் (இப்படி அவர்களே இயல்பாகக் கூறக் கேட்டபோது உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை ஜிவ்வென்று எப்படிச் சிலிர்த்தது?)–ங்கறயே, நீ என்ன கண்டுபிடிச்சியோ? எதை வெச்சுக் கண்டுபிடிச்சே?"

"பெரிவா!" – அப்பாவி தேம்ப ஆரம்பித்தார். "கண்டு பிடிக்கல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது, பெரிவா! ரொம்பப் பேர் அப்படித்தான் சொல்லியிருக்கா. எனக்கும் பெரிவாளைப் பாத்தா அப்படிதான் தோணித்து" என்று தேம்பலுக்கிடையே குழறி முடித்தார். அப்பாவீ! உன் பாக்யமே பாக்யம்!

பூலோகம் காணாத புஷ்பமாகப் 'பெரிவா' சிறிது போது அமர்ந்திருந்தார்.

தேம்பல் தேய்ந்தது.

குறும்புக் குத்தலில் மீண்டும் இறங்கினார் குருநாதர். "ஸரி, அநுபல்லவிலே 'காமாக்ஷி'ன்னு வந்துது. ஆனா பல்லவி 'விநாயகுநி'–ன்னுனா இருக்கு? ஒரு வேளை பாட்டு பிள்ளையார் பேர்ல இருக்குமோ என்னமோ? நீ பாட்டுக்கு காமாக்ஷிப் பாட்டுன்னு பாடிட்டியே!"

"என்ன தப்பா இருந்தாலும் பெரிவா மன்னிச்சுக்கணும்" என்று அழ இருந்த பாட்டுக்காரரை, "அழாதேப்பா, அழாதேப்பா" என்று சந்தனமாக ஆற்றிக் கொடுத்தார்

ஸ்ரீ பெரியவர்கள். "தப்பு ஒண்ணும் சொல்லலேப்பா! 'விநாயக'ன்னு ஆரம்பிச்சுட்டு, 'காமாக்ஷி'ன்னு போறதேன்னு கேட்டேன். அவ்வளவுதான். போகட்டும், பாட்டு என்ன பாஷை?"

குறும்புக் குத்தல்தான்! பாடுபவருக்கு மொழியறிவு இருந்தால் விநாயகனைக் குறிப்பிடும் பல்லவியும் காமாக்ஷியைப் பற்றிப் படர்வதுதான் என்று தெரிந்திருக்கும்.

"தெலுங்கு" என்றார் பாட்டுக்காரர்.

"அப்படியா?" என்ற பெரியவர் ஒரு 'திம்திமா'க் குத்தே விட்டார்! "அபூர்வ ராகம் பாடினாப்பல அபூர்வ பாஷையும் பாடறயோன்னுனா ஆச்சரியப்பட்டேன்?"

"பெரிவா அநுக்ரஹம்!" – திம்திமாவையும் மெத்திலும் மெத்தாக ஏற்ற பதில்.

பாட்டுக்காரர் குறித்து முதலில் கோபமுற்றவன், அப்புறம் சிரித்தவன், பின்னர் பரிவு கொண்டவன் இப்போது அழுதுவிடுவேன் போலாயிற்று! 'பாக்யசாலி! உன் அப்பாவித்தனம் எனக்கு வாய்க்குமா?'

"எழுத்தாளன்!" என்று மீண்டும் என்னைக் கூப்பிட்டார் ஸ்ரீசரணர். "பாட்டு அர்த்தம் ஒனக்குத் தெரியுமா?"

"ஒரு மாதிரி தெரியும்."

"தெலுங்கு தெரியும்?"

"தெரியாதுதான். ஆனா ஐயர்வாள், சாமா சாஸ்திரிகள் மாதிரியானவா பாட்டுக்கெல்லாம் அர்த்தம் தெரிஞ்சு வெச்சுக்கறது. முடிஞ்ச மட்டும் பதவுரையாவே."

இதைச் சொல்கையில் இவ் விஷயமாக ஸ்ரீசரணாளே என் பொருட்டாக ஆற்றியுள்ள ஓர் அற்புதம் நினைவு வர, வெளியிடாமல் அடக்கிக் கொண்டேன். குத்தல் தெரியாமலே அப்பாவிகளைக் குத்துவதுபோலத்தான் அதிபுத்தி சாலிகளுக்கும் வெளிப்படத் தெரியாமலே அற்புத அருள்

செய்வது அந்த மறை(ப்பு) முனிவரின் வழக்கம். இன்று என்னிடம் தெலுங்கு க்ருதிப் பொருள் பற்றிப் பேச்செடுத் திருப்பதே அன்றைய அற்புதத்தை உறுதி செய்யும் விதத்தில் தாமாக மேலும் ஏதோ ஸங்கேதம் கூறத்தானோ என்னவோ? தாமாகச் செய்ய அவர் உத்தேசித்திருந்த விஷயத்தில் நாம் எதையாவது இழுத்துவிட்டு அவர் தம் வழக்கப்படித் திரையை இறக்கிவிடப் போகிறாரே என்பதாலேயே அடக்கிக் கொண்டேன். ஆனால் அந்த அழுத்தக்காரரும் கொஞ்சங்கூட அவிழ்த்து விடாமல் பேச்சைத் தொடர்ந்தார்.

''பதவுரையாவே தெரிஞ்சுண்டிருக்கறவன் ஏன் 'ஒரு மாதிரி' தெரியும்னே?''

எல்லோரும் சிரித்தார்கள். அப்பாவியை அவர் குத்தும் போதுகூட சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தவர்களின் முன்னேதான் இந்த 'புத்திசாலி'யை வாய்விட்டே சிரிக்க வேண்டிய பண்டமாக்கி ஒரு நூதன அநுபவம் அருளி யிருக்கிறார் நல்ல குருநாதன்.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

''நன்னாத் தெரிஞ்சாலும் அப்படி சொல்லிக்கப் படாதுன்னு 'ஒரு மாதிரி'ன்னேயாக்கும். ஸரி. பிள்ளையார் -அம்பாள் ரெண்டு பேர் ஸமாசாரமும் வரதே, அது என்ன? அர்த்தம் சொல்லு'' என்று சொல்லி விட்டு,

ஆஹாஹா! அவர்களே கொஞ்சம் பாட்டாகவும், கொஞ்சம் வசனமாகவும், அந்த வசனமே ஒரு கானமாகவும் பல்லவி, அநுபல்லவிகளைப் பாடி, பேசினார்.

பல்லவி

**விநாயகுநி வலெநு ப்ரோவவே நிநு**
**விநா வேல்புலெவரம்ம?**

*அநுபல்லவி*

**அநாதரக்ஷகி! ஸ்ரீ காமாக்ஷி! ஸு—**
**ஜநாக மோசநி! சங்கரி! ஜநநி!**

"'அநாதரக்ஷகி, ஸ்ரீகாமாக்ஷி' – ன்னு கொண்டு போயிருக்கறது அப்படியே மனஸைக் கவ்வறது" என்று சுவைத்துச் சொன்ன அநாதரக்ஷகர், "நான் மூலம் சொல்லியாச்சு. நீ உரை சொல்லு" என்றார்.

நான் ஒரே தயக்கமாக — எத்தனை வழிந்தேனோ? — "பிள்ளையாரைப் போலவே என்னையும் நெனச்சு ரக்ஷி. உன்னை விட்டா வேறே தெய்வம் யாரம்மா? அநாதைகளை ரக்ஷிக்கறவளே! நல்ல ஜனங்களோட பாபத்தைக் களையறவளே! சங்கரி! தாயே!" என்று பொருள் கூறினேன்.

"பிள்ளையாரைப் போல என்னையும்னு நீ, அவர் பேரையே வெச்சுண்டிருக்கறவன் சொல்றச்சே வேடிக்கையா இருக்கு" என்று கூறினார்.

எனக்கு ஒரு புறம் லஜ்ஜையாகவும் இன்னொருபுறம் பூரிப்பாகவும் இருந்தது.

லஜ்ஜை, பூரிப்பு இரண்டையும் அனந்தம் மடங்கு உயர்த்துவதாகத் தொடர்ந்து, "ஒனக்குப் பண்றாப்பல எனக்கும் அவ அநுக்ரஹம் பண்ணணும்னு கூடக் கேக்கலாமோ–ன்னு தோணறது!" என்றார், ஒருபுறம் நகைச்சுவை மன்னராக, இன்னொரு புறம் எளிமையின் ஏந்தலாக!

லஜ்ஜைப் பூரிப்பிலேயே தலை குனிந்து, கண்ணை மட்டும் தூக்கிப் பார்த்தேன்.

குமிண் நகையுடன் "கன்னட பொஸ்தகம்" என்று சொல்லி 'அந்த' விஷயத்தைக் கன்ஃபர்ம் செய்தார்.

கொத்தமங்கலம் சிவராத்ரி என்று குறிப்பிட்டேனே, அதையடுத்து நடந்தது 'அந்த' விஷயம். அப்போது அவர்

ஓர் உத்தரவு இட்டார். நான் மனத்துக்குள் அதற்கு மாறாக நினைத்தேன். ஆனால் வெளியிடக் கூசித் தவித்து, அவர் பூஜிக்கும் அந்த ஸ்ரீசக்ர மேரு ரூபிணியான அம்பாளிடமே மௌனமாகக் கண்ணீர் உகுத்தேன். அதையும் அவர் காணாதது போலக் கண்டு கொண்டார். அப்புறம், ஆச்சர்யமாக, முடிவு எனக்கு ஸாதகமாக அமைந்து விட்டது!

இது பற்றி அப்புறம் ஒரு முறை அவர் வினய-விளையாட்டுகளின் சிகரத்தில் நின்று கொண்டு என்னிடம், "ஒன் மாதிரி அழுது, கிழுது அம்பாள்(கிட்)ட கார்யம் ஸாதிச்சுக்க எனக்கு வராதுப்பா. நீயே ஜயிச்சவனா இருந்துக்கோ!" என்று கூறியிருக்கிறார். இப்போதும் நினைவு மறவாமல் அதைத்தான் "கன்னட பொஸ்தகம்" என்று சொல்லி இழுத்து வருகிறார் குறும்பர்.

உடனே இன்றைய சூழ்நிலையில் அத்யாவசியமாக இருந்த ஒன்றை ஸ்ரீசரணர் ஹிதமாகச் செய்தார். அதாவது பேச்சின் தடத்தை மாற்றினார். "ஆமாம், 'ஸுஜநாக மோசநி'ன்னா ('நல்லவர்களுடைய பாபத்தைப் போக்குபவள்' என்றால்) நல்லவா என்கிறவாளையே பாபிகள்னும் சொல்றாப்பலன்னா இருக்கு?" என்று கேட்டார்.

"நானே பெரியவாளைக் கேக்கணும்னு நெனச்சேன்" என்றேன்.

'கிராக்கி' செய்து கொள்ளாமல் உடனே அற்புத விளக்கம் அளித்தார். "லோகத்துலே நல்லவாளா இருக்கற பல பேரைப் பார்த்து நாம, 'இவ்வளவு நல்லவா இப்படியொரு கஷ்டப்படறாளே!' ன்னு சொல்லும்படியாவும் நெறய்ய நடக்கறதோல்லியோ? காரணம் அவாளோட பூர்வ (ஜன்ம) பாபந்தானே? அதுலேருந்து அம்பாள் அவாளை விடுவிச்சுடறாங்கிறதைத்தான் 'ஸுஜநாக மோசநி'ன்னு சொல்லியிருப்பார்" என்றார்.

பாட்டுக்காரரைப்பார்த்து " 'ஸுஜநாங்க' இல்லே; 'ஸுஜநாக'. 'ஸுஜந'ன்னா நல்லவா. 'அக'ன்னா பாபம். நீ மட்டும் இல்லே; ரொம்பப் பேர் 'ஸுஜநாங்க'ன்னுதான் பாடறா. எதோ பேச்சு வந்ததால இந்த ஒண்ணைத் திருத்தினேன்'' என்றார்.

அப்போது அவர் குரலில் செய்த மாறுபாடுகளை இங்கே எழுத்தில் தர முடியவில்லை. திருத்திமுடியாத அவ்வளவு பிழைபட அந்தப் பாட்டுக்காரர் பாடியதில் இந்த ஒரு திருத்தம் மட்டும் செய்ய நேர்ந்ததைக் குறும்பாகத் தெரிவித்தார்.

திடீரென்று ஒர் உத்ஸாஹம், குழந்தை மாதிரி! "காமாக்ஷின்னா ஆசார்யாளை நெனக்காம இருக்க முடியுமா? அதுதான் 'சங்கரி'ன்னு போட்டிருக்கார்'' என்றார் நவகால சங்கரர்.

தொடர்ந்து, ''ஐயர்வாள் பரமபக்தரானாலும் அத்வைதத்திலேயும் ரொம்பப் பிடிமானம் உள்ளவர் தெரியுமோ?'' என்றார்.

''(டாக்டர் வே.) ராகவன் அதைப் பத்தி எழுதியிருக்கார். ஐயர்வாள் உபநிஷத் ப்ரஹ்மேந்திராளோட இன்ஃப்ளு யென்ஸிலே வந்ததாலே அவர் மாதிரியே ராமபக்தியானாலும் அத்வைதத்திலேயே அந்த பக்தி கொண்டு சேக்கறதை அங்கங்கே பாடியிருக்கார்னு நிறைய கொடேஷன் கொடுத்து எழுதியிருக்கார்.''

"ஸி. ராமானுஜாச்சாரி பொஸ்தகத்துலதானே?''

"ஆமாம்.''

''அத்வைதத்திலே நிர்குண ப்ரஹ்மம்னு சொல்றதுக்கும் ஸகுண ப்ரஹ்மம்னு சொல்றதுக்கும் நடுப்பற (நடுவில்) நாதப்ரஹ்மத்தை ஐயர்வாள் உபாஸிச்சிண்டிருந்தார். அப்ப முக்யமா அந்த நாத வித்தைக்கு மூலமா சிவனைத்தான் வெச்சிண்டிருந்தார். ஸங்கீத சாஸ்திரத்துலேயே அப்படித்

தானே? அந்த மாதிரி சிவனை வெச்சுக்கறப்பவும் அவர் முக்யமா 'சங்கர' நாமத்திலேயே பாவிச்சிருக்கார். 'நாதநுமநிசம் சங்கரம்'; 'நாதோபாஸனசே சங்கர'-ன்னுட்டு அப்பறந்தான் 'நாராயண'ன்னும் சேத்திருக்கார்!.... இந்த ஸமாசாரம்லாம் இருக்கட்டும். காஞ்சீபுரத்துலே காமாக்ஷியைப் பார்த்துப் பாடறச்சே எதுக்காக 'விநாயகரை ரக்ஷிக்கிற மாதிரி என்னையும்'னு சொல்லி ஆரம்பிக்கணும்? தியாகையர்வாள் லைஃபிலே இதைப் பத்தி ஏதாவது கதை, கிதை கேட்டிருக்கியா?" என்றார்.

பெரியவாளிடம் ஏதோ அபூர்வமான கதை இருக்கிறது, அப்புறம் சொல்லப் போகிறார், அதற்கே இந்தப் பூர்வாங்க நாடகம் என்று உள்ளுக்குள் சப்புக் கொட்டிக்கொண்டு, "ஒண்ணும் கேட்டதில்லை. உபநிஷத் ப்ரஹ்மேந்திராள் ஸ்ரீமுகம் அனுப்பினதன் பேரிலே ஐயர்வாள் காஞ்சீபுரம் வந்தார்; அப்ப வரதராஜா, காமாக்ஷி அம்பாள் ரெண்டு பேர் மேலேயும் பாடினார்-ங்கறதுக்கு மேலே ஒண்ணும் தெரிஞ்சுக்கலை....."

"அந்த ஸ்வாமிகள் ஐயர்வாளுக்கு அனுப்பின ஸ்ரீமுகம் மதுரை ஸௌராஷ்ட்ர ஸபாவிலே இருக்குன்னு தெரியுமோ?"

"பெரியவா சொன்னவிட்டு நெனவு வரது."

"அது அவாகிட்ட ஏன் போய் சேர்ந்துது தெரியுமோ?"

"அவரோட ப்ரதம சிஷ்யர் வாலாஜாபேட்டை வேங்கடரமண பாகவதர் ஸௌராஷ்டிரரானதால...."

"ஆமாம். வாலஜாபேட், வாலஜாபாட்னு ரெண்டு வெவ்வேறே ஊர் உண்டு, தெரியுமோ?"

"வாலாஜாபாட் மெட்ராஸ்லேருந்து காஞ்சீபுரத்துக்குப் போற சுத்துவழியிலே வரது. வாலாஜாபேட் ராணிப்பேட்டை கிட்ட இருக்கு."

"ஐயர்வாள் வந்தப்போ கருடோத்ஸவம். அதை அவர் வரதராஜா க்ருதியிலேயே சொல்லியிருக்கார். தெரியுமோ?"

"இப்பத்தான் தெரிஞ்சுக்கறேன்."

"எனக்கும் இப்பதான் திருப்தி. நான் கேக்கறதெல்லாம் ஒனக்கும் தெரியும் தெரியும்னா எனக்கு ஸ்வாரஸ்யப் படலை" — பந்தயத்தில் கெலித்த குழந்தை போல ஒரு தேன் வெள்ளச் சிரிப்பு! இந்த ப்ருதிவியில் அப்படியொரு மனப்பாங்கு கண்டதுண்டோ?

ஏதோ தைரியம் கொடுத்ததில், "பெரியவாளுக்குத் தெறியறதுலே அணுமாத்ரங்கூட யாருக்கும் தெரிய முடியாது. ஏன் பிள்ளையாரை ஸம்பந்தப்படுத்தி ஐயர்வாள் காமாக்ஷியைப் பாடினார்–ங்கிறதுக்கும் பெரியவாளுக்கு மட்டுமே தெரிஞ்சதா ஏதோ கதை இருக்கணும். பெரியவா சொல்லணும்," என்று கைகுவித்து வேண்டினேன்.

"பெரியவா சொல்றது, சொல்லாதது இருக்கட்டும். நீதான் எழுத்தாளனாச்சே! 'கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு'ன்னு எழுதறேளே, அப்படி ஏதாவது பண்ணி ஒரு கதை ஜோடிச்சுப் பாரேன்!" என்றார்.

கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டாமே! கர்நாடகத் துறவிக் கிழவர் எப்படி நவகாலப் பத்திரிகை வாசகங்களெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்?

இங்கே நான் 'பத்திரிகை' என்பதைக்கூட 'ஏடு' என்று சொல்லுமளவுக்கு அவர் நிகழ்காலத் தமிழ்ப்'படுத்தல்'களை அறிந்திருந்ததை இதற்கு ஓராண்டு அப்புறம் திருமுருக வாரியாரவர்கள் 'கல்கி'யில் தொடராக எழுதிய 'சிவனருட் செல்வ'ருக்கு ஸ்ரீமுகம் பெற்றபோது அறிந்தேன். அந்த ஸ்ரீமுகத்தை அவர் அளித்த அந்த அதிசய அதிரடி பாணி! ஆயிரம் ஆயிரம் பக்கங்களாக விரியும் 'தெய்வத்தின் குர'லின் வித்து, அல்லது ஸூக்ஷ்மப் பொறியை, அப்போதுதான் அவர் நாட்டியது!

சந்தவேளூர் திருக்குளக்கரைக்குத் திரும்புவோம்.

ஸந்நியாஸ பட்டத்திலேயே 'ஸரஸ்வதி'யைக் கொண்ட அந்த ஸர்வஜ்ஞரின் திவ்ய ஸந்நிதானத்தில் அவரே ஆணையிட்டதன் மேல் சிறிது சிந்தித்ததில் உண்மைக் கதை என்று சொல்லும் சாத்தியக்கூறு உள்ள ஒரு ஸ்ருஷ்டி உருவாயிற்று.

என் ஸ்வபாவத்தை மீறி அன்று பல பேர் எதிரில் நான் அதைக் கூறியது அவர் செய்த ஆச்சரியந்தான். அந்தப் பல பேர் என் கண்ணுக்குத் தெரியாமல் அவரொருவரே தெரிந்ததால்தான் தைரியமாகச் சொன்னேன் என்றும் வைத்துக் கொள்ளலாம்.

"ஐயர்வாள் ஸ்ரீரங்கத்துக்குப் போய் 'ஸ்ரீரங்க பஞ்சரத்னம்'னே சொல்ற அஞ்சு க்ருதி பண்ணியிருக்கார். திருச்சி கிட்டவே லால்குடிக்கும் போய் அங்கேயிருக்கற அம்பாள் மேலேயும் 'லால்குடி பஞ்சரத்னம்'கிற அஞ்சு..."

ஸ்ரீசரணர் இடைமறித்து, "அந்த அம்பாள் மட்டுமில்லே; அங்கே இருக்ற ஸ்வாமி, ஸப்தரிஷீச்வரர்னு பேரு.... ஸப்தரிஷிகளும் தபஸ் பண்ணின எடமானதாலே லால்குடிக்குப் பேரே தபஸ்தீர்த்தபுரம்தான்..... அந்த ஸ்வாமி பேர்ல ரெண்டும், அம்பாள் பேர்ல மூணுமா பஞ்சரத்னம் பண்ணியிருக்கார். ஸரி, மேலே சொல்லு. 'ஐயர்வாள் ஸ்ரீரங்கத்துக்கும் போயிருக்கார். லால்குடிக்கும் போயிருக்கார்'னு காஞ்சீபுரம் ஸமாசாரத்துக்கு எங்கேயோ தள்ளி கதையை ஆரம்பிச்சிருக்கியே, மேலே சொல்லு" என்று வெகு ஆர்வமுள்ளவர் போல ஊக்கினார்.

நானும் 'குதிரை'யை ஓட்டினேன். "ஸ்ரீரங்கத்துக்கும், அவ்வளவு பிரஸித்தியில்லாத லால்குடிக்கும் போனவர் ஜம்புகேச்வரத்துக்கு (திருவானைக்காவுக்குப்) போகாம இருந்திருக்க மாட்டார். அங்கே, ஆசார்யாள் அம்பாளுக்குத் தாடங்கப் பிரதிஷ்டை பண்ணி, அப்படியும் அவ முழுக்க சமனம் ஆயிருப்பாளோ மாட்டாளோன்னு நெனச்சு

(ஆசார்யாள் விஷயமானதால் ஏதும் அபசாரமாகப் பெரியவாள் நினைத்துவிடக் கூடாதே என்று பயந்து பயந்து தயங்கித் தயங்கி நான் சொல்ல, அவரோ ப்ரஸன்ன முகமாகவே கேட்டுக் கொண்டதால் தொடர்ந்தேன்) அவளோட த்ருஷ்டி செல்லப்பிள்ளையான பிள்ளையார் மேலே பட்டுட்டா தன்னால குளிர்ந்துடும்னு அவளுக்கு நேர் எதிரே பிள்ளையாரைப் பிரதிஷ்டை பண்ணின விஷயம் கேட்டிருப்பார். ஆனாலும் அவ்வளவா லோகத்துக்குத் தெரியாத லால்குடி அம்பாள் மேலே பாடினவர் அகிலாண்டேச்வரி மேலே பாடினதாத் தெரியலை. இருந்தாலும் அந்த விஷயம் மட்டும் அவர் மனஸுல நன்னாப் பதிஞ்சிருக்கலாம். அப்பறம் அவர் காஞ்சீபுரம் வந்து இங்கேயும் ஆசார்யாள் அம்பாளை சமனப்படுத்த அவளுக்கு நேரே ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டை பண்ணினார்னு கேட்டவொடனே ஜம்புகேச்வர ஞாபகம் வந்து 'விநாயகுநி'ன்னு ஆரம்பிச்சிருக்கலாம்."

எல்.கே.ஜி. குழந்தை ஒப்பிக்கும் பாட்டில் மகிழும் தாயாக அந்த ஸர்வஜ்ஞ ப்ரபு ஸந்தோஷப்பட்டார். "ஒன் குதிரை ஒரே தாவா ஜம்புகேச்வரத்துக்கும் காஞ்சீபுரத்துக்கும் தாவி கதை ஜோடனை பண்ணிடுத்து. கதை, ஜோடனைன்னு ஏன் சொல்லணும்? அப்படியே நடந்திருக்கலாம்" என்றார்.

இன்ப வாரிதி பாய்ந்தது.

"இதைப் பத்திப் பெரியவா புதுசா ஏதோ சொல்றதுக்கு இருக்கு. சொல்லணும்" என்று மீண்டும் வணங்கி விஞ்ஞாபித்தேன்.

"நீ ப்ரமாதமா சொல்லியிருக்கே, அந்த மாதிரில்லாம் எனக்கு வருமா? எனக்குத் தெரிஞ்ச மட்டும் சொல்றேன். எனக்கு என்ன தோணித்துன்னா..."

இம்மாதிரி விஷயங்களில் ஸ்ரீசரணாளுக்கு ஒன்று 'தோணினால்' அது நமக்கெல்லாம் 'தோன்றுகிறது' போன்ற வெறும் மனப் புனைவு அல்ல. பரமஸத்யம்தான் அவருக்குத்

'தோணும்'. ஆகையால் தொடர்ந்து வரும் கதையில் அவர் ஐயர்வாள் இப்படியிப்படிச் செய்திருப்பார், செய்திருக்கலாம், செய்திருக்கக்கூடும் என்று ஏதோ லேசான அநுமானம் போலச் சொல்வதெல்லாம் வாஸ்தவத்தில் கனமான ப்ரமாணமேயாகும். அவை ஐயர்வாள் செய்ததே என்பதுதான் என் உறுதி.

அவரது காமாக்ஷி ஆலய தரிசனத்தை இவர் உடனிருந்து பார்த்தது போலல்லவா திரைப்படச் சுருளாக அவிழ்த்து விட்டார்?

"ஐயர்வாள் அம்பாள் கோபுரத்வாரத்திலே நுழையற போதே, வேறே எந்தக் கோவில்லயும் இல்லாத மாதிரி வலது பக்கத்துலே ஒரு ஸ்தம்பத்துலே ஒரு நர்த்தன விநாயகரைப் பாத்திருப்பார்; அதோட உள்ளே, நேரே ஸிந்தூர விநாயகரைப் பாத்திருப்பார் (அதாவது பார்த்தார். இனி வருவனவற்றையும் இதே போலத் 'திருத்தி'ப் படிக்கவும்). உள் பிராகார ஆரம்பத்துலே வலது பக்கம் 'ஆதிசேஷன்'னு ஒரு ஸந்நிதி... நாக ரூபத்துலே இருக்கற ஸுப்ரம்மண்ய ஸ்வாமியைத்தான் அப்படி (ஆதிசேஷன் என்று) சொல்றது... அங்கேயும் சின்னதா ஒரு விநாயக பிம்பம் பாத்திருப்பார். அப்படியே உள்ளே போனா, ஐயஸ்தம்பம் தாண்டின வொடனேயே சுவர்லே சின்ன பிள்ளையார் ரிலீஃப் (புடைப்புச் சிற்பம்); பக்கத்துலேயே நன்னா முழுசாவே இருக்கற இன்னொரு பிள்ளையார். அப்பறம் பிரதக்ஷிணம் வரச்சே பள்ளியறைக்கு நேரே நல்ல ஆக்ருதியாக இஷ்ட ஸித்தி விநாயகர்னு ஒத்தர் ஒக்காந்திருக்கறதைப் பாத்திருப்பார். உத்ஸவ காமாக்ஷி ஸந்நிதி வாசல்ல ரெண்டு பக்கமும் பிள்ளையார் – ஸுப்ரம்மண்யர்; அங்கேந்தே மேற்கால பாத்தாத் தெரியற மூல காமாக்ஷி ஸந்நிதி வெளிச் சுவர்லயும் பிள்ளையார் – ஸுப்ரம்மண்யர் பாத்திருப்பார். ஐயர்வாள் மாதிரி ஒரு பெரியவர் எங்கேயோ திருவையாத்துலேந்து வந்திருக்கார்னா அர்ச்சகாள் மரியாதை

பண்ணிக் கூட இருந்துதானே சுத்திக் காட்டி தர்சனம் பண்ணி வெச்சிருப்பா? அப்படி, கூட வந்தவா உத்ஸவ காமாக்ஷி ஸந்நிதி தாண்டறச்சே, "இங்கே மௌனமாப் போகணும். ஏன்னா, இங்கே துண்டீர மஹாராஜா தபஸ்ல இருக்கார்"னு சொல்லி, அவரோட பிம்பத்தையும் காட்டியிருப்பா.

"அங்கே தாண்டினவிட்டு ஐயர்வாள், 'அது யார் துண்டீர மஹாராஜா?'ன்னு கேட்டிருப்பார். (கண்ணெதிரே கண்டு கூறுவது போலிருக்கிறதா, இல்லையா?) அர்ச்சகாள், 'அவர்தான் இந்தப் பிரதேசத்தோட மொதல் ராஜாவாயிருந்த ஆகாச பூபதியோட பிள்ளை. பிள்ளை வரம் வேண்டி ஆகாச பூபதி அம்பாளுக்குத் தபஸ் கெடந்து அடைஞ்ச புத்ரர். அம்பாள் ஸாக்ஷாத் தன் கொழந்தை கணபதியைத்தான் அப்படிப் பொறப்பிச்சா. அதனாலதான் அவருக்குத் 'துண்டீரர்'னு பேர் வெச்சது.... துண்டம்னா தும்பிக்கை யோன்னோ? வக்ரதுண்டர்னு பிள்ளையாரைச் சொல்றோமே!... அந்தத் துண்டீரர் பேர்லேதான் இந்தப் பிரதேசத்துக்குத் துண்டீர மண்டலம்னே பேர் வந்து, தமிழிலே தொண்டை மண்டலம்–கிறா'ன்னு கதை சொல்லியிருப்பா. அதாவது, கோவில் மட்டுமில்லாம அந்த சீமையே பிள்ளையார் விசேஷம் பெத்தது–ன்னு ஐயர்வாள் கண்டிண்டிருப்பார்.

"ஆகாசபூபதி கணேசாவதாரமான துண்டீரருக்கு ராஜாவாப் பட்டாபிஷேகம் பண்ணினான்–கிறது மாத்திர மில்லை. ஸாக்ஷாத் அம்பாளே மூல கணேசருக்கே ராஜ்யாபிஷேகம் பண்ணினதாவும் அங்கே ஐதிஹ்யம். என்ன கதைன்னா, ... ஒனக்குத் தெரியுமோ?"

"தெரியலை."

"ஈச்வர சாபத்துனால அம்பாள் அவரை விட்டுப் பிரிஞ்சு அப்பறம் மறுபடி அடையறதுக்காகக் காஞ்சீ

புரத்திலே பிருத்வீலிங்கம் பிடிச்சு வெச்சுப் பூஜை பண்ணினது முதலான ஸமாசாரங்கள் கேட்டிருக்கியோன்னோ?"

"கேட்டிருக்கேன். அம்பாளை சோதிக்கறதுக்காக ஸ்வாமி அங்கே வெள்ளத்தைப் பெருக்க விட்டார். அப்பவும் அம்பாள் நகராம, லிங்கத்தை இறுகக் கட்டிண்டு அப்படியே இருந்துட்டா. ஸ்வாமியும் ஆவிர்பாவமானார்."

"அப்போ அம்பாள் தபஸிருந்ததோட தர்மங்களும் பண்ணினா. 'எண்ணான்கு அறம்'னு தமிழ்ப் பொஸ்தகங்கள்ல இருக்கும். அதாவது முப்பத்திரண்டு தர்மங்கள். மநுஷ்யாளுக்குச் செய்யற அன்னதானத்திலேருந்து வாயில்லாத ஜீவன், ஒரு மாடு, அதுக்கு அரிச்சுப் பிடுங்கினாக்கூட அது சொறிஞ்சிக்கிறத்துக்கு ஸஹாயமா 'ஆதீண்டுகுற்றி'ன்னு கல் நட்டு வெக்கறவரைக்கும் முப்பத்திரண்டு தர்மங்கள். தபஸோட கூட இந்த தர்மங்களை அம்பாள் பண்ணினதா இருக்கு. அப்பறம் ஸ்வாமியைத் திரும்பச் சேந்தவிட்டும் இந்த தர்மங்களை அங்கே தொடர்ந்து பரிபாலிக்கணும்னு நெனச்சா. ஆனா, தானே அப்படிப் பண்ணாம பிள்ளை–யாருக்குத்தான் ராஜாவாப் பட்டங்கட்டி, 'தர்ம பாலனம் பண்ணிடுரு'ன்னு வெச்சா–ன்னு ஸ்தல புராணத்துல இருக்கு. 'ராஜகணபதி'ன்னு சேலம் மாதிரி சில ஊர்ல பிள்ளையார் இருந்தாலும், இங்கேதான் அவர் ஸ்வயரூபத்திலே அம்பாளே பட்டம் கட்டியும், அப்பறம் அவதார ரூபத்திலே மநுஷ்ய ராஜா அதே மாதிரி பண்ணியும் ராஜாவா இருந்திருக்கார்.

"இந்த விருத்தாந்தமும் ஐயர்வாள் கேட்டிருப்பார். அவரும் ஒரு ராஜாதான் – தியாகராஜா.

"தொடர்ந்து மேற்கால திரும்பி பிரதக்ஷிணம் போறப்ப, ஐயர்வாள் காலத்துக்கு முன்னாடியே தஞ்சாவூருக்குப் போய் சாமா சாஸ்த்ரிகள் கிட்டேந்து நெறய பாட்டு பெத்துண்ட பங்காரு காமாக்ஷியோட காலி ஸந்நிதியைப் பாத்திருப்பார். அங்கே வாசல்ல ரெண்டு பக்கமும் பிள்ளையார் – ஸுப்ரம்மண்யர் இருக்கறதைக் கவனிச்சிருப்பார்.

"கர்ப்ப க்ருஹ வாசல்லேயும் அதே மாதிரி அந்த ரெண்டு பேர் அவரை வரவேத்திருப்பா.

"அவர் மூலஸ்தானத்துலே அம்பாளை தர்சனம் பண்ணி அப்படியே மனஸ் நெறஞ்சு போயிருப்பார். ராமர்தான் அவருக்கு இஷ்ட தெய்வம்னாலும், அடுத்தாப்பல அம்பாள் கிட்டேயும் அவருக்கு நல்ல பக்தி. திருவையாத்திலேயே தர்மஸம்வர்த்தினி, திருவொத்தியூர் த்ரிபுரஸுந்தரி பேர்லேல்லாம் அவர் கொட்டியிருக்கற க்ருதிகளைப் பாத்தாத் தெரியும். அவர் தொண்ணூத்தாறு கோடி ராமநாமா ஜபிச்சதேகூட தர்மஸம்வர்த்தினி ஸந்நிதியிலே பின் பக்கத்துலேதான்னு சொல்லக் கேட்டிருக்கேன். அதனால, நம்ப அம்பாளை (காமாக்ஷியை நம்ப அம்பாளாகப் பெரியவாள் கூறும் உரிமையருமை அலாதிதான்) தர்சிக்கறப்பவும் உருகித்தான் போயிருப்பார். மனஸ் அப்படியே ரொம்பிப் போனதுலே வாய் தெறந்து பாடக்கூட முடியாமப் போயிருக்கும். (போய்விட்டது என்றே படித்துக் கொள்ளவும்.)

"இவர் பாடாட்டா என்ன? அர்ச்சகாள் அங்கே நன்னா ராகம் போட்டுண்டு அர்ச்சனை பண்ணுவா. பாட்டுன்னா அம்பாளுக்கு ஒரே பேராசைங்கறதாலதான் 'கானலோலுபா'ன்னு ஒரு பேர் (ஸஹஸ்ரநாமத்தில்) சொல்லியிருக்கு. காமாக்ஷி அர்ச்சக பரம்பரையிலேயே இங்கேருந்து தஞ்சாவூருக்குப் போய் பங்காரு காமாக்ஷியைப் பூஜிச்சிண்டிருந்தவா ஆத்திலேதானே சாமா சாஸ்திரி பொறந்திருந்தார்?... அழகா ராக பாவமாப் பாடி ஐயர்வாளுக்காக அர்ச்சனை பண்ணியிருப்பா. அர்ச்சனை பண்ணினதோட இல்லாம, முடிச்சவிட்டு ஒரு ச்லோகமும் அந்த அர்ச்சகர் பாடியிருப்பார். (என்னென்ன டீடெய்ல்ஸ் கொடுக்கிறார், பாருங்கள்!)

"என்ன ச்லோகம்னா.... பஞ்சகமா (ஐந்து ச்லோகங்கள் அடங்கியதாக) ஒரு அம்பாள் ஸ்தோத்ரம் உண்டு. ஒவ்வொரு ச்லோகமும்

**மாம் அம்பாபுரவாஸிநீ பகவதீ ஹேரம்பமாதா (அ)வது**

-ன்னு முடியும். கவனிச்சியோன்னோ, 'ஹேரம்பமாதா (அ)வது' (விநாயகனின் தாய் ரக்ஷிப்பாளாக)! அந்த நாள்ல - அந்த நாள்னா, தியாகையர்வாள் நாள் இல்லே; நான் பால்யமாயிருந்த அறுபது, அறுபத்தஞ்சு வருஷத்துக்கு முந்தி (இதைக் கூறுகையில் ஸ்ரீசரணர் எழுபத்தோரு பிராயத்தினர்) காமாக்ஷிகிட்ட, நம்ம மடத்துக்கிட்ட பக்தியா இருக்கிறவா அந்த அம்பாள் பஞ்சகத்துல ஒரு ச்லோகம் கொழந்தை களுக்குக்கூடச் சொல்லிக் கொடுப்பா...

(ராக ஸஞ்சாரமாக நீட்டாமலும் இழைக்காமலுமே கல்யாணி ராகச் சாயலை அழகுறக் காட்டிச் சொல்கிறார்கள்:)

**"கல்யாணீ கமநீய ஸௌந்தரவபு: காத்யாயநீ காளிகா**

**கால ச்யாமள மேசக த்யுதிமதீ காதி-த்ரிபஞ்சாக்ஷரீ |**

**காமாக்ஷீ கருணாநிதி: கலிமலாரண்யாதி தாவாநலா**

**மாமம்பாபுரவாஸிநீ பகவதீ ஹேரம்பமாதாவது ||**

-ங்கிற ச்லோகம். அதையும் அன்னிக்கி அர்ச்சகர் 'பெரிய ஸாஹித்யகர்த்தா வந்திருக்கச்சே நம்ம கோவிலோட ஸங்கீதச் செறப்பையும் காட்டி ஆசீர்வாதம் வாங்கிக்கணும்'னு நன்னா, கல்யாணீன்னு ச்லோகத்துலேயே வரதாலே, கல்யாணி ராகத்துலே பாடிக் காட்டியிருப்பார்.

"இதுவரை கண்ணால அநேக கணேச மூர்த்திகளைப் பார்த்தவர் இப்போ காதாலேயும் அந்தப் பிள்ளையோட அம்மாவா அம்பாள் ரக்ஷணையைப் பிரார்த்திக்கற ச்லோகத்தைக் கேட்டதும் அது அவர் மனஸுல நன்னா எறங்கியிருக்கும்.

"தர்சனம் ஆனதும் குங்கும ப்ரஸாதம் குடுத்து, அதை அரூபலக்ஷ்மிக்கு அர்ப்பணம் பண்ணிட்டுத்தான் இட்டுக்கணும்னு அவருக்கு அர்ச்சகாள் சொல்லி அந்தப் பக்கவாட்டுக்கு அழைச்சுண்டு போயிருப்பா.... அரூபலக்ஷ்மி தெரியுமோன்னோ?"

"தெரியும்"

"என்ன தெரியும்? பிம்பம் இருக்கறது மட்டும் தெரியுமா? கதையும் தெரியுமா?"

"ரெண்டும் தெரியும்.*"

"நல்லதாச்சு. அந்தக் கதை சொல்ற காரியம் எனக்கு மிச்சமாச்சு.... ஐயர்வாளை அரூபலக்ஷ்மிகிட்டே அழைச்சுண்டு போனவா அங்கேயும் கெழக்கு முகமா ஸௌபாக்ய கணபதின்னு ஒத்தர் ஒக்காந்திண்டிருக்கறதைக் காட்டியிருப்பா. அந்த உள் அங்கணத்துலேயே தெற்கு முகமா ஸந்தான கணபதின்னு வேறே ஒத்தர் இருக்கிறதையும் அவர் பாத்து, 'மொத்தத்துல அப்படியொண்ணும் பெரிய கோவிலா இல்லாட்டாலும் திரும்பற எடத்துலே எல்லாம் ஒத்தரா எத்தனை கணபதிகள்?'னு நெனச்சுண்டு ஸந்நிதியிலேந்து வந்திருப்பார்.

* ஒரு முறை திருமாலிடம் கேலி பேசிய திருமகள் அதில் எல்லை கடந்தாள். அவர் கோபமுற்று அவளை உருவழுகு சிதைந்த அரூபலக்ஷ்மி ஆகுமாறு சபித்தார். பிராட்டி விமோசனம் வேண்டினாள். பிரான், "காஞ்சி சென்று காமாக்ஷியை வழிபடு. அவள் தனது அடியார்கள் பெறும் குங்குமப் பிரஸாதத்தை முதலில் உன் மீது தடவிவிட்டே வழித்தெடுத்துக் கொண்டு அதன்பின் இட்டுக் கொள்ள வேண்டும் என்று விதிப்பாள். அவ்வாறு அடியார் தடவும் அம்பாள் குங்கும மகிமையால் உன் அரூபம் மாறி ஸௌந்தர்ய ரூபம் பெறுவாய்" என்றார். அவர் சொன்னது போலவே பிற்பாடு நடந்தது. காமாக்ஷிக் கருவறைச் சுவரின் வெளிப்புறம் இடப்பக்கம் அரூபலக்ஷ்மியும் வலப்பக்கம் ஸௌந்தர்ய லக்ஷ்மியும் குடிகொண்டுள்ளனர். இன்றும் அடியார்கள் பெறும் குங்குமத்தை முதலில் அரூபலக்ஷ்மிக்கு அர்ப்பணித்துப் பிறகே அணிகின்றனர்.

"ஆசார்யாள் ஸந்நிதியிலே அவரை மரியாதை பண்ணி, ரொம்பப் பெரியவாளுக்கு எப்படிப் பண்ணுவாளோ அப்படி எல்லாம் பண்ணி, வழியனுப்பறத்துக்காக அழைச்சுண்டு வரச்சே, ஜயஸ்தம்பத்துக்கு வந்தா.... ஆரம்பத்திலே வர பிள்ளையாரே இங்கே முடிவாயும் ஸ்தம்பத்துக்கு மேலண்டைப் பக்கம் ஒக்காந்துண்டிருக்கிறதைப் பார்த்திருப்பார். "இவரைப் பாத்து வேண்டிண்டாதான் அம்பாள் தர்சன பலன் ஸித்திக்கும். வரஸித்தி விநாயகர்னே பேரு'ன்னு அர்ச்சகாள் சொல்லியிருப்பா.

"அடேயப்பா, இங்கே பிள்ளையாருக்கு இத்தனை மஹிமையா? அம்பாளைப் பாக்கறதுக்கு முந்தியும் மூணு, நாலு பிள்ளையார், பார்த்துவிட்டும் மூணு நாலா?'–ன்னு ஆச்சர்யப்பட்டுண்டு ஐயர்வாள் கோவில்லேருந்து புறப்பட்டிருப்பார்.*

"இதெல்லாம் அவர் கோவிலுக்கு வந்த மொதல் தடவைன்னு வெச்சுக்கலாம்; அது ஒரு கார்த்தால (காலை) வேளைன்னும் வெச்சுக்கலாம். (இத்தனை விவரம் சொல்லும் போது 'லாம்' போடலாமா?)

"தர்சனம் முடிச்சு அவர் உபநிஷத் ப்ரஹ்மேந்திர மடத்திலே ஆஹாரம் பண்றப்போ, அப்பறம் விச்ராந்தி பண்ணிண்டிருக்கறப்போ எல்லாங்கூட அம்பாளை தர்சனம் பண்ணினதே அடிமனஸுல சொழண்டுண்டு இருந்திருக்கும். அதோட, அவளோட க்ருபைக்கு விசேஷமா பாத்ரமாயி, கோவில் பூரா பல ரூபத்துல இருந்த பிள்ளையாரோட பாக்யத்தையும் நெனச்சு நெனச்சுப் பார்த்திருப்பார்.

---

* இவ்வளவு விநாயகர்களைக் கூறிய ஸ்ரீசரணர் பெரிதான வெளிப் பிராகாரத்தில் திருக்குளக்கரையிலுள்ள திருமஞ்சன விநாயகரைக் கூறவில்லை என்று பிற்பாடு காஞ்சி சென்று பார்த்தபோது தெரிந்தது. அவர் மறந்திருப்பார் என எண்ணுவதற்கில்லை. ஒரு வேளை தியாகையர் அந்த வெளிப் பிரகார வலம் வரவில்லையோ?

"ஸாஹித்ய கர்த்தாவா? ஸாஹித்யத்தை மட்டும் பண்ணாம அதுக்கு ஸ்வர–தாளங்களும் அமைச்சவாளா 'வாக்கேயகாரர்'னே இருக்கிறவாள்ல முதல் ஸ்தானத்துல இருக்கிறவரில்லையா? அன்னிக்கு மத்யானம் அவர் மனஸுலே காமாக்ஷியைப் பத்தி ஸாஹித்யம் பொங்கிண்டு வந்திருக்கும். அப்ப அந்த விக்நேச்வரரோட பாக்யமும் முண்டிண்டு அவர் வாக்குல மொதல்ல வந்து, "அந்தப் பிள்ளை மாதிரி என்னையும் நெனச்சு க்ருபை பண்ணும்மா!" ன்னு அபிப்ராயம் குடுக்கும்படியா 'விநாயகுநி'ன்னு கீர்த்தனமாயிருக்கும். ஸாயரக்ஷை மறுபடி கோவிலுக்குப் போய் ஸந்நிதியிலேயே பரவசமாப் பாடியிருப்பார். அம்பாளும் பரிபூர்ணமா அநுக்ரஹம் பண்ணியிருப்பா.

"என் 'குதிரை' தேவலையா? ஒன் குதிரைக்கு அரைத் திட்டம், கால் திட்டமாவது வருமா?" – அதென்ன மோஹனச் சிரிப்பு? மோஹத்தையெல்லாம் விரட்டும் மோஹனச் சிரிப்பு?

"பெரியவா குதிரை நிஜக் குதிரை; ஒசந்த அராபியன் ஹார்ஸ். என்னுது பொய்க்கால் கழுதை" என்றேன், ஏதோ ஒரு வேகத்தில்.

நிர்மல வெள்ளமாகச் சிரித்தார். "ரெண்டுமே அராபியன் ஹார்ஸ் என்ன, ரெட்டை உச்சைச்ரவஸ்னுதான் வெச்சுக்கலாமே!" என்றார்.

உச்சைச்ரவஸ் என்பது பாற்கடல் கடைந்தபோது அதில் உண்டாகி, தேவராஜனுக்குப் பரிசாக ஆன புரவி.

கோபுர வாசலாக மனஸை ஹோ என்று திறந்து போட்டுப் பேசும் எளிமையும் தெளிவும் அவருக்கே உரித்தானவையல்லவா? அப்படிச் சொன்னார்: "நீ ஜெனரலா நடுநிலையா யோஜிச்சதிலே, அகிலாண்டேச்வரிக்கு விக்நேச்வரர்கிட்ட இருக்கிற விசேஷ வாத்ஸல்யம் ஆசார்யாளாலே வெளிப்பட்டதையும், அதே ஆசார்யாள்

காமாக்ஷியையும் அங்கே மாதிரியே சாந்தமாக்கிச் சக்ர ப்ரதிஷ்டை பண்ணினதையும் அழகா முடிச்சுப் போட்டுக் கதையோ, ஊஹமோ, நெஜமேயோ ரசனை (இலக்கிய உருவமைத்தல்) பண்ணியிருக்கே. எனக்கு எல்லா ஸ்வாமிக்குள்ளேயும் அம்பாள்னா தனிமுக்யம்; அந்த அம்பாளே அநேக ரூபங்களிலே இருக்கறதுலே காமாக்ஷின்னா தனி முக்யம்னு ஒரு பக்ஷபாதம். (அனைத்தும் தழுவும், அனைத்தும் அடங்கும் ஆத்மஞானியின் பக்திக் கோலத்தில் விளைந்த 'பக்ஷபாதம்' அழகாயில்லை?) அதனால அகிலாண்டேச்வரியை, அவளை, இவளைக் கொண்டு வந்து காமாக்ஷி ஸம்பந்தமா ஒண்ணைக் காட்டுவானேன்னு... என் வெளி மனஸுக்கே தெரியாம அப்படித் தோணி... இந்தக் காமகோஷ்ட விஷயமாவே பிள்ளையாருக்கு இருக்கற விசேஷத்தையெல்லாம் முடிச்சுப் போட்டு ரசனை பண்ணியிருக்கேன் போலேயிருக்கு."

அடியார்பால் தமது கடமையுணர்வில் அவர் கொண்டிருந்த காருண்யக் கவனிப்பும் காவலும் சட்டென்று முந்திவர, பாட்டுக்காரரைப் பார்த்து, "நான்பாட்டு என்னமோ பேசிண்டே போறேன். நீயும் அது, 'புரிஞ்சாலும், புரியாட்டாலும் போகட்டும் (குறும்புக் குத்தல்); பெரியவா பேசறா, கேட்டுண்டேயிருப்போம்'னு ஒக்காந்திருக்கியே, பஸ் போயிடப் போறதுப்பா! என்ன டயம்?" என்று பறந்தார். அன்பின் அழகு த்வைதத்தில் அத்வைத ஞானியின் பறப்பு!

பல பேர் ரிஸ்ட் வாட்சைப் பார்த்துச் சொல்ல, பாட்டுக்காரர் பிடிக்க வேண்டிய பஸ் அந்தப் பக்கம் வர மேலும் அரை மணி பிடிக்கலாம் என்று தெரிந்த அப்போதுதான் பெரியவாளின் பறப்பு அடங்கியது.

பாட்டுக்காரரைப் பற்றி என்னிடம் சொன்னார். அந்த அப்பாவியிடம் பெரியவாளுக்கு இருந்த அபாரப் பரிவு இன்று அதை எழுத்தில் தரும்போது வாசகருக்கு தெரியாது. அன்று நேரில் கேட்டிருக்க வேண்டும். வலக்கை, இடக்கை

தெரியாத ஆயப் பசங்களிடம் பகவத்கீதையைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருந்த ஞானாசார்யனுக்கு இருந்த அதே பரிவு.

பாட்டுக்காரருக்கு வேலூர் தாண்டி ஏதோ கிராமமாம். அந்த ஊரின் பேர் வினோதமாக இருந்ததால் நினைவில் நிற்கவில்லை. பாட்டுக்காரரின் பெயரையோ பெரியவாளே சொல்லவில்லை. பெரியவாளின் பூர்ணாநுக்ரஹத்துக்கு தனி பாத்தியதை பெற்ற அப்பாவிகளுக்கெல்லாம் பிரதிநிதி என்பதற்கதிகமாக அவருக்கு ஒரு தனிப் பெயர் சொல்லித் தான் ஆவதென்ன?

"ஸ்வல்ப பூஸ்திதி (சிறிதளவு நிலவுடைமை). அதுதான் ஜீவனோபாயம். படிப்பு பண்ற க்ருத்ரிமம் தெரியாம இருந்துண்டிருக்கான். (படிப்பு ஏறாததை இத்தனை அழகாக ஏற்றம் கொடுத்துச் சொல்ல அந்த எளிமைத் தெய்வத்தால்தான் முடியும். இங்கே நம் அத்தனை பேருக்கும் குறும்புக் குத்தலும்!) விதந்துத் தாயாரும், ஒரே பிள்ளையான இவனுமா இருந்துண்டிருக்கா. கல்யாணத்தைப் பத்தி யோஜனை போகலயாம். அவா பாட்டுக்கு ஒரு கஞ்சியை, கூழைக் குடிச்சுண்டு ஒத்தருக்கு ஒரு ஹானி செய்யாம நிம்மதியா இருந்திண்டிருக்கா. (நாமெல்லாம் தெரிந்தும் தெரியாமலும் எவருக்கேனும் செய்யும் ஹானியையும் நம்மளவில் நிம்மதி இன்னவென்றே தெரியாமலிருப்பதையும் அவரது குரல் நயமாகத் தெரிவித்தது.)

"பாட்டுன்னா இவனுக்குக் கொழந்தை நாள்லேந்து ஒரு ஆசையாம். சிக்ஷை சொல்லிக்க வசதி கெடயாது. யார் ஆத்திலயாவது, ஹோட்டல்லயாவது ரேடியோ, ப்ளேட் (இசைத் தட்டு) வெச்சா ஓடி ஓடிப் போய்க் கேக்கறதாம். தனக்கு இருக்கற க்ராஹ்ய சக்தியிலே எவ்வளவு பிடிச்சுக்க முடியறதோ பிடிசுச்சுக்கறதாம். லக்ஷ்யமும் மனோ பாவமுந்தான் முக்யமே தவிரக் கார்யத்துல என்ன ஸாதிக்க முடிஞ்சதுங்கறதா முக்யம்? அப்படி, அங்கே இங்கே ஓடி

தன்னால முடிஞ்ச மட்டும் பாட்டுக் கத்துண்டிருக்கான். ('பிடிக்கும்' ஆற்றலான 'க்ராஹ்ய சக்தி'யில் மிக மிகப் பின்தங்கி இருந்த ஒருவரைப் பற்றி எத்தகைய அநுதாப, அபிமான உயர்மதிப்பீடு ?)

"என்னப் பத்திக் கேள்விப்பட்டதிலேந்து.... (பாட்டுக் காரரை பார்த்து) எப்போப்பா கேள்விப்பட்டே ?"

"கனகாபிஷேகம் நடந்துதே, அப்போ."

"அதாவது ஏழெட்டு வருஷமா. 'அம்பாள்–கிம்பாள்'னு அப்போ யாரோ என்னைப் பத்திச் சொல்லிக் கேட்டதுலேந்து எங்கிட்டே ஒரே பக்தி வந்துடுத்தாம்.

"எனக்குப் பாடிக் காட்டணும், காட்டணும்னு ஆசையாம். 'அதெல்லாம் நம்மை அலெளவ் பண்ணுவாளா ?' ன்னும் பயமாம். அதோட, காஞ்சீபுரம் வந்துட்டுப் போறதுன்னா ரெண்டு, மூணு ஆகுமே, அதுக்குக்கூட வஸதியில்லாத ச்ரமமாம்."

பாட்டுக்காரரின் தேம்பல் பெரியவாளை இழுத்தது. அருள்மயமாக அவர் பக்கம் திரும்பி, "அழாதேப்பா! பணம், காசு வரும், போகும். நீ அதுக்காக பறக்காம இருக்கயே, இந்த மனஸு யாருக்கும் வல்லே; வரது துர்லபம். ஐநூறு ஆயிரம் ஸம்பாதிக்கற எளம் பசங்ககூட (சொன்னது முப்பதாண்டுகளுக்கு முன் என்பது நினைவிருக்கட்டும். அன்றைய ஐநூறு இன்றைய ஐயாயிரம்) அமெரிக்காவுக்கு ஓடலாமான்னு பாக்கற நாள்ல... பசங்களைச் செல்வானேன் ? ஆயிரம், ரெண்டாயிரம் ஸம்பாதிச்சு ரிடயர் ஆனவாகூட எக்ஸ்டென்ஷனுக்காக இல்லாத தில்லுமுல்லு பண்ற இந்த நாள்ல, போறும்–கிற எண்ணம் வரதே இல்லே. ஏதோ வர மாதிரி க்ஷணம் வந்தாலும் ஓடிப் போயிடறது. ஒனக்கு அது தன்னால வந்திருக்கு. அது போகவும் படாது. என்னைப் பாக்கறதுக்காகக்கூட, 'பணம், காசு வந்தா தேவலையே'ன்னு

நெனக்கவே நெனக்காதே. நான் ஒன் கூடவேதான் இருக்கேன்னு வெச்சுக்கோ..."

யாருக்குக் கிடைக்கும் அந்த ஸர்வகால ஸஹவாஸ வாக்குறுதி?

பாக்ய அப்பாவி நெடுஞ்சாண்கிடையாக நமஸ்கரித்தார்.

இன்னும் பல நெஞ்சங்களும் அதில் சேர்ந்து கொண்டன.

அதற்கதிகமாக அவரை உணர்ச்சி வசப்படுத்தக் கூடாது என்ற கருணையில்தான் இருக்க வேண்டும், மேற்கொண்டு அவரிடம் பேசாமல் என்னிடம் அவரைப் பற்றித் தொடர்ந்தார் மஹா மஹா ஸைகாலஜிஸ்ட்.

"என்னைப் பத்திக் கேட்டதுலேந்து பாக்கணும், பாடணும்னு தவிக்க ஆரம்பிச்சுட்டான்..."

'தவிக்க' என்ற வார்த்தையை அவர் சொன்னவுடன் எனக்கு ஒரு தவிப்பு ஏற்பட்டது, அந்த வார்த்தை பற்றி என் 'கண்டுபிடிப்பை'ச் சொல்ல வேண்டும் என்று! அதைப் புரிந்து கொண்ட ஸைகலாஜிஸ்ட், "என்னமாவது சொல்லணுமா?" என்றார்.

"'தவிக்கிறது'-ன்னா 'தவம் செய்யறது'ன்னு அர்த்த மோன்னு தோணறது. ஜபம் பண்றது 'ஜபிக்கிறது', அதே மாதிரி தவம் பண்றது 'தவிக்கிறது'ன்னு இருக்குமோன்னு".

"ஸரியாத்தான் படறது... ஆனா, 'தபஸ்'னா நேர் அர்த்தம் சூட்டுலே வறுத்தி எடுத்துக்கறது. ஒரே சிந்தனையா இறுக்கினா அப்படித்தான் ஒரு சூடு பொறக்கும். அப்போ மனஸ் அசையாம நிக்கறதுதான் தபோ நிஷ்டை. 'தவிக்கறது'-ங்கறச்சேயோ மனஸ் நெலை கொள்ளாம இருக்கும். 'நெலை கொள்ளாமத் தவிச்சேன்'னே செல்றோமோன்னோ? இப்படி மனஸ் நெலை கொள்ளாட்டாலும் ஏதோ ஒரு விஷயத்திலேயே அது உள்ளூர ஒரே ஈடுபாடா இருக்கறதாலே தான் அதை அடையறதுக்காக இப்படி நெலை கொள்ளாம

ஓடறது. ஆகையினாலே ஒன் (சிரித்து) நூதன வ்யாக்யானமும் ஒரே தினுஸுலே ஸரிதான்."

போனால் போகிறதென்று எனக்குப் பாஸ் மார்க் போட்டார் போலிருக்கிறது.

என் சாதுர்யங்கள் இருக்கட்டும். ஒரு சாதுர்யமும் தெரியாத ஒரு ஸாது பற்றி ஸாது ச்ரேஷ்டர் மனம் நிரம்பித் தொடர்ந்ததை கேட்போம்:

"ஏழெட்டு வருஷமா எனக்காகத் தவிச்சிருக்கான், தபஸ் இருக்காப்பலேயே. இப்பதான் வாழ்நாள்ல மொதல் தரமா ஸேவிங்ஸுனு ஒரு பத்து-பதினஞ்சு கையிலே சேந்துதாம். அது அப்படியே பெரியவாளுக்கு-ன்னு (பெரியவாள் அடக்கிக்கொண்ட போதிலும் அவரது உள்ளுருக்கம் அந்த வார்த்தைகளில் ஜாடை காட்டியது) பஸ் சார்ஜ் போக, மீதிக்கு எனக்குப் பழம், புஷ்பம்...... இதோ மாலை போட்டிண்டிருக்கேனே இது எல்லாம் வாங்கிண்டு ஓடி வந்துட்டான். (ஓஹோ! மாமுனிவர் கழற்றாமல் அணிந்திருந்த மாலையின் ரஹஸ்யம் இதுதானா?) திரும்பிப் போறதுக்கு ஸரியா என்ன பஸ் சார்ஜோ அவ்வளவுதான் கையிலே வெச்சுண்டிருக்கான்."

அடாடா! அப்பாவீ, உன் பக்தி மட்டுமில்லை, அபரிக்ரஹமும் தியாகமுங்கூட எங்களுக்குக் கனவிலும் வராது!

அந்த பாக்யசாலிக்கு ஏதேனும் பணிபுரிய வேண்டுமென எனக்கு உந்துதல் ஏற்பட்டதால், "ராத்ரி பூஜை பாத்துட்டுப் போறமாதிரிதான் வந்திருக்கேன். அதனால அவரை எங்க (அந் நாளில் நான் வேலை பார்த்துவந்த கல்கி காரியாலயத்து) வண்டியிலே கிராமத்துக்குக் கொண்டு விட்டுட்டு வரச் சொல்லவா?" என்றேன்.

உடனே ஸ்ரீசரணர் பளிச்சென்று சொன்னார்: "அந்த ஸௌகர்யத்துக்கெல்லாம் அவனைக் காட்டிக் கொடுக்காதே!" (என்ன அர்த்தபுஷ்டியான பதப்ரயோகம்!)

பாக்யசாலியின் கதையை ஸ்ரீசரணர் முடித்ததும் அவர் ஸ்ரீசரணரிடம் என்னைப் பற்றிக் குழந்தை போலக் கேட்டார்.

ஸ்ரீசரணர் மிகவும் அதிகமாக ஏதோ சொன்னார்.

அது எனக்கு மகிழ்ச்சி தராமல் வேதனையே தந்தது. ஏனென்றால் அவர் சொன்னதெல்லாம் என் எழுத்தாளப் பெருமையும் புகழ்க் கொடியையுந்தான். எனக்கோ அது வேண்டிக் கிடக்கவில்லை. சுயமாக ஏதோ ஒரு சாமர்த்தியம், கற்றும் கேட்டும் அறிவது, இவற்றுக்கு மேலாக தெய்வானுக்ரஹம் (அது அநுக்ரஹம்தானா, அல்லது சோதனையா என்று இன்றளவும் புரியவில்லை) இருந்தால் மஹாபட்ட எழுத்தாளனாக ஒருவர் ஆகி, மற்றவர்கள் மகிழ – ஸத்விஷயமாக எழுதினால் மற்றவர்கள் படிக்குமளவேனும் மனவுயர்வு பெறவும் – செய்து விடலாம். ஆனால் எழுதும் அந்த நபருடைய மனவுயர்வு? எத்தனை எத்தனையோ இலக்கிய மஹா மேதைகள் இருந்திருக்கிறார்களே, ஆத்ம விஷயமாகவே எழுதியவர்களுங்கூடத்தான், அவர்களில் எத்தனை பேர் தங்கள் மனத்தை மாசற்ற நிலைக்கு உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்? மனமே போய்விடும் உயர்வில் உண்மைத் தத்வத்தை உணர்ந்திருக்கிறார்கள்? எழுத்து ஸாஹஸத்தின் இழுப்புக்கும், எழுத்தைப் பார்த்து உலகம் தூக்கி வைப்பதில் அஹம் கீழே இழுக்கிற இழுப்புக்கும் ஈடு கொடுத்து முன்னேறுவது எத்தனை கொடூரமான 'ஹான்டிகாப் ரேஸா'கத் தோன்றுகிறது?

பின் ஏன் இவர் 'எழுத்தாளன்! எழுத்தாளன்!' என்று கூப்பிட்டது போதாமல் இப்போது அதில் ஜயக்கொடி பற்றி வேறு சொல்லி வேதனை, சோதனை செய்கிறார்? இப்படியே ஊருக்கு மட்டும் உயர்வான விஷயங்கள் சொல்லிக் கொண்டு, ஊராரால் உயர்வாக நினைக்கப்படுவதுடன் முடிய

வேண்டியதுதானா இந்த அபலனின் கதை? அப்படித்தான் தலையெழுத்தா? அந்த எழுத்தை இவர் வென்று ஆண்டு என் 'எழுத்தாள'ராகி ஜயக்கொடி நாட்டப் போவ தில்லையா? இரண்டாண்டு முன்பு இவரிடம் வாய்விட்டே வேண்டிய அந்த வரத்தை அருளப் போவதே இல்லையா?

என்னை அடக்கிக் கொள்ள முடியாமல், "பெரியவா ஏன் இந்த எழுத்தாளப் பெருமைங்கற சிறுமையைச் சொல்லிண்டிருக்கா? நான் வேண்டிண்டது பெரியவாளுக்கு ஞாபகமே இல்லையா?" என்றேன்.

அந்தப் பெரிய கண்கள் நிறைய அருளைத் தேக்கி ஆதரவாகப் பார்த்தார். அதுவே என்னை ஓரளவு ஆற்றிக் கொடுத்து, காவாமல் விடமாட்டார் என்று உத்தரவாதம் கொடுத்தது.

அங்கே கூடியிருந்த எல்லோரையும் பொதுவாகப் பார்த்துச் சொன்னார்: "இவன் எழுத ஆரம்பிச்சே நாலஞ்சு வருஷந்தான் ஆறது. பல பேர் என் அநுக்ரஹத்தாலேதான் எழுதறான்னு சொல்றா. ஆனா இவனானா எழுத ஆரம்பிச்சு ஒண்ணு ரெண்டு வருஷத்திலேயே எழுதறது நிக்கறதுக்கு நான் அநுக்ரஹம் பண்ணணும்னு மன்னாட ஆரம்பிச்சுட்டான்."

என்னை நோக்கிக் கனிவுடன் சொன்னார்: "அது பாட்டு நடக்கட்டுமே! லோகோபகாரமா நடந்துண்டு போகட்டுமே! அதை ஏன் எடஞ்சல்னு நெனக்கணும்? மத்தவாளுக்காக அது நடந்துண்டேதான் இருக்கணும்னா நடந்துட்டுப் போகட்டும். அதோட, 'நமக்கு என்ன நடக்கணுமோ அதலேயும் நாம குறி தப்பாம இருக்க அம்பாள் க்ருபை பண்ணி அந்த வழியிலே மேலே மேலே நடத்தித் தரணும்'னு ப்ரார்த்திச்சுண்டிரு. ஒனக்காக நானும் ப்ரார்த்திச்சுக்கறேன்" என்றார். கடைசியில் சொன்னாரே. அதைவிட என்ன வேண்டும்?

அப்படியும் அன்று நான் விடாமல், "இருந்தாலும் மத்தவா என் எழுத்துக்காகக் கொண்டாடறது போறாம பெரியவாளுமா எழுத்தாளன், எழுத்தாளன்–கிறதையே ஸ்ட்ரெஸ் பண்ணணும்னுதான் இருக்கு. எனக்கு இந்த எழுத்தாள ஐடென்டிடி வேண்டிக்கிடக்கவில்லை" என்று சொல்லி விட்டேன்.

பெரியவாள் குறும்பாகச் சிரித்தார். "ஒரு ஐடென்டிடியும் இல்லாம அப்படியே ஆத்மாராமனா இருந்துண்டிருக்கணுமோ?" என்றார்.

"அவ்வளவு பெரிசா ஆசைப்படறதுக்கு என்ன யோக்யதை இருக்கு? ஆனா அப்படிக்கூட ஒரு அநுபவ லேசமாவது எப்போவாவது ஒரு ஸமயத்துலே வந்து தொடறதுக்குப் பெரியவா அநுக்ரஹம், ரமண பகவான் அநுக்ரஹம் இருக்கறதால அந்த ஆசையும் இல்லாமயில்லே. ஆனா, இப்பவே, இனி எப்பவுமே, ஏதாவது ஐடென்டிடி இருந்துதான் ஆகணுமானா அது....." மேலே பேச முடியவில்லை.

"சொல்லுப்பா, சொல்லு, கிட்டக்க வந்து சொல்லு!" என்று பரிவு ஸமுத்ரமாகவே கூறியவாறு, அருகேயிருந்தவர்களைத் தள்ளியிருக்குமாறு கைகளால் விசையாக ஆட்டினார் அருளாளர்.

ஆனால் அவர்கள் தள்ளிப் போகுமுன்பே, சற்று எட்டத்திலிருந்தே, நான் திடீரென்று பிறந்த (அவர் பிறப்பித்த) தெம்புத் தெளிவுடன் சொன்னேன்: "ஏதாவது ஐடென்டிடி இருக்கணுமானா, நான் அம்பாள் கொழந்தை... அசடோ சமத்தோ எதுவானாலும், ஸகலரும் ஸகலமும் வாஸ்தவமாவே அவ கொழந்தைதானானதாலே அந்த உண்மையை ஸொந்த அநுபவமாத் தெரிஞ்சுண்டிருக்கற கொழந்தையா இருந்திண்டிருக்கணும்–கிறதுதான் ஆசை."

அவள், அவள் என்றேனேயானாலும் இவரை நான் அவளுக்கு வேறாக நினைத்ததில்லை. ஆயினும் கண்ணுக்கு எட்டாத அந்த மஹா பராசக்தியின் மகவாவதற்கு வாய்விட்டு வரம் கேட்க முடிந்ததே தவிர, கண்ணெதிர் காணும் இந்த எளிமையவதாரத்திடம் அவ்வுறவு கோர ஏனோ தயக்கமும், நடுக்கமும்!

ஸ்ரீசரணர் திருக்கண் மூடித் திறந்தார், அவளுடைய அருளின் முழுமையாக.

கணீரென்று சொன்னார்: "இப்படி ஒரு claim நீ பண்றதே அந்த அநுபவத்தை அவ ஒனக்குத் தெரிஞ்சோ தெரியாமலோ ஒரு மூலையிலே தூண்டி விட்டிருக்கறதாலே தான்! ஆரம்பிச்சு வெச்சவளே விருத்தியும் பண்ணிக்குடுப்பா! நீயும் வேண்டிக்கோ. நானும் வேண்டிக்கறேன். (மீண்டும் அந்தப் பெரும் கொடை!)

"இந்தப் பையன் 'விநாயகுநி' பாடினான். பிள்ளையாருக்குப் பண்றாப்போலவே தனக்கும் அவ ரக்ஷணையைத் தியாகையர்வாள் கேட்டுக்கறார்னு அந்தப் பேர் வெச்சுண்டிருக்கிற நீயே அர்த்தம் சொன்னே. ஒனக்கும் அப்படியே நடக்கட்டும்!" என்றது ஆழ்ந்த அன்பின் ஆரழகோடு சிந்தித்து, ஆழ்ந்த அன்பின் ஆரழகுடன் பேசவே அவள் எடுத்திருந்த அவதாரம்.

அந்தப் 'பைய'னிடம் எனக்கு முதலில் ஏற்பட்ட கோப உணர்ச்சி ஒவ்வொரு மாற்றுருவமாக எடுத்துக் கொண்டே போனதில் இப்போது நன்றியுணர்ச்சி பெருகியது. "இவராலே இன்னிக்கு எனக்கு ரொம்ப லாபம், அநேகப் பாடம்" என்றேன்.

ஸ்ரீசரணாள் அவரைப் பார்த்து, "பாத்தியா? பெரிய எழுத்தாளர் ஓங்கிட்ட எவ்வளவு ப்ரியமா இருக்கார்? அதுக்காக அவர் எழுதறது எதையாவது படிச்சுட்டுத் திண்டாடாதே! அவர் பணம், காசு குடுத்தா தொடாதே!

கார் ஸவாரி பண்ணி வெக்கறேன்–னாலும் ஒத்துக்காதே!" என்றார்.

அவர் சொல்வது நூற்றுக்கு நூறு நியாயம் என்று சுவைத்தேன்.

'பையன்' சொன்னார்: "நான் படிக்க மாட்டேன், பெரிவா! எனக்கு அதெல்லாம் புரியாது. காசும் யார்டேயும் வாங்கறதில்லே, பெரிவா! கார் ஸவாரிக்கெல்லாம் ஆசைப்படலை, பெரிவா! பெரிவா ஆசீர்வாதந்தான் வேணும்."

"வேண்டிய மட்டும் தரேன்" என்று வாரிவிட்ட வள்ளல், பாக்யசாலியிடம் (இனியும் அந்த நபரைப் பாட்டுக்காரர் என்றும் அப்பாவி என்றும் பையன் என்றும் ஏன் சொல்ல வேண்டும்?)"ஒனக்கு நாழியாச்சு. சட்னு போய் சந்திர மௌளீச்வரருக்கு நமஸ்காரம் பண்ணிட்டு வா. ப்ரஸாதம் தரேன்" என்றார்.

"சந்திரமௌளீச்வரர்னா எந்த ஸாமி? எங்கே கோவில் இருக்கு?" என்று பெரியவாளையே கேட்டார், தன் அறியாமையாலேயே என் கண்ணை மல்கச் செய்த பாக்யசாலி.

"சந்திரமௌளீச்வரர்தான் இந்த மடத்துக்கு ஸ்வாமி. அதோ (கையால் திசை காட்டி) அங்கேதான் நாங்க அவரை வெச்சுண்டு தங்கியிருக்கோம். போய் நமஸ்காரம் பண்ணிட்டு ஓடி வா."

"மடத்து ஸாமி காமாக்ஷியம்மன் இல்லையா?"

"அவளுந்தான். அவ மடத்துக்கு மட்டும் இல்லாம ஊர் ஒலகத்துக்கெல்லாம் பொதுவா காஞ்சீபுரத்துலே பொதுக் கோவில்ல இருக்கா. அவளேதான் இந்த மடத்தைப் பாத்துக்கறத்துக்காக, இந்த மடத்து ஸ்வாமியார்கள் மட்டும் பூஜை பண்றத்துக்காக — ஆனா, மடத்துக்காக மட்டும் இல்லாம லோகம் பூராவுக்குமாகப் பூஜை பண்றத்துக்காக

— சந்த்ரமௌளீச்வரர்னு அவளோட ஆத்துக்காரர் (எளியவருக்கேற்ற எளிய பதப் பிரயோகம்), அவரை ஸ்படிக லிங்க ரூபத்துலே இங்கே அனுப்பிச்சு வெச்சு, அவர் பக்கத்துலேயே தானும் வேறே ஒரு மாதிரி ரூபத்திலே (ஸ்ரீசக்ரம், மேரு ப்ரஸ்தாரம் என்றெல்லாம் சொல்லி அவரைத் திண்டாட வைக்காத அருமை பாருங்கள்) இருக்கா. கவசமும், அலங்காரமும், புஷ்பமுமாப் போட்டிருக்கறதாலே ஒனக்கு லிங்கம், அம்பாள்–னுல்லாம் ஒண்ணும் ஸ்பஷ்டமாத் தெரியாது. அதுக்காக தேடிண்டிருக்காதே. 'இங்கே ஸ்வாமி இருக்கார்'–ங்கற ஒண்ணை நெனச்சுண்டு ஒரு நமஸ்காரத்தைப் பண்ணிட்டு ஓடி வா" என்று கூறி அனுப்பி வைத்தார்.

அவரைப் பற்றித் தாம் சொல்லி வந்ததன் தொடர்ச்சியாகக் கூற விரும்பியதை அவரெதிரில் சொல்ல வேண்டாம் என்பதற்காகவும் ஸ்ரீசரணர் அவரை அனுப்பினாரோ என்று இனி வரும் வாசகம் தோன்றச் செய்தது.

"நீ அவனைக் கார்லே அனுப்பி வெச்சு கார், மோர்னு போய் கிராமத்துலே எறங்கறான்னு வெச்சுக்கோ, அப்ப ஒரு மெதப்பு எண்ணம் வந்தாலும் வந்துடலாம். அவனுக்கு எதுக்கு அதெல்லாம்? அவனுக்கு வஸதி வேண்டாம், ஸௌகர்யம் வேண்டாம், ஸ்டேடஸ், தோரணை ஒண்ணும் வேண்டாம். அறிவு, வித்வத்கூட வேண்டாம். ஆமாம், வேண்டாந்தான்! சொல்றேன் கேளு.

"ஸமீப காலமா வேலூர்லேந்தேதான் ஒரு பாட்டு வாத்யார் எங்கிட்ட வந்துண்டிருக்கார். ஓரளவு விஷயம் தெரிஞ்சவர்; அதைவிட, (குறும்புக் குத்தல் இத்தனைக் கிடையிலும் நீங்கவில்லை எனக் காட்டும் சிரிப்புடன்) பொறுமைசாலின்னும் தெரியறது. நான் சொன்னேன்னா இவனுக்கு ஃப்ரீயாவே கத்துக்குடுப்பார். அப்படி அவருக்கு அபிப்ராயமில்லேன்னு தெரிஞ்சாலும், நான் யார் தலைலேயாவது கை வெச்சு அவனுக்கு சம்பளம் கட்டறதுக்கு

ஈஸியா ஏற்பாடு பண்ணிடலாம். ஆனா அந்த மாதிரி எதுக்கும் அவனை நான் காட்டிக் கொடுக்க நினைக்கலே (மீண்டும் அதே சொற்றொடர்). 'ஸரியாப் பாடறது'ங்கிற ஸாமர்த்தியங்கூட அவனுக்கு வேண்டாம். அவன் பாட்டுக்கு இருக்கறபடி இருந்துண்டிருக்கட்டும். இப்ப பாடறபடியே பாடிண்டு போகட்டும்.

"தற்கால புத்திசாலி ஒலகத்திலேயும் தப்பித் தவறி இந்த மாதிரி அசடா இருக்கறவா நித்ய அசடாவே இருக்கட்டும். அவாளைக் கெடுக்க வேண்டாம் (முன்னைவிட தீவிரமான பதப்பிரயோகம்)-னே எனக்கு இருக்கு."

புத்திசாலித்தனத்தால் தீமைகளும் விளைவதைத் தெரிந்து கொள்ளும் புத்திசாலித்தனம் நமக்கு இல்லாததால் எல்லாவற்றையும் புத்தி மதிப்பீட்டில் கொண்டு வந்து நம்பிக்கை, பணிவு, எளிமை ஆகியவற்றை அப்பாற்படுத்தி விட்டு, நமது புத்திசாலித்தனத்தால் நமக்கு நாமே தீமையை மட்டும் வரவழைத்துக் கொள்வதை நாள்தோறும் பார்த்துப் பார்த்துப் பரிதவித்த கருணாமயரின் ஆழம் வாய்ந்த வாசகம் என்னைப் பிசைந்தெடுத்தது.

சந்திரமௌளீச்வரர் யாரென்று தெரியாமலே, நடமாடும் சந்திரமௌளீச்வரியால் இன்றைய புத்திசாலி உலகுக்கு மாற்று மருந்தாகப் போற்றப்பட்ட பாக்யசாலி அவர் சொன்னபடி நமஸ்கரித்துவிட்டு வந்தார்.

"நமஸ்காரம் · பண்ணிக்கோ; நாழியாச்சு!" என்று ஸ்ரீசரணர் விரைவுபடுத்தினார்.

பிரிய மனமின்றி, கண்ணீரும் கம்பலையுமாக பாக்யசாலி நமஸ்கரித்தார்.

சொல்லி ஸாத்தியமில்லாத ப்ரேமையுடன் ஸ்ரீசரணர் திருவிரல்களால் ப்ரஸாதத் தட்டிலிருந்த விபூதி, குங்குமம், மந்திராக்ஷதை, கற்கண்டு, காய்ந்த திராக்ஷைகளை வருடிக் கொடுத்தார். ஆம், அந்த பாக்யசாலிக் குழந்தையையே அவர்

அந்த ப்ரஸாதத்தில் ஆவாஹனம் செய்து, விநாயகனைக் காமாக்ஷி வருடிக் கொடுப்பதுபோல் செய்வதாகவே தெரிந்தது.

தமக்கே உரிய லளிதத்துடன் கையையும், திரு முகத்தையும், திருமுகத்தில் ஒளிரும் அருள் பார்வையையும் லேசாக உயர்த்தித் தட்டை எடுத்துக் கொள்ளுமாறு பாக்யசாலியிடம் ஸமிக்ஞை மொழி பேசினார்.

"நீ பாடினயே, அந்த விநாயகனை ரக்ஷிக்கறாப்பலேயே ஒன்ன அம்பாள் எப்பவும் ரக்ஷிச்சுண்டு இருக்கட்டும்!" என்று, ஆசீர்வதிக்கவே ஏற்பட்ட திருக்கரத்தைத் தூக்கினார்.

# "ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே!"

அண்மையில்* நூற்றாண்டு விழாக் கொண்ட ஸங்கீத சக்கரவர்த்தி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் அவர்களுக்கு மூன்றாண்டுகளில் நூறு தொடவிருக்கும் ஞானச் சக்கரவர்த்தியான காஞ்சி ஸ்ரீ மஹா ஸ்வாமிகள், "தேவச் சொர்க்கச் சக்கரவர்த்திப் பெருமா"ளான முருகனைப் பற்றிய ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கிருதிக்கு முத்தாகப் பொருள் கூறியது மறக்கவொண்ணா நிகழ்ச்சி.

1961 ஜூன் மாதம் ஸ்வாமிகள் தேவகோட்டையில் நீண்ட முகாமிட்டிருந்தார்கள். ஜாடையில் கூட ஏதும் தெரிவிக்காத காஷ்ட மௌனம் பூண்டு, அது ஒரு வாரம், பத்து நாளென்று நீண்டுகொண்டே போயிற்று. அடியாரின் விண்ணப்பங்களைச் செவி கொள்கிறாரா என்றுகூடத் தெரியவில்லை. இந்த நிலையில் ஒரு நாள் காலை அடுத்துள்ள காரைக்குடியைச் சேர்ந்த நகரத்தார் பெருமக்கள் சிலர் அவரைத் தரிசித்துத் தங்கள் விஞ்ஞாபனங்களை ஸமர்ப்பித்தனர். அவர்கள் பேச்சிடையே அரியக்குடியவர்கள் காரைக்குடியில் இருப்பதாகப் பிரஸ்தாவம் வந்தது.

உடனே அனைவருக்கும் ஆச்சரியமாக, அவரை அழைத்து வர முடியுமா என ஸ்ரீ ஸ்வாமிகள் சைகையில் கேட்டார்கள்.

உத்தரவானதாக அரியக்குடிக்குச் சொல்வதாகக் கூறி அவர்கள் விடைபெற்றனர்.

அன்று பிற்பகல் மூன்று மணியளவில் அரியக்குடி ஸ்வாமிகளின் முகாமுக்கு வந்துவிட்டார். பரவசம் என்றே சொல்லக்கூடிய பரபரப்புடன் வந்தார். காஷ்ட மௌனத்

---

* இக்கட்டுரை எழுதியது 1990 தீபாவளி சமயத்திலாகும்.

திலிருந்த ஜகதாசாரியர்கள் தம்மைக் கூப்பிட்டனுப்பி யிருக்கிறாரென்பதில் ஏற்பட்ட உணர்ச்சி மிகுதி!

ஜகதாசாரியர்கள் ஜகத்திலேயே எளியவற்றை உவப்பவ ரல்லவா? அதற்கேற்கவே இருந்தது அவர் தேவகோட்டையில் தங்கியிருந்த ஜாகை. ஒரு விடுதியின் தோட்டப்புறத்திலிருந்த சிறிய அறையில் ஸ்வாமிகளின் வாஸம் அமைந்திருந்தது. வாயிற்பக்க வழியாக பக்தர்கள் தரிசிப்பதற்கின்றித் தோட்டம் பார்க்க அமைந்த சிறிய ஜன்னலொன்றைத் திறந்து வைத்துக் கொண்டு அதன் வழியேதான் தரிசனம் தந்து வந்தார். அடியார்கள் செடியும் கொடியும் புல்லும் மண்டிய பின்புறப் பகுதிக்கு வந்து சாளரம் வழியே ஸ்வாமிகளைக் கண்டு சென்றனர். சுகஜீவன சொகஸுகளை விரும்பும் நமக்கும் தமது எளிய வாழ்முறையில் சிறிதேனும் பழக்கம் தரவோ என்னவோ, ஸ்வாமிகள் இவ்விதம் செய்வதுண்டுதானே?

அரியக்குடி வந்துவிட்டாரென்று ஸ்வாமிகளிடம் அறிவிக்கப்பட்டவுடன் அவரையும் பின்புற ஜன்னலுக்கே அழைத்து வருமாறு ஸமிக்ஞை செய்தார்கள்.

அரியக்குடி அவ்விதமே தோட்டப்புறம் வந்து ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டெழுந்தார்.

அவ்வளவுதான். அனைவருக்கும் மகிழ்ச்சியாக, அத்தனை நாட்கள் தக்ஷிணாமூர்த்தியாக இருந்த குருமூர்த்தியின் மணிக்குரல் அதற்கே உரிய ஜீவச் செழிப்போடு ஒலிக்கலாயிற்று. கடகடவென பேசிக் கொண்டே போனார்கள்.

''நீ ராஷ்ட்ரபதி அவார்ட் வாங்கினதெல்லாம் கேள்விப்பட்டேன். அப்போ ஒனக்கு ரெட் கார்ப்பெட் போட்டு — அப்படின்னா என்னன்னு தெரிஞ்சுண்டிருப்பே, நடைபாவாடையா ரத்னக் கம்பளம் போட்டு — பெரிய ஸதஸுலே கௌரவப்படுத்தியிருப்பா. நான் என்னடான்னா

இங்கே கல்லும் முள்ளுமா ஒரு கீக்கிடத்திலே ஒன்னை ஒக்காத்தி வெக்கறேன்.

"எதுக்குக் கூப்பிட்டேன்னா, 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே' இருக்கே, அதை யாராவது சுத்தமாப் பாடிக் கேக்கணும்னு ஒரு ஆசை. ஒன் பேரு காதுல பட்டவுடனே அந்த நினைப்பு வந்துடுத்து...... சுத்தமாப் பாடறதுன்னா ஸங்கீதமும் சுத்தமாயிருக்கணும்; ஸாஹித்ய உச்சரிப்பும் சுத்தமாயிருக்கணும். ரொம்பப் பேர் தெலுங்கு, ஸமஸ்க்ருதக் கீர்த்தனங்களிலே வார்த்தைகளை விரூபமாக்கிடறா.

'ஸங்கீத அம்சத்தையும், தாளத்தையும், ஸாஹித்ய சந்தஸையும் — 'சந்தம்'னு தமிழ்ல சொல்றாளே, அது, அதையும் — அனுசரிச்சுச் சில கீர்த்தனங்களிலே வார்த்தைகளை ஒரு தினுஸாச் சேர்த்து, பிரிச்சுல்லாம் கொடுத்திருக்கும். அதாவது ஸாஹித்யம்னு எழுதிப் பார்க்கிறதுக்கு இப்படி ரூபம் பண்ணியிருக்கும். அதையே ஸங்கீதமா — அர்த்த பாவம் கலந்த ஸங்கீதமா — பாடறப்போ ஸங்கீதம், தாளம் இதுகளோட கூட அர்த்தத்துக்கும் ஹானி இல்லாம எப்படி ஸந்தி பிரிக்கணுமோ, சேர்க்கணுமோ அப்படிப் பாடணும். நல்ல வாக்கேயகாராள் க்ருதிகள் இதுமாதிரி சுத்தமாப் பதம் பிரிச்சுப் பாட நிச்சயமா எடம் குடுக்கும். ஆனா, பாடறவாள்ள ரொம்பப் பேர் அர்த்தத்தைக் கவனிக்காம ஸங்கீதத்தை மட்டும் கவனிக்கிறதுல, எழுத்தில இருக்கிற பாட்டே காதிலே கேட்கிறப்போ விபரீதமா அர்த்தம் கொடுக்கும்படியாப் பண்ணிடறா.......

"இந்த 'ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே'யிலேயே ஒரு எடத்துல 'குருகுஹாயாஜ்ஞான த்வாந்த ஸவித்ரே'ன்னு வரது. அது 'குருகுஹாய, அஜ்ஞான த்வாந்த ஸவித்ரே' ன்னு பிரிஞ்சாதான் ஸரியான அர்த்தம் குடுக்கும். 'குருகுஹனுக்கு, அஞ்ஞான இருட்டுக்கு ஸூர்யனாயிருக்கிறவனுக்கு (நமஸ்காரம்)'னு அர்த்தம். சில பேர் என்ன பண்ணறான்னா 'குருகுஹாயா'ன்னு அப்படியே நீட்டி அதை ஒரு தனி

வார்த்தை மாதிரிக் காட்டிட்டு, 'ஞான த்வாந்த ஸவித்ரே'ன்னு — ஞான இருட்டுக்கு ஸூர்யன்னு — விபரீதமாப் பாடறா!

"'சங்கராசார்யம்' க்ருதி இருக்கே, நீ பாடறயோ என்னவோ, (வீணை) தனம்மா குடும்பத்துல வந்து, செம்மங்குடி சீனு, எம்.எஸ். கூடப் பாடறா — அதிலே 'பரமாத்வைத ஸ்தாபன லீலம்'னு வரது. 'விளையாட்டாவே பரம தத்வமான அத்வைதத்தை ஸ்தாபிச்சவர்'னு அர்த்தம். பாடறச்சே 'பரம அத்வைத ஸ்தாபன லீலம்'னு (பாடியே காட்டுகிறார்கள்) 'அ'வுல அழுத்தங் கொடுத்துப் பதம் பிரிச்சுப் பாடினாத்தான் ஸரியா அர்த்தம் குடுக்கும். நான் ஏதோ காமாசோமான்னு பாடறச்சேயே இந்த மாதிரி ஸங்கீதத்துக்கும் ஹானியில்லாம, தாளத்துக்கும் ஹானி யில்லாம, அதோடகூட அர்த்தத்துக்கும் ஹானியில்லாமப் பாட முடியறதுன்னு தெரியறதோல்லியோ? நான் சொன்னவாள்ளாமும் இப்படித்தான் பாடறா. ஆனா, புரிஞ்சுக்காதவா, புரிஞ்சுண்டு பாடணும்கிற கவலை இல்லாதவா, 'பரமா'ன்னு அப்படியே நீட்டிண்டே போய் 'த்வைத ஸ்தாபன லீலம்'னு பாடி அத்வைத ஆசார்யாளை த்வைத ஆசார்யாளா கன்வெர்ட் பண்ணிடறா! (வெகு நேரம் சிரிக்கிறார்கள்.)

"ஸங்கீதத்தில த்வைத – அத்வைதம் முதலான எந்த பேதமும் இல்லைதான். ஸங்கீதத்தில ஸங்கீதந்தான் முக்யம். ஸாஹித்யம் எதைப் பத்தினதோ, யாரைப் பத்தினதோ அதிலே பாடறவா மனஸை ஸங்கீதமே ஐக்யப்படுத்தி விடறது. அதனாலதான் நீ வைஷ்ணவன், ஒங்கிட்ட 'ஸ்ரீ ஸுப்ரமஹ் மண்யாய' ஒட்டிண்டிருக்கு; இல்லாட்டா, நீ அதுகிட்ட ஒட்டிண்டிருக்கே! எதுவோ ஒண்ணு. அந்த க்ருதி நீ பாடிக் கேட்டிருக்கேன். ஸங்கீத அம்சத்துல நீ சுத்தம்கிறதுக்கு நான் சொல்ல வேண்டாம். ஸாஹித்யமும் நீ சுத்தமாப் பாடறேன்னு கவனிச்சேன். அதனாலதான் ஒனக்குச் சொல்லி அனுப்பினேன்.

"என் தர்பார்ல கல்லும் முள்ளும்தான்! பக்க வாத்தியமும் இல்லாம, தம்பூர்கூட இல்லாம வந்திருக்கே. எத்தனை ச்ரமமானாலும் ஸஹிச்சுண்டு எனக்காகக் கொஞ்சம் அந்த க்ருதியைப் பாடு."

கடல் மடையாகப் பேசிப் போன ஸ்வாமிகள் நிறுத்தியதும் அரியக்குடி கடல் மடையாகவே கண்ணீர் பெருக்கிவிட்டார். மீண்டும் ஒரு முறை ஸ்வாமிகள் முன் நெடுஞ்சாண்கிடையாக வணங்கி எழுந்தார். 'பெரியவா' பாடச் சொல்லிப் 'பெரியவா'ளுக்காகப் பாடுவதை விட எந்தப் பெரிய கௌரவமும் தமக்கில்லை என்று கூறினார். "தாஸனையும் பொருட்டாக எண்ணி வலிந்து ஸந்தர்ப்பம் கொடுத்து அநுக்ரஹித்திருக்கிற கருணைக்கு என்ன சொல்வ தென்றே தெரியவில்லை. ச்ருதி, பக்க வாத்தியம் எல்லாவற்றுக்கும் பெரியவாள் அநுக்ரஹமேதான் இட்டு நிரப்ப வேண்டும். 'அவ்விடத்தில்' எதிர்பார்க்கும் அளவுக்கு சரியாகப் பாடவும் அநுக்ரஹந்தான் ஸஹாயம் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டு பாட ஆயத்தமானார்.

ஸ்வாமிகள், "(கிருதியின் ராகம்) காம்போதி-ன்னு சொல்றோம். புஸ்தகப் பேரு காம்போஜிதானே?" என்று கேட்கிறார்கள்.

அரியக்குடி ஆமாம் என்றவுடன் ஸ்வாமிகள் கூறலானார். "காம்போஜம் என்கிறது கம்போடியான்னு பல பேருக்குத் தெரிஞ்சிருக்கும். அங்கே பாரத கலாசாரம் ரொம்ப ஆழமாப் பரவியிருக்கிறதும் தெரிஞ்சிருக்கலாம். ஒரு வேளை அந்தத் தேசத்திலேருந்து இறக்குமதி பண்ணிண்ட ராகம்தான் காம்போஜியோன்னா, அப்படியில்லைன்னு ஸாம்பமூர்த்தி (காலஞ்சென்ற பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி) மாதிரியான ரிஸர்ச்காரா சொல்றா. நம்மகிட்டேயிருந்துதான் அவா அநேக ஸமாசாரம் கடன் வாங்கிண்டாளே தவிர, நாம அந்தக் காலத்திலே நாகரிகத்திலே ரொம்பப் பின்தங்கியிருந்த

அவாகிட்டேயிருந்து எதுவும் எடுத்துக்கலை; நிச்சயமா, ஸங்கீதத்திலே ரொம்ப முன்னேறியிருந்த நாம ஏதோ folk music தான் இருந்த கிழக்காசியா தேசங்களிலிருந்து எதுவும் கடன் வாங்கலைன்னு சொல்றா. பின்னே ஏன் காம்போஜின்னு பேருன்னா இன்னொண்ணு தோணறது. காம்போடியாவை மாத்திரம் காம்போஜம்னு சொல்லலை. இந்தியாவோட வடக்கத்தி எல்லையை ஒட்டினாப்பல இருக்கிற ஒரு ப்ரதேசத்தையும் காம்போஜம்னே சொல்லி யிருக்கா–ன்னு தெரியறது. காளிதாஸன் ரொம்ப விஷயம் தெரிஞ்சவர். 'மேக ஸந்தேச'த்துல 'இந்தந்த வழியா போ'ன்னு மேகத்துங்கிட்ட யக்ஷன் சொல்லிண்டு போறதை வெச்சே கரெக்டா map போட்டுடலாம்! அவ்வளவு ஸரியா சொல்லி யிருப்பார். அவர் 'ரகுவம்ச'த்துல ரகு தேசம் தேசமாப் படை எடுத்துண்டு போய் ஜயிச்சதை வரிசையாச் சொல்லிண்டு போறச்சே, ஸிந்து நதியைத் தாண்டி வடக்கே இமயமலையை ஒட்டினாப்போலேயே காம்போஜத்தைச் சொல்லியிருக்கார். இதிலேருந்து அகண்ட பாரதம்னும் விசால இந்தியான்னும் சொல்ற தேசத்துக்குள்ளேயே ஹிண்டுகுஷ் பிராந்தியத்திலே ஒரு காம்போஜம் இருந்திருக்கிறதாத் தெரியறது. அங்கே விசேஷமாயிருந்த ஒரு ராகத்திலேயிருந்து காம்போஜி உண்டாச்சு போலிருக்கு.

''அநேக ராகங்கள் ஒவ்வொரு சீமையிலேருந்து வந்ததாலேயோ என்னமோ, அந்தச் சீமையின் பேரை வெச்சுண்டிருக்கோல்லியோ? 'ஸௌராஷ்டிரம்', 'நவரஸ கன்னட' — 'கன்னட'ன்னேகூட ஒரு ராகம் — 'ஸிந்து பைரவி', 'யமுனா கல்யாணி', இப்படியெல்லாம் இருக்கோல்லியோ? அந்த மாதிரி, காம்போஜப் பிரதேச ஸம்பந்தமா காம்போஜி ராகம்னு இருக்கலாம்.

''ரிஸர்ச் பண்றவா என்ன சொல்றா–ன்னா காம்போதி, மோஹனம் மாதிரி சில ராகங்கள் தேசம் பூராவுமே ரொம்ப ஆதி காலத்திலேருந்து இருந்திருக்குங்கிறா. அப்பறம் அதுக்கு

நன்னா மெருகேத்தினவா எந்தச் சீமைக்காராளோ அதன் பேரு ராகத்துக்கு வந்துடுத்துங்கிறா....

"கேதாரம்கிறது இமயமலையில இருக்கிற க்ஷேத்ரம். 'கேதார்நாத்' என்கிறது. 'கௌள' என்கிறது கௌட தேசம்; பெங்கால். கேதாரம்னு ராகம் இருக்கு. கௌளைன்னு ராகம் இருக்கு. ரெண்டையும் சேர்த்துக் கேதாரகௌளைன்னும் இருக்கு. இந்த மூணு ராகமும் ப்ராசீனமா தக்ஷிணத்திலே இருந்திருக்குங்கிறா. அப்படியிருக்கச்சே வடகோடி இமய மலை, கீழ்க்கோடி பெங்கால் பேர்கள் சேர்ந்திருக்குன்னா இதுகளை ஸ்பெஷலைஸ் பண்ணினவா — ஒருத்தரோ, பல பேரோ — அந்தச் சீமைகளிலே இருந்திருக்கலாம்னுதானே தோணறது? மநுஷாளை, குறிப்பா ஸங்கீத வித்வான்களை அவாளோட ஊர்ப் பேரிலேயே சொல்ற வழக்கம் — ஒன்னையே 'அரியக்குடி'ங்கிறதுலேந்து தெரியறது. இப்படி ஒரொரு ராகத்தைப் பிரஸித்தி பண்ணின வித்வானோட சீமைப் பேரிலயே கன்னட, கௌளை, கேதாரம், காம்போஜின்னு பேர் வந்திருக்கலாம்.

"ஒனக்குப் பண்ணாராய்ச்சியிலே பரிசயம் உண்டோ?"

"அவ்வளவாக இல்லை."

"திருப்பாவைக்கு ராகம் போட்டிருக்கியே! ஆனா, தேவாரம் மாதிரி திவ்ய ப்ரபந்தங்களிலே பண் பேர் கொடுக்கவுமில்லை; பாசுரம் ஸேவிக்கிறவா ஸங்கீதமாப் பாடறதுமில்லையே! திவ்ய ப்ரபந்தத்தை ப்ராம்மணாளே சொல்றதாலே வேதம் மாதிரியா ஒரு தினுஸா அதை ஏத்தல் எறக்கல் ப்ராஸத்தோட சொல்றதுன்னுதானே ஏற்பட்டிருக்கு? நீ ஒன் மனோபாவப்படி, மனோதர்மப்படி (திருப்பாவைக்கு ராகம்) போட்டாயாக்கும்?"

"ஏதோ எனக்குத் தெரிஞ்ச அளவுக்கு."

"அதுவேதான் ஸ்டான்டர்டா மத்த வித்வான்களும் ஒத்துண்டு பாடற மாதிரி ஆயிருக்கே....! நம்மோட பழைய

ராகங்கள் ஒரிஜினல் ரூபம் மாறாம ரொம்பக் காலமா வந்துண்டிருக்கிறது தேவாரப் பண்களிலேதான்னு தெரியறது. வேதத்தை ஸ்வரம் தப்பாம வைதிகாள் வம்ச பரம்பரையா ரக்ஷிச்சுக் கொடுத்திருக்கிற மாதிரியே ஓதுவாமூர்த்திகள் வழிவழியா தேவாரங்களை ரூபம் மாத்தாம — செய்யுள் ரூபம் மாத்ரமில்லை; பண்ணோட ரூபமும் மாறாம – காப்பாத்திண்டு வந்திருக்கா. பக்திக்குத் தொண்டே ஸங்கீதத்துக்கும் பெரிய தொண்டாயிருக்கு. இப்போ சங்கராபரணம், பைரவி, நீலாம்பரின்னுல்லாம் சொல்ற ராகங்கள் வேறே பேருல இன்னின்ன பண்ணாயிருந்து, அப்படியே தொடர்ந்து பாடிண்டு வரா–ன்னு ரிஸர்ச் பண்ணி நிச்சயப்படுத்தியிருக்கா. இதுல ஸௌராஷ்ட்ரம், கேதார கௌளை இருக்கு. காம்போதியும் இருக்கு. யதுகுல காம்போதிகூட இருக்கு. காம்போதிக்குத் 'தக்கேசி'ன்னோ என்னமோ பண்ணிலே பேர் சொல்றா...[1] காம்போதி மேளராகம்[2] இல்லையோல்லியோ ?"

"இல்லை, ஹரிகாம்போதிதான் மேளம், காம்போதி (அதன்) ஜன்யம்."

"ஆனா ஹரிகாம்போதியைவிட ஃபேமஸா இருக்கு. அப்பாவைவிட பிள்ளை ஒசத்தியாயிருக்காப்பல இப்படி சில ஜன்ய ராகங்கள் ஜனக ராகத்தைவிட ப்ரபலமாயிருக்கு. இல்லியா ?"

"பைரவியும் பெரியவா சொல்கிற மாதிரிதான். அது நட பைரவி ஜன்யம்."

"ஸரி, நீ பாடு. வரவழைச்ச கார்யத்தைப் பண்ண விடாம ஊர்க்கதையிலே போயிண்டிருக்கேன்."

---

1 காம்போதி தக்கேசிப் பண்ணேதான்.

2 ஏறுவரிசை, இறங்கு வரிசை இரண்டிலும் ஏழு ஸ்வரங்களும் கிரமமாகவும், அன்னிய ஸ்வரம் கலக்காமலும் அமைந்த ஸம்பூர்ண ராகம்.

அரியதோர் இசை விருந்தாக அரியக்குடியவர்கள் 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே' பாடினார். பக்க வாத்தியங்களும் தம்புரா சுருதியுமின்றி அவர் பாடினாலும் நிறைவாகவே இருந்தது.

கிருதி முழுதையும் அவர் பாடி முடிக்கும் வரையில் ஸ்வாமிகள் கண்மூடி, ஆழ்ந்து, செவி மடுத்தார்கள்.

முடிந்ததும், "நீ தனியாப் பாடினதாலேயே பாட்டு இன்னும் எடுப்பா நின்னுது. வார்த்தைகளும் ஸ்பஷ்டமாக் கேட்டுது. 'த்ருப்தோஸ்மி'* சொல்றேன். இன்னொரு தரம் பாடு. 'ஒன்ஸ் மோர்' எதுக்குக் கேக்கறேன்னா – வாக்கியம் வாக்கியமா நிறுத்திப் பாடு. அர்த்தம் சொல்லிண்டு வரேன். ஒனக்குத் தெரியாதுங்கிறதுக்காக இல்லே. அந்த வ்யாஜத்திலே என் மனஸை இன்னம் சித்தே தீக்ஷிதர்வாளுடைய ஸாஹித்ய அழகிலே சுத்த விடறதுக்காகவும்தான் சொல்றேன். இங்கே இருக்கிற வாள்ளாமும் மஹான்களோட ஸ்ருஷ்டிகளில எவ்வளவு அழகு, அர்த்தம் இருக்குன்னு தெரிஞ்சுப்பா" என்று ஸ்வாமிகள் ஆக்ஞாபித்தார்.

அரியக்குடியவர்கள் ஒவ்வொரு சொற்றொடராக நிறுத்தி மீண்டும் அக் கிருதியைப் பாட, ஸ்வாமிகள் பொருள் விளக்கி வந்தார்கள். அதனை, இதே விஷயங்கள் தொடர்பாக வேறு சில சமயங்களில் அவர்கள் அருளியவற்றிலிருந்து சில சுடர்மணிகளையும் சேர்த்து அளிக்கிறேன்.

* * *

**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே, நமஸ்தே**

ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு நமஸ்காரம் — எல்லோருக்கும் புரிவதுதான். மங்களமாக 'ஸ்ரீ' என்று

* வைதிக கர்மாக்களில் செய்யப்படும் உபசாரங்களைக் குறித்துப் புரோஹிதர் தமது திருப்தியைக் கூறும் வாசகம்.

ஆரம்பித்து ஒன்றுக்கு இரண்டாக 'நமஸ்தே' சொல்லியிருக்கிறார். ஒரு தடவைக்கு மேல் சொல்லிவிட்டால் அனந்தம் தடவை சொல்லிவிட்டதாக அர்த்தம். முக்யமான ஒரு விஷயத்தை அழுத்தமாகச் சொல்வதென்றால் இப்படி டூப்ளிகேட் பண்ணுவது வழக்கம். 'போற்றி, போற்றி' என்பது அப்படித்தான். 'ஜய ஜய சங்கர' என்கிறோம். ப்ரஹ்மஸூத்ரம்கூட ஒரே வாக்யத்தை இரண்டு தடவை திருப்பித்தான் முடிகிறது.

"நமஸ்தே நமஸ்தே" — "தே" – உனக்கு; "நம:" – நமஸ்காரம். 'நம: தே' என்பது 'நமஸ்தே' என்றாகும். "தே" — உனக்கு. "ஸுப்ரஹ்மண்யாய" – ஸுப்ரஹ்மண்யனுக்கு. பாட்டு முழுக்க 'க்கு' போட்டுக் கொண்டு நாலாம் வேற்றுமையிலேயே போகிறது.

"ஸுப்ரஹ்மண்யனான உனக்கு நமஸ்காரம், அனந்த கோடி நமஸ்காரம்.

"ஸுப்ரஹ்மண்யன் என்றால்? நல்ல ப்ரஹ்மண்யன். தேர்ந்த ப்ரஹ்மண்யன். ப்ரஹ்மண்யன் என்றால்?

"'ப்ரஹ்ம' என்றால் ஸத்யமான பரமாத்ம ஸ்வரூபம் என்று மாத்ரமே அர்த்தம் பண்ணிகொள்கிறோம். 'ப்ரஹ்ம' பதத்துக்கு இன்னொரு முக்யமான அர்த்தம் 'வேதம்' என்பது. வேதத்துக்கு 'ப்ரஹ்ம' என்று ஒரு பெயர். அதனால்தான் வேத மந்திரத்தில் ஒரு குழந்தைக்கு தீக்ஷை கொடுப்பதான உபநயனத்தை 'ப்ரஹ்மோபதேசம்' என்பது. வேதம் கற்றுக் கொள்வதாலேயே அந்தக் குழந்தை 'ப்ரஹ்மசாரி' ஆகிறான். 'ப்ரஹ்ம யஜ்ஞம்' என்கிற மாதிரியான பல இடங்களிலும் 'ப்ரஹ்ம' என்றால் வேதம் என்றே அர்த்தம். வேதத்தை அநுஸரிப்பது, அநுஷ்டிப்பது — வைதிகம் என்பதுதான் ப்ரஹ்மண்யம். அதை முக்கியமாகக் கொண்டவர்களே ப்ராஹ்மணர்கள். வேதங்களின் பரம தாத்பர்யமான ப்ரஹ்மமாகிற பரமாத்ம ஸ்வரூபமாகவே இருப்பதால் ஸுப்ரஹ்மண்யராக இருக்கப்பட்ட மூர்த்தி வைதிகத்தின்

விசேஷ தெய்வமாக, வைதிகர்களின் விசேஷ தெய்வமாக இருப்பதாலும் ஸுப்ரஹ்மண்யராகிறார்.

வேதத்துக்கு முக்கியமென்ன? அக்னி உபாஸனை. ஸுப்ரஹ்மண்யர்தானே அக்னி ஸ்வரூபமாயிருப்பவர்? பரமேச்வரனின் நேத்ராக்னிப் பொறி ஆறு சேர்ந்துதானே அவராக ஆனது? அதனால் அவர் வேத தேவராக இருப்பவர். வேதம் படிப்பதும் சொல்லிக் கொடுப்பதுமே தொழிலாயுள்ள ப்ராமணர்களின் தெய்வமாயிருப்பவர் ஸுப்ரஹ்மண்யர்.

ஆசார்யாளும் 'ஸுப்ரஹ்மண்ய புஜங்க'த்தில், "மஹீதேவ தேவம், மஹாவேத பாவம், மஹாதேவ பாலம்" என்று சொல்லியிருக்கிறார். 'மஹீதேவர்' என்றால் ப்ராமணர். 'மஹீதேவ தேவர்' என்றால் ப்ராமணர்களின் தெய்வம் என்று அர்த்தம்.

தமிழிலுள்ள பக்தி நூல்களில் ரொம்பவும் புராதனமான 'திருமுருகாற்றுப்படை'யிலும் இப்படியேதான் சொல்லி யிருக்கிறது. ஷண்முகனின் ஆறு முகங்களில் ஒவ்வொன்றும் ஒருவிதமான அநுக்ரஹம் செய்வதாக நக்கீரர் சொல்லிக் கொண்டு போகும்போது

**ஒரு முகம்**
**மந்திர விதியின் மரபுளி வழாஅது**
**அந்தணர் வேள்வியோர்க்கும்மே**

என்று சொல்லியிருக்கிறார். திருவேரகம் என்கிற ஸ்வாமி மலையை வர்ணிக்கிற இடத்திலும் அங்கே நல்ல ப்ரம்மசர்ய அநுஷ்டானமுள்ள ப்ராமணர்கள் முத்தீ வளர்த்து யக்ஞாதிகள் செய்து ஸுப்ரஹ்மண்ய மந்திர ஜபமும் பூஜையும் செய்வதையே சொல்லியிருக்கிறார்.

யஜ்ஞ கர்மத்தில் பங்கு கொண்டு செய்கிற ப்ராமணர்களுக்கு ரித்விக் என்று பெயர். பதினாறு வகையான ரித்விக்குகளில் ஒருவருக்குப் பேர் 'ஸுப்ரஹ்மண்ய' என்பது.

ஸுப்ரஹ்மண்யன் என்பதே குமாரஸ்வாமிக்கு ப்ரஸித்த நாமாவாக இருப்பதிலிருந்தே அவர் வேதத்துக்கும் வைதிகத்துக்கும் அதிதேவதை என்று நிச்சயமாகிறது.

முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தம் ஜாஸ்தி. அவர் ஸகல க்ஷேத்ரங்களுக்கும் போய் ஸகல தெய்வங்களையும் பாடி வைத்தவர். ஆசார்யாள் மாதிரி. ஆனாலும் உபாஸனையில் அவரை அம்பாள் பக்தராகவே விசேஷமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். கடைசியிலும் அவர் மீனாக்ஷியம்மன் பேரில் 'பாசமோசனி' என்று பாடிக் கொண்டேதான் சரீரத்தை விட்டிருக்கிறார். ஆனால் அவருடைய பிறப்பு, ஸாஹித்ய வ்யுத்பத்தி (ஆற்றல்) ஏற்பட்டது முதலியவற்றிலெல்லாம் ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தமே இருக்கிறது.

முத்துஸ்வாமி என்கிற பேரே வைத்தீச்வரன் கோவில் முத்துக்குமாரஸ்வாமியின் பெயரை வைத்துத்தான் அவருக்கு நாமகரணமாயிருக்கிறது. அப்பா ராமஸ்வாமி தீக்ஷிதர் — அவரும் பெரிய பண்டிதர், ஸங்கீதத்தில் நிரம்பத் தெரிந்தவர், ஸாஹித்யங்கள் பண்ணியிருப்பவர், பெரிய ஸ்ரீவித்யா உபாஸகருங்கூட — அவருக்கு நாற்பது வயசு வரை புத்ர பாக்யமில்லை. பத்னியோடுகூட வைத்தீச்வரன் கோவிலுக்குப் போய் முத்துக்குமாரஸ்வாமி ஸந்நிதியில் ஒரு மண்டலம் விரதம் இருந்தார். அந்த அம்மாளுக்குத் தன் மடியிலே தேங்காய், பழம் முதலான மங்கள வஸ்துக்களை யாரோ கட்டுவதாக ஸ்வப்னம் ஏற்பட்டது. அடுத்தாற்போலவே கர்ப்பமும் உண்டாயிற்று. முத்துக்குமாரஸ்வாமி புத்ரவரம் தந்ததற்கே அப்படி ஸ்வப்னத்தில் ஸமிக்ஞையா யிருக்கிறதென்று புரிந்து கொண்டார்கள். அதற்கேற்றாற் போல் பிள்ளையும் ஒரு க்ருத்திகா நக்ஷத்ரத்திலேயே — அது பங்குனி மாஸ க்ருத்திகை — பிறந்தது. அப்படிப் பிறந்தவர் தான் முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

அப்புறம் அவர் வளர்ந்து ஸங்கீத அப்யாஸம், ஸ்ரீவித்யா அப்யாஸம், காசியில் ஸந்நியாஸ குருவுடன் வாஸம் எல்லாம் பண்ணினார். காசியிலேயே குரு ஸித்தியானார். ஸித்தியாகிற ஸமயத்தில் அவர் தீக்ஷிதரிடம், "தக்ஷிணத்துக்குத் திரும்பிப் போய்விடு. அங்கே முதலில் திருத்தணிக்குப் போ. ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி நீ எதற்காக ஜன்மா எடுத்திருக்கிறாயோ அது ஸபலமாகும்படியாக (பலிதமடையுமாறு) அநுக்ரஹம் பண்ணுவார்" என்று சொன்னார்.

அப்படியே தீக்ஷிதர் திருத்தணிக்குப் போனார். அடிவாரத்தில் திருக்குளத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு அவர் மலை ஏறிப் போய்க் கொண்டிருக்கும்போது முன்பின் தெரியாத ஒரு கிழ ப்ராமணர் அவரை, "முத்துஸ்வாமி!" என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டு, "வாயைத் திற" என்றார். அவர் அப்படியே பண்ணியதும் வாயிலே ஒரு கல்கண்டைப் போட்டுவிட்டு போன இடம் தெரியாமல் போய்விட்டார். வந்தது யாரென்று தீக்ஷிதருக்குப் புரிந்து விட்டது. இவர் வந்த கார்யமும் தத்க்ஷணமே ஆரம்பித்து விட்டது — ஸாஹித்ய வ்யுத்பத்தி ஏற்பட்டுவிட்டது. தகப்பனாரான பரமேச்வரனுக்கும் குருவாக இருந்த குஹன் மீது அப்போதே எட்டு வேற்றுமைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு க்ருதியாக எட்டு க்ருதிகளைப் பாடிவிட்டார்.

க்ருதிகளில் தம் முத்ரையாக அவர் "குருகுஹ" என்ற ஸுப்ரஹ்மண்ய நாமாவையே வைத்திருப்பதையும் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். குகையில் இருப்பவன் குஹன். ஹ்ருதய அந்தரங்கத்தில் ஆத்ம ஸ்வரூபமாக உள்ள குருதான் குருகுஹன்.

தீக்ஷிதர் சரீர யாத்திரையை முடித்தது ஒரு தீபாவளியில். அதற்கு அடுத்த ஆறாம் நாள்தான் மஹா ஸ்கந்த ஷஷ்டி வருவதும். ஷஷ்டியன்று பூர்த்தியாகிற விதத்தில் ஆறு நாள் வ்ரத உபவாஸங்களிருப்பது வழக்கம். அதாவது

தீக்ஷிதர்வாளின் பிறப்பு மட்டுமில்லாமல் முக்தியடைந்ததிலும் ஒரு ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தம் தெரிகிறது...

தீக்ஷிதர் க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகப் போய் அங்கேயுள்ள மூர்த்தியை — அது என்ன மூர்த்தியானாலும் அதை — வித்யாஸமில்லாமல் பாடினார் என்றேன். அந்தந்த க்ருதியிலேயே அது எந்த க்ஷேத்ரத்தைப் பற்றியது என்பதற்கு அகச் சான்று என்கிறார்களே, அப்படிப்பட்ட internal evidence இருக்கும். குறிப்பிட்ட க்ஷேத்ரத்தில் அந்த ஸ்வாமிக்கு உள்ள பெயர், அதற்கான மந்த்ர ரஹஸ்யம், அந்த ஸ்தல புராணக் குறிப்பு என்று ஏதாவது இருக்கும். இந்த 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய'வில் குறிப்பாக அது இன்ன க்ஷேத்ரத்தில் பாடியது என்று காட்டுவதாக ஒன்றுமில்லை.

அத்தனை ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்ரங்களிலுள்ள மூர்த்திகளையும் சேர்த்துத் தம்முடைய பாட்டினாலேயே மூலமூர்த்தியாக அவர் பண்ணிவைத்து விட்ட மாதிரி இந்த க்ருதி ப்ரகாசிக்கிறது!

அனந்தகோடி நமஸ்காரத்தோடு ஆரம்பித்திருக்கிறார். அப்புறம் –

**மநஸிஜ கோடி கோடி லாவண்யாய**

இரண்டு தடவை 'நமஸ்தே' போட்ட மாதிரி இரண்டு தடவை 'கோடி' போட்டிருக்கார். கோடியைக் கோடியால் பெருக்கினால் எவ்வளவு பெரிசு? அதுதான் 'கோடி கோடி'.

'மநஸிஜ கோடி கோடி' – கோடி கோடி மன்மதர்கள். மநஸிஜன் என்பது மன்மதன் பெயர். மனஸிலிருந்து ஜனித்தவன் மநஸிஜன். காமம் மனஸில் பிறப்பதுதானே? புராண ரீதியிலும் கதை இருக்கிறது. மஹா விஷ்ணுவின் புத்ரனே மன்மதன். ஆனாலும் ரொம்ப விசித்ரமாக, காமனான அவன் மஹாலக்ஷ்மியிடம் பெருமாளின் காமத்தினால் அவளுடைய கர்ப்பத்திலிருந்து பிறந்தவ

ணில்லை. விஷ்ணுவின் மனஸிலிருந்தே — அவர் மனஸால் எண்ணின மாத்திரத்திலேயே அவன் உண்டாகிவிட்டான். இன்னொரு பிள்ளை ப்ரம்மாவும் நேரே தகப்பனாரான விஷ்ணுவின் நாபியிலிருந்தே உண்டானவர். இப்படி எல்லாமே அவர் வேடிக்கை விசித்ரமாகப் பண்ணுகிறார்!

அழகுக்குப் பெயரெடுத்தவன் மன்மதன். 'மன்மதன்னு எண்ணம்' என்றுதான் பரிஹாஸம் பண்ணுகிறோம். அப்படிப்பட்ட மன்மதர்கள் கோடி கோடி பேரின் அழகு சேரந்தால் எவ்வளவு அழகாயிருக்குமோ அத்தனை அழகானவர் ஸுப்ரஹ்மண்யர். 'மநஸிஜ கோடி கோடி லாவண்யர்.'

க்ருஷ்ண பரமாத்மாரைப் பற்றி (பாகவதத்தில்) "ஸாக்ஷாத் மன்மத மன்மத:" என்று சொல்லியிருக்கிறது. மன்மதனுக்கும் மன்மதனாக இருக்கப்பட்ட அப்பேர்ப்பட்ட ஸௌந்தர்யவான் என்று அர்த்தம். அவர் மன்மதனையே படைத்தவர். அவருடைய மனஸுக்குள்ளேயிருந்துதான் அவன் ஸ்ருஷ்டியானது. மன்மதனுக்கும் மூலமானவர் மன்மத மன்மதனாக இருப்பதில் ஆச்சர்யமில்லை. க்ருஷ்ணனாக அவர் வந்தபோதும் மன்மதனேதான் அவருடைய பிள்ளையான ப்ரத்யும்னனாக வந்து தனக்கு அவரே மூலபுருஷர் என்று காட்டியிருக்கிறான்.

ஸுப்ரஹ்மண்யர் கோடி கோடி மன்மத லாவண்யராக இருப்பதுதான் ஆச்சர்யம். இவர் யார்? பரமேச்வரனின் புத்ரர். அந்தப் பரமேச்வரனோ மன்மதனை அப்படியே பஸ்மம் பண்ணினவர். எந்த நேத்ராக்னியினாலே அவர் மன்மதனைப் பொசுக்கினாரோ அதே நேத்ராக்னியிலிருந்து உண்டானவர் ஸுப்ரஹ்மண்யர். காமத்திலே பிறக்காமல், ஞானத்திலே பிறந்தவர். ஞானமே லோகத்தை ரக்ஷிக்க வேண்டும் என்று கருணாமூர்த்தியாக ஆன ஸ்வரூபம் என்று தத்வார்த்தம். தத்வார்த்தம் இருக்கட்டும். நான் வேடிக்கைக்காகச் சொல்ல வந்தேன் — மன்மதனை தஹனம்

பண்ணினவரின் பிள்ளை கோடி கோடி மன்மதனாக இருக்கிறார்!

குமாரன் என்பது அவருக்கு ஒரு விசேஷப் பேர் அல்லவா? தெற்கே எப்படிப் பிள்ளை என்றாலே பார்வதி பரமேச்வரர்களின் மூத்த பிள்ளைதான் என்று வைத்துப் 'பிள்ளையார்' என்கிறோமோ, அப்படி வடக்கே இளைய பிள்ளையைத்தான் கொண்டாடி 'குமார்', 'குமார்' என்றே சொல்கிறார்கள். நாமுங்கூட குமாரஸ்வாமி, குமரன் என்று சொல்கிறோம். இப்போது புருஷ ப்ரஜைகளில் பாதிப் பேருக்குப் பேர் 'குமார்'தான். 'குமார' சப்தம் குறிப்பாக ஸுப்ரஹ்மண்யருக்கே உரியதாக இருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் விச்வாமித்திரர் ராம லக்ஷ்மணர்களுக்கு ஸுப்ரஹ்மண்ய அவதாரக் கதையைச் சொல்லி முடிக்கும் போது இந்தக் 'குமார ஸம்பவ' கதையைக் கேட்டால் இன்னின்ன பலன் கிடைக்கும் என்று சொன்னதாக வருகிறது. ஆதி கவி வாக்கில் வந்த 'குமார ஸம்பவம்' என்ற வார்த்தை யையே காளிதாஸர் தம்முடைய காவ்யத்துக்குத் தலைப்பாகப் போட்டார்.

குமாரன் என்ற பேர் விசேஷம் இருக்கட்டும். அதை எதற்குச் சொல்ல வந்தேனென்றால், அதற்குப் பிள்ளை என்ற அர்த்தத்தோடு மன்மத ஸம்பந்தமாக இன்னோர் அர்த்தமும் சொல்வதுண்டு. மன்மதனுக்கு மாரன் என்றும் ஒரு பேர் உண்டல்லவா? மாரனுக்கு வெட்கத்தை உண்டாக்குகிறவன், அதாவது மாரனைப் பழிக்கும் மஹா அழகன்தான் கு—மாரன். 'குத்ஸித மார:' — 'குமார:'. குமாரன் என்றாலே மன்மத மன்மதன், மநஸிஜ கோடி கோடி லாவண்யன் என்று அர்த்தம் ஏற்பட்டுவிடுகிறது.

தமிழ் தேசத்துக்கு அவர் ரொம்பப் பிரியம். தமிழ்த் தெய்வம் என்றே சொல்கிறோம். தமிழில் வைதாரையும் வாழ வைப்பவர் என்கிறோம். இந்த பாஷையில் அவருக்கென்று அருமையாக ஒரு பெயர் சூட்டியிருக்கிறோம்

— முருகன். முருகு என்றாலே அழகு என்றுதான் சொல்கிறார்கள். காமன் எரிந்து போன அப்புறம் அவனுடைய கரும்பு வில்லையும் புஷ்ப பாணத்தையும் அம்பாளே எடுத்துக் கொண்டு காமேச்வரி ஆனாள். அதனால்தான் ஸுப்ரஹ்மண்ய அவதாரம் ஏற்பட்டது. அவளுக்குப் பேரே ஸுந்தரி, த்ரிபுரஸுந்தரி. அவளுடைய பிள்ளை, தாயைப் போலப் பிள்ளை என்றபடி லாவண்ய மூர்த்தியாகத்தானே இருப்பார்? 'மநஸிஜ கோடி கோடி லாவண்யாய.'

**தீன சரண்யாய**

அழகு இருந்தால் போதுமா? நமக்கு வேண்டியது அருள். ஸ்வாமி அழகு வடிவமாக இருக்கிறாரென்றால் அந்த அழகே அருள் வடிவம்தான். காருண்யம்தான் லாவண்யம். இரண்டும் வேறே வேறேயில்லை. ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி தீன ஜனங்களுக்கெல்லாம் புகலிடமாக இருப்பவர் – 'தீன சரண்யர்'. எளியவர்கள், கஷ்டப்படுகிறவர்கள், பயப்படுகிறவர்கள், தரித்ரர்கள் எல்லாரும் 'தீனர்கள்' என்ற வார்த்தைக்குள் வந்து விடுவார்கள். இவர்களுக்கெல்லாம் துக்க நிவ்ருத்தி தரும் புகலாக அவர் இருக்கிறார். 'தீன சரண்யர்'.

தீன சரண்**யாய**.... லாவண்**யாய**.... ஸுப்ரஹ்மண்**யாய** – எல்லாம் ஒரே மாதிரி, எதுகையோ மோனையோ ஏதோ ஒன்றாக, பாடியிருக்கிறார். எதுகைதான். ஆனால் வார்த்தையின் ஆரம்ப எதுகையாக இல்லாமல் முடிவில் இருக்கிறது. 'அந்த்ய ப்ராஸம்' என்பார்கள். 'யாய', 'யாய' என்று வருவது 'அவருக்கு' என்று நாலாம் வேற்றுமையில் அர்த்தம் கொடுக்கும். 'ஸுப்ரஹ்மண்யருக்கு, கோடி கோடி மன்மத லாவண்யருக்கு, தீன சரண்யருக்கு நமஸ்காரம்'. 'உனக்கு நமஸ்காரம்' என்பதுதான் நமஸ்தே.

'மநஸிஜ கோடி கோடி...' என்று வேகமான கதியில் பாடித் திருப்புவது வழக்கமாயிருக்கிறது. ஆரம்பத்திலிருந்து

மெதுவாக, கம்பீரமாகப் பாடிக்கொண்டு வந்து இங்கே வேகமாகத் திருப்புவது. முதலில் பாடுவது சௌக காலம். விளம்ப காலம் என்றும் சொல்வார்கள். ‘விளம்பம்’ நல்ல ஸம்ஸ்க்ருத வார்த்தை. Slow என்று அர்த்தம். ‘சௌகம்’ — ஸரியாகப் புரிபடவில்லை. ‘ஸௌக்யம்’தான் ‘சௌக’மாச்சோ என்னவோ? நிதானமாகப் பாடினால் மனஸுக்கு விச்ராந்தியாக, ரொம்ப ஸௌக்யம் உண்டாகிறது. அது ராகத்தின் இழுப்பு, வளைசல்களுக்கு இடம் கொடுத்து ராக பாவத்தையும் விசேஷமாகத் தெரிவிக்கிறது. ஸாஹித்யத்தின் அர்த்த பாவத்திலேயும் தோய்ந்து நிற்க அவகாசம் கொடுக்கிறது. தீக்ஷிதர்வாள் க்ருதிகளில் இது தனிச் சிறப்பு. கம்பீரமான ஸம்ஸ்க்ருத பாஷை அதற்கேற்ற கம்பீர நடையோடு மத்த கஜம் அசங்கி அசங்கி வருகிற மாதிரி சௌக க்ருதிகளாகப் பண்ணிக் கொடுத்திருக்கிறார்.

ஆனாலும் நாம் அவஸர ப்ரக்ருதிகளாக இருக்கிறோமோ–ல்லியோ? மனஸாலே, உடம்பாலே சாஞ்சல்ய மயமாக ஓடிக் கொண்டேயிருப்பதுதானே நம் நேச்சராக இருக்கிறது? அதனால் ஒரே சௌகமாக வளர்ந்து கொண்டு போனால் அலுப்புத் தட்டிப் போகிறது. அதற்காகத்தான் மாற்றாகக் கொஞ்சம் அங்கங்கே வேகமான நடையில் திருப்பும் படியாகவும் ஒவ்வோர் உருப்படியிலும் வைத்திருக்கிறார். சௌக காலத்துக்கு ரிலீஃபாக மத்யம காலம். ஒரே தித்திப்பு லட்டு சாப்பிட்டால் திகட்டப் போகிறதென்று கிராம்பு போட்டு விருவிரு பண்ணுகிற மாதிரி பாட்டிலேயும் கொஞ்சம் விருவிரு.

இந்தப் பாட்டில் பல்லவி, சரணம் இரண்டிலேயும் முடிக்கிற இடத்தில் மத்யம கால ஆவர்த்தங்கள் வைத்திருக்கிறார். ஆனால் பெரும்பாலான பாட்டுக்களில் அநுபல்லவியிலேயும் சரணத்திலேயும்தான் மத்யம காலம் வைத்திருப்பார். ஸுப்ரஹ்மண்யர் நல்ல யுவா. “என்றும்

இளையாய்'' என்று சொல்லப்படுகிறவர். அதனால் ஆரம்பத்திலேயே அவர் குதிநடை போட்டுக்கொண்டு வருகிற மாதிரி மத்யம காலம் வைத்து விட்டார் போலிருக்கிறது!

**பூஸுராதி ஸமஸ்தஜன பூஜிதாப்ஜ சரணாய**

"பிராமணர் முதலான எல்லா மக்களாலும் பூஜிக்கப்படும் தாமரைப் பாதங்களை உடையவர்." "சரணாய" – பாதங்களை உடையவருக்கு, "நம:" – நமஸ்காரம் என்று, பல்லவியில் வரும் 'நமஸ்தே'யோடு சேரும்.

"பூஸுராதி" – பிராமணர் முதலிய. 'பூஸுரர்' என்றால் பிராமணர். 'ஸுரர்' – தேவர்கள். யாகம் செய்து தேவர்களை பூமிக்கு வரவழைப்பதால், அவர்களுடைய அநுக்ரஹத்தால் பூமிக்குப் பலவித க்ஷேமங்களை உண்டாக்குவதால் பிராமணரை 'பூஸுரர்' என்பது. அந்தக் கடமையைச் சரியாக செய்தால்தான் இந்தப் பட்டம். இல்லாவிட்டால் 'ப்ரம்ம பந்து' என்று கேலிப் பேர்தான். 'ப்ராமணர்களுக்கு உறவுக்காரன்' என்று அர்த்தம். என்ன கேலி புரிகிறதோல்லியோ? இவனை ப்ராமணன் என்று சொல்வதற்கான லாயக்கு இவனுக்கு இல்லை. ஆனால் இவன் எந்த குடும்பத்தில் பிறந்திருக்கிறான், இவனுக்கு உறவுக்காரர்கள் யார் என்று பார்த்தால் அவர்களெல்லாம் பிராமணராயிருக்கிறார்கள். அதனால் இவனை 'ப்ரம்ம பந்து' என்று வேண்டுமானால் சொல்லிவிட்டுப் போகலாமென்று அப்படிப் பேர் சொல்வது!

பிராமணரின் ஸ்வாமி ஸுப்ரஹ்மண்யர். ஆரம்பத்திலேயே பார்த்த ஸமாசாரம். 'மஹீதேவ'ரே 'பூஸுர பூஜிதர்'. அப்படியானால் பிராமணருக்கு மட்டுந்தான் ஸ்வாமியா என்றால் அப்படியில்லை. அத்தனை ஜாதி ஜனங்களுக்கும் அவர் ஸ்வாமி. அவருடைய இரண்டு பெண்டாட்டிகளில் ஒருத்தி ஸுரமகள், ஒருத்தி குறமகள் என்று சொல்வார்கள்.

ஜீவ வர்க்கம் முழுவதற்கும் அவர் ஸ்வாமி. அவர் த்ராவிட ஸ்வாமிதான், தமிழ்த் தெய்வம் என்று ஒருத்தர் சொல்கிறார். இன்னொருத்தர் அவர்தான் ப்ராமணர் ஸ்வாமி, பேரே ஸுப்ரஹ்மண்யர் என்கிறார். வாஸ்தவத்தில் அவர் எல்லார் ஸ்வாமியுந்தான். தீக்ஷிதர் இந்தக் கக்ஷிதான். இதுதான் நமக்கு மனஸுக்குப் பிடித்திருக்கிறது. சண்டை சாடி இல்லாமல் ஸர்வ ஜன ஐக்கியத்தை உண்டாக்குவதாக இருக்கிறது. ஸ்வாமியின் பேரில் நாமெல்லாம் ஒன்று சேரத்தான் வேண்டுமே தவிர, கக்ஷி ஆடிக் கொண்டு பிரிந்து போகக் கூடாது. 'பூஸுராதி ஸமஸ்தஜன!' அவர் சரணத்தில் ஸமஸ்த ஜனங்களும் அன்பிலே ஒன்று சேரணும்.

"பூஜிதாப்ஜ சரணாய" – பூஜித அப்ஜ சரணாய. 'பூஜிக்கப்பட்ட தாமரைத் திருவடிகளை உடையவருக்கு' நமஸ்காரம். 'ப்ராமணர் முதலான எல்லா மக்களாலும் பூஜிக்கப்பட்ட திருவடித் தாமரைகளை உடையவர்.' 'அப்ஜ' என்றால் தாமரை. 'அப்' என்றால் ஜலம். ஜலத்தில் ஜனிப்பது அப்ஜம். ஜலஜம் என்றுகூடத் தாமரைக்கு ஒரு பேர். அம்புஜம் என்றாலும் தாமரைதான். 'அம்பு' என்றாலும் ஜலந்தான். ஜலாசயமான 'ஸரஸ்' என்கிற குளத்தில் பிறப்பதால் ஸரஸிஜம், ஸரோஜம் என்று பேர். ஜலஜா, அம்புஜா, ஸரோஜா என்று பேர்கூட வைக்கிறோம். வனஜா என்பதும் தாமரையின் பேரில் உண்டானதுதான். 'வனம் என்றால் காடு அல்லவா? காட்டிலேயா தாமரை முளைக்கும்?' என்று தோன்றலாம். 'வனம்' என்பதற்கும் ஜலம் என்று ஒரு அர்த்தம் உண்டு. ஜலத்துக்குக் 'கம்' என்று இன்னொரு பேர். 'கம்'மில் பிறப்பதாலேயே தாமரையைக் 'கம்ஜம்', 'கஞ்ஜம்' என்பது. 'கஞ்ஜலோசனே!', 'கஞ்ஜதளாயதாக்ஷி!' என்றெல்லாம் பாட்டுக்களில் வருகிறதல்லவா? 'நீர'மும் ஜலம்தான். நீரம்தான் நீர். தாமரையை 'நீரஜம்' என்று சொல்கிறோம். இப்படியே 'வாரி' – அதுவும் ஜலந்தான் – அதை வைத்து 'வாரிஜம்' என்பது. 'அப்ஜம்' என்றால் தாமரை என்று சொல்ல வந்தேன்.

ஸமஸ்த ஜனங்களும் பூஜை செய்து பூப் போடும் பாதம் தாமரைப் பூவாக இருக்கிறது! அத்தனை அழகு, குளிர்ச்சி, ஸௌகுமார்யம் (மென்மை). தாமரையிலிருந்து தேன் வழிகிற மாதிரி திருவடித் தாமரையிலிருந்து காருண்யாம்ருதம் வழிகிறது.

**வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூப தரணாய**

வாஸுகி, தக்ஷகன் முதலான ஸர்ப்பங்களின் ரூபத்தை எடுத்துக் கொண்டிருப்பவர். ஸர்ப்பம் என்றால் ப்ராண சக்தியான குண்டலினீ என்று அர்த்தம். குண்டலம் மாதிரி பாம்பு வளைத்துச் சுருட்டிக் கொண்டு படுத்துக் கொள்கிறதல்லவா? அப்படித்தான் ஸாதாரணமாக நாம் இருக்கிற ஸ்திதியில் ப்ராண சக்தி சுருட்டிக் கொண்டு தூங்குகிற மாதிரி இருக்கிறது. ஸாதனை செய்தால் அது விழித்துக் கொண்டு மஹா சக்தியோடு ப்ரகாசித்து அப்புறம் பரமாத்ம ஸ்வரூபமான பரம சாந்தியில் ஐக்கியமாகி விடுகிறது. குண்டலினீ சக்தி என்று அதை அம்பாளாகச் சொல்வது. அதனால்தான் பரமசிவனுக்கு ஒரே நாகாபரணம். நாக குண்டலமே போட்டுக் கொண்டிருக்கிறார். சிவகுமாரரான ஸுப்ரஹ்மண்யர் சக்தி ஸ்வரூபமாக இருப்பவர். ஸுப்ரஹ்மண்யர் என்றால் வேல்தான் முக்யமாக நினைவு வருவது. எல்லா ஸ்வாமிக்குமே ஆயுதங்கள் இருந்தாலும், ஸுப்ரஹ்மண்யரும் அநேக ஆயுதங்களைத் தரித்துக் கொண்டிருந்தாலும் ஸாக்ஷாத் அவரே வேலாயுதம் என்று நினைக்கிற அளவுக்கு எந்த ஸ்வாமியுடனும் எந்த ஆயுதத்தையும் 'ஐடென்டிக'லாக (ஸர்வஸமமாக) நினைப்பதில்லை. அந்த வேலுக்கு என்ன பேரென்றால் சக்தி, சக்த்யாயுதம் என்பதே! சக்திவேல் என்பார்கள். சக்தி ஸ்வரூபரான அவர் குண்டலினீயானபடியால் ஸர்ப்ப ஸ்வரூபமாக இருக்கிறார். "ஸொப்பனத்தில் பாம்பு வந்துதா? அப்ப ஸுப்ரஹ்மண்யருக்கு ப்ரீதி செய்யணும்" என்றுதான் சொல்கிறோம். ஷஷ்டி பூஜை என்பதே நாகராஜ பூஜையாகப்

பண்ணுகிற வழக்கமிருக்கிறது. குறிப்பாக, புத்ர தோஷம் நீங்க ஷஷ்டி வ்ரதம், நாக பூஜை என்று செய்கிறோம். தேவர்களெல்லாம் தங்களுக்கு மஹா சக்திமானான ஸேநாதிபதி வேண்டுமென்று வேண்டிக் கொண்டதன் பேரில் சக்தி ஸ்வரூபமான புத்ரனைப் பரமேச்வரன் அவர்களுக்கு வரமாகத் தந்தார். அவரையே ஜனங்கள் தங்களுக்குப் புத்ரவரம் வேண்டி ஷஷ்டியில் வ்ரதமிருந்து பூஜை செய்கிறார்கள். அதில் ஸர்ப்பத்திற்கு, புற்றுக்கு, பால் நைவேத்தியம் முக்யமாகச் செய்கிறார்கள்.

ஆந்த்ர, கர்நாடக தேசங்களில் ஸுப்ரஹ்மண்யருக்கு நராக்ருதியில் விக்ரஹம் வைப்பதில்லை. நாக ஸ்வரூபமாகத் தான் அங்கே கோவில்களில் இருக்கும். 'ஸுப்ரஹ்மண்யா' என்றே கன்னட தேசத்தில் ஸ்தலம் இருக்கிறதே, அங்கே கூட அப்படித்தான். 'ஸுப்பராயுடு' என்று தெலுங்கர்கள் செல்லமாகச் சொல்வதே பாம்பையும் குறிப்பதாக இருக்கிறது.

ஆசார்யாள் 'புஜங்க'த்திலே ஸுப்ரஹ்மண்யரை நாகத்தோடு ஸம்பந்தப்படுத்திச் சொல்லியிருக்கிறாரா என்று பார்க்க வேண்டுமென்று ஆரம்பித்தேன். டைட்டிலை நினைத்துமே சட்டென்று சிரிப்பாக வந்துவிட்டது. பேரே புஜங்கம்! புஜங்கம் என்றாலே பாம்புதான். அதற்குக் கால் கிடையாது. மரவட்டை, கம்பளிப் பூச்சிக்கெல்லாம் எண்ண முடியாத கால்கள். ஸர்ப்பத்துக்குக் காலே இல்லை. உடம்பு முழுக்க புஜம் மாதிரி சாட்டையாட்டமாக நீண்டிருக்கிறது. புஜத்தை அப்படியே வளைத்து வளைத்து இழுத்துக் கொண்டு போகிறதால் அது 'புஜங்கம்'. பாம்பின் கதி மாதிரியே அமைந்த ஒருவித சந்தத்துக்கு புஜங்க ப்ரயாதம் என்று பெயர். அந்த மீட்டரில் உள்ள ச்லோகத்தைச் சொல்லும் போதே பாம்பு வளைந்து வளைந்து போகிற மாதிரியிருக்கும். ஆசார்யாள் பல தெய்வங்களின் மேலே புஜங்கம் பாடியிருக்கிறார். ஆனாலும் 'புஜங்கம்' என்ற மாத்திரத்தில்

நினைப்பது 'ஸுப்ரஹ்மண்ய புஜங்க'த்தைத் தான். மற்ற ஸ்வாமிகளின் மேலே அஷ்டகம், பஞ்சரத்னம், இன்னம் பலவிதமான ஸ்துதிகளையும் பண்ணிவிட்டு ஒரு புஜங்கமும் பண்ணியிருக்கிறார். ஆனால் ஸுப்ரஹ்மண்யர் பேரில்தான் சொல்ல வேண்டியது அத்தனையையும் அடக்கி ஒரே ஒரு புஜங்கம் மட்டும் பண்ணி நிறுத்தி விட்டார். இதுவே ப்ரூஃப்தான் அவர் நாகஸுப்ரஹ்மண்யமாகவே ஸ்வாமியைக் காட்டுவதற்கு என்று புரிந்தது.

ஸர்ப்ப ஸ்வரூபம் என்று சொல்லும்போது ஸர்ப்பங்களில் தலைவர்களாக உள்ள வாஸுகி, தக்ஷகன் ஆகியவர்களை தீக்ஷிதர் குறிப்பிட்டு 'அந்த ரூபங்களை எடுத்துக் கொண்டவனே!' என்கிறார். ஸர்ப்ப ஜாதியில் முக்யமான ஏழு ஸர்ப்பங்களின் படம் போட்டு அதற்கே ஷஷ்டி பூஜை பண்ணுகிறதுண்டு. வாஸுகிதான் நாக லோகத்தில் நாகராஜாவாக இருப்பது. மந்தர மலையை இந்த வாஸுகியால் கட்டித்தான் அம்ருத மதனத்தின் போது க்ஷீராப்தியைக் கடைந்தது. விசித்ரமாயிருக்கிறது — அம்ருதத்தை உண்டாக்க விஷப் பாம்பு உபகரணமாகிறது! விரோதமாயிருக்கிறவையெல்லாமும் ஸத்கார்யத்தில் ஒன்று சேர்ந்துவிடுவதே இதற்குத் தாத்பர்யம்.

ஸுப்ரஹ்மண்யர் ஸர்ப்ப ஸ்வரூபர் என்பதைப் பார்த்தாலே தெரியும். அவர் வாஹனம் என்ன? மயில். அது ஸர்ப்பத்தின் பரம வைரி. ஒரு ஸர்ப்பத்தை அது நசுக்கிக் கொண்டிருக்கிற மாதிரியே சித்தரித்திருக்கும். '**நாக பந்த மயூரா**' என்று திருப்புகழில்கூட இருக்கிறது. ஸர்ப்பத்தை நசுக்கிக் கொண்டு அதன் மேலே உட்கார்ந்து கொண்டிருக்கிற மயிலின் மேலே உட்கார்ந்து கொண்டிருப்பவரே ஸர்ப்ப ஸ்வரூபர்!

'ஸிம்ஹ ஸொப்பனம்' என்பதாக ஸொப்பனத்தில் சிங்கத்தைப் பார்த்தால்கூட யானைக்கு பயத்தில் ப்ராணன் போய்விடும். ஆனால் சிங்கத்தின் மேலேயே ஒரு யானை

உட்கார்ந்திருக்கிறது. விக்நேச்வரரின் அநேக மூர்த்தங்களில் 'ஹேரம்பர்' என்று ஒன்று கேள்விப்பட்டிருக்கலாம். அந்த ஹேரம்ப கணபதிக்கு ஸிம்மம்தான் வாஹனம்.

பாம்பு – மயில் மாதிரிதான் பாம்பும், கருடனும். மஹா விஷ்ணுவுக்கு ஒன்று படுக்கை, மற்றது வாஹனம்.

மயிலும் கருடனும் பாம்பைத் தின்று விடுமென்றால் பாம்பு சந்திரனைத் தின்று விடும்! அப்படித்தானே க்ரஹணத்திற்குக் கதை சொல்கிறோம்? பரமசிவன் சிரஸிலோ பாம்பும் இருக்கிறது, சந்திரனும் இருக்கிறது.

பார்வதி பரமேச்வரானைத் தம்பதியாகப் பார்க்கும் போதும் இப்படியே விசித்ரமாயிருக்கிறது. மாட்டைப் பார்த்தால் சிங்கம் விடுமா? ஒரே அடியில் அடித்துப் போட்டுத் தின்று விடும். ஆனால் பரமசிவன் ரிஷப வாஹனத்தில் உட்கார்ந்திருக்க அம்பாளோ ஸிம்ஹ வாஹினியாக இருக்கிறாள்.

தாத்பர்யம், பரமாத்மாவின் ஸந்நிதியில் எதிரெதிராக இருப்பதெல்லாங்கூட த்வேஷ பாவம் போய் ஒற்றுமையாய்ச் சேர்ந்து விடுகின்றன என்பதுதான்....

'வாஸுகி தக்ஷகாதி'யில் இருந்தோம். வாஸுகிதான் அம்ருதம் எடுக்கக் கடைகயிறு என்று சொன்னேன்.

வாஸுகியேதான் ஆதிசேஷன் என்றும், அவை வெவ்வேறே என்றும் இரண்டு விதமாகச் சொல்கிறார்கள். அதெப்படியானாலும் ஆதிசேஷனுக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தமுண்டு. வேங்கடரமண ஸ்வாமிக்கு ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தம் நிறையத் தெரிகிறது. திருப்பதி மலைக்கு அல்லது திருமலைக்கு சேஷசைலம், சேஷகிரி, சேஷாசலம் என்றெல்லாம் பேர். அது ஆதிசேஷ ஸ்வரூபம். 'ஸர்ப்ப ஸ்வரூப தரண'ரான ஸுப்ரஹ்மண்யர்தான் அப்படி மலையாயிருக்கிறார். திருச்செங்கோடு அர்த்த நாரீச்வர க்ஷேத்ரமான போதிலும், ஒன்று சேர்ந்த அந்த இரண்டு

பேரை — அம்பாளையும் ஸ்வாமியையும் — மூன்று பேராக ஸோமாஸ்கந்தமாக்கிய ஸுப்ரஹ்மண்யருக்கும் அங்கே ரொம்ப விசேஷம். அந்தத் திருச்செங்கோட்டுக்கு நாகாசலம், நாககிரி என்றும் பெயர். சேஷாசலம், சேஷகிரி என்ற அதே அர்த்தந்தான். காஞ்சீபுரத்தில் காமாக்ஷி ஆலய உள்சுற்றில் நுழைகிறபோதே 'ஆதிசேஷன்' என்று பேர் போட்டு, ஸர்ப்பரூபத்தில் ஸுப்ரம்மண்யஸ்வாமிதான் இருக்கிறார்.

"வாஸுகி, தக்ஷகாதி" — தக்ஷகனும் நாகர்களில் முக்யமானவன். ஸர்ப்ப யாகம் பண்ணிப் பாம்பு ஜாதியையே பூண்டோடு இல்லாமல் பண்ணிவிட இருந்த ஜனமேஜயனைப் பழி தீர்த்துக் கொண்டது தக்ஷகன்தான்.

**வாஸவாதி ஸகல தேவ வந்திதாய**

'பூஸுராதி' என்று பூமியிலே ஆரம்பித்தவர் இப்போது தேவலோகத்திலுள்ள நிஜ ஸுரர்களைப் பற்றியே பாடுகிறார். 'பூஸுராதி' என்று கீழ் ஸ்தாயியில் கனமாகப் பொருத்தத்தோடு ஆரம்பித்தவர் இப்போது மேல் லோக வாஸிகளைப் பற்றி மேல் ஸ்தாயியில் லளிதமாக ஸாஹித்யத்தைக் கொண்டு போயிருக்கிறார்.

என்ன அர்த்தமென்றால், 'வாஸவன் என்கிற இந்திரன் முதலான எல்லா தேவர்களாலும் வணங்கப்படுபவர்' ஸுப்ரஹ்மண்யர். அஷ்டவஸுக்கள் என்று தேவர்களில் ஒரு க்ளாஸ். அவர்கள் இந்திரனுக்குப் பரிவாரமாயிருப்பவர்கள். அதனால் அவன் வாஸவன். ஸாதாரணமாக, 'ரகு'வின் வம்சத்தில் வந்தவன் 'ராகவன்', 'ப்ருகு' வம்சத்தில் வந்தவன் 'பார்க்கவன்' என்றுதான் இருக்கும். இங்கே வஸு வம்சத்தில் வராமல் அவர்களுக்கு அதிபதியாக இருக்கப்பட்ட இந்த்ரனுக்கு 'வாஸவ'ப் பேர் இருக்கிறது.

இந்த்ரன் தேவராஜா. அவனே நமஸ்கரிக்கிறானென்றால், 'யதா ராஜா ததா ப்ரஜா' என்று எல்லா தேவர்களும்

நமஸ்காரம் பண்ண வேண்டியதுதானே? அதுதான் 'வாஸவாதி ஸகல தேவ வந்திதாய.....'

சூரபத்மா தேவர்களை அடித்துத் துரத்திவிட்டு இந்த்ரனின் ஸிம்ஹாஸனத்தை அபஹரித்த போது, தேவர்களெல்லோரும் தங்களுக்கு மஹா சக்தனான ஸேநாநாயகன் வேண்டுமென்று ப்ரார்த்தனை பண்ணித்தான் ஈச்வரன் ஸுப்ரஹ்மண்யரைப் படைத்தது. அதனால் அவர்கள் அவரை ரொம்பவும் பூஜிக்கத்தானே வேண்டும்?

பூஜித்தது மட்டுமில்லை. இந்த்ரன் தன்னுடைய குமாரியான தேவஸேனையை ஸுப்ரஹ்மண்யருக்கே கன்யாதானம் பண்ணி அவரை மாப்பிள்ளையாக்கிக் கொண்டுவிடுகிறான். தேவர்களுக்கு ஸேநாபதியாயிருப்பவர் 'தேவஸேநா-பதி'யாகவும் ஆகிறார். அதைத்தான் பாட்டில் பிற்பாடு 'தேவராஜ ஜாமாத்ரே' என்று சொல்லியிருக்கிறது. 'தேவராஜனின் ஜாமாதா, அதாவது மாப்பிள்ளைக்கு, நமஸ்காரம்' என்று சொல்லியிருக்கிறது....

ஒரு ஸமாசாரம் ஞாபகம் வருகிறது. தேவஸேனையை இந்த்ரனின் குமாரி என்கிறோம். வள்ளியை நம்பிராஜன் குமாரி என்கிறோம். 'ஸுரமகள், குறமகள்' என்று சொன்னேன். ஆனால் வாஸ்தவத்தில் இரண்டு பேருமே மஹாவிஷ்ணுவின் குமாரிகள்தான். அவருடைய ஆனந்த பாஷ்பத்திலிருந்து உத்பவித்தவர்கள். அப்புறம் ஒவ்வொரு காரணத்துக்காக ஒருத்தி இந்த்ரனிடமும், மற்றவள் நம்பிராஜனிடமும் பெண்ணாக வளர்ந்தார்கள்.

மஹாவிஷ்ணு யார்? ஸாக்ஷாத் அம்பாளின் உடன் பிறப்பு. அதாவது ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் மாமா. மாமா பெண்களைத்தான் இவர் முறை தப்பாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டு, 'மருமகன்' என்ற வார்த்தையை இரண்டு அர்த்தத்திலும் ஜஸ்டிஃபை பண்ணிக் கொண்டிருக்கிறார்! அதனால்தான் போலிருக்கிறது, அருணகிரிநாதர் 'முருகோனே' என்று சொல்கிற அளவுக்கு 'மருகோனே

மருகோனே' என்றும் பாடியிருக்கிறார். பிள்ளையார் கூடத்தான் விஷ்ணுவுக்கு மருமானாயிருந்த போதிலும் 'மால் மருகோன்' என்று ஸுப்ரஹ்மண்யரையே சொல்கிறோம்.

த்வேஷ பாவம் போய் ஒன்று சேர்ந்து விடுவதைச் சொன்னேனே, இங்கேயும் (அதற்கு) எக்ஸாம்பிள். விஷ்ணுவின் பிள்ளையான மன்மதனை எரித்தவருக்கு அதே நேத்ராக்னியிலிருந்து பிறந்தவர் ஸுப்ரஹ்மண்யர். இவருக்கே அந்த விஷ்ணு ஒட்டிக்கு இரட்டியாகத் தம் பெண்களைக் கல்யாணம் பண்ணித் தந்திருக்கிறார்.

இப்படிப் பார்த்துக் கொண்டு போனால், சைவம் – வைஷ்ணவம் என்று கூடப் போய் "ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய" ஒரு வைஷ்ணவருக்கு மாஸ்டர்–பீஸாக இருப்பது விசித்ரமேயில்லை, ரொம்ப ந்யாயம்தான் என்றாகிவிடும். விஷ்ணுவின் மாப்பிள்ளைதானே அவர்? மாப்பிள்ளையிட மில்லாத ப்ரியமும் மரியாதையும் உண்டா?

இன்னம் ஒரு படி மேலே, அம்பாளே விஷ்ணு ஸஹோதரிதானே? மீனாக்ஷியை ஸுந்தரேச்வரருக்கு யார் தாரை வார்த்துத் தருவது? பெரிசாக, லோகமே கொண்டாடுகிற சில்பமாக அடித்து வைத்திருக்கிறதே!...

முதலில் "ஸமஸ்த ஜன"ங்களும் பூஜிப்பதாகச் சொன்னவர் அப்புறம் "ஸகல தேவ"ர்களும் வந்தனை செய்வதைச் சொல்கிறார். மனிதர்களில் பல ஜாதி இருப்பது போல் தேவரிலும் உண்டு. வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் – இன்னம் கந்தர்வர்கள், வித்யாதரர்கள், கின்னரர்கள் – என்பதெல்லாம் தேவ ஜாதிகள். எல்லா மனுஷ்ய ஜாதிகளாலும் பூஜிக்கப்படுவது போலவே இந்த எல்லா தேவ ஜாதிகளாலும் பூஜிக்கப்படுபவர் ஸுப்ரஹ்மண்யர் – 'ஸகல தேவ வந்திதாய; வரேண்யாய."

**வரேண்யாய**

'வரேண்யர்' என்றால் ரொம்ப உயர்ந்தவர், சிறந்தவர் என்று அர்த்தம். காயத்ரீ மந்த்ரத்தில் அந்த வார்த்தை வரும். பரமாத்ம தேஜஸுக்கு மிஞ்சி எதுவுமில்லை; அதுதான் best என்று ஸுபர்லேடிவ் போட்டுக் காட்டும் போது வேத ஸாரமான காயத்ரியில் வருகிற வார்த்தையை இங்கே தீக்ஷிதர்வாள் போட்டிருக்கிறார். ஸுப்ரஹ்மண்யாய, லாவண்யாய, சரண்யாய என்று பல்லவியில் ஒரே மாதிரி அந்த்ய ப்ராஸம் போட்டதோடு சேரும்படியாக அநுபல்லவியிலும் 'வரேண்யாய' என்று உச்ச ஸ்தானத்தில், உச்ச ஸ்தாயியில் வேதத்தின் உச்சியான மந்த்ரத்தில் வரும் உச்சத்தைக் காட்டும் வார்த்தையை இழைத்திருக்கிறார்...

வாக்கிய ஆரம்பத்திலும் எதுகை ப்ராஸம் இருக்கிறது: ஸ்ரீஸு(ப்ர)–பூஸு(ராதி); வாஸ(வாதி) – தாஸ(ஜன). பொயட்ரி ரூபமும் அர்த்தம் மாதிரியே அழகாக அமையும்படிப் பண்ணியிருக்கிறார். இதுதான் மஹான்களின் ரசனா விசேஷம். ரஸ(sa)னை இல்லை; ரச(cha)னை. ரசனை என்றால் கவிதை அமைப்பு. அர்த்தம், வார்த்தை இரண்டும் அழகாக, வார்த்தைகளைக் கோக்கும் விதமும் ஒரு ஒழுங்கிலே அழகாக வரும்படி அமைவது. Composed, composure என்றாலே ஹாயாக அமைதி நிலையில் இருப்பதுதான். தமிழிலும் அழகாகச் சொல்லமைதி, பொருளமைதி என்கிறோம். இப்படி ரசனை பண்ணுவதிலேயே ஒரு கவி அல்லது ஸாஹித்யகர்த்தாவுடைய ரஸனா விசேஷமும் தெரிந்துவிடும்.

**தாஸ ஜனாபீஷ்ட – ப்ரத – தக்ஷதராக்ர – கண்யாய**

'வரேண்யாய' என்று ஸ்வாமியின் சிறப்புக்கு ஸுபர்லேடிவ் கொடுத்தவர், அவர் எப்படி அருளை வாரி வழங்குகிறாரென்பதற்கு இங்கே ஏகப்பட்ட ஸுபர்லேடிவ் கொடுத்துக் கொண்டே போகிறார்.

'தாஸ ஜன அபீஷ்ட ப்ரத' – 'அடியாரான மக்களின் மனோரதங்களை நிறைவேற்றித் தருகிற'. 'தருகிறவருக்கு' என்பதற்கு 'ப்ரதாய' என்று போட்டிருந்தாலே போதும். ஆனால் ஸ்வாமியின் அநுக்ரஹ சீலத்தை அப்படி ஸாதாரணமாகச் சொல்லி, விட்டு விடுவதற்கு தீக்ஷிதருக்கு மனஸ் வரவில்லை. 'ப்ரத'வுக்கு அப்புறம் ஒரு 'தக்ஷ', அதற்கப்புறம் ஒரு 'தர', அதற்கு அப்புறம் ஒரு 'அக்ர கண்ய' என்று ஸூபர்லேடிவ்களாகக் கோத்துக் கொண்டே போகிறார்: 'அபீஷ்ட ப்ரத – தக்ஷதராக்ரகண்யாய.'

'அபீஷ்டப்ரத – தக்ஷ' என்றால் மனோபீஷ்டங்களை அருள்வதில் மஹா கெட்டிக்காரர். முதலில் 'வாஸுகி, தக்ஷகாதி' என்ற இடத்தில் Taksha. இங்கே Daksha. தக்ஷ என்றால் ரொம்பவும் கெட்டிக்கார, ரொம்ப ஸாமர்த்யமான என்று அர்த்தம். ஸுப்ரஹ்மண்யர் அபீஷ்டத்தை அளிப்பதில் தக்ஷர். இல்லை, அதற்கும் மேலே! கேட்டதைக் கொடுப்பதில் மிகவும் சிறந்து விளங்கும் 'தக்ஷ'ர்களான தெய்வங்களிலும் மற்ற எல்லாரைவிட இவரே சிறந்தவர் – 'தக்ஷதரர்'. "இது தரமானது" என்கிறோம். அப்படியானால், மற்றவற்றோடு 'கம்பேர்' பண்ணும்போது இதுவே சிறந்தது என்று அர்த்தம். அப்படித்தான் இவர் மற்ற அநுக்ரஹ மூர்த்திகளுக்கு நடுவே 'தர'மானவராயிருக்கிறார். மற்ற தெய்வ உபாஸகர்கள் எங்கள் தெய்வமும் அப்படித்தான் என்று வந்து விட்டால் என்ன பண்ணுவது? 'ஸரி', அவர்களோடும் நாம் சண்டைக்குப் போக வேண்டாம். ஐக்கியத்துக்கும் ஸமரஸத்துக்கும்தானே ஸ்வாமியும், ஸங்கீதமும், ஸாஹித்யமும் இருப்பது?' என்று தீக்ஷிதர்வாள் நினைத்து, "அபீஷ்ட – ப்ரத – தக்ஷ – தரர்களாகப் பல பேர் இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அவர்களில் முதல்வராக, 'நம்பர் ஒன்'னாக இவரே மதிக்கப்படுகிறார் என்று போட்டு விடுவோம்" என்று முடிவு பண்ணி 'தக்ஷ–தர'வுக்கு அப்புறம் 'அக்ரகண்யாய' என்று முத்தாய்ப்பு வைத்து விட்டார் போல இருக்கிறது. 'தாஸ ஜனங்களின் இஷ்டத்தை

வழங்குபவர்களில் சிறப்புற்றவர்களினும், சிறப்புற்றவர்களிலேயும் முதலாமவராக மதிக்கப்படுபவர்' என்று பெரிசாக நீட்டிக்கொண்டு போயிருக்கிறார். 'அக்ர' – முதலில், முதலிடத்தில்; 'கண்ய' – மதிக்கப்படுகிறவர்.

**தாரக ஸிம்ஹமுக சூரபத்மாஸுர ஸம்ஹர்த்ரே**

''தாரகன், ஸிம்ஹமுகன், சூரபத்மன் என்ற அஸுரர்களை ஸம்ஹாரம் பண்ணினவருக்கு'' – நமஸ்காரம் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும். ''ஸுப்ரஹ்மண்ய, லாவண்ய, சரண்ய, அக்ரகண்ய'' என்றெல்லாம் 'அ'காரத்தில் வார்த்தை முடிந்ததால் 'அப்படிப்பட்டவருக்கு' என்று நாலாம் வேற்றுமையில் சொல்லும் போது ''யாய'' என்று ஆயிற்று. இப்போது சரணத்தில் வரும் பேர்களில் பெரும்பாலானவை அகாராந்தமாக முடியாமல் 'ரு'விலே — தமிழில் குற்றியலுகரம் என்று சொல்லும் தேய்ந்த 'ரு'விலே — முடிகின்றன. முதலில் ''ஸம்ஹர்த்ரு''. அப்புறம் ''உபதேசகர்த்ரு''. அப்புறம் ''ஸவித்ரு'' என்றிப்படி இருக்கின்றன. இவை நாலாம் வேற்றுமையில் ஹர்த்தாய, கர்த்தாய என்றெல்லாம் ஆகாது. ஹர்த்ரே, கர்த்ரே என்றே ஆகும். சரணம் பூராவும் இப்படி த்ரே, த்ரே என்று வரிகள் முடிவதைக் கவனிக்கலாம்.

தாரகன், ஸிம்ஹமுகன், சூரபத்மன் மூன்று பேரும் ஸஹோதரர்கள். தாரகனுக்கு யானை முகம். ஸிம்ஹமுகன் பேரிலிருந்தே சிங்க மூஞ்சி என்று தெரிகிறது. சூரபத்மன் க்ரூரமான அஸுர முகம் படைத்தவன். தென் தேசத்தில் சூரபத்மனைத்தான் அஸுர ராஜனாகவும், ஸ்வாமியின் ப்ரதான சத்ருவாகவும் சொல்கிறோம். சூரஸம்ஹாரம் என்றே உத்ஸவம் பண்ணுகிறோம். 'வீர, தீர, சூர' என்று அந்த சூர சப்தமே மஹா வீர்யத்தைக் குறிப்பிடுகிறது. சூரனையும் ஜயித்த மஹா சூரராக ஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்கிறோம். ஆனால் வடக்கே தாரகாஸுரனைத்தான் இவனுடைய இடத்தில் சொல்கிறார்கள். 'குமார ஸம்பவ'த்திலும் தாரக வதத்துக்காகவே குமாரஸ்வாமி ஸம்பவித்ததாகத்தான்

காளிதாஸர் சொல்லியிருக்கிறார். ஆசார்யாள், 'புஜங்க'த்திலே **"த்வயா சூரநாமா ஹதஸ் தாரக: ஸிம்ஹவக்த்ரச்ச"** என்று மூன்று பேரையும் சொல்லி யிருக்கிறார். 'ஸிம்ஹவக்த்ரன்' என்றாலும் 'ஸிம்ஹமுகன்'தான். தீக்ஷிதரும் தக்ஷிணத்திலுள்ள வழக்கப்படியே — ஸ்காந்த மஹா புராணத்திலும் இப்படித்தானிருக்கிறது — மூன்று பேரையும் சொல்லியிருக்கிறார். மஹாபல பராக்ரமம் படைத்த மூன்று க்ரூர ராக்ஷஸர்களை பால்யத்திலேயே ஹதாஹதம் பண்ணிய வீராதிவீரர் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி.

கோடி கோடி மநஸிஜ லாவண்யத்தைச் சொல்லியாச்சு; தீன சரண்யனாக, அபீஷ்ட வரதர்களில் அக்ர கண்யராக உள்ள காருண்யத்தைச் சொல்லியாச்சு; மஹா அஸுரர் களையும் ஸம்ஹாரம் பண்ணிய வீர பௌருஷத்தையும் இப்போது சொல்லியாச்சு. அழகு, அருள், ஆற்றல் மூன்றிலேயும் ச்ரேஷ்டமானவரென்று காட்டியாச்சு. இதற்கெல்லாம் மேலே இன்னம் அவர் என்ன? தீக்ஷிதர் ஒவ்வொரு க்ருதியிலேயும் என்ன முத்ரை வைத்திருக்கிறார்? "குரு குஹ". குரு — அதுதான் ஸுப்ரஹ்மண்யருடைய எல்லாப் பெருமைகளுக்கும் மேலான மஹா பெருமை. குருவாக உபதேசித்து மோக்ஷத்தை அநுக்ரஹிக்கிற பேரருளைச் செய்கிறவர் அவர். **"குருவாய் அரர்க்கும் உபதேசம் வைத்த"** என்று அருணகிரிநாதர் சொல்கிறபடி, பரம ஞான மூர்த்தியான அப்பாவுக்கும் உபதேசம் செய்த தகப்பன் ஸ்வாமி, ஸ்வாமிநாத ஸ்வாமி அவர். **"ஞான பண்டித ஸ்வாமி"** அழகு, அருள், வீர தீர சக்தி எல்லாம் தீக்ஷிதர் சொன்னபின் இதற்கு வருகிறார்:

**தாப — த்ரய ஹரணநிபுண தத்வோபதேச கர்த்ரே**

தாபத்ரயம் என்பதாக ஜீவாத்மாவுக்கு மூன்று தினுஸுத் தாபம். மூன்று ஸமாசாரங்கள் அதை தஹித்து வேக வைக்கின்றன. ஆத்யாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தைவிகம் என்று மூன்று மனுஷ்யரைத் தபிக்க வைக்கின்றன.

ஆத்யாத்மிகம் என்பது தன் ஆத்மாவாலேயே தன்னை வருத்திக் கொள்வது. அதாவது நம்முடைய மனஸின் பலவிதமான சஞ்சலிப்பு, கொந்தளிப்பினாலேயே நம்மை வறுத்தெடுத்துக் கொள்வது. ஆதி பௌதிகம் என்பது பூதர்களால் அதாவது உயிர்களால், நம்மைத் தவிர பிற மநுஷ்யர்களாலும் மற்ற ஜீவராசிகளாலும் உண்டாகிறது. ஆதி தைவிகம் என்ற இடத்தில் தைவம் என்றால் விதி. நம்முடைய வினையே விதியாக வந்து வருத்துவது ஒரு தாபம். அல்லது மநுஷ்ய சக்திக்கு அப்பாற்பட்டதாக 'இயற்கை உற்பாதம்' என்கின்ற, ஆனால் உண்மையில் தேவ சக்திகளின் கோபத்தைக் காட்டுவதான புயல், பூகம்பம், எரிமலை வெடிப்பது முதலியவற்றால் ஏற்படுவது ஆதி தைவிகமான தாபம். ஆதிபௌதிகத்தாலும், ஆதி தைவிகத்தாலும் விபத்து, வியாதி, இத்யாதி ஏற்படலாம். ஆனால் அதை நமக்குத் தாபமாக மாற்றி வருத்தம் தருவது, வறுத்தி எடுப்பது மனஸ்தான். மனஸ் என்று ஒன்று இல்லாவிட்டால் எந்தத் ,தாபமும் தெரியாதுதானே ? 'மனம் இறக்கக் கற்று விட்டால்' தாபமேயில்லை. ஆத்மாராமர்களாக ஆனந்தமயமாக ஆகி விடலாம். அப்படி ஆகக் கற்றுக் கொடுப்பதுதான் தத்வோபதேசம். தாபத்ரயங்களைப் போக்க வல்ல தத்வ உபதேசத்தைச் செய்பவர் ஸுப்ரஹ்மண்யர்: "தாபத்ரய ஹரண நிபுண தத்வோபதேச கர்த்தா."

ஸ்கந்த மூர்த்தியாகி அவர் பிதாவான ஈச்வரனுக்கு ப்ரணவ உபதேசம் பண்ணினது மட்டுமில்லை. ஸநத்குமாரர் என்று ஒரு ப்ரஹ்மநிஷ்டர். ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் ப்ரம்மாவிடமிருந்து முதலில் தோன்றிய நாலு பேர் யாரென்றால், தாங்களும் ஸ்ருஷ்டியிலிருந்து தப்பிய ஞானிகளாக இருந்தவர்கள்; தங்களாலும் ப்ரஜா ஸ்ருஷ்டி ஏற்படாமல் ப்ரம்மசாரி, ஸந்நியாஸி இரண்டுமாக, எல்லா ஆச்ரமங்களுக்கும் மேலே போன அதிவர்ணாச்ரமிகளாக இருந்தவர்கள். ஸநகர், ஸநந்தனர், ஸநாதனர், ஸநத்குமாரர் என்று அவர்களுக்குப் பேர். அவர்களில் ஸநத்குமாரரைக்

'குமாரர்' என்றே சொல்வது. ஸநத் என்பது ப்ரம்மாவின் பேர். அவருடைய புத்ரர் ஸநத்குமாரர். அவர் நாரதருக்கே தத்வோபதேசம் செய்திருக்கிறார். அந்த உபதேசமும் அதைப் பற்றிய கதையும் சாந்தோக்யோபநிஷத்தில் வருகிறது. ஸநத்குமாரர் நாரதருக்கு இருட்டைத் தாண்டிய நிலையைக் காட்டினார் என்று உபநிஷத்து முடிக்கிற இடத்தில், அந்தக் குமாரரேதான் குமார சப்தத்தை ப்ரஸித்த நாமாவாகக் கொண்ட ஸ்கந்தமூர்த்தி என்று இரண்டு தரம் சொல்லியிருக்கிறது. அஞ்ஞான இருட்டுக்கு அப்பால் இருக்கிற ஞான ஜ்யோதிஸ்தான் ஸுப்ரஹ்மண்யர். அக்னி ஸ்வரூபமென்றால் அது ஞானாக்னிதான். அவர் கையிலே தகதகவென்று இருக்கிற சக்த்யாயுதமும் ஞானவேல்தான். பாஹுபல பராக்ரமத்தைக் காட்டும் சக்தி; கோடி கோடி மன்மத லாவண்யம்; தீன ரக்ஷணத்தில் முதல்வராக இருக்கும் காருண்யம் எல்லாமும் கடைசியில் அந்த ஞானத்தில் பிறந்தவையே; அந்த ஞானத்தோடு பிரிக்க முடியாமல் ஸம்பந்தப்பட்டவையே. ஞானத்தை மற்றவருக்கும் வழங்கும் குருநாதனாக இருப்பதே ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் உயிரான லக்ஷணம் — 'தத்வோபதேச கர்த்ரே; வீரநுத குருகுஹாயாஜ்ஞான–த்வாந்த–ஸவித்ரே."

**வீரநுத**

ஞானி வேறே, வீரன் வேறே என்பது விஷயம் தெரியாத நிலையில்! நிஜமான ஞானி எதுவாகவும் இருப்பான் — அவன் எல்லாமாக இருப்பதால்! உள்ளுக்குள்ளே ஆத்மா ஒன்றைத் தவிர எதுவாகவுமில்லாமல், வெளிக் கார்யத்தில் அந்த ஆத்மாதான் ஸகலமும் ஆனதால் எதுவாக வேண்டுமானாலும் — கத்தியை எடுத்துச் சுற்றுகிற மஹா வீரனாகக்கூட — இருப்பான். கீதை என்று ஞானோபதேசம் செய்யும் போது, "காண்டீவத்தை எடுடா! அம்பைத் தொடுடா!" என்று பகவான் சொல்லியிருக்கிறாரில்லையா? ஸுப்ரஹ்மண்யர் ஞான வீரர். தேவ ஸேனைக்கெல்லாம்

கமான்டர்–இன்–சீஃப். அதனால் வீரர்களால் தொழப் படுபவர். அதுதான் 'வீர நுத'. 'நுத' – தொழப்படுகிற. முக்யமான அவருடைய பரிவாரம் நவ வீரர்கள் என்ற ஒன்பது பேரைக் கொண்டது. வீரபாஹு, வீரகேஸரி, வீர மஹேந்திரர் என்று 'வீர' என்றே பேர் ஆரம்பிக்கிற ஒன்பது மஹாவீரர்கள் அவருடைய அஸிஸ்டென்டுகள். அதனாலும் 'வீரநுத.'

**குருகுஹாய; அஜ்ஞான த்வாந்த ஸவித்ரே**

வீரத்தைச் சொன்னவுடனே ஞானம்! குருகுஹனாக ஸ்வாமி இருப்பது! மலைகள் அவருக்கு முக்யவாஸம். குறிஞ்சிக் கடவுள் என்றே போற்றுகிறோம். மலைக் குஹைகளில் வஸிப்பதால் குஹன். தத்வார்த்தமாகச் சொன்னால் ஹ்ருதய குஹையிலிருக்கும் ஆத்ம ஸ்வரூபம். அதுவே குருவாக வந்து உபதேசிக்கிறபோது குருகுஹன். ஸ்வாநுபவத்தினால் தீக்ஷிதருடைய ஹ்ருதயத்திலிருந்து பீறிக் கொண்டு வந்து அவருடைய முத்ரையாகவே ஆகிவிட்ட நாமா.

குருகுஹாய; அஜ்ஞான – த்வாந்த – ஸவித்ரே.

'த்வாந்தம்' இருட்டு. ஸவித்ரு, ஸவிதா என்றால் ஸூர்யன். இருட்டை இருந்த இடம் தெரியாமல் ஸூர்யன் விரட்டி அழித்து விடுகிற மாதிரி அஞ்ஞான இருட்டை த்வம்ஸம் பண்ணும் ஞான ஸூர்யன். ஸநத்குமாரர் இருட்டுக்கு அந்தண்டைக்கு வழிகாட்டினார் என்கிற ஸமாசாரம்.

'ஸவித்ரு, ஸவிதா' என்ற பேரைப் போட்டிருப்பதில் ரொம்பவும் வைதிக விசேஷம் இருக்கிறது. ஸூர்யனுக்கு எத்தனையோ பேர் இருக்கிறது. 'ஆதித்ய(ன்) – ஸவிதா – ஸூர்ய(ன்) – கக(ன்) – பூஷா' இப்படியெல்லாம் பல பேர்கள் ('ஆதித்ய ஹ்ருதய'த்தில் சொல்லியிருக்கிறது). பாஸ்கரன், பானு, மார்த்தாண்டன், தினகரன், தினமணி

என்றெல்லாமும் பல பேர் இருக்கிறது. அவற்றில் ஸவிதா என்பதுதான் காயத்ரீ மந்த்ரத்திலேயே வருகிற பேர். பரமாத்மாவின் ஞான ஜ்யோதிஸ்ஸை ஸூர்ய மண்டலத்திற்குள் இருக்கும் தேஜஸ்ஸாக பாவித்து, ப்ரார்த்தித்து, அது நம் அறிவுச் சுடரையும் கொழுந்து விட்டெரியும்படி தூண்டிவிட வேண்டும் என்று சொல்லும்போது ஸவிதாவாகவே பேர் கொடுத்து சொல்லியிருக்கிறது. அந்தப் பேரின் விசேஷம் அது அழிவைச் சொல்லாமல் படைப்பைச் சொல்வது. ஸவிதா என்றால் உற்பத்தி செய்கிறவன், உண்டாக்குகிறவன். 'ப்ரஸவம்' என்ற வார்த்தையில் வரும் 'ஸவ'த்தின் அடியாகப் பிறந்த வார்த்தை ஸவிதா. ஸூர்யன் இருட்டையும், சேற்றையும், சகதியையும், குப்பை கூளத்தில் வளரும் க்ருமிகளையும், பூச்சிகளையும் அழிப்பது மட்டுமில்லை. அவனாலேயே மழை, தாவர வளர்ச்சி, நம் ஆரோக்ய வளர்ச்சி, ஆத்யாத்மிகமாக நம்முடைய புத்தி வளர்ச்சி எல்லாம் உண்டாகின்றன. அப்படியே ஸுப்ரஹ்மண்யரான ஞான ஸூர்யன் அஞ்ஞான இருட்டை அழிப்பது மட்டுமில்லை — அஞ்ஞானம் போனபின் எல்லாம் சூன்யமாகி விடுவதில்லை — அஞ்ஞானம் அழிந்த இடத்தில் பூர்ணாநுபவமான ஞான ப்ரகாசத்தை அவர் உண்டாக்குகிறார். ஸவிதா பத ப்ரயோகம் ரொம்பப் பொருத்தமாக விழுந்திருக்கிறது. திருமுருகாற்றுப்படையும் ஸூர்யோதயத்தை உவமை சொல்லித்தான் ஆரம்பிக்கிறது.

இந்த க்ருதியின் ஸாரமே வேத ஸாரமான காயத்ரி ஸ்வரூபமாக ஸ்வாமியைக் காட்டுவதுதான் என்று தோன்றுகிறது. ப்ரஹ்மண்யப் பேரோடுதானே பாட்டு ஆரம்பிக்கிறது? அப்புறம் அநுபல்லவியில் உச்சமான இடத்தில் 'வரேண்ய' சப்தம் வந்தது. அதே மாதிரி சரணத்தில் உச்சமான இடத்தில் 'ஸவித்ரு' சப்தத்தை வைத்திருக்கிறார். ஸாஹித்யத்திலே அந்த இடத்தில் ராக ஸஞ்சாரம் ஜிவ்வென்று மேலே போய் "ஸவித்ரே" என்று பளிச்சென்று வருவது, அஞ்ஞான இருட்டு கும்மென்று பரவி நெரிக்கிற போது

ஞான ஸூர்யோதயமாக ஸ்வாமி பளிச்சென்று வந்து ரக்ஷிக்கிறது போன்ற அபிப்பிராயத்தைக் கொடுக்கிறது. அப்புறம்,

**விஜயவல்லீ பர்த்ரே**

அதுதான் வேடிக்கை. நிஜ ஞானியுடைய வேடிக்கை. அவன் வெளியிலே எப்படி வேணுமானாலும் வேஷம் போடுவான். மஹாவீரனாகக்கூட இருப்பான் என்றேனோ-ல்லியோ? ச்ருங்கார நாயகனாகக் கல்யாணம் கார்த்திகை பண்ணிக் கொண்டுகூடக் கூத்தடிப்பான். திருச்செந்தூரில் வீர பராக்ரமரான சூர ஸம்ஹார மூர்த்தி, பழநியிலே ஸந்நியாஸி, ஸ்வாமி மலையில் பிரம்மசாரியாயிருக்கிற குருமூர்த்தி, அவரே திருப்பரங்குன்றத்தில் தேவஸேனையின் பதி, திருத்தணியில் வள்ளியையும் சேர்த்துக் கொண்ட இரட்டைப் பெண்டாட்டிக்காரரர்! 'விஜயவல்லி' என்பது வள்ளிதான். 'அவளுடைய பர்த்தாவுக்கு (நமஸ்காரம்)' என்பது 'விஜயவல்லீ பர்த்ரே'. வெற்றிவேலன் என்கிறபடி அவரோடு ஜயம், விஜயம் (விசேஷமான ஜயம்தான் விஜயம்) எப்போதும் சேர்ந்திருக்கும். அவருக்கு இரண்டு பக்கங்களில் நிற்கிற பத்னிகளில் தேவஸேனைக்கு ஜயந்தி என்றே பெயர். மற்றவள் விஜயவல்லி. ஸுப்ரஹ்மண்யரைப் பற்றி ரொம்பவும் ஜனரஞ்ஜகமான விருத்தாந்தம் வள்ளி கல்யாணம்தான். அதிலேயே பரம வேதாந்தம் — இந்த்ரிய வேடர்களுக்கு நடுவில் சிக்கிக் கொண்டிருக்கிற ஜீவாத்மாவைப் பரமாத்மா விடுவித்துத் தம்மோடு அப்படியே சேர்த்துக் கொண்டு விடுவதற்கு ரூபகமாக வள்ளி கல்யாணக் கதை இருக்கிறது.

ஒரு வேடப் பெண் பரம ப்ரேமையோடு பக்தி பண்ணினதற்காக ஸாக்ஷாத் லோக மாதாபிதாக்களின் குமாரர் திනுஸுதினுஸாக வேஷம் போட்டுக் கொண்டு கூத்தடித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டது அவர் எப்பேர்ப்பட்ட தீன சரண்யர் என்பதற்குப் பெரிய சான்றாக இருக்கிறது.

**சக்த்யாயுத தர்த்ரே**

*'பராசக்தியின் ஸ்வரூபமானதும், மஹா சக்தி பொருந்தியதுமான வேலாயுதத்தைத் தரித்துக் கொண்டிருப் பவர்.'*

மாறி மாறி அவருடைய விதவித வேஷங்கள் — சூராதி அஸுரர்களின் ஸம்ஹர்த்தாவாக, உடனே தாபத்ரயம் போக்குகிற தத்வோபதேசகராக, அடுத்தே வீரர்கள் நமஸ்கரிக்கிற மஹா வீரராக, உடனேயே குருகுஹன் என்ற பெருமையோடு அஞ்ஞான தமஸைப் போக்கும் ஸவிதாவாக, அப்புறம் வள்ளி கல்யாண மூர்த்தியாக — இப்போது மறுபடி சக்திவேலன் என்ற வீர பராக்ரமராக!

**தீராய**

தீரன் என்றால் நாம் அஞ்சா நெஞ்சம், பலம் இவற்றைத்தான் நினைக்கிறோம். அதுவும் ஸரிதான். ஆனால் தீர சப்தம் தீக்ஷண்யமான புத்தியையும் குறிக்கும்.

மறுபடியும் காயத்ரீ! காயத்ரியிலும் இந்த '**தீ**' சப்தம் வருகிறது. நம் புத்தியைப் பரமாத்ம தேஜஸ் தூண்டணும் என்கிற போது புத்தியை '**தீ**' சப்தத்தாலேயே சொல்லி யிருக்கிறது.

'காயத்ரி'க்கு 'ரூட் மீனிங்' என்னவென்றால், "எது கானம் செய்யப்படுவதால் (கானம் செய்கிறவனை) ரக்ஷிக்கிறதோ, அது" என்பதே. வேத ஸ்வரங்களை உரியபடி ஏற்றியிறக்கிச் சொல்வதே ஒரு உசந்த கானம்தான். 'ஸாமகானம்' என்கிறோம். அந்த அர்த்தத்தில்தான் காயத்ரி தன்னை கானம் செய்பவரை ரக்ஷிப்பதாகச் சொன்னது. வேத ஸ்வரங்களுக்குப் பதில் ஸங்கீத ஸப்த ஸ்வரங்களைக் கொண்டு ஸகல ஜனங்களும் கானம் செய்யும் காயத்ரியாக தீக்ஷிதர்வாள் இந்த க்ருதியைப் பண்ணியிருக்கிறாரென்று சொல்லும்படி இதில் அந்த மஹா மந்த்ர விசேஷங்களை வைத்திருக்கிறார்.

ஸப்தஸ்வரத்தில் ஆரம்ப ஸ்வரம், ஆதார ஸ்வரம் என்ன? ஷட்ஜம். 'ஸ' என்பது. அது மயூர சப்தம் – மயிலின் குரல் எழுப்பும் ஸ்வரம் – என்று சொல்கிறார்கள். மயூரம் என்றால் ஸுப்ரஹ்மண்யர்தான் முன்னே நிற்கிறார். "மரகத மயூரப் பெருமாள் காண்!" என்று அருணகிரிநாதர் சொல்கிறார். ஆதார ச்ருதியாக இருக்கப்பட்ட ஸ்வரத்திற்கே அதிதேவதை என்றால் அவர் ஸங்கீத மூர்த்திதானே? அவருக்கு ஒரு ஸங்கீத காயத்ரி இருக்கத்தானே வேண்டும்? தம்முடைய அநுக்ரஹத்தில், அம்சத்தில் அவரே ஒரு தீக்ஷிதரை உண்டாக்கி, அப்புறம் அவருக்குத் தாமே குருவாகக் கல்கண்டை வாயில் போட்டுக் கல்கண்டாகப் பாட வைத்து அப்படி ஒரு க்ருதி செய்து கொண்டிருக்கிறார்!

**நத விதாத்ரே**

விதாதா என்றால் ப்ரம்மா. 'வீர நுத'வில் வந்த 'நுத'வும் இந்த 'நத'வும் ஒன்றேதான். 'வணங்கப்பட்ட' என்று அர்த்தம். ஸுப்ரஹ்மண்யரை ப்ரம்மா வணங்கின கதை தெரிந்ததுதான். ஸ்வாமி அவரை ப்ரணவார்த்தம் கேட்க அவர் உளறிக் கொட்டினார். குழந்தை என்ன பண்ணிற்று என்றால் அந்த ஸ்ருஷ்டிகர்த்தாவை ஜெயிலில் போட்டு விட்டு, தானே ஸ்ருஷ்டி பண்ண ஆரம்பித்து விட்டது. சில க்ஷேத்ரங்களில் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியின் கையில் ப்ரம்மாவுக்குரிய ஜபமாலையும் கமண்டலமும் இருக்கும். காஞ்சீபுரம் குமரக் கோட்டத்தில்கூட . அப்படித்தான். ப்ரம்மாவின் தொழிலை ஸ்வாமியே நடத்திய அவஸரம் அது.

அப்புறம் பரமேச்வரன் ப்ரம்மாவுக்காகப் பரிந்து பேசினார். அப்போது, "ப்ரம்மா ஸரியாக அர்த்தம் சொல்லவில்லை என்றால் ஸரியான அர்த்தம்தான் என்ன? உனக்குத் தெரியுமானால் சொல்லேன்!" என்றார்.

அதற்கு பாலஸுப்ரஹ்மண்யர், "இப்படிப் பையனை வாத்தியார் கேட்கிற மாதிரிக் கேட்டால் சொல்ல முடியாது.

வாத்தியாரிடம் பையன் கேட்கிற மாதிரிக் கேளும், சொல்கிறேன்" என்று கம்பீரமாகச் சொன்னார்.

மஹாவீரனுக்கும் பிள்ளையிடம் தோற்றுப் போவதென்றால் மட்டும் பெருமையாகவே இருக்குமாம். அப்படி, பரமசிவனும் ஸந்தோஷப்பட்டுக் கொண்டு புத்ரனுக்கே சிஷ்யராகி ப்ரணவோபதேசம் பெற்றுக் கொண்டார். அறிவைச் சம்பாதித்துக் கொள்வதற்கு எத்தனை தாழ்ந்தும் தழைந்தும் போகலாம் என்று லோகத்துக்கு இதிலேயே பாடம்.

ஸுப்ரஹ்மண்யரின் மஹிமை நன்றாகத் தெரிந்து விட்டது. ப்ரம்மா ஜெயிலிலேயே அவர் இருந்த திக்கை நோக்கி நமஸ்காரம் பண்ணி ரொம்பவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஸ்வாமி அவரை விடுதலை பண்ணிப் பழையபடி ஸ்ருஷ்டி க்ருத்யத்தைக் கொடுத்தார். இந்தக் கதையில்தான் அவர் குறிப்பாக ப்ரம்மாவால் வணங்கப்பட்டு "நத விதாத்ரு" ஆனது.

**தேவராஜ ஜாமாத்ரே**

'தேவராஜ ஜாமாதா' – இந்திரனின் மாப்பிள்ளை. முன்னேயே பார்த்தோம்.

**பூராதி புவந போக்த்ரே**

'பூ' என்றால் பூமி. 'பூராதி' – பூமி முதலிய; 'புவந' – உலகங்கள். கணக்கில்லாத லோகங்களைப் பதிநாலு லோகம் என்றும், அதில் கீழ் லோகங்கள் ஏழு போக பூமியிலிருந்து ஏழு லோகம் என்றும் classify பண்ணி, மேலும் சுருக்கமாக பூர்–புவஸ்–ஸுவர் லோகம் என்று மூன்றாகச் சொல்வது வழக்கம். பூ லோகம் அடி. புவர் லோகம் நடு. ஸுவர் லோகம் உச்சி. மூன்றையும் சேர்த்து 'வ்யாஹ்ருதி'கள் என்பதாக ஓம்காரத்துடன் சேர்த்துச் சொல்வது வேத ஸம்ப்ரதாயம். நாம் வைதிகமாகப் பண்ணும்

கர்மமோ, ஜபமோ, த்யானமோ எதுவானாலும் ஸமஸ்த லோகங்களுக்கும் அதனால் நல்லது ஏற்பட வேண்டும் என்ற உசந்த அபிப்ராயத்தில் அப்படிச் சொல்வது.

மறுபடியும் காயத்ரி வந்து விடுகிறது! காயத்ரி ஆரம்பத்திலும் வ்யாஹ்ருதிகளைச் சேர்த்திருக்கிறது. முன்னேயே 'பூஸுராதி' என்ற இடத்தில் 'பூ'வை (தீக்ஷிதர்) கொண்டு வந்தார். அப்புறம் 'வாஸவாதி ஸகல தேவ'ர்களைச் சொன்ன போது அவர்களுடைய வாஸ ஸ்தானமான ஸுவர் லோகத்தை understood-ஆக, உள்ளுறை பொருளாகக் குறிப்பிட்டார். இப்போது கீர்த்தனம் முடிகிற ஸமயத்தில் 'பூராதி புவநம்' என்று அத்தனை லோகங்களையும் சொல்கிறார். பூராதி புவநங்களில் நடக்கும் ஸகல காரியமும் ஒரு பராசக்தியின் லீலா அநுபவத்திற்குத்தானே? அந்த மஹா சக்தியாக இருந்து கொண்டு ப்ரபஞ்சங்கள் எல்லாவற்றையும் ஆண்டு அநுபவித்துக் கொண்டிருக்கும் 'போக்தா' ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியே என்கிறார். 'பூராதி புவந போக்த்ரே'.

முடிவாக,

**போக மோக்ஷ ப்ரதாத்ரே**

ஸகல புவன போகங்களையும் அநுபவிக்கும் போக்தா வாஸ்தவத்தில் அவர்தான். ஆனால் நாமும் இதில் செல்வம், ஸந்தானம், பதவி, கீர்த்தி என்றெல்லாம் பல போகங்களை அநுபவிப்பதாக நாடகம் நடத்திக் காட்டுகிறார். லோக நாடகத்தில் நாம் விரும்பும் போகங்களை – ஸௌக்யங்களை – அளிக்கிறார். 'தாதா' – அளிப்பவர். 'ப்ரதாதா' – சிறப்பாக அளிப்பவர். அதுவே நாலாம் வேற்றுமையில் 'ப்ரதாத்ரே'.

நாடகம் நடக்கிற மட்டும் நன்றாக நடக்கணும்தான். அதற்கான போகங்களை அருள்வதும் ஸரிதான். ஆனால் எப்போதும் நாம் நாடக பாத்ரமாக வேஷத்திலேயே இருப்பதென்றால் நம்மைப் போல அசடு இல்லை என்றுதான்

அர்த்தம். வேஷம் போய் விட்டால் நாம் நிஜத்தில் எந்த நாமாக இருப்போமோ அந்த ஸத்ய நிலையை அடைய வேண்டாமா? வேஷம் போட்டுக் காட்டும் மனஸ் அழிந்து போய் ஆத்மா மட்டுமாக இருப்பதுதான் அந்த நிலை. ஸம்ஸாரப் பிடுங்கலிலிருந்து விடுபட்ட மோக்ஷம் என்னும் ஸதானந்த நிலை. அந்த நிலையையும் அவரே குருகுஹனாக, தத்வோபதேச கர்த்தாவாக, அஜ்ஞான த்வாந்த ஸவிதாவாக அள்ளிக் கொடுக்கிறார் – அதாவது, மோக்ஷ ப்ரதாதாவாகவும் இருக்கிறார்.

தனலக்ஷ்மியிடமும், ஸந்தான லக்ஷ்மியிடமும் மோக்ஷத்தை வேண்டினால் கிடைக்காது. போகம்தான் கிடைக்கும். தக்ஷிணாமூர்த்தியிடம் போய் போகத்தைக் கேட்டால் கிடைக்காது. அவர் மோக்ஷந்தான் கொடுப்பார். ஸுப்ரஹ்மண்யர் இரண்டும் தருவார். 'போக மோக்ஷ ப்ரதாதா'. இம்மை, மறுமை என்ற இரண்டும் தருபவர் அவர். இதற்கு மேலே சொல்ல எதுவுமில்லை. க்ருதியும் அப்படியே பூர்த்தியாகிறது.

* * *

அற்புத விளக்கமளித்த ஸ்வாமிகள் அரியக்குடியவர்களிடம் கூறினார்: "நல்ல குரு சிஷ்ய பரம்பரையில் வந்திருக்கிற ஒன்னோட சங்கீதத்தை நீ நல்லபடியா காப்பாத்திண்டு வரதுல ரொம்ப ஸந்தோஷம். இதே மாதிரி நீயும் நல்ல சிஷ்யாளைத் தயாரிச்சு இந்தப் பாரம்பர்யம் தொடர்ந்து போகும்படியாப் பண்ணணும். வேதம் கத்துண்ட ப்ராமணன் இன்னம் ஒருத்தனுக்காவது அதைச் சொல்லிக் கொடுத்தே தீரணும்னு, 'அத்யாபனம்'னே அவனுக்குக் கம்பல்ஸரியா ஒரு கடமை கொடுத்திருக்கு. அது எல்லாக் கலைக்கும், சாஸ்த்ரத்துக்கும் பொருந்தும். தான் கற்ற வித்தை தன்னோட போகாம இன்னம் பல பேர்கிட்டப் போகும்படியாப் பண்ணணும்.

''ஸங்கீத வித்வான்கள் முக்யமா ஒண்ணு பண்ணணும். தாங்க(ள்) பாடற ஸம்ஸ்க்ருதப் பாட்டு, தெலுங்குப் பாட்டுகளுக்கு அர்த்தம் தெரிஞ்சுண்டு, அர்த்த பாவத்தோட பாடணும். தமிழே போறும்னு சொன்னா ஸரியில்லே. ஸங்கீத நுட்பம், அர்த்த விசேஷம் ரெண்டிலேயும் உசத்தியா மஹா பெரியவா பல பேர் இந்தத் தமிழ் தேசத்துல தெலுங்கிலேயும் ஸம்ஸ்க்ருதத்திலேயும் நூத்துக்கணக்காப் பாட்டுக்களைக் கொட்டிட்டுப் போயிருக்கா. அதெல்லாம் வேண்டாம்னு தள்றது நமக்குத்தான் நஷ்டம். தமிழிலேயும் நிறையப் பாடட்டும். மத்த பாஷையிலேயும் பாடட்டும். 'அர்த்தம் தெரியலையே'ன்னா தெரிஞ்சுக்கணும். தெரிஞ்சுக்கறது கஷ்டமேயில்லை. நமக்கா இஷ்டம் இருந்தா ஆகாத போகாத ஸமாசாரங்களுக்காகவெல்லாம் எத்தனை ஒழைச்சுத் தெரிஞ்சுக்கறோம்? சுத்தமான ஸங்கீதம், ஒசந்த அர்த்த விசேஷம் — இதுகளுக்கே வித்வான்கள் டெடிகேட் பண்ணிண்டா பாஷை குறுக்கே நிக்காது. இதுக்கெல்லாம், ஸங்கீத ஒலகத்துல இப்ப முதலா இருக்கிற நீ ஒன்னாலானதைப் பண்ணு. அநுக்ரஹ பலம் ஒனக்கு சக்தி கொடுக்கட்டும்.''

அரியக்குடி நாத்தழுதழுத்து, ''என் ஆயுஸில் இன்றைவிட நான் பெரிய பாக்கியம் அடைந்ததில்லை'' என்று கூறி விடைபெற்றார்.

அந்த விநாடியே ஸ்வாமிகள் மீண்டும் மௌனம் பூண்டு விட்டார்.

* * *

**பல்லவி**

**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே நமஸ்தே**

**மநஸிஜ கோடி கோடி லாவண்யாய தீன சரண்யாய**

அநுபல்லவி

பூஸுராதி ஸமஸ்த ஜன பூஜிதாப்ஜ சரணாய
வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூப தரணாய
வாஸவாதி ஸகல தேவ வந்திதாய வரேண்யாய
தாஸ ஜனாபீஷ்ட ப்ரத தக்ஷதராக்ர கண்யாய

சரணம்

தாரக ஸிம்ஹமுக சூரபத்மாஸுர ஸம்ஹர்த்ரே
தாபத்ரய ஹரண நிபுண தத்வோபதேச கர்த்ரே
வீரநுத குருகுஹாயாஜ்ஞான த்வாந்த ஸவித்ரே
விஜயவல்லீ பர்த்ரே சக்த்யாயுத தர்த்ரே
தீராய நத விதாத்ரே தேவராஜ ஜாமாத்ரே
பூராதி புவந போக்த்ரே போக மோக்ஷ ப்ரதாத்ரே
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே |

# மஹா பெரியவாள் விருந்து

"**சா**தம்னா அப்படியே வெள்ளைவெளேர்னு ஹிமய மலை மாதிரி குவிச்சிருக்கும். ஸாம்பார் அண்டாவுல யானையே முழுகிப் போனாக் கூடத் தெரியாது. ஹிமாசல சிவன் மதுரை மீனாக்ஷி கல்யாணத்தில குண்டோதரனுக்காக அன்னக்குழி ஸ்ருஷ்டிச்சார்னு சொல்லுவாளே, அதையே இந்த ஏழைப் பிராமண சிவன் பண்ணராரோன்னு ப்ரமிக்கும் படியா அவர் பண்ணிண்டிருந்தார்."

அந்த 'அவர்' தேப்பெருமாள்நல்லூர் ராமஸ்வாமியாகப் பிறந்து அன்னதான சிவன் என்று உலகம் போற்றி வணங்கிய உத்தம ஜீவன். அவரைப் பற்றிக் குழந்தைக் குதூஹலத்துடன் கூறிக் களிப்பவர் ஸ்ரீ காஞ்சி காமகோடி மஹா பெரியவாள்.

அன்னமய கோசத்தை அற்ப மாயையாக ஒதுக்கி, ஆனந்த மயமான அத்வைத ஞான மோனத்தில் அநுபூதி கண்ட மஹா பெரியவாள் என்றோ நடந்த அன்னதான வைபவங்களைச் சொல்லி ஆனந்திக்கிறார். அந்த அன்ன தானங்களைச் செய்த சிவன் அதுவே தம் ஜன்மப் பணி என்று எவரிடமிருந்து ஆதேசம் பெற்றாரென்றால் அவரது ஜன்ம ஸ்தலமான தேப்பெருமாள்நல்லூர் ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் ஞான மோன மூர்த்தியான தக்ஷிணா மூர்த்தியிடமிருந்துதான்

சோற்றாலடித்த சுவர், அதைக் குட்டிச் சுவராக நொறுக்க வேண்டுமென்று கூறும் ஞானியரில் பலர், விந்தையாக, மக்களுக்கு அன்னம் படைப்பதில் அசாதாரண ஈடுபாடு காட்டியிருக்கிறார்கள். த்வைதத்திலிருந்து அத்வைதத்திற்குப் பாலமிடும் அன்னையின் அன்பு விளையாடல்தான் பிரம்ம ஞானத்திலிருந்து அன்னதானத்தை விளைவிக்கும் விந்தையை நிகழ்த்துகிறது. பொருத்தமாக அவளுடைய ஸஹஸ்ரநாமத்தில் 'நிர்த்வைதா', 'த்வைத வர்ஜிதா', 'ப்ரம்ம–ஆத்ம–ஐக்ய ஸ்வரூபிணி' என்ற அத்வைதப் பெயர்களுக்கு இடையிலேயே

அவளை அன்னபூர்ணேச்வரியாகக் காட்டும் 'அன்னதா' என்ற திருநாமம் வருகிறது.

காமகோடி பீடத்தின் அதிஷ்டான தேவதையான காமாக்ஷி அன்னபூர்ணேச்வரியின் மலர்ச்சி கண்ட பரிணாமமேயாவாள். காத்யாயன ரிஷிக்கு மகளான காத்யாயனியாகத் தோன்றிக் காசியில் அன்னபூர்ணியாகிப் பஞ்ச காலத்தில் பசியாற்றியவளே காஞ்சிக்கு வந்து காமாக்ஷியானாள். அதனால்தான் அவளுடைய கருவறை வாயிலில் அன்னபூர்ணி சந்நிதி இருக்கிறதென்று ஸ்ரீ மஹா பெரியவாள் எடுத்துக்காட்டியிருக்கிறார். 'இரு நாழி நெல் கொண்டு அவள் இயற்றும் எண் நான்கு அறங்'களில் அன்னதானம் முக்கியமானது. இதே காஞ்சியில் மணிமேகலை அமுதசுரபியிலிருந்து அக்ஷயமாக அன்னதானம் செய்ததை மஹா பெரியவாள் எடுத்துக் காட்டியிருக்கிறார். 'காஞ்சி என்பதும் மணிமேகலை என்பதும் ஒன்றே. மணி கட்டிய ஒட்டியாணத்திற்குத்தான் அப்படி இரண்டு பேர்' என்றும் அற்புதமாகப் பொருத்தம் காட்டியிருக்கிறார்.

காஞ்சி காமாக்ஷியின் அன்னப் பாலிப்பைப் போற்றியும் பரமசிவனைப் பரிஹாஸம் செய்தும் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியதை மஹாபெரியவர்கள் மிகவும் சுவைத்துக் கூறுவது வழக்கம். காஞ்சியில் உள்ள பல ஆலயங்களில் ஓணகாந்தன்றளி என்பது ஒன்று. ஓணன், காந்தன் என்ற இரண்டு அசுரர்கள் ஈசனை வழிபட்ட ஆலயம் அது. அங்கேயிருந்த பிக்ஷாடன மூர்த்தியை சுந்தரமூர்த்திகள் பார்த்தார். பார்த்தவுடன் என்ன பாடினாரென்று மஹா பெரியவாள் வாய்மொழியாகவே கேளுங்கள்: "லோக ஜனங்களுக்கெல்லாம் வயிறாரப் போட்டு வளக்கற எங்கம்மா புராதனமான இந்தக் காஞ்சீபுரத்திலே, 'கச்சி மூதூர்'லேயே இருக்கா. அவ போட்டுச் சாப்பிட்டா வயிறு ரொம்பறது மட்டுமில்லே; உயிரும் ரொம்பிடும். 'ஞான வைராக்ய ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஹி'ன்னு ஆசார்யாள் (அன்ன

*பூர்ணியிடம்) பிரார்த்திச்சுண்டபடியே, அவ கையால வாங்கிச் சாப்பிட்டா 'உய்நெறி'ங்கிற மோக்ஷமார்க்கமே ஸித்திச்சுடும். இப்படி ஒருத்தி இந்தக் காஞ்சீபுரத்திலேயே காமகோட்டத்துல இருக்கிறப்போ, ஏ, பிச்சாண்டி ஸ்வாமி! நீர் ஏங்காணும் இப்படி ஊர் ஊரா, வீடு வீடா பிச்சை யெடுத்துண்டு திரியறீர்?'னு ஸுந்தரர் ஸ்வாமியை ரொம்ப ஸ்வாதீனமாகக் கேலி பண்றார்.''*

**தையலாள்உல குய்யவைத்த**
**காரிரும்பொழிற் கச்சிமூதூர்க்**
**காமக்கோட்டமுண் டாகநீர்போய்**
**ஊரிடும்பிச்சை கொள்வதென்னே,**
**ஓணகாந்தன் றளியுளீரே?**

*காமாக்ஷியின் 'சொந்த' பீடமான நமது ஸ்ரீமடத்தில் ஸ்ரீ மஹா பெரியவாள் பூஜையின் அங்கமாகவே அநுதினமும் அந்தணர்களுக்கு 'ஸந்தர்ப்பணை' என்ற பெயரில் அறுசுவை போஜனமும், அம்பாளுக்கு விசேஷமான நாட்களில் ஸுவாஸினி (ஸுமங்கலி)களுக்கும், கன்யாப் பெண்களுக்கும் பஞ்ச பக்ஷ்ய பரமான்னமும் படைத்து வந்திருக்கிறார்கள். ஸ்ரீமடத்தின் அந்தஸ்துக்கேற்பவும், அதன் கடமையாகவுமே இப்படி விருந்துபசாரம் நடத்தியதில் விசேஷமாகச் சொல்ல ஏதுமில்லை. (இல்லை; அப்படியும் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அதைப் பிற்பாடு பார்ப்போம்.)*

*ஸ்ரீமடத்தின் நித்தியப்படி சந்தர்பணமாக இன்றியும் அநேக சந்தர்ப்பங்களில் அன்னம் பாலிக்கும் அன்னையிதயம் ஸ்ரீ மஹா பெரியவாள் வாயிலாகப் பிரகாசித்திருக்கிறது. அவற்றில் சிலவும், உணவு சம்பந்தமாகவே அவரைக் குறித்த வேறு சிலவும் இனி விருந்து கொள்வோம்.*

* * *

முதலில் அன்னதான சிவன் குறித்துச் சொல்வோம்.

பதினெட்டாம் நூற்றாண்டு மத்தியிலிருந்து நிகழ் நூற்றாண்டு மத்தி வரையில் கும்பகோணம்தான் காஞ்சி ஸ்ரீமடத்தின் தலைநகராயிருந்திருக்கிறது. கும்பகோணம் என்றதும் மஹாமகத்தின் நினைவு உடன் வரும். சிவனை அறிந்தவர்கள் மகாமகம் என்றவுடன் அங்கு ஸ்ரீமடத்தில் அந்தப் பெருவிழாக்களின்போது அவர் நடத்திய அதிசயமான அன்ன கைங்கரியத்தையும் நிச்சயமாக நினைவு கொள்வர்.

மஹாபெரியவாள் மூன்று வயசுக் குழந்தையாயிருந்த 1897லேயே சிவனின் மாமாங்க அன்னதானம் பூர்வ ஆசாரியர் ஆசியுடன் ஸ்ரீமடத்தில் தொடங்கி விட்டது. 1909ல் பதினைந்து பிராயத்துப் பால சந்நியாசியாக மஹா பெரியவாள் இருந்தபோது நிகழ்ந்த மகாமகத்திலும் ஸ்ரீமடத்தின் சார்பில் அன்னதானத்தைத் தொடர்ந்தார் சிவன். (அந்த மஹாமகத்தினால் சிவன் ஸ்ரீமடத்திற்குச் செய்த மஹா உபகாரம் பற்றி மஹா பெரியவாள் தமது பீடாதிபத்தியத் தொடக்ககாலம் குறித்து விரிவாக விவரங்கள் அருளி வந்த ஒரு சமயத்தில் கூறியதுண்டு. அவர்தம் அருள் கூட்டி வைத்தால் பின்னர் அதை விஸ்தாரமாக வாசகருக்கும் பிரஸாதமாக்குகிறேன். தற்போதைக்கு ஒரு சுருக்கம் அடுத்த கட்டுரையாக அளிக்கிறேன்.)

1916லிருந்து அவர் மறைந்த 1939வரை ஸ்ரீமடமே சிவனுடைய வாஸ ஸ்தானமாக ஆயிற்று. 1921, 1933 ஆண்டுகளில் நடந்த மஹாமகங்களிலும் அந்தப் பெரியவரின் அன்புப் பணி மஹா பெரியவாளின் கருணைச் சங்கற்பத்தோடு சங்கமமாகி லக்ஷக்கணக்கான மக்களின் குக்ஷிகளை முட்ட முட்ட நிறைவித்தது.

மஹாபெரியவாள் அந்த அன்னதான மகாவைபவத்தை நினைவுகூர்வதைக் கேளுங்கள். "ஒரு தடவை, த்ளாயிரத்து முப்பத்து மூணாம் வருஷ மாமாங்கத்துலதான், வெறகே நூறு வண்டி வந்துது. ஊறுகாய்க்காக நெல்லிக்கா மட்டும்

பத்து வண்டி வந்துது. ஆவி வாஸனையிலேந்தே இன்ன இன்ன பண்டம் இன்னும் எவ்வளவு சேர்க்கணும்னு அவர் கரெக்டா சொல்லிடுவார். அப்படி, கொதிச்சுண்டிருக்கற ரஸத்தின் வாஸனையிலேந்து அதுக்கு இன்னம் எவ்வளவு கொத்தமல்லி அரச்சு விடணும்னார். ஒரு பிடி கொத்த மல்லியோ, ஒரு கத்தையோ இல்லை. 'ஒரு மொறம் அரச்சு விடடா'ன்னு அதட்டல் போட்டாராம்! ஏற்கனவே அரச்சு விட்டதுக்குக் கூடுதலா மொறம் கொத்தமல்லி சேக்கணும்னா எவ்வளவு ரஸம் வெச்சிருப்பா, எவ்வளவு பேர் சாப்டிருப்பான்னு நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கோங்கோ. சாப்படற எடத்தைச் சுத்தி பண்ணறதுக்காகத் துடைப்பக் கட்டையே ரெண்டு வண்டி வந்ததுன்னா பார்த்துக்கோங்கோ.

"எத்தனை அண்டா வெச்சாலும், எத்தனை நீளம் கோட்டையடுப்பு வெட்டினாலும் சாதம் வடிச்சு மாளாதுன்னு அவர் என்ன பண்ணுவாராம்னா, பத்து மூட்டை இருபது மூட்டை வடிச்சு அதை அப்படியே நீள நீளப் பாய்லே பரத்திக் கொட்டி, கொதிக்கக் கொதிக்க இருக்கற அந்த அன்னப் பாவாடை மேலேயே மெல்லிசா ஒரு துணியைப் போட்டு மூடி, கிடுகிடுன்னு அது மேலேயும் ஒரு பத்து, இருபது மூட்டை பச்சரிசியை, ஆமாம், பச்சையா இருக்கற அரிசியாவேதான் பரத்திக் கொட்டிட்டு, அதுக்கு மேலே கெட்டிக் கோணியாப் போட்டு, நன்னா அடிப் பாய்க்கு அடிவரையில அதை ஓரளவு இறுக்கமாச் சொருகி மூடிப்பிடுவாராம். காமணியோ, அரைமணியோ கழிச்சுக் கோணியை எடுத்தா அத்தனை அரிசியும் புஷ்பமா சாதமாயிருக்கும். அதாவது சாதம் வடிக்கற கார்யத்தில பாதி மிஞ்சும்படி இப்படி யுக்தி பண்ணிண்டிருந்திருக்கார்.

"இத்தனை ஆயிரம், பதினாயிரம் பேருக்கு நன்னா, கெட்டியா நெறைய மோர் விடணும்னா அத்தனை பாலுக்கு எங்கே போறது? இந்த மாதிரி பெரிய உத்ஸவ

ஸமாராதனைகளில சிவன் அதுக்கும் ஒரு யுக்தி கையாண்டுண்டிருந்தார். ரிஃப்ரிஜிரேடர், அது, இதுல்லாம் இல்லாத நாளில அவர் ஒரு புதுமாதிரி ரிஃப்ரிஜிரேடர் கண்டுபிடிச்சிருந்தார்! சமாராதனைக்குப் பல வாரம், மாஸம் முந்தியே தயிர் சேகரம் பண்ண ஆரம்பிச்சுடுவார். சேர சேரப் பெரிய மரப் பீப்பாய்கள்ல அந்தத் தயிரை விட்டு, ஒவ்வொண்ணும் ரொம்பினதும் வாயை மொழுகால அடைச்சு, அப்படியே ஆழமான கொளங்களுக்கு அடியில தள்ளிப்பிடுவார். அப்பறம் எப்ப தேவைப்படறதோ அப்ப தெறந்தா மொத நா ராத்ரிதான் தோச்ச மாதிரி தயிர் சுத்தமா இருக்கும். கொளத்தோட குளிர்ச்சி மாத்திரந்தான் காரணம்னு சொல்றதுக்கில்லே. அவரோட மனஸு விசேஷமும் சேந்துதான் அப்படி இருந்திருக்கணும்.''

*1921, 1933* ஆகிய இரு மகாமகங்களில் குறிப்பிட வேண்டிய ஒரு விசேஷமுண்டு. *1919*ல் ஸ்ரீ மஹா பெரியவாள் கங்கா யாத்திரை செய்வதாக சாஸ்திரோக்த ரீதியில் சங்கல்பம் செய்து கொண்டு கும்பகோணத்திலிருந்து புறப்பட்டார். பின்னர் கிராமம் கிராமமாக அவர் ராமேச்வரம் சென்று அங்கிருந்து கங்கை போய்த் திரும்புவதற்கு இருபத்தோராண்டுகள் பிடித்தது. இக் கால கட்டத்திற்குள்ளேயே அவ்விரு மாமாங்கங்களும் வந்தன. ஸ்ரீ ராமன் பதினான்காண்டுகளுக்கு வனவாஸ சங்கல்பம் மேற்கொண்டதால்தான் அது முடியுமுன் நகரங்களான கிஷ்கிந்தாபுரிக்குள்ளும், லங்காபுரிக்குள்ளும் பிரவேசிக்க மறுத்து லக்ஷ்மணனைக் கொண்டே அவ்விரு இடங்களில் சுக்ரீவனுக்கும் விபீஷணனுக்கும் முடிசூட்டு நடத்தினார். அறக்கட்டுப்பாடுகளை அதே செவ்வியுடன் அநுசரிக்கும் நம் ஆசாரியப் பெருமானும் இவ்விரு மாமாங்கங்களின் போது கும்பகோணம் மடத்தில் முகாமிடாமல் முறையே ஊருக்கு வெளியேயுள்ள பட்டீசுவரத்திலும் திருவிடை மருதூரிலுமே தங்கினார். அவ்விடங்களிலிருந்து நேரே மஹாமகக் குளம், ஆலயங்கள் முதலியவற்றுக்குச் சென்று

திரும்பினார். சரியாக 1933 மஹாமகத்தின் போதே ஸ்ரீமடத்தின் ஜீர்ணோத்தாரணத் திருப்பணியும் பூர்த்தியடைந்திருந்தது. முழுக்கவும் கருங்கற் திருப்பணியாகவே அதைச் செய்து முடித்திருந்ததும் அன்னதான சிவனேதான். ஆயினுங்கூட அவருடைய திருப்திக்காக ஸ்ரீ மஹா பெரியவாள் வீதியிலிருந்தவாறே மடத்தின் வெளிப்புறத்தை மட்டும் பார்வையிட்டாரேயன்று உள்ளே பிரவேசிக்கவில்லை.

ஆயினும் முதல் நாளிரவு அவரது அருட்சக்தி புரட்டிக் கொண்டு பெருகி ஓர் அற்புதம் நடந்ததால்தான் மறுநாள் லக்ஷம் மக்களின் உதரத்தில் அன்னலக்ஷ்மி பிரவேசிக்க முடிந்தது.

அப்படி என்ன நடந்தது?

சிவனின் அன்னதானங்களில் ஒரு விசேஷம், முதல் நாள் மாலை வரையில் 'இங்குதான் பல்லாயிர மக்களுக்கு விருந்து தயாரிக்கப்படப் போகிறது' என்பதற்கு எந்த அறிகுறியும் இராது. இரவிலிருந்துதான் சாமான்கள் வரத் தொடங்கும். அந்த 1933 மாமாங்கத்தில் என்னவாயிற்று என்றால் இரவு நள்ளிரவாக ஆகி, மேலும் ஒன்றரை மணி கடந்த பின்புங்கூட ஒரு சாமான் வண்டிகூட வந்து சேரவில்லை. நிலைகுலையாத சிவனும் கலங்கி விட்டார். 'சாமான்களை இறக்கிப் பாகுபடுத்தவே சிலபல மணிகளாகுமே! அப்புறம் எப்போது சமைத்து எப்போது பரிமாறுவது?'

மஹா பெரியவாள் முகாமுக்கு விண்ணப்பம் பறந்தது.

அடுத்தே வண்டி வண்டியாகச் சமையற்களத்திற்கு வரவும் தொடங்கின!

அதுவரை ஏன் வரவில்லையென்றால், போக்குவரத்துக் கட்டுப்பாடுகளிலிருந்து சிவன் ஸமாராதனைகளுக்கு வரும் வண்டிகளுக்கு மாத்திரம் விலக்குத் தருவது வழக்கம் என்று அறியாத போலீஸார் அவ்வண்டிகளையும் ஊருக்கு

வெளியிலேயே நிறுத்தி விட்டார்கள். மஹா பெரியவாளின் திருச்செவியில் விஷயம் விழுந்த அந்தப் பின்னிரவு ஒன்றரை மணிக்கு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குத் திடுமென்று பொறி தட்டிற்று — சிவன் ஸமாராதனை வண்டிகளுக்குப் போக்கு வரத்துக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிப்பது வழக்கமாச்சே என்று! அப்புறம் என்ன? ஊருக்கு வெளியே 'நிப்பாட்ட'ப் பட்டிருந்த நூற்றுக்கணக்கான வண்டிகள் சாரி சாரியாக உள்ளே வந்தன. அசுர வேகத்தில், இல்லை அநுக்கிரக வேகத்தில் சாமான் இறக்கப்பட்டு, பங்கீடு ஆகி, காலை ஐந்து மணிக்கே கோட்டையடுப்புக்களை மூட்டிக் காலம் தப்பாமல் லக்ஷம் ஜனங்களுக்கு அறுசுவை அன்னம் படைக்க முடிந்தது.

மாமாங்க சமாராதனைகள் தவிரவும் ஸ்ரீ மஹா பெரியவாளின் 'சிவ ஸங்கல்பம்' அன்னதான சிவனின் கைங்கரியமாக அமோக உருக்கொண்ட இரு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட வேண்டும். ஒன்று, 1923ல் மஹா பெரியவாள் ஆனைக்கா அகிலாண்டேசுவரிக்குச் செய்த தாடங்கப் பிரதிஷ்டை வைபவம். மற்றது 1916 நவராத்திரியில் கும்பகோணம் ஸ்ரீமடத்தில் நடத்திய லக்ஷ ப்ராமண போஜனம். நடமாடும் சிவனும் அன்னம் போடும் சிவனும் ஒன்று சேர்ந்த விமரிசையில் லக்ஷம் என்பது இரண்டு லக்ஷமாகவே விச்வரூபம் கொண்டது என்று தோராயக் கணக்குச் சொல்லுவார்கள்.

இரண்டு சிவன்களுமே இந்த மக்த்தான சமாராதனைகளில் ஒரு பருக்கைகூட ருசி பார்த்ததில்லை! அந்த அற்புதத் தியாகமும் அவர்களுடைய அதிசயப் பிரேமையுடன் சேர்ந்த விசேஷத்தால்தான் அச் சமாராதனைகள் அவ்வளவு மகத்தாக நடக்க முடிந்தது. சந்திரமௌளீச்வரருக்கு நிவேதித்த அவற்பொறி போன்ற வெகு எளிய உணவு வகை சிலவே மஹா பெரியவாள் உட்கொள்வார். அதுவும் அடிக்கடி நிகழும் உபவாஸ நாட்களிலொன்றாக அந் நாள்

இல்லாமலிருந்தால்தான். அன்னதான சிவனோ எவரேனும் ஓர் அன்பரின் வீட்டுக்குச் சென்று நாலு கவளம் மோருஞ் சோற்றை உண்பார். அன்னதானம் செய்யாத தினங்களிலும் பழைய சோற்றைத்தான் தன்னுடைய இஷ்டாவான தக்ஷிணாமூர்த்திக்கு மானஸிகமாக நிவேதித்து விட்டு உண்பார்.

* * *

**ஸ்ரீ** மஹா பெரியவாள் சிறு வயதிலேயே கடுமையான ஆஹார நியமங்களை மேற்கொண்டு ஒட்ட ஒட்டக் கிடந்ததில் அந்த அன்னதாதாவின் 'தாயுள்ளம்' பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. 1921ல் மஹா பெரியவாள் வெளியூர்களில் சஞ்சாரம் செய்தபோது நீண்ட நாட்கள் சுத்த உபவாஸம் தொடர்ந்ததால் மிகவும் மெலிந்து விட்டதாக சிவனுக்குச் செய்தி எட்டியது. உடனே கண்ணும் கண்ணீருமாக அவர் மஹா பெரியவாளுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், மிகவும் முக்கியமான உபவாஸ தினங்கள் தவிர மற்ற நாள்களில் அவர் அன்ன பிக்ஷை சிறிதாவது எடுத்துக் கொள்ளத்தான் வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தார். பிடிவாதமாகவும் வலியுறுத்தியிருந்தார். தம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றுவதாக மடத்துச் சிப்பந்திகள் மூலம் மஹா பெரியவாள் கட்டாயம் பதில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்திருந்தார்.

மானேஜர் கடிதத்தைப் படிக்கப் படிக்க மஹா பெரியவாள் திருமுகத்தில் மந்தஹாஸம் விதவிதமாக நடனம் புரிந்தது. ஆயினும் பதிலெதுவும் அவர் தெரிவிக்கவில்லை.

மறுதினமும் பொறுத்துப் பார்த்த மானேஜர் அன்றும் உத்தரம் வராததால், "சிவனுக்கு என்ன பதிலெழுத?" என்று கேட்டே விட்டார்.

"எல்லாம் அவர் மனஸ் போலவே நடக்கும்னு எழுதிடலாம்" என்று லேசாகக் கூறி மஹா பெரியவாள் விட்டு விட்டார்.

சிவனுக்கோ அந்த பதில் ரொம்ப லேசாகத் தோன்றிற்று. சரிவர ஆஹாரம் கொள்வதாக மஹா பெரியவாளிட மிருந்து வாக்குறுதி வாங்காமல் விடுவதில்லை என்ற வேகத்துடன் அவர் முகாமிட்டிருந்த ஊருக்கு நேரிலேயே வந்துவிட்டார்.

கடிதத்தில் எழுதியதையே அதை விடவும் உருக்கமாக விண்ணப்பித்தார்; அதை விட வலிவாகவும் வற்புறுத்தினார்.

மஹா பெரியவாள் குழைந்து விட்டார். ஆனாலும் தர்ம சாஸ்திர பிகு எப்படி ஆசாரமூர்த்தியான ஆசார்யரைக் குழைந்தே இருக்க விடும்? சிவனிடம், "உங்களுடைய அன்பும் விசாரமும் எனக்குத் தெரியறது. ஆனா இந்தப் பீடத்துல இருக்கறதுனாலே அநுஷ்டிக்க வேண்டிய யதி தர்மங்களை விட்டுக் கொடுக்கிறதற்கு இல்லைன்னும் தெரியறது. எங்கேயாவது உங்க அபிப்ராயத்துக்கு எடம் கொடுக்கலாம்னு ஏற்பட்டா அப்படியே பண்ணப் பாக்கறேன். முறைப்படி பூர்ணமா தர்மாநுஷ்டானம் பண்ணினா அதுவே எத்தனை பட்டினி கிடந்தாலும்கூட சக்தி குடுக்கும். நான் அந்த மாதிரி ஆகிறதுக்குத்தான் நீங்களெல்லாம் பிரார்த்தனை பண்ணணும்" என்று தமக்கே உரிய அன்புணர்வோடு, நெறியுணர்வோடு, விநயத்தோடு கூறினார்.

சிவன் திருப்தி அடைந்தாரா என்பது சந்தேகம்தான்!

* * *

இதற்குப் பதினைந்தாண்டுகளுக்குப் பின்னர் காசியிலிருந்து திரும்பும் வழியில் பெர்ஹாம்பூரில் மஹா பெரியவாள் சாதுர்மாஸ்யம் அநுஷ்டிக்கும்போதும் இப்படித்தான் நெடுநாட்கள் சுத்த உபவாஸமிருந்தார். அதையும் ஸ்ரீ மடத்தினருக்கேகூடத் தெரியாதபடி வெகு ரகசியமாகச்

செய்தார். மடத்துக் கஜானாவை நிர்வகித்து வந்த ராமசந்திரையருக்கு எப்படியோ ரகசியம் தெரிந்து விட்டது.

மஹாபெரியவாளிடம் சென்று உபவாஸத்தை விடுமாறு மன்றாடினார்.

அவரும் உடனே அப்போது பிக்ஷை தயாரித்துக் கொண்டிருந்த பணியாளரைக் கூப்பிட்டு, மறுதினம் தம் உணவில் இன்ன இன்ன சேர்க்கும்படிச் சொன்னார்.

'கஜானா' சந்தோஷம் தாங்காமல் திரும்பினார். திரும்பியபின் அவருக்குச் சந்தேகம் எழுந்தது. 'ஆனானப் பட்ட அன்னதான சிவன் போன்றவர்களின் வேண்டு கோளுக்கும் மசியாத பெரியவாளா நம் கோரிக்கைக்கு இத்தனை சுலபமாக மசிந்து விட்டார்?' என்ற சந்தேகம். பிக்ஷை தயாரிக்கும் பாரிஷதரிடம் போய்க் குடைந்தார். அவருடைய சந்தேகம் சரியானதே என்று நிரூபணமாயிற்று. "நீங்க அந்தண்டை போனதுமே பெரியவா, 'அவர் மனஸு ஸமாதானமாறதுக்காகத்தான் அப்படிச் சொன்னேன். அதை அடியோட மறந்துடு'ன்னுட்டார்" என்று அந்தப் பாரிஷதர் நிஜத்தைக் கக்கி விட்டார்.

'கஜானா' மறுபடி மஹாபெரியவாளிடம் போனார். பல முறை போனார். ஆனால் அவர் வாயைத் திறக்கவே பெரியவாள் இடம் கொடுக்காமல் அடியார்கள், சிப்பந்திகள், பண்டிதர்கள் என்று எவரையேனும் சுற்றிலும் வைத்துக் கொண்டு ரொம்பவும் சீரியஸாக ஏதாவது அலசிக் கொண்டிருந்தார்.

இப்படிப் பல நாட்கள் ஓடின. கடும் உபவாஸமும் தொடர்ந்தது. கடைசியாக ஒரு நாள் இரவு பத்து மணிக்கு மேல் 'கஜானா'விடம் பெரியவாள் பிடிபட்டார். சுக்ரவார பூஜை சற்று தள்ளாட்டத்துடனேயே முடித்துவிட்டு, ஓய்வுக்குப் பெரியவாள் சாய்ந்த அச்சமயத்தில் கஜானா அவரைப் பிடித்து விட்டார்.

"நாளைக்குப் பெரியவா வயிறார பிக்ஷை பண்ணாட்டா நான் மடத்தை விட்டே போயிடறேன்" என்று முரண்டு செய்து பார்த்தார் கஜானா.

அதுவும் பலிக்கவில்லை. முகமெல்லாம் சிரிப்பாகப் பெரியவாள், "நீ இல்லாட்டா மடம் நடக்காதோ?" என்று கேட்டார்.

"அப்போ இந்த லோகத்தை விட்டே போயிடறேன்" என்று தம்மை மீறிய ஆவேசத்துடன் சொல்லி அழுதே விட்டார் கஜானா.

'நீ இல்லாட்டா லோகம் நடக்காதோ?' என்று பெரியவாள் கேட்கவியலாத ஆழுணர்ச்சியோடு அவர் சூளுரைத்து விட்டார்.

"ஸரி! பிக்ஷை பண்றேன். நாளைக்கு என்ன? இப்பவே பண்றேன். வயிறாரப் பண்ணணும்னியே, பண்றேன். பண்ணி வைக்கறயா?" என்று அம்ருத பிந்துக்களாகப் பேசினார் ஸ்ரீ மஹாபெரியவாள்.

"காத்துண்டிருக்கேன்" என்று கஜானா தண்டாகாரமாக நமஸ்காரம் செய்தார். அவர் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருக்கிட்டது.

அந்த இரவு வேளையில் பெரியவாள் பழமும் பாலும் தவிர எதுவும் உட்கொள்ள மாட்டாரென்று கஜானா நினைத்தார். ஒரே மகிழ்ச்சியாக, பெரியவாள் உட்கொள்ளும் அளவு அறிந்த பிக்ஷைப் பாரிஷதரைக் கூப்பிட்டார்.

"அவனை ஏன் கூப்பிடறே? ஒன்னையேதானே பிக்ஷை பண்ணிவெக்கச் சொன்னேன்? நீயும் ஒப்புண்டயே" என்றார் பெரியவாள்.

"அளவு தெரியாததால அவனைக் கேட்டுக்கலாம்னு" என்று கஜானா இழுத்தார்.

"அளவு தெரியாட்டா என்ன? இருக்கறதை ஜாடா கொண்டா" என்றார் பெரியவாள்.

'சரி, நாம் பழக்கூடைகள், தட்டுக்கள் யாவும் கொண்டு வந்து வைப்போம். பெரியவாளே வேண்டியதை எடுத்துக் கொள்ளட்டும்' என்று நினைத்துக் கஜானா அவ்வாறே செய்தார்.

அதியாச்சரியமான கட்டளை பெரியவாளிடமிருந்து பிறந்தது. "சுக்ரவார நைவேத்யம் ஸொஜ்ஜி, சுண்டல் எங்கே? கொண்டா சட்டுனு."

கஜானா ஓடோடிப் போய், பெரிய பெரிய பாத்திரங்களில் நிறையவே இருந்த சொஜ்ஜியையும் சுண்டலையும் திருமுன்னர் ஸமர்ப்பித்தார்.

'அதி'க்கும் மேற்பட்ட ஆச்சரியம் நிகழ்ந்தது. மஹா பெரியவாள் வெகு விரைவில் அவ்வளவையும் உட்கொண்டு பாத்திரங்களைக் காலி செய்தார். "இவ்வளவுதானா?" என்று வேறு கேட்டார்!

**பன்னிரண்டு திருவோணம் அட்டேன்**
**'இன்னம் உவப்பன் நான்' என்று சொல்லி**
**எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்**

என்று ஆய்ச்சி மொழியாக ஆழ்வார் பாடியது உண்மையாயிற்று.

பழக்கூடையைப் பரமருக்கருகே கஜானா நகர்த்தினார். அதுவும் சடுதியில் காலியாயிற்று. "இன்னம் என்ன இருக்கு?" என்று கேள்வி.

கஜானா விலவிலத்து நின்றார்.

"வயிறாரப் பண்றேன்னு ஒப்புண்டு பசியைக் கிளறிட்டியே! உசிர் போறதே!" என்று மகா பெரியவாள் கூற, அந்த வார்த்தையைத் தாங்கொண்ணாமல் கஜானா ஒரு பெரிய கூஜா பாலைத் திருமுன் வைத்தார்.

'கடகட'வென்று அதையும் பெரியவாள் காலி செய்ய, 'தடதட'வென்று கஜானா கன்னத்தில் போட்டுக் கொண்டு அவரது பாதத்தில் தடாலென விழுந்தார். "பெரியவா க்ஷமிக்கணும். இனிமே ஒருநாளும் பெரியவாளைத் தொந்தரவு பண்ண மாட்டேன்" என்று விக்கினார்.

குழந்தையாகச் சிரித்த மஹாபெரியவாள், "இனிமே என் வம்புக்கு வரமாட்டியோல்லியோ?" என்று கைதூக்கி ஆசீர்வதித்தார்.

* * *

'உறுபசி ஒன்றின்றியே உலகடைய உண்ணக்'கூடிய மஹாபெரியவாளுங்கூடப் பசியுற்றாரோ என்று தோன்றும் சில நாட்கள் அபூர்வமாக ஏற்படுமாம். சேர்ந்தாற்போல் சில பல நாட்கள் உண்ணாநோன்பிருந்து அதை முடித்துப் பாரணை பண்ணும் நாளாகவே அத் தினம் இருக்குமாம்.

பூஜை முடித்தெழும்போது பெரியவாள் மிகவும் சோர்வாக இருப்பது தெரியும். "சட்னு ஸந்தர்ப்பணை பண்ணுங்கோ" என்று அவரே இம்மாதிரி சந்தர்ப்பத்தில் சொல்வதும் உண்டு.

அந்தணர்களைப் போஜனத்திற்கு அமர்த்தித் தீர்த்தம் போடப்படும்.

ஸ்ரீமடத்தின் நித்தியப்படி வழக்கம்தான் அது. 'அதிலும் ஒரு விசேஷம் நிகழ்வதுண்டு; பிற்பாடு பார்ப்போம்' என்று கட்டுரைத் தொடக்கத்தில் கூறினோமே, அந்த விசேஷம் பெரியவாளுக்குப் பசித்ததாகத் தோன்றும் நாட்களில் இந்த கட்டத்தில்தான் நிகழும்.

அந்தணர்கள் தீர்த்தம் வாங்கிக் கொண்டார்களோ இல்லையோ மகாபெரியவாளின் சோர்வு இருந்த இடம் தெரியாமல் ஓடி விடுமாம். சில சமயங்களில் ஏப்பங்கூட விட்டிருக்கிறாராம். அந்தணாளர்களுடைய உதரத்திலுள்ள

வைச்வாநரனாகவே அவர் போஜனம் ஏற்றிருப்பாரா? அது நமக்குத் தெரியாது. ஆனால் பிக்ஷை பரிமாறும் பாரிஷதர்களுக்கு ஒன்று நன்றாக தெரிந்தது — அதாவது, அப்படிப்பட்ட நாட்களில் பாரணையின்போது வழக்கத்தை விடவும் மிக மிகக் குறைவாகவே பெரியவாள் அமுது கொள்வார்.

* * *

**எ**ழுபதாண்டுகளுக்கு முன் ஒரு சங்கராசாரிய ஸ்வாமிகள் முஸ்லீம்களுக்கு அறுசுவை விருந்தளித்தார் என்பது ஆச்சரியமான விஷயந்தானே? அந்த முஸ்லீம்களின் அருமையான ஐக்கிய மனப்பாங்கே அதற்குக் காரணமாக இருந்தது.

1921–ம் வருஷத்திய மாமாங்கத்தில் பணிபுரிவதற்குச் சென்னை முஸ்லீம் இளைஞர் சங்கத்திலிருந்து இருநூறு வாலிபர்கள் கும்பகோணம் சென்று சீரிய தொண்டாற்றினர். ஊருக்கு வெளியில் பட்டீச்வரத்தில் முகாமிட்டிருந்த மஹா பெரியவாள் அது பற்றிக் கேள்விப்பட்டதுதான் தாமதம், அவர்களைத் தம்மிடம் அழைத்துவர ஸ்ரீமடத்தின் சிப்பந்திகளை அனுப்பி வைத்தார்.

சங்கராசாரியார் தங்களை கூப்பிட்டிருக்கிறார் என்பதில் அந்த வாலிபர்கள் அடைந்த மகிழ்ச்சி சொல்லத் தரமன்று. பட்டீச்வரத்திற்கு வந்து அவரைப் பணிந்து அடக்க வொடுக்கமாக நின்றனர்.

பெரியவாள் அவர்களுடைய சேவையைப் பாராட்டினார். அவர்களது சங்கத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார். அது மட்டுமல்ல, அந்த இருநூறு பேரில் ஒவ்வொருவரிடமும் ஊர், பேர், படிப்பு, தொழில் முதலியவை பற்றிக் கேட்டு அகமகிழச் செய்தார். "உங்கள் ஸங்கத்துக்கு மடத்தின் அன்பளிப்பு" என்று கூறி ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசில் வழங்கினார்.

முத்தாய்ப்பாக அருமையான அறுசுவை உண்டியும் அளித்தார்.

* * *

**1924**-ம் ஆண்டு காவிரியும் கொள்ளிடமும் ஒன்றுசேர்ந்து விடுமாறு திருவையாற்றுப் பகுதியில் பெரு வெள்ளம் புரண்டது. அப்போது சுமார் பதினைந்து நாட்களுக்கு ஸ்ரீமடத்தின் ஆதரவில் வண்டி வண்டியாக உணவு சமைத்து ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு அனுப்பப்பட்டது. மடத்தின் தேவைகளை அதமபக்ஷமாகக் குறைத்துக் கொண்டு அந்த ஏழை மக்களுக்காக உக்கிராணத்தைக் காலி செய்தார், காவிரியுடன் போட்டி போட்டுக் கொண்டு கருணை வெள்ளம் பெருக்கிய மடாதிபர். திருவையாறு காங்கிரஸ் கமிட்டித் தலைவரான வழக்கறிஞர் சார்ங்கபாணி ஐயங்காரின் தலைமையில் அக் கட்சித் தொண்டர்கள் அரிய முறையில் இந்த அன்ன வினியோகத்தைச் செய்தனர்.

'உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தாரே' என்று நிதரிசனமாக உணர்ந்த பல்லாயிர ஏழையர் ஒரு பக்ஷ காலம் தங்களுக்குப் பக்ஷமாக உணவிட்ட மஹானைத் தெய்வமாகவே போற்றி வழிபட்டனர்.

சநாதன சமய பீடமொன்று இவ்வளவு பெரிய அளவில் சமூகப் பணி செய்தது இதுவே முதன்முறை என்று பத்திரிகைகள் பாராட்டி எழுதின.

* * *

**கா**ங்கிரஸ் தொண்டர்களுக்கு ஆசாரியப் பெருமான் அன்னம் பாலித்த ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியும் உண்டு. இதில் குறிப்பிட்ட வேண்டிய விஷயம் என்னவென்றால் அந்த 1931 இறுதிப் பகுதிகளில் சர்க்காரின் அடக்குமுறை மிகவும் தீவிரமாயிருந்தது. காங்கிரஸ்காரர்களுக்குச் சிறிது

ஆதரவு காட்டினாலும் ஆபத்து என்று மக்களும் ஸ்தாபனங்களும் பயப்பட்ட சமயம் அது.

மஹா பெரியவாள் வடார்க்காடு ஆரணியில் முகாமிட்டிருந்தார். அப்போது காங்கிரஸ் தொண்டர் படையொன்று அவரைச் சந்திக்க அனுமதி கோரிற்று.

விஷயத்தைப் பெரியவாளிடம் விஞ்ஞாபனம் செய்த ஸ்ரீமட நிர்வாகிகள், "ஸர்க்கார் கெடுபிடி ரொம்பவும் அதிகமாக இருக்கிறது. காங்கிரஸ்காரர்களுக்குப் பெரியவா பேட்டி கொடுப்பதால் மடத்துக்குப் பல தொல்லைகள் ஏற்படலாம்" என்று தெரிவித்துக் கொண்டனர்.

அவர்கள் கூறியதைப் பெரியவாள் கூர்ந்து கேட்டுக் கொண்டார். "அத்தனை பேரையும் வரச் சொல்லுங்கள். மடத்திலேயே அவர்களுக்குப் போஜனமும் ஏற்பாடு பண்ணுங்கள்" என்று பரம சாந்தமாக ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்.

அஸ்தியில் ஜுரத்தோடு மடத்து நிர்வாகிகள் அவ்வாறே செய்தனர்.

ஆபத்து எதுவும் வரவில்லை.

மானேஜர் இதை மகிழ்ச்சியுடன் பெரியவாளிடம் கூற, அவர், "நம்மைப் பாக்கணும்னு ஒத்தர் சொல்றச்சே, அவர் யாரானாலும் அதனால என்ன ஆகுமோ ஏதாகுமோன்னு பயந்துண்டு கதவைச் சாத்திக்கறதுன்னா 'ஜகத்குரு' பட்டம் போட்டுண்டு இந்தப் பீடத்துல ஒக்காந்திருக்கிறதுக்கு லாயக்கே இல்லைன்னு அர்த்தம்" என்று ரத்தினச் சுருக்கமாக மறுமொழி தந்தார்.

* * *

***"யார்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்"*** என்ற ஆப்தர் மொழியைப் பெரியவாள் மேற்கோள் காட்டி, உணவிடுவதில் வித்தியாஸம் பாராட்டவே கூடாது என்பார். கேரளத்தில் செருக்குன்னம் என்னும் தலத்திலுள்ள அன்னபூர்ணி ஆலயத்தில் ஸேவார்த்திகளுக்கெல்லாம் அன்னம் படைத்த பிறகு, இரவில் அவ் வழியே செல்லும் திருடர்களுக்காக என்றே ஒரு மரத்தில் சோற்றுப் பட்டை கட்டி வைக்கும் வழக்கமிருப்பதாக அவர் பல உரைகளில் உவகையுடன் கூறியிருக்கிறார். எதிரெதிர்க் கட்சிகளான பாண்டவப் படை, கௌரவப் படை இரண்டிற்குமே உதியன் சேரலாதன் என்ற சேர மன்னன் உணவு அனுப்பிப் **பெருஞ்சோற்றுச்** சேரலாதன் என்றே பெயரெடுத்ததாகச் சங்க இலக்கியங்களில் காண்கிறதென்று வெகுவாக ரஸித்துக் கூறுவார்.

சிவபெருமானுக்கு வேடன் கண்ணப்பன் படையல் இட்டான். ராமபிரானுக்கு வேடன் குகன் அமுது செய்வித்தான். நம் மஹா பெரியவாளோ வேடர்களுக்குத் தாமே விருந்திட்டிருக்கிறார். ஸ்ரீசைலக் காட்டில் வாழும் செஞ்சுக்கள் எனும் வேடர்களுக்குத்தான்.

போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக இருந்த 1934ல் பெரியவாள் தம் பரிவாரத்துடன் நிர்மாநுஷ்யமான ஸ்ரீசைல அடவிகளில் சென்று கொண்டிருந்தார். ஓரிடத்தில் செஞ்சுக் கோஷ்டியினர் எதிர்ப்பட்டனர். மடத்தினரை எதிரிகளாகவே கருதி முதலில் அவர்கள் வில்லையும் அம்பையும் சித்தம் செய்து கொண்டனர். ஆனால் அன்பின் மூர்த்தமான ஆசார்யப் பெருமானின் திவ்விய தேஜோமயமான தோற்றத்தைக் கண்டவுடன் அடியோடு மனம் மாறி அடிபணிந்தனர். இந்தக் கலியிலும் அன்புக்கும் தவத்துக்கும் உள்ள சக்தியை எடுத்தியம்பிய அசாதாரணமான சம்பவம்!

எதிர்க்க வந்தவர்களே அப்புறம் அப் பரிவாரத்திற்குக் காவலாக உடன் சென்று இரவு வேளையில்

பாராக்காரர்களாகத் தொண்டு செய்தனர். சுமைகளையும் தூக்கி வந்தனர்.

அடுத்த முகாமில் அவர்களைப் பத்திரமாகச் சேர்த்த பின்தான அவர்கள் விடைபெற வந்து நின்றனர்.

பெரியவாள் அவர்களுக்குத் திரவிய வெகுமதி அளிக்கும்படி மானேஜரிடம் உத்தரவிட்டார்.

பணத்தைத் தொட மாட்டோம் என்று அவர்கள் ஒரேயடியாக மறுத்து விட்டனர்.

செஞ்சுத் தலைவன் மானேஜரிடம் என்னவோ சொன்னான்.

அது நடக்காத காரியம் என்று அவர் கைவிரித்துத் தலையாட்டினார்.

பெரியவாள் கையைச் சொடக்குப் போட்டு மானேஜரின் கவனத்தை ஈர்த்தார். "அவன் என்ன கேக்கறான்? நீ என்ன முடியாதுங்கறே?" என்று கேட்டார்.

"அவாள்ளாம் பெரியவா முன்னாடி டான்ஸ் பண்ணிக் காட்டணுமாம்" என்றார் மானேஜர்.

"அதை நான் பார்க்க முடியாதுன்னு நீயே சொல்லிட்டயாக்கும்! ஏன்? அது நமக்கு கௌரவ ஹானின்னு மானேஜர்ங்கிற முறையிலே உன் அபிப்ராயமாக்கும்!"

கனல் தெறிக்காமல் சாதாரணமாகத்தான் பெரியவாள் கேட்ட போதிலும் மானேஜரின் தலை கவிழ்ந்தது.

மாபெரும் நாட்டியக் கலைஞர்களும் ஆடிப் பார்க்க மறுத்த சங்கர மடாதிபர் காட்டுக் குடிகள் நாட்டியமாடிக் காட்ட அநுமதி வழங்கினார். ஒரே நிபந்தனை: ஆடவர்களில் யாவரும் ஆடலாமாயினும் பெண்களில் வயசு வந்தவர்கள் ஆடக்கூடாது என்று.

"ஸ்வாமிக்கான ஆட்டம், வீரத்துக்கான ஆட்டம், விளையாட்டு ஆட்டம்னு பல தினுசு இருக்குமே! இப்போ என்ன ஆடப் போறீங்க?" என்று பெரியவாள் கேட்டார்.

இன்று இதை எழுதும்போதும் உடல் சிலிர்க்கும் படியான மறுமொழியை அன்று அவர்கள் கூறினார்கள். "ரொம்பக் கிட்டத்து உறவுக்காரங்க வந்தா என்ன ஆட்டம் ஆடுவோமோ அதைத்தான் ஆடப் போறோம்."

அப்படியே அந்த செஞ்சு ஆடவர்களும் சிறுமியரும் ஆட ரஸிகசிரோமணியும் அதனை மகிழ்ச்சியுடன் கண்ணுற்று ஆசி நல்கினார்.

அதோடு அன்று அவர்களுக்கு அறுசுவை உண்டியும் அருளினார்.

* * *

மறக்குல செஞ்சுக்களுக்கு அருள்விருந்தும், விருந்து அருளும் கண்டோம். 'குறவருக்கு மறவருக்கு விடுதலை' என்று மஹாகவி பாடினானெனில் இக்காப்பியத்திலும் 'விடுதலை' என்பதை 'விருந்து' என்றாக்கி, முதலில் சொன்ன குறவரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தஞ்சை மாவட்டத்தின் பெரிய பண்ணையார் ஒருவர் அன்று பிக்ஷை செய்தார். முன்கூட்டியே ஸ்ரீசரணர் ஒரு பெரிய எண்ணிக்கை சொல்லி அவ்வளவு லட்டுகள் பிடிக்க முடியுமா என்று கேட்டார். பண்ணையார் 'பாக்கியம்!' என்றார். அவ்வளவு லட்டு தயார் செய்ய ஆஜ்ஞையாகி பிக்ஷா தினத்தன்று சித்தமும் ஆயின.

ஆனால் பிக்ஷைக்கு வழக்கமான மடத்துச் சிப்பந்திகளும் பிக்ஷை செய்தவரின் பந்துமித்ரரும் தவிரப் பெருங்கூட்டமாக எவரும் வரவில்லை. "பின் எதற்காக அவ்வளவு லட்டு பிடிக்கச் சொன்னார்? ஏதேனும் அநாதாசிரமம் அல்லது பாடசாலைக்கு அனுப்பி வைப்பதற்காக இருக்குமோ?" என்று பண்ணையார் எண்ணினார்.

ஆனால் அவர் எண்ணாத ஒன்று, புரியாத ஒன்று நடந்தது. ஸ்ரீசரணரே போஜனம் நடக்கும்போது அதிசயமாக பங்க்திக்கு வந்தார். வந்தவர் பங்க்தியில் இருந்தவர்களுக்கே ஒன்றுக்கு மேல் இரண்டு, மூன்று, நாலு என்று லட்டுக்களைத் தள்ளச் சொன்னார். அவர்கள் வேண்டாம், வேண்டாம் என்று மன்றாடிய போதிலும் விடாப்பிடியாகத் தள்ளச் செய்தார்.

இந்த விசித்திரத்துக்கு மேலாக ஒரு விசித்திர அறிவிப்பு செய்யச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார். என்ன என்றால் பெரியவாளே சொல்லிப் பரிமாறியதாச்சே, அதனால் அதற்கு ஏதோ விசேஷம் என்று எண்ணி எவரும் உபரியாகச் சாப்பிட வேண்டாமாம்! அவர்களுக்கு வேண்டிய அளவே சாப்பிட்டு மீதியை 'எறிந்து' விடலாமாம்!

"அன்ன லக்ஷ்மியைக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பக் கூடாது என்று குழந்தைகளுக்கும் அறிவுரை சொல்லும் பெரியவாள் இன்று என்ன இப்படி.....?' என்று எவருக்கும் புரியவில்லை. ஆனால் அறிவிப்பானபடியே அனைவரும் உண்டதைவிட அதிகமான லட்டுகளை 'எறிந்து' விட்டுத்தான் எழுந்தனர்.

பெரியவாளே குறிப்பிட்டுச் சொன்னது என்பதால் முந்திரியும், திராட்சையும், கற்கண்டும், ஏலமும், கிராம்பும் ஏகமாகப் பொதிந்து கொண்டு உருவான ஏராளமான லட்டுகள் எச்சில் இலைகளிலிருந்து பண்ணையாரை உறுத்துப் பார்த்து வேதனைப்படுத்தின. 'காரணமில்லாமல் பெரியவா ஒன்று சொல்ல மாட்டார்கள்' என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றார்.

பிறகு பிக்ஷைக்காரரர் குடும்பத்திற்குப் பேட்டியளித்துப் பேசிக் கொண்டிருந்த ஸ்ரீசரணர் திடுமென்று பண்ணையாரிடம் "எச்சக்கலை (எச்சில் இலை) போடற எடத்துல போய்ப் பாரு!" என்றார்.

அவ்வாறே அவர் சென்று பார்க்க, குறவர் குடும்பங்கள் பல கூட்டம் சேர்ந்து எச்சிலிலை லட்டுகளை ஆர்வ ஆர்வமாகக் கபளீகரம் செய்து கொண்டிருந்தன.

பண்ணையாரைக் கண்டதும் குறவர், குறத்திகள் கைதூக்கிக் கும்பிட்டு, "நீங்கோ நல்ல்லா இருக்கோணம் ஸாமீ! இந்தா மாதிரி இம்மாம் பலவாரம் போட்டவங்கோ யாருமே இல்லீங்கோ!" என்று நெஞ்சாரக் கூவினார்கள்.

கண்கள் மல்க ஸ்ரீசரணரிடம் அவர் திரும்பினார். நரிக்குறவருக்கும் அருட்குரவரான மூர்த்தி, "அவா குலதர்மம், அன்னதானம்னு போட்டா வாங்கிக்க மாட்டா. உச்சிஷ்டம் (உண்டு மிகுந்த எச்சிலுணவு)தான் தங்களுக்குப் பாத்யதைன்னு அவாளுக்குள்ளே ஒரு சட்டம். பக்கத்துல பட்டாளமா வந்து எறங்கியிருக்கா-ன்னு தெரிஞ்சது. 'நம்ம மாதிரித்தானே அவாளுக்கும் வயிறு, வாய்? நமக்கு பக்ஷணம் மாதிரிதானே அவாளுக்கும் ?'னு தோணித்து. மனஸு கோணாம ஒன்னாலதான் அதுக்கானதைப் பண்ண முடியும்னு தோணி சொன்னேன். யாருக்குங் கெடைக்காத அவாளோட வாழ்த்து ஒனக்குத்தான் ஸ்பெஷலா!" என்றார்.

பண்ணையாரின் மல்கிய கண்கள இப்போது பெருகவே செய்தன.

* * *

**கு**றவர் மறவர் விடுதலைப் பாட்டில் தொடக்கம் பறையர் எனப்பட்டவர் பற்றித்தானே? அவர்களுக்கு நமது ஐயன் விருந்திட்ட நிகழ்ச்சிகள் பல. அவற்றிலொன்றில் மலர்ந்த அவரது உள்ளச் செம்மையை வைதிகத்தில் ஊறிய சேங்காலிபுரம் தீக்ஷிதரவர்கள் உருகிக் கூறக் கேட்க வேண்டும்.

குடவாசல் – கொறடாச்சேரி மார்க்கத்தில் பெரியவாள் ஸபரிவாரம் சென்று கொண்டிருந்தார். வழியிலே திருக்களம்பூரில் சேரி மக்கள் அக் காலங்களில் அவர்களுக்கே

இருந்த அதிவினய பக்தியுடன் கைகூப்பி நின்றார்கள். காணிக்கையுங்கூட ஸமர்ப்பித்தார்கள்.

தீனதயாளனின் இயற்கைக் கருணை மேலும் இறுக, அவர்களது நலன்களை, நலன்கள் இலாமையையும், கேட்டுக் கொண்டார் — ஓடாமல், பறக்காமல் நின்று நிதானமாக! இல்லாத நலன்களை இருக்குமாறு ஆக்க மடத்தால் என்ன ஆகுமோ, மடம் பரிந்துரைத்தால் பிரமுகர், துரைத் தனத்தாரால் என்ன ஆகுமோ எல்லாவற்றையும் மானேஜரிடம் விவாதித்து முடிவு செய்தார்.

இதிலேயே ஓரளவு நேரம் சென்றதில் அடுத்த முகாம் அடையத் தாமதமாகுமே என்று மானேஜரும் மற்ற பரிவாரத்தினரும் எண்ணினர்.

ஆனால் ஏழையர் தெய்வமோ நிம்மதியாக உட்கார்ந்து விட்டது. சிப்பந்திகளை அனுப்பி அவ்வளவு நந்தன் – நந்தினிகளுக்கும் வேட்டி புடவை வாங்கி வரச் சொல்லி விட்டது. அந்தச் சிற்றூரில் அவ்வளவு ஜவுளி ஸ்டாக் இல்லை என்று தெரிந்த பின்னும் விடாமல் குடவாசலுக்கே போய் வாங்கிவர ஆணை பிறப்பித்தது! அந்த நடுவழி மர நிழலிலேயே அவர்களுக்கு 'திண்டி'யாக ஒரு ஸாம்பார் சாதமும் தயாரிக்க உத்தரவிட்டுவிட்டது.

இதெல்லாம் முடித்துப் புறப்பட இரண்டு மூன்று மணி அவகாசம் பிடிக்குமே, வெயிலும் நன்றாக ஏறி விடுமே, அதற்கப்புறம் அ[illegible] முகாம் போய் பெரியவாளுக்கே உரிய அந்தப் பல மணி நேர பூஜை செய்வதென்றால் மிகவும் ஆயாஸமாகிவிடுமே! இதை எண்ணி மானேஜர் கவலைப் பட்டார்.

"இப்பவே டயம் ஆயிடுத்து. இன்னும் உத்தரவானதை யெல்லாம் பண்ணிட்டுப் போய் அப்பறம் பூஜை...." என்று அவர் சொல்லிவரும் போதே —

ஸ்ரீசரணர் குறுக்கிட்டு "இதுவும் பூஜைதான்!" என்றார்.

* * *

**கா**சி சென்று இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மஹா பெரியவாள் திரும்பும்போது கியோஞ்சர் ஸம்ஸ்தானத்தில் மலைக்காட்டுப் பகுதிகளில் மூன்று நாள்கள் முகாமிட நேர்ந்தது. அங்கு வசித்த பழங்குடி மக்களின் ஏழ்மையைக் கண்டு அருளாளரின் உள்ளம் உருகிற்று. "நாம இங்கே இருக்கற மூணு நாளும் இவா வயித்துக்குப் போட்டுடணும்" என்று மானேஜரிடம் கூறினார்.

மானேஜர் தயங்கித் தயங்கி, "அவா நூத்தைம்பது குடும்பத்துக்கு மேலே இருக்கா. இந்த ஊர்லேயோ நம்ம மடத்துக்காராளுக்குச் சமையல் பண்றதுக்கே வசதி போறல்லே" என்று இழுத்தார்.

"அப்போ உலுப்பையாக் குடுத்துடுங்கோ" என்று பெரியவாள் ஒரு படி இறங்கிக் கூறினார்.

மூன்று நாட்களும் அவ்விதமே ஏழையருக்கு வழங்கப் பட்டது.

சமைத்த உணவாக இன்றிக் கச்சாத் தானியம், காய்கறி, எண்ணெய் முதலியன வழங்குவதற்கு 'உலுப்பை' என்று ஸ்ரீமடத்தில் பெயர் சொல்வார்கள்.

இதேபோல் பல்லாண்டுகளுக்குப் பின் மஹா பெரியவாளின் இளையாத்தகுடி முகாமில் அப்போதுதான் மூடப்பட்ட ஒரு சர்க்கஸ் கம்பெனியின் தொழிலாளர்கள் வந்து முறையிட்டபோது அவர்களுக்கு மூன்று நாட்களுக்கான உலுப்பை வழங்க உத்தரவிட்டார்.

* * *

**ஸ்ரீ**மடத்து யானை தலையில் அரிசி ஏற்றி அனுப்பியது மடத்தின் வரலாற்றிலேயே ஒரு முறைதான் நடந்ததாகத் தெரிகிறது. ஹரிஜன மக்களின் உதரம் நிறையவே உதாரமூர்த்தி இவ்விதம் சரித்திரம் படைத்தார்.

1940 நவம்பர். பெரியவாள் திருமருகலிலிருந்து திருச்செங்காட்டாங்குடி வந்தபோது அவ்வூர் வெள்ளக் காடாக ஆயிற்று. வானம் கல்லாகக் கறந்தது.

ஐநூற்றுக்கு மேற்பட்ட ஹரிஜனங்கள் படும் அவதி ஐயனின் செவி எட்டியது.

அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் உடனடியாகக் கொண்டு சேர்க்குமாறு சிப்பந்திகளை விரைவுபடுத்தினார்.

சேரி செல்லும் வழியில் ஜலம் ஆழமாக ஓடுவதால் வண்டி போகக் கஷ்டப்படும் என்று சிப்பந்திகள் தெரிவித்தனர்.

"அப்படியானா யானை மேலே ஏத்தி அனுப்புங்கோ. இந்த ஊர்க் கோவிலுக்கு கணபதீச்வரம்னு பேர். அதனால தீன ஜன ஸேவைக்கு யானேயே போனா பிள்ளையார் ஸந்தோஷப்படுவார்!'' என்று பொருத்தம் காட்டினார் குருபெருமான்.

* * *

இதெல்லாமிருக்கட்டும். பிடி அரிசித் திட்டத்தின் மூலம் எத்தனை லக்ஷம் பேரின் வயிற்றை அவர் நிறைவித்திருக்கிறார் என்பதற்கு யாரோ புள்ளி விவரம் காட்ட முடியும்?

* * *

நாயைத் தாழ்பிறவியாகவே சாஸ்திரம் கூறும். ஆனால் நாய்க்கும் ஈந்த நாயகராக நமது சாஸ்திரக் காவலர் இருக்கிறார்.

1927ம் வருஷத்தில் ஒரு நாய் மடத்து முகாமுக்குத் தானாகவே வந்து காவல் காக்கத் தொடங்கியது. தமது பிக்ஷை முடிந்தவுடன் அதற்கு ஆஹாரம் போடுமாறு பெரியவாள் ஆக்ஞாபித்தார்.

விந்தையாக மடத்து பிக்ஷை சேஷத்தை உண்ண ஆரம்பித்தபின் அது வேறெவர் எது கொடுத்தாலும் உண்ண மறுத்தது.

ஸ்ரீ மஹா பெரியவாள் பல்லக்கில் ஊர் ஊராகச்சென்று கொண்டிருந்த காலத்தில் அந்த நாய் ஒன்று, அந்தப் பல்லக்கின் கீழேயே போகும்; அல்லது, யானையின் தூண் போன்ற நான்கு கால்களுக்கு உள்ளாகவே போகும். பல்லக்கு நிறுத்தப்பட்டவுடன் எட்டத்திற்கு ஓடிச் சென்று, பெரியவாள் இறங்கிச் செல்வதை அங்கிருந்தே கண்குளிரக் கண்டு வாலை ஆட்டும்.

ஒரு முறை அதற்கு வெறிபிடித்து விட்டதாகச் சிப்பந்திகள் எண்ணிச் சேவகன் ஒருவனிடம் அதன் கண்ணைக் கட்டி நாற்பது கிலோமீட்டர் தள்ளியிருந்த ஒரு கிராமத்தில் கயிற்றால் பிணித்து விட்டுத் திரும்பி வருமாறு பணித்தனர்.

அப்படியே அச் சேவகன் செய்து திரும்பினான்.

அவன் திரும்பும் முன்னரே பைரவனாரும் திரும்பியிருந்தார். அவருக்கு வெறியில்லை என்று தெரிந்தது.

அன்றிலிருந்து மஹாபெரியவாளைத் தரிசிக்காமல் உண்பதில்லை என்று அந்த நாய் உயிர் பிரியும் வரையில் விரதம் காத்தது.

அக்காலத்தில் பிக்ஷை முடித்தபின் சிறிது சிரம பரிஹாரம் செய்து கொண்டு பெரியவாள் தமது அருள் ஆஃபீஸை மீண்டும் தொடங்கும் போது கேட்கும் முதற் கேள்வி "நாய்க்குப் போட்டாச்சா?" என்பதுதான்.

* * *

நாய்ப் பட்டாளமொன்றுக்கே மஹாபெரியவாள் விருந்து வைத்த ஒரு நிகழ்ச்சியும் உண்டு.

1947ல் திருக்கோவலூருக்கருகே உள்ள வஸந்த கிருஷ்ணாபுரத்தில் பெரியவாள் சாதுர்மாஸ்யம் அநுஷ்டித்தார். அங்கிருந்து பார்த்தால் மேற்கே சுமார் 20 கிலோ மீட்டரில் உள்ள திருவண்ணாமலையின் சிகரம் தெரியும். தாமிருக்கு மிடத்திலிருந்தே சிவஸ்வரூபமான அந்த கிரிக்குப் பெரியவாள் தினமும் பூஜை செய்வார்.

அப்படியொரு நாள் பூஜையின்போது அவர் கண் மூடித் தியானம் செய்கையில் குடுகுடுவென்று ஒரு நாய் ஓடி வந்து அவரது கமண்டலுவில் வாய் வைத்து விட்டது.

எல்லோரும் பதறிப் போனார்கள். ரிடையரான ஆபீஸர் ஒருவரோ நாயைக் கல்லாலேயே அடித்து விட்டார்.

அது ஊளையிட்டுக் கொண்டு ஓடி எட்டத்தில் நின்றது.

சந்தடியில் பெரியவாளின் கண் மலர்கள் திறந்தன.

சுற்றியிருந்தவர்களைப் பார்த்தார் பெரியவாள். "அக்ரஹாரத்து வீடுகளில இப்போது இருக்கிற எல்லா ஆஹார தினுசுகளையும் போய்ச் சேகரம் பண்ணிண்டு வாங்கோ. நெறயப் பக்கெட்ல ஜலமும் கொண்டாங்கோ!" என்று பணித்தார்.

ரிடையர்ட் ஆபீஸர் உட்பட பலர் சென்று அவ்விதமே ஏராளமாக உணவும் தாராளமாக நீரும் கொண்டு வந்தனர்.

பெரியவாள் சமிக்ஞை செய்ய எட்டவிருந்த பைரவர் அருகே வந்தார். ஆயினும் வெகு அருகே வந்து விடாமல் சற்று ஒதுங்கி நின்றார்.

பெரியவாள் மேலும் மேலும் சமிக்ஞை செய்ய, என்ன ஆச்சரியம்! ஏதோ காந்த சக்தி இழுத்தாற்போல் பைரவர்கள் ஒரு படையாகவே வந்து விட்டார்கள்!

அருகிலேயே இருந்த உணவுக்குப் பாயாமல் அத்தனை சுவானங்களும் அமரிக்கையாக அணிவகுத்து நின்றன.

அக்ரஹாரத்திலிருந்து வந்த உணவையும் நீரையும் அந்த ஓய்வு பெற்ற உயர் அதிகாரியைக் கொண்டே அத்தனை நாய்களுக்கும் படைக்கவும் செய்தார் கருணாமூர்த்தி.

* * *

**1964**-ம் வருஷ ஆரம்பத்திலிருந்தே இருக்கலாம், மடத்துக்கு அரிசி மூட்டை உபயமளிப்பவர்களையெல்லாம் ராமேச்வரத்திலுள்ள நமது மடத்துக்கு அதனை அனுப்பும்படியாகப் பெரியவாள் கட்டளையிட்டு வந்தார். எதற்காக இப்படி அங்கே ஏகமாக ஸ்டாக் செய்யச் சொல்கிறார் என்று மடத்தினருக்குப் புரியவில்லை. இது விஷயமாக மானேஜருக்கு மஹா பெரியவாளிடம் மனஸ்தாபமே உண்டாகி விடுமோ எனும்படியான சந்தர்ப்பங்கள்கூட ஏற்பட்டதுண்டு. ஆனாலும் பெரியவாள் ஒரே பிடிவாதமாகக் கால் ஆயிரம் மூட்டைகளை ராமேச்வரத்தில் சேர்க்கச் செய்தார்.

அவ்வாண்டு டிஸம்பர் கடைசியில் ராமேச்வரத்தில் கடும் புயல் வீசிற்று. பாம்பன் பாலம் தகர்ந்தது. தநுஷ்கோடி முழுகியது. கடலின் கொந்தளிப்பை மீறி ராமேச்வரத் தீவுக்கு உணவுப் பண்டம் அனுப்புவது இயலாத காரியமாயிற்று.

அந்தப் பயங்கரச் சூழலில், ராமேச்வரத்தில் சிக்கிக் கொண்ட ஆயிரமாயிரவர்களின் உதரம் நிறைய உதவியது, ஆம், பல மாதங்களாக ஸ்ரீ பெரியவாள் உத்தரவுப்படி அங்கு சேகரித்து வைக்கப்பட்ட 250 மூட்டை அரிசிதான்.

* * *

முடிவாக,

"அம்பாளுக்கு ஒண்ணு பண்ணினா அது அகிலாண்டங்களுக்கும் சேரும்" என்று மஹாபுருஷர் கூறுவாரே, அதற்கேற்ப லோகத்திற்கெல்லாம் அவர் தினமும் புரியும் விருந்துபசாரத்தைச் சுவைப்போம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் காஞ்சி காமாக்ஷிக்கு ஸஹஸ்ர நாம ஹாரம் செய்து சூட்டியது நினைவிருக்கலாம். அப்போது சொன்னார்: "அம்மாவுக்கு ஊரெல்லாம் பிச்சை வாங்கி ஆயிரம் பவுன்லே நகை பண்ணிப் போட்டுட்டேன். ஆயிரம் பவுன்னா எவ்வளவு வெய்ட்? அம்மா அத்தனை பாரம் தாங்கணும்னா அவ வயத்துக்கும் நன்னாப் போட்டாகணும். அதனால இன்னிலேருந்து மடத்துக்கு பிக்ஷைன்னு ஆஹார வஸ்துக்கள் காணிக்கை வெக்கற மாதிரியே அம்பாளுக்கும் பண்ணிப்பிடணும்."

இவ்வாறு ஜகதீச்வரிக்கு ஜகத்குரு நித்தியப்படியாக ஏற்பாடு செய்துவிட்ட அன்ன கைங்கரியத்தால்தான் அந்த ஆண்டிலிருந்து நம் நாட்டில் உணவுப் பற்றாக்குறை நீங்கி, ஏற்றுமதிகூடச் செய்யுமளவுக்கு அபிவிருத்தி கண்டிருக்கிறோ மென்று அடியார்கள் நம்பினால் அதில் நியாயமிருக்கவே செய்கிறதல்லவா?

# விருந்துக்குப்பின் வெற்றிலை

சென்ற கட்டுரையில் 1909–ல் மஹாமகத்தில் அன்னதான சிவன் ஸ்ரீமடத்துச் சார்பில் உணவு பாலித்ததாகக் கண்டோம் அல்லவா? வெளியுலகுக்கு மடத்துச் சார்பில் அப் பணி நடந்ததாகவே இருந்தாலும், பல்லாண்டுகளுக்குப் பிறகு இது பற்றிப் பேசிய ஸ்ரீசரணர்களோ, "மடத்துச் சார்பிலே இல்லை; கண்ணுக்குத் தெரியாத சந்த்ரமௌளீச்வரரோட ரக்ஷை தவிர மடத்துக்கே சார்பில்லையோன்னு சரிஞ்சு போயிருந்த அந்த ஸமயத்துலே அந்தப் புண்யவான்தான் அந்த மாமாங்க அன்னதானத்தாலே மடத்தையே தூக்கி நிறுத்தினார்னு சொல்லணும்" என்று நிறைந்த கிருதக்ஞதை யுடன் கூறினார்.

நமது அருளாளரது அந்த ஆதிபத்திய ஆரம்ப கால விவரங்கள் சிலவற்றை இங்கு விருந்துக்குப் பின் கொள்ளும் தாம்பூலமாக ருசிப்போம்.

ஸ்ரீமடத்தில் பீடாதிபதிகள் மாறும்போது வருவாய் மாறி மாறி சுக்ல பக்ஷமாகவும், க்ருஷ்ண பக்ஷமாகவும் இருக்குமாம். புரிகிறதா? ஒரு பீடாதிபதியின் காலத்தில் வளர்பிறையாக வருமானம் ஓங்கிக்கொண்டே யிருக்குமாம். அடுத்த பீடாதிபதியின் காலத்தில் தேய்பிறையாகச் சிறுத்துக் கொண்டே வருமாம். பெரியவாளுக்கு ஐந்து பட்டம் முந்தைய 63–ம் பீடாதிபர் காலத்தில் நல்ல செல்வச் செழிப்பாம். அடுத்த 64–ம் அதிபர் நாளில் ஒரே இடத்தில் ஐந்தாறு வருஷ முகாம், வழக்கு வியாஜ்யம் என்று ஏற்பட்டதில் திருமகளின் தமக்கை விஜயம் செய்யலானாளாம். அப்புறம் சேர்த்து வைத்து அமோக வருவாயாம். (அதற்கு ஒரு முக்ய காரணகர்த்தர் ஸ்ரீ பெரியவாளின் பாட்டனாரான கணபதி சாஸ்திரிகள். அது தனிக் கதை.)

'ஓவர் வள்ள'லாயிருந்த இளையாத்தகுடிப் பெரியவாள் எனப்படும் 65வது பீடாதிபர், சேர்த்திருந்த செந்திருவை வாரி வாரி வண்மையில் வழங்கினாராம். அதனால் அப்போது கருப்பூரில் ஏராளமான நிலம் ஸ்ரீமடத்துக்கு உடைமையாயிருந்துங்கூட அடுத்த அதிபர், அறுபத்து ஆறாமவர், மஹா பெரியவாளின் பரம குருவான கலவைப் பெரியவாள் என்பவர் பட்டத்துக்கு வந்தபோது ஒரே கடனும் கஸ்தியுமாக ஆகிவிட்டதாம்.

இக் கால வங்கிகளில் போட்டு வைப்பது போல அந் நாளில் தங்கள் சொத்தை மடத்தில் போட்டு வைத்திருந்தவர்கள் உண்டாம். அவர்களில் ஓர் அம்மாள் ஒரு தினம் பீடாதிபர்கள் பூஜைக்குப் போகுமுன் அவரை 'வழிமறித்து' என்றே சொல்லக்கூடிய அளவுக்கு நிர்பந்தப் படுத்தி, "ப்ராம்மணா! நான் நாதியில்லாத பொம்மனாட்டி. உள்ளதையெல்லாம் இங்கே போட்டு வெச்சேன். மடமே முழுகிப் போயிடுங்கறாளே! எனக்கானதைப் பண்ணிப்பிட்டு அப்புறம் பூஜைக்கு ஒக்காருவீராம்!" என்று கேட்குமளவுக்கு நிலமை முற்றியதாம்.

ஆனால் சோதனையும் அருளுமாக மாறி மாறிச் செய்துவந்த சந்திரமௌளீச்வரர் அப்புறம் எதிர்பாராத திருப்பங்களை உண்டாக்கி மடத்திற்கு ஸுபிக்ஷம் ஏற்பட்டதாம். அதன் பின்னரே நமது மஹா பெரியவாள் பட்டமேற்றது. (67-ம் பட்டம் ஒரு வார காலமே அதிபராயிருந்ததால் அவர் இந்தக் கதையில் இடம் பெறாமல், அறுபத்தெட்டாமவரான மஹா பெரியவாளின் ஆட்சிக்கு வந்து விட்டோம்.)

இனி அவர்கள் மொழியே கேட்போம்: "நான் ஸ்வாமிகளா வந்தப்போ ஒரு விசித்ரமான சூழ்நிலை. நான் பட்டமாயி அஞ்சு வருஷம் வரை மைனர்தானே? (சிரித்து, அதிநயமான அபிநயத்தில் கழுத்துச் செயின், காலர் ஸென்ட் ஆகியவற்றுக்குக் குறிப்புக் காட்டி) அந்த 'மைனர்' இல்லே;

வயஸில மைனர்தானே? அதனால நிர்வாகம் ஒரு கார்டியன் கிட்ட இருந்தது. அவர் யார்னா பரமகுரு ஸ்வாமிகள் (கலவைப் பெரியவாள்) பட்டத்துக்கு வந்த நாள்லேருந்து மடத்து ஸ்ரீகார்யமா (மேலாளராக) இருந்தவர்தான். அந்த ஸ்வாமிகளும் பட்டத்துக்கு வரச்சே மைனரா இருந்தவாளானதால அவாளுக்கும் இவரேதான் கார்டியனா இருந்திருக்கார். அவா பீடாதிபத்யம் வஹிச்ச பதினேழு வருஷத்துல மொத(ல்) பத்து பன்னண்டு வருஷம் வரை இவர் ஸரியாவே நிர்வாகம் பண்ணிண்டிருந்தார். ஆனா, போகப்போக வயஸு ரொம்ப ஆயிட்டதாலே ஞாபகப் பெசகு; அது தெரியாம இருக்கறதுக்காகப் பண்ற காரியங்கள்லே கொஞ்சம் தப்புத் தண்டா; கேள்வி கேட்டா தன் வயஸை, அத்தனைக் கால ஒழைப்பைச் சொல்லி சீர்றது (சீறுவது); இதிலே சிலபேர்கிட்ட ஒரே கோவம், அதனாலேயே அநுகூலமாயிருக்கறவாகிட்ட அதிதாக்ஷிண்யம்னு ஆயிட்டார்.

"இப்படிப்பட்ட ஸந்தர்ப்பத்திலே ஒண்ணுந் தெரியாத நான் புது ஸ்வாமிகளா வந்து அவர் கார்டியனா ஆனதுலே அவருக்கு ரொம்பவும் ஸ்தானம் குடுத்துப்போச்சு. அப்போ நான் ப்ரத்யக்ஷத்துலே பாத்ததிலே, அவருக்கு தாரணா சக்தி (விஷயங்களை அறிவால் கிரஹித்துக் காக்கும் திறன்) பாதி போயிடுத்து; த்ருஷ்டி முக்கால் போயிடுத்து; காது முழுக்கவே போயிடுத்து. எடுப்பார் கைப்பிள்ளையா என்னமோ பண்ணிண்டிருந்தார். இருந்தாலும் அவரைக் கேக்க ஆளில்லை.

"இதெல்லாம் சொல்றதுக்கே கஷ்டமாத்தான் இருக்கு. 'ஸத்கார்யம், ஆசார்யாள் கைங்கர்யம், ஜன்மாவைக் கடைத்தேத்திப்போம்'னு மடம் மாதிரி ஒரு எடத்துக்கு வந்து, ஒரு காலத்துல நன்னாவும் ஸேவகம் பண்ணிண்டிருந்த–வாளையும் அப்பறம் ஏதோ ஒரு மாயை வழுக்கி விட்டு வீணாப் போயிடறதை நெனச்சா துக்கமாத்தான் இருக்கு. பின்னே எதுக்குக் கதை சொல்றேன்னா, கர்மாவோ,

கிர்மாவோ எதுக்காகவோ மாயையை ஏவிவிட்டு இப்படில்லாம் கோளாறா நடக்கப் பண்ற அந்த ஈச்வர சக்தியே எப்படி ஸமயத்திலே இந்த மடத்தைக் கட்டிக் காப்பாத்தியிருக்குன்னு காட்றதுக்காகத்தான்.

"அந்த மாதிரி இப்ப என்ன ஆச்சுன்னா, அமராவதி கிருஷ்ணஸ்வாமி ஐயர்னு டெப்டி கலெக்டராயிருந்துட்டு அப்பறம் இந்த மடத்து அபிவிருத்திக்கே மனஸைக் குடுத்த ஒரு பெரியவர் — அப்படிப்பட்டவாளுக்கு எவ்வளவு நன்னி சொன்னாலும் போறாது; அப்படிப்பட்டவர் — ரொம்பத் துணிச்சலாக் கார்யங்கள் பண்ணி (அது தனிக்கதையாகவே விஸ்தரிக்க இடம் தருவது) மடத்து நிர்வாகத்தை அந்த வ்ருத்தரோட கார்டியன்ஷிப்லேந்து மீட்டு, ஸர்க்கார் பொறுப்பெடுத்துண்டு புது கார்டியன் நேமிக்கும்படி (நியமிக்கும்படி)ப் பண்ணினார். இது என்னமோ ஈஸியா நடந்துடுத்து; அதுலேந்து எல்லாம் ஸரியாயிடுத்து; அதனாலதான் அந்த அமராவதிப் பெரியவரை பெரிசா தாங்க் பண்றேன்னு நெனச்சியானா, அதுதான் இல்லே! மொதல்ல ஸர்க்கார் மேற்பார்வைக்கு அவர் பல தினுசா ப்ரயத்னம் பண்ணி ஃபெயில் ஆனவிட்டுதான் கடைசில இந்த ஏற்பாடு ஆனது. அந்த இன்டரீம் பீரியட்–ங்கிறது அது பாட்டுக்கு மூணு வருஷம் போல இழுத்துண்டு போயிடுத்து. அந்த நடுவாந்தர காலத்துல மடமும் அந்தரத்துலதானே தொங்கிண்டிருக்கணும்? சந்த்ர மௌளீச்வரர் க்ருபை பண்ணி இருக்காட்டா அப்படித்தான் ஆயிருக்கணும்! அப்படி நேராம அவர் ரக்ஷிச்சார்.

"என்ன சிக்கல்னா, சட்னு பழைய கார்டியனைத் தள்ளியாச்சு; ஆனா புது ஏற்பாடு ஒண்ணும் ஃபார்மலா ஆகலே. அதனால மடத்து 'இன்கம்'லாம் 'ஆதரைஸா'ன பலானவர் பேர்ல வரவு வெச்சு, நமூதா ரிஸீவ் பண்றதுக்கு எடம் இல்லாமப் போய், அல்லது அப்படி ஆயிட்டதா

வெளியில அபிப்ராயம் ஏற்பட்டுட்டதால, வழக்கப்படி வருமானங்கள் நின்னே போயிடுத்து.

"அப்பதான் ஸ்வாமி கண் தெறந்து பார்த்தார். நான் ஸ்வாமிகளாய் ஒரு வருஷம் முடியற ஸமயத்திலேயே ஜம்புகேச்வரம் கும்பாபிஷேகம் போக வேண்டி வந்ததுலே, ஜம்புநாதர் பக்தகோடிகள் கிட்டேருந்து ஸம்பாதிச்சுண்டது மட்டுமில்லாம நம்ம சந்திரமௌளீச்வரரும் நன்னா ஸம்பாதிச்சுண்டார். (ஏராளமான சுவையுள்ள 'திடுக்கிட வைக்கும்' நிகழ்ச்சிகள் கொண்ட தனிக் கதையாக அந்த ஜம்புகேச்வர விஜயம் 'மஹா பெரியவர்களும் மஹா புருஷர்களும்' என்ற நூலில் 'சிருங்கேரிச் சிங்கவேளும் காஞ்சீபுரக் குமரவேளும்' என்ற கட்டுரையில் விரியும்.)

"அப்பறம் அந்த வருஷ சாதுர்மாஸ்யம் நன்னா நடத்திண்டு தஞ்சாவூர் வழியா கும்மோணம் திரும்பறச்சே, தஞ்சாவூர் பாய் ஸாஹிப்கள் (ராணிகள்) ரெண்டு பேரும் ஒரு மாஸம் தங்க வெச்சு வேணது செஞ்சதோட, நெறயவும் குடுத்தனுப்பினா.

"அதுக்கப்பறம் மாமாங்கம் வந்துடுத்து (1909ம் வருஷத்திய மஹாமகம்). அதுல சிவன்வாள் லக்ஷ ப்ராம்மண போஜனம்–னு ஆரம்பிச்சது அவரோட அந்த மனஸு விசேஷத்துல ப்ராம்மணாள், அப்ராம்மணாள்னு பல லக்ஷக்கணக்கில சாப்பிட்டவிட்டும் மூட்டை மூட்டையா, அம்பாரம் அம்பாரமா ஸாமான்கள் மிஞ்சிடுத்து. அத்தனையையும் அவர் மடத்துக்கே சேத்துட்டார். இப்படி மடத்துக்கு ஏறக்கொறைய ஒரு வருஷத்துக்கு ஸம்ருத்தியா ஆஹாரம் போட்டுட்டார்! குடிபடைகள் கூட, 'துண்ண வயத்தெ முன்னே வெச்சுப் பேசு'ன்னு சொல்றதுண்டு. அப்படி எங்களுக்கு ச்ரம தசையிலே போட்டு, 'நன்றிக் கடன்'னு எழுதறேளே, அந்த மாதிரி எந்நாளும் பட்டிருக்கும்படியா அந்தப் பெரியவர் உபகரிச்சிருக்கார்."

இப்படிக் கூறியவர்தாம் தொடர்ந்து, "மடத்துச் சார்பிலே அவர் மாமாங்க ஸமாராதனை பண்ணினதாத்தான் லோகத்துக்குத் தெரிவிச்சது. யதார்த்தத்திலே, மடத்துச் சார்பிலே இல்லே. கண்ணுக்குத் தெரியாத சந்த்ர மௌளீச்வரரோட ரக்ஷை தவிர மடத்துக்கே சார்பில்லையோ ன்னு சரிஞ்சு போயிருந்த அந்த ஸமயத்துலே அந்தப் புண்யவான்தான் அந்த மாமாங்க அன்னதானத்தாலே மடத்தையே தூக்கி நிறுத்தினார்னு சொல்லணும்'' என்றார்.

அடியாருலகனைத்தும் பாலிக்கும் தெய்வகுரு மானுஷமாகித் தம் மடத்தையே பாலித்ததாக வேறொருவரிடம் கொண்டிருந்த நன்றிதான் எத்தனை அழகு? மேலே அவர் பிரஸாதமாக நாம் உண்டோமே, நிறைய உணவு, அதை ஜீர்ணித்து ரத்தத்தில் ஓட்டவைக்கும் வெற்றிலையன்றோ இந்த உணர்வு?

# பெரியவர்: தர்மத்தின் மறு பெயர்

ஸமர்த்த ராமதாஸின் புனித நினைவு கமழும் ஸதாராவில், இயல்பான ஏகாந்த அமைதி வைகறையின் சாந்தத்தில் இணைந்து தோய்ந்த அதிகாலை நாலரை மணிக்கு ஸ்ரீ காஞ்சி முனிவரின் குரல் கேட்கிறது. முதல் நாளெல்லாம் பெரியவர் மௌனமாதலால் இன்று தெய்வத்தின் குரலைக் கூடுதல் ஆவலுடன் அந்த வேளையிலும் அங்கே குழுமியிருந்தவர்கள் கேட்கிறார்கள்.

"ஆமாம். வாய் மௌனமானாலும் ராத்திரி மூக்குக்கு உப்புமா வாஸனை எட்டித்து! நான் சொல்ல வேண்டாம்னு பார்த்தாலும் என்னாலே பாவம், இங்கே இருக்கிற ரெண்டு மூணு பேருக்கு ஏற்படற சிரமத்தை எப்படிச் சொல்லாம யிருக்கிறது? சாதுர்மாஸ்யம்னு நான் வந்து உக்காந்துட்டேன்; இன்னம் ரெண்டு மாஸத்துக்கு இந்த இடத்தை விட்டுப் புறப்படறத்துக்கு இல்லை. ஆனா, இது என்ன பட்டணமா? இங்கே பார்த்துப் பார்த்துப் பண்ணறத்துக்கு ஜனக்கட்டு இருக்கா? இந்தச் சின்ன விஷயம் என்னைப் பார்க்க வரவாளுக்குத் தெரிய வேண்டாமா? ப்ரியத்தினாலே, பக்தி யினாலேதான் எங்கெங்கேயிருந்தோ எத்தனையோ கஷ்டப் பட்டுண்டு வரேள். வாஸ்தவம்தான். ஆனாலும் பிறத்தியாருக்கு ச்ரமம் தரலாமா? என்னை ஏதோ ஒரு வேளை பார்த்துட்டு அப்படியே நகர்ந்துண்டே இருக்க வேண்டியதுதானே? போஜனம், டிஃபன், பலகாரம்னு வந்தவாளுக்குப் பண்ணி வைக்க இந்தச் சின்ன ஊர்லே ஏது வசதி? இங்கே இருக்கப்பட்ட ரெண்டு மூணு பேர்தானே கஷ்டத்தைப் பார்க்காம எல்லாம் பண்ண வேண்டியிருக்கு? அவா நல்ல மனஸோடே, ஒண்ணும் மொணமொணக்காமதான் பண்றா–ன்னாலும், என்னைப் பராமரிக்கறதே கஷ்டம்; அது போறாமே என்னைப் பார்க்க வரவா, அப்புறம் அந்தப்

பார்க்க வரவாளைப் பார்க்க வரவான்னு பல பேருக்கு அவாளை சுச்ருஷை பண்ண வைக்கிறது ஸரியா?"

உப்புமா தாளிப்பில் சற்று கார நெடி கூடுதலானது போல் பெரியவரின் குரல் த்வனித்தாலும், அன்பு என்னும் சுத்த நெய்யிலாக்கும் அது வறுபடுகிறது என்பதும் அக மூக்குக்குத் தெரியாது.

"எங்கே, அந்த பெல்காம்..... இருக்கானா?" என்கிறது நெய்–மிளகாய்க் குரல், மிளகாயை விட்டு விட்டு

"இதோ இருக்கேன்" என்று தண்டம் ஸமர்ப்பிக்கிறார், பெல்காம்......

"நான் இந்த மஹாராஷ்ட்வாவிலே சுத்த ஆரம்பிச்சதி லேருந்து நீ எத்தனை தடவை என்னைப் பார்க்க ஓடி வந்திருப்பே?"

மிளகாயே அறியாத சுத்த நெய் தன் உள்ளே வர்ஷிப்பதாக உணர்ந்த பெல்காம்..... தான் அடிக்கடி பெரியவாள் தர்சனத்துக்கு வந்திருப்பதை இன்று எல்லோருக்கும் அவரே தெரியப்படுத்துவதில் உற்ற பெருமிதம் அவர் 'இத்தனாம் தடவை' என்று சொன்ன குரலிலே பிரதிபலிக்கிறது.

"ஆமாம், உன்னாலே எப்படி இத்தனை தடவை வர முடியறது?"

"எனக்கு ரயில்வே உத்யோகமோல்லியோ? 'பாஸ்'லே வரேன்."

"ஓஹோ! ஸரி! உன் பாஸை இங்கே வை" என்று தமக்கு முன் தரையைத் தட்டிக் காட்டுகிறார் ஸ்ரீ பெரியவர்.

பெரியவாள் பணித்த வண்ணமே அந்த பக்தர் செய்கிறார்.

இருள் பிரியாத அந்த இளம் பொழுதிலே பெரியவரின் திருக்கர அழுத்தலில் பக்கத்தில் இருந்த டார்ச் அந்த ரயில்வே பாஸ் மீது ஒளியைப் பாய்ச்சுகிறது.

பெரியவர் பாஸை உன்னிப்பாகக் கவனிக்கிறார். பேசத் தொடங்குகிறார். நெய்யிலே மறுபடி மிளகாய் வறுபடுகிறது. "பாஸ்லே எக்ஸாமினர் கையெழுத்தே ஆகல்லே. எனக்குத் தெரியும், ரயில்வேக்காராளுக்குப் பாஸ் இருந்தாலும் இத்தனை ட்ரிப்தான் போகலாம்னு கணக்கு உண்டுன்னு. இதிலேயானா நீ இத்தனை தடவை வந்ததுக்குக் கணக்கா ஒரு கையெழுத்துக்கூட காணும்! நீ என்ன பண்ணணும் தெரியுமா? முதல் காரியமா இந்தப் பாஸைக் கொண்டு போய் 'ஸரன்டர்' பண்ணணும். இனிமேல உன் கைக் காசைச் செலவழிச்சுண்டு வர முடியும்னாலே என்னைப் பார்க்க வரணும்!"

ஹர ஹர சங்கரர் அறநெறிச் சங்கரராக ஜ்வாலை விட்டு அனைவரையும் பிரமிக்கச் செய்கிறார்.

இந்த அயனான சந்தர்ப்பத்திலே சென்னையைச் சேர்ந்த சிஷ்ய ப்ரமுகர் ஒருவர் ஆயிரம் ரூபாய் காணிக்கை பெரியவாளுக்குச் செலுத்த முன்வருகிறார்.

இதற்குப் பதினோராண்டுகளுக்கு முன் முனிவர் ஸ்ரீ மடத்தை விட்டு வெளிவந்த அன்றிலிருந்து பணக் காணிக்கையைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்று இவர் நன்கு அறிந்தவர்தான். ஆயினும் பெரியவாளின் திருவுளக் கருத்தின்படியே செலவழிக்கப்பட வேண்டுமென்று அந்தரங்க பக்தியுடன் ஒதுக்கப்பட்ட தொகையாதலாலே இந்த ஆயிரத்தைச் செலுத்துகிறார்.

பெரியவர் புரிந்து கொள்ளாமல் போவாரா?

"எங்கே பெல்காம்.....?" என்கிறார்

திருணமாக வந்து நிற்கிறார் அந்த நபர்.

நெய்யிலே இப்பொழுது முந்திரியாக்கும் வறுபடுகிறது! பெல்காமில்...... நிறைவேற்றி வரும் ஆசார்ய ஸேவா திட்டங்களைப் பற்றி ஏகமாக ச்லாகிக்கிறார் பெரியவர். இடித்த மேகமே இன்மழை கொட்டுகிறது.

அதில் ஒரு பணிக்கே இந்த ஆயிரம் ரூபாயைப் பயன் படுத்துமாறு அருளாணை பிறக்கிறது.

"பணத்தை எப்படிக் கொண்டுபோவே?"

"பத்ரமா எடுத்துண்டு போறேன்" என்கிறார் பெல்காம்.....

பொறுப்புணர்ச்சியின் நிறைவுடனும் அபார உலகியல் அறிவுடனும் முனிவர் சொல்கிறார்: "அதெல்லாம் ஸரியில்லை. தொலைஞ்சு போச்சுன்னா நீயோ அவனோ (கொடுத்தவரோ) ஜவாப் இல்லை. நான்தான் ஜவாப். (கொடுத்த பிரமுகரைப் பார்த்து) நீ இந்தத் தொகைக்கு அவன் பேரிலே 'ட்ராஃப்ட்' வாங்கிக் கொடுத்துடு."

அறம் என்ன, அன்பு என்ன, பொறுப்பு என்ன, ஸமயோசிதம் என்ன என்பதற்கெல்லாம் அன்றன்றும் இப்படி அற்புத முன்னுதாரணம் தருவதே முனிவரின் இயல்பாயிருக்கிறது.

# ஒரு வள்ளலும் ஒரு நாணயசாலையும்

பல்லாண்டுகளுக்கு முன் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் முன் நடைபெற்ற நிகழ்ச்சி.

பெரியவர்களைப் பணிய வரும் பக்தர் ஒவ்வொருவரும் தம்மை அறிமுகம் செய்து கொள்கையில் ஓர் இளைஞர், "சென்னை வள்ளலார்நகரிலிருந்து வருகிறேன்" என்றார்.

"வள்ளலார்நகரா?"

"ஆமாம். தங்கசாலைக்குத்தான் அப்படி பெயர் மாற்றியிருக்கிறது."

பெரியவர்களின் இதழ்க் கடையில் நகை நெளிகிறது, கண்கள் ஒளி விடுகின்றன. "வள்ளல் என்றால் பணத்தை வாரிக் கொடுக்க வேண்டும். பணம் அச்சுப் போட்ட சாலை இப்போது வள்ளலாரின் ஊராகிவிட்டது!" என்கிறார். "தங்கசாலை என்றாயே, அப்படியென்றால் பணம் அச்சுப் போடுகிற இடம் என்று தெரியுமோ?" என்று அந்த அடியாரைக் கேட்கிறார்.

"தெரியாது" என்கிறார் இளைஞர்.

"தங்கத்தினாலே ரோட் போட்டிருந்தது என்று நினைத்தாயோ?" என்று இனிய குறும்பாகக் கேட்கிறார்.

"ஸ்வாமிகள் சொல்லி இப்போதுதான் தங்கக் காசு தயாரித்ததால் அந்த இடம் தங்கசாலை என்று பெயர் பெற்றதாகத் தெரிகிறது" என்று அந்த இளைஞர் சொல்கிறார்.

"அதுவும் தப்பு. 'தங்கசாலை' என்பதே தப்பு" என்று சிரிக்கிறார் பெரியவர்.

அருமையான விஷயம் வரப்போகிறது என்று அடியார்கள் ஆர்வம் கொள்கின்றனர். அருமையை அவ்வளவு

லேசில் தந்து விடுவாரா 'ஏ–ஒன்' கதாசிரியரான ஸ்வாமிகள் ? தொடர்பேயில்லாதது போல் வேறேதோ விஷயத்துக்குப் போய்விடுகிறார்.

"ஸப்த விடங்க ஸ்தலம் என்று கேள்விப் பட்டிருக்கிறாயோ?" என்று இளைஞரை வினவுகிறார்.

"இல்லை."

"இங்கே வேறே யாராவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

பலர் கேள்விப்பட்டதாகச் சொல்கிறோம். ஆனால் அவற்றின் பெயர்களை ஸ்வாமிகள் கேட்டபோது அநேகமாக எவருக்குமே திருவாரூர் தவிர மற்ற ஆறு விடங்க ஸ்தலங்களின் பெயர் தெரியவில்லை.

பெரியவர்களே செல்கிறார்கள்: "திருவாரூரில் வீதி விடங்கர். இவர் சுவாஸ ரூபமான அஜபா நடனம் ஆடினவர். திருநள்ளாற்றில் நாக விடங்கர். கிடு கிடு என்று உன்மத்த நடனம் ஆடினவர். நாகப் பட்டினம் என்கிற திருநாகைக் காரோணத்தில் சுந்தர விடங்கர். சமுத்திரத்தில் அலை அடிப்பது போல் இவர் ஆடினதைப் 'பாராவார தரங்க நடனம்' என்பார்கள். திருக்காறாயில் க்ஷேத்திரத்தில் ஆதிவிடங்கர். இவர் கோழி தத்தித் தத்திப் போகிற மாதிரி ஆடினவர். 'குக்குட நடனம்' என்பார்கள். திருக்கோளிலி... திருக்குவளை என்று சொல்கிறது; (மு.) கருணாநிதி ஊர்.... அங்கே அவனி விடங்கர். அவர் வண்டு சுற்றுகிறது போல பிருங்க நடனம் பண்ணுகிறார். திருவாய்மூரில் நீல விடங்கர். அவர் கமல நடனம் என்பதைச் செய்கிறார். அலைகளில் தாமரைப்பூ ஆடுவதைப் போல் நாட்டியம் பண்ணியிருப்பார் போலிருக்கிறது. வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டில் புவனி விடங்கர். அன்னம் சஞ்சரிப்பது போல் இவர் ஹம்ஸபாத நடனம் ஆடுகிறார்.

“நடனம் இப்படி விதவிதமாயிருந்தாலும் எல்லா மூர்த்திக்கும் விடங்கர் என்றே பெயர் இருப்பது ஏன் தெரியுமா?’’ என்று கேட்கிறார்.

யாருக்குத் தெரியும்? தெரியாததே நல்லதாயிற்று. ஏனெனில் அவரே விளக்கிக் கேட்கும்பேறு கிட்டிற்று அல்லவா?

“திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முசுகுந்தச் சோழச் சக்கரவர்த்தி தேவாசுர யுத்தத்தில் ஒரு சமயம் தேவேந்திரனுக்கே சகாயம் செய்தார். அதற்குப் பிரதி செய்ய நினைத்த இந்திரன் அவரிடம், ‘நீங்கள் எதைக் கேட்டாலும் தருகிறேன். என்ன வேண்டும், சொல்லுங்கள்’ என்றான். மஹா சிவபக்தரான முசுகுந்தர், ‘நீ பூஜை செய்கிறாயே, அந்தப் பரமசிவ விக்கிரகத்தைக் கொடு’ என்று கேட்டு விட்டார்.

“இந்திரனுக்கு அதைக் கொடுக்க மனஸில்லை. ஆனாலும் கொடுத்த வார்த்தையை மீறக்கூடாதே என்பதால், ‘அப்படியே தருகிறேன்’ என்று சொல்லிவிட்டு, ஒரு தந்திரம் செய்தான். தேவச் சில்பியான விச்வகர்மாவைக் கூப்பிட்டு, ‘நம் ஸ்வாமியைப் போலவே ஒரு விக்கிரஹம் செய். அதுதான் என் பூஜா மூர்த்தி என்று சொல்லி முசுகுந்தருக்குக் கொடுத்து விடுகிறேன்’ என்றான். ராஜ ஆக்ஞை என்பதால் விச்வகர்மாவும் அப்படியே செய்தான்.

“முசுகுந்தர் விக்கிரஹத்தை வாங்கிக் கொண்டு பூலோகத்துக்கு வந்தார். ஸ்வாமி அவருக்கு உண்மையைத் தெரியப்படுத்தி விட்டார்! முசுகுந்தர் அந்த விக்ரஹத்தை இப்போது சப்த விடங்க ஸ்தலமாகிவிட்ட ஒன்றில் பிரதிஷ்டை செய்து விட்டு இந்திரனிடம் போனார்.

“இந்திரன் இப்போதும் முன்போலவே விச்வகர்மாவைக் கொண்டு இன்னொரு விக்கிரஹம் செய்து அதைத்தான் கொடுத்து ஏமாற்றினான்.

"ஈச்வரனும் நன்றாக விளையாடினார்! முன்போலவே முசுகுந்தர் திருவாரூருக்குத் திரும்பி வந்தபின் அவருக்கு உண்மை தெரியுமாறு செய்தார். முசுகுந்தர் இந்த விக்கிரஹத்தையும் பிற்பாடு விடங்க க்ஷேத்திரமாகப் போகும் இன்னொரு ஸ்தலத்தில் பிரதிஷ்டை செய்துவிட்டு மறுபடியும் தேவலோகம் போனார்.

"இப்படியே ஆறு தரம் இந்திரன் ஏமாற்றினான். ஏழாம் தரம் நிஜ ஸ்வாமியே முசுகுந்தரோடு புறப்பட்டு விட்டார். 'பறந்தே வந்து விட்டார்! தியாகராஜா பிம்பத்தில் இறக்கையிருக்கிறது', என்று சொல்வதுண்டு.

முசுகுந்தர் ஒவ்வொரு விக்ரஹமாக பூலோகத்திற்குக் கொண்டு வந்தவுடனேயே ஒவ்வொரு இடத்தில் ப்ரதிஷ்டை பண்ணாமல் ஏழு விக்ரஹத்தையும் ஒரே இடத்தில் சேர்த்து வைத்ததாகவும், 'அசல் தேவலோக ஸ்வாமியானால் அவருக்கு அர்ச்சனை செய்த செங்கழுநீர்ப் பூ வாடாது; இதைக் கொண்டு நிஜமான மூர்த்தி எது என்று பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளு' என்று ஸ்வாமி முசுகுந்தரிடம் சொன்னதாகவும் ஒரு கதை உண்டு. அப்படி நிஜ தேவலோக ஸ்வாமியை அடையாளம் தெரிந்து கொண்டு திருவாரூரில் பிரதிஷ்டை செய்துவிட்டு மற்றவற்றைச் சுற்றி ஆறு ஊரில் முசுகுந்தர் வைத்தார் என்பார்கள்.

"இப்படித்தான் ஸப்த விடங்க ஸ்தலங்கள் ஏற்பட்டன. அங்கேயெல்லாம் முசுகுந்த பூஜை, பச்சாத்தாபப்பட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்ட இந்திரன் செய்த பூஜை இரண்டும் நடக்கின்றன. ஏழு மூர்த்திக்குமே பொதுவாகத் தியாகராஜா என்ற பெயரும் இருக்கிறது. தேவ லோகத்தையும், தேவராஜாவையும் விட்டுவிட்டு பூலோகத்துக்கு மநுஷ்ராஜா கிட்டே வந்ததால் தியாகராஜா! அந்தப் பேருக்கு வேறே தத்வார்த்தமும் உண்டு.

"அதெல்லாம் சரி. இவற்றுக்கு விடங்க க்ஷேத்திரம் என்று ஏன் பெயர் வரவேண்டும்? விடங்கம் என்றால் என்ன?"

நிச்சயமாக எவருக்கும் விடை தெரியமுடியாதுதான். பெரியவர்களே விளக்குகிறார்கள்.

"டங்கம், டங்கம் என்றால் உளி என்று அர்த்தம். கற்சிலை அடிக்கிற உளி மட்டுமல்ல. தங்கத்திலும், வெள்ளி யிலும் பிரதிமைகள், நகைகள் செய்ய உபயோகமாகிற கருவிக்கும் டங்கம் என்று பெயர். தேவதச்சனான விச்வகர்மா டங்கம் முதலிய எந்தக் கருவியும் இல்லாமலே மனோசக்தியினால் எதையும் செய்துவிடுவான். அப்படித் தான் வி-டங்கமாக, அதாவது டங்கத்தின் உதவியில்லாமல் இந்த பிம்பங்களையும் செய்திருந்தான். அதனால் மூர்த்திகளுக்கே விடங்கர் என்று பெயர் வந்து விட்டது."

கூடியிருந்தோரிடையே ஆஹாகாரம் எழும்புகிறது.

"தங்கசாலையைப் பற்றிக் கேட்டுவிட்டு விடங்க புராணத்துக்கு ஏன் போனேன் தெரியுமா?" என்று ஆவலைக் கிளறுகிறார் கதாசிரிய ஆசாரியர்கள்.

"நாணயம் பண்ணுமிடத்தில் தங்கக் காசு செய்வதால் அதற்குத் தங்கசாலை என்று பெயர் – என்று நினைத்தால் அது தப்பு. இப்போது போல் தங்கம் அதிக விலை விற்காத நாளில்கூடத் தங்கக் காசைவிட வெள்ளி, தாமிரம் முதலான மற்ற உலோகக் காசுதான் அதிகம் போட்டிருப்பார்கள். அதனால் தங்கசாலை என்பதற்குக் காரணம் வேறே. காசுகளில் சித்திரம், எழுத்து இவற்றைப் பொறிப்பதற்கும், அதன் மாற்று, எடை எல்லாம் சுத்தமாய் இருக்கிறதா என்று தட்டிப் பார்த்தே தெரிந்து கொள்வதற்கும் உபயோகமாகிற உளி போன்ற ஒரு கருவிக்கு 'டங்கம்' என்றே பெயர். காசு பண்ணும் கிடங்கில் இதற்கெனவே சிப்பந்திகள் உட்கார்ந்து கொண்டு, காசுகளை டங்கத்தால் தட்டிக் கொண்டே சரி பார்ப்பார்கள். அந்த ஓசை ஜல்ஜல் என்று வெளியிலே

ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கும். அதனால் நாணயம் செய்யுமிடத்துக்கே 'டங்கசாலா' என்று பெயர் வந்துவிட்டது. அது ஸம்ஸ்கிருதப் பெயர். வடதேசத்தில்கூட வழங்கும் பெயர். அதைத்தான் நாம் தங்கசாலை என்று சொல்கிறோம்! தமிழ்ப்பெயர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்!

"பொருள் செல்வத்தைக் கொடுத்தவர்களையே வள்ளல் என்பது வழக்கம். அருள் செல்வத்தைத் தந்தவர்களில் அருட்பா பாடினவரைத்தான் 'வள்ள'லுக்கு மரியாதை 'யார்' சேர்த்து 'வள்ளலார்' என்கிறோம். அநித்தியமான பொருளைக் குறிப்பிடும் தங்கசாலைப் பெயரும் அநித்தியமாகப் போய் விட்டது. நித்தியமான அருளைக் குறிக்கிற வள்ளலார் பெயர் அதற்கு வந்திருக்கிறது!" என்று முடித்தார் காஞ்சி வள்ளற் பெருமான்.

# கற்கண்டு மலையில் சில பொடிகள்

"சௌக்கியமா?" என்று வாயெல்லாம் சிரிப்புடன், இரண்டு அக்குளுக்குமாக மேல் துண்டை இடுக்கி நின்று கேட்கும் மானேஜர் ஸ்ரீ ஸி.எஸ். விச்வநாதய்யரைக் காஞ்சி ஸ்ரீமடத்துப் பக்தர்கள் என்றும் மறக்க முடியாது. ஸ்ரீ பெரியவாள் இளமையிலேயே நானிலம் போற்றும் ஆசாரியராகியிருந்தாரெனில், ஏறக்குறைய அவரது வயதினரேயான ஸி.எஸ்.வி. முப்பத்துச் சொச்சம் பிராயத்திலேயே ஸ்ரீமடத்தின் மானேஜராக நியமனம் பெற்று அப் பெரிய பொறுப்பை அரிய முறையில் பரம சுத்தமாக ஆற்றிப் பெயரெடுத்தார். உலக நடைமுறைகளில் ஒட்டியும் ஒட்டாமலும், எவராலும் ஆழம் காணவொண்ணாமலும் இருக்கும் ஞானிகளுக்கு ஈடு கொடுத்து ஒரு ஸ்தாபனத்தை லௌகிக ரீதியிலும் செவ்வனே நடத்துவது ஓர் அசாத்தியக் கலையே ஆகும். இதிலே 'படு'வாகச் சுமார் ஒரு பொன்னாண்டுக் காலம் மானேஜர் பதவி வகித்த ஸி.எஸ்.வி. பெரியவாளின் முன் தம்மைத் துரும்பாகவே நினைத்த போதிலும், உலகியலை அநுஸரித்த விஷயங்களில் பெரியவாளுக்கே மாறான அபிப்ராயங்கள் சொல்வதும் உண்டு. மாற்றுக் கருத்தை, மனச்சாட்சியின் சத்தியத்தைப் பெரியவாளும் தாராளமாக அநுமதித்தார். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவர் ஒன்றும் இவர் ஒன்றுமாகச் சொல்லிக் கன்னடத்தில் 'சண்டை' பிடித்துக் கொண்ட ஸ்வாதீன அழகும் பக்தர்கள் கண்டு ரஸித்த ஒன்றுதான். மடத்துக்காகவே உழைத்து, மடத்தோடேயே தம்மை இழைத்துக் கொண்ட ஸி.எஸ்.வி., பெரியவாள் மடத்தை விட்டுச் சென்ற பிற்பாடும், தாம் வயோதிகத்தில் நலிவுற்றுப் பதவியிலிருந்து விலகிய பிறகுங்கூடப் பெரிய காஞ்சி ஸ்ரீ மடத்திலேயேதான் வசித்து வந்தார். புத்திரர்கள் நல்ல ஸ்திதியில் இருந்துங்கூடக் குடும்பத்துக்குத் திரும்பாமல்

ஸ்ரீமடத்திலேயே தமது இறுதி மூச்சையும் சென்ற* மே 3ந் தேதி விட்ட இவ்வுத்தம கிங்கரரை சங்கரர் தம்முள்ளேயே கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ ஸி.எஸ். விச்வநாதய்யரவர்களிடமிருந்து ஸ்ரீ பெரியவாளைப் பற்றி நான் கேட்டறிந்த விஷயங்களில் சிலவற்றை இங்கே உங்களோடு பகிர்ந்து கொண்டு அவருக்கு நினைவஞ்சலி செலுத்துகிறேன்.

* * *

1929-ம் ஆண்டு இறுதி. கார்த்திகை தீபத்தை முன்னிட்டு ஸ்ரீ பெரியவாள் திருவண்ணாமலையில் முகாமிட்டிருக்கிறார்கள்.

ஒரு நாள் பெரியவாள் ஸி.எஸ்.வி.யைக் கேட்கிறார்கள்: "நான் எப்படி இருக்கேன்?"

இதைக் கேட்ட காலத்தில் பெரியவாள் ஜோதி க்ஷேத்திரமாம் திருவருணையில் ஞான ஜோதியாக இருந்தது மட்டுமில்லை; ரூபத்திலேயே ஜோதியாக இருந்து வந்தார்கள். இன்றும் அவர் ஜோதிமயந்தான். ஆனால் அப்போது இன்னமுங்கூடச் சொக்கப் பொன்னாக, சொக்கப்பனாகவே இருந்தாராம். 'ருக்மவர்ணம்', 'ஹிரண்மயபுருஷ:' 'ஹிரண்யவர்ணா', 'ஹைமவதி' என்றெல்லாம் வேதமும், 'பொன்னார்மேனியன்' என்று தேவாரமும், 'ஸுவர்ண வர்ண:', 'ஹேமாங்க:' என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமமும் சொல்வதெல்லாம் உபசாரமல்ல எனக் காட்டுவதே போல், "வானத்தின் மிசை அன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தாய்" பெரியவாள் விளங்கிய காலமாம் அது.

---

* இக்கட்டுரை 1976 'கல்கி' தீபாவளி மலரில் வெளியானது.

ஆனால் இப்போது பெரியவாள், "எப்படியிருக்கேன்?" என்று கேட்டபோது, மதிக்கொழுந்தாகத் தண்ணென இல்லாமல், அவரில் அக்னிக்ஷேத்திரத்துக்கு உரிய உஷ்ணத்தையே உணர்ந்தார் ஸி.எஸ்.வி.

நெருங்கிப் பழகி உரிமையோடு பேசுபவர் இன்று வாய் அடைத்து நின்றார். கைகால்கள் கொஞ்சம் ஆட ஆரம்பித்தன.

"கண்ணைக் கூசற மாதிரிப் பிரகாசமாயிருக்கே னோன்னோ? உடம்பும் நன்னா தளதளன்னு இருக்கோல் லியோ?" பெரியவாளே கேட்கிறார்.

ஆம், ஊனினை உருக்காமல், 'யவிஷ்ட துவிஷ்ட' என்று வேதம் சொல்லுமாப் போல் யௌவன புஷ்டியின் நிறைவாக அப்போதிருந்தார் ஸ்ரீ பெரியவாள்.

எதற்காக இவற்றைத் தாமே குறிப்பிடுகிறார் என்று புரியாமல், "ஆமாம், ஆமாம்" என்று குழறினார் மானேஜர்.

"ஆமாம், ஆமாம்–கிறாயே! இதுதான் நீ மானேஜர் பண்ணுகிற லக்ஷணமா? தகதகன்னு தளதளன்னு இருக்கிற ஒரு தடியாப் பிள்ளையைத் தனியா ஒரு ஸ்திரீ பார்த்துப் பேச விடறதா?"

ஸி.எஸ்.வி.யின் காலிலிருந்து சரேலென பூமி விலகினாற் போலிருந்தது. மேலே தணல் மலையைச் சரித்து விட்டாற்போல் இருந்தது. முந்தைய நாள் நிகழ்ச்சி நினைவில் வந்து சுட்டது.

அன்று ஒரு பெண்மணி வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத தன்னுடைய கஷ்டங்களைப் பெரியவாளிடம் விஞ்ஞாபனம் செய்து கொள்ள ஸ்ரீ ஸி.எஸ்.வி.யின் உதவியை மிகவும் உருக்கமாக வேண்டினாள்.

"சரி, அதோ கூடத்திலே பெரியவா ஏகாந்தமாகத்தான் இருக்கா. போய்க் குறையைச் சொல்லிக்கோ" என்று அவளை அனுப்பி வைத்தார் ஸ்ரீ ஸி.எஸ்.வி.

போனவள் நிமிஷத்துக்குள் திரும்பி விட்டாள். முகத்தில் ஏமாற்றம் கூத்தாடியது.

"ஏம்மா?" என்றார் மானேஜர்.

அவள் அழுமாட்டாக் குறையாகச் சொன்னாள்: "பெரியவாளை நமஸ்காரம் பண்ணினதுதான் தாமஸம், 'கூட யார் வந்திருக்கா?' –ன்னு கேட்டா. 'யாருமில்லை. கொஞ்சம் அந்தரங்கமா...'ன்னு நான் ஆரம்பிச்சதைக் காதிலேயே போட்டுக்காம பெரியவா எழுந்துட்டா. 'அந்தரங்கமா யிருக்கிற ஸ்வாமிகிட்டேயே அந்தரங்கத்தையெல்லாம் சொல்லு'ன்னு சொல்லிண்டு போயே போயிட்டா" என்றாள்.

அதைத்தான் இப்போது ஸ்ரீ பெரியவாள் குத்திக் காட்டியிருக்கிறார்கள்.

மானேஜர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னார். "அந்தப் பெண் ரொம்பப் பரிதாபமாகக் கேட்டுண்டுது. அதனாலே பெரியவா பொத்தப் பொதுவாக் கூடத்திலேதானே ஏகாந்தமாக இருக்கா என்பதால அனுப்பிட்டேன்." தம்மை மிஞ்சிய ஆவேசத்தில், "பெரியவாளை அந்த மாதிரி தப்பா யாராவது நினைச்சா அவா பொசுங்கிப் போயிடுவா" என்றார்.

"நினைக்கிறதற்கு ஆஸ்பதமான காரியத்தை நாம பண்ணிட்டு, அப்பறம் அப்படி நினைக்கறவா நாசமாப் போயிடுவான்னு சபிச்சா அது என்ன நியாயம்?" என்று சொடுக்கிய பெரியவாள் தெளிவாகத் தொடர்ந்தார்கள்.

"இதோ பார். நீ பரிதாபமாயிருந்தது என்கிறாயே! எனக்கு மட்டும் பரிதாபம் இல்லையா? ஆனால் இந்த

மடத்துக் கௌரவத்துக்கு ஹானி வருகிற தினுசில் எனக்குத் தனியாப் பரிதாபப்படக்கூட 'ரைட்' இல்லை. நானே ஒரு தனிச் சாமியாரா இருந்து, 'நமக்கு மனஸ் சுத்தப்பட்டுப் போச்சு'ன்னு உறுதியாயிடுத்துன்னா, அப்போ 'நமக்கு எத்தனை அபக்யாதி வந்தாலும் பரவாயில்லை'ன்னு ஒரு தியாகமா, பொண்டுகள் வேதனைப்பட்டுண்டு வரச்சே அவாளுடைய கஷ்டங்களை அந்தரங்கமாக் கேட்டுக்கலாம். ஆனா இந்த மடத்திலே நான் உட்கார்ந்திருக்கிறதனாலே அப்படித் தியாகம் பண்ற 'ரைட்' எனக்குக் கிடையாது. நான் இன்னிக்கு இருக்கேன், நாளைக்குப் போயிடுவேன். என் கியாதியோ அபக்யாதியோ என்னோட போற விஷயம். ஆனா இது பகவத்பாதாள் மடம். ஆயிரம், பதினாயிரம் காலத்துப் பயிர். எனக்கு முன்னாடி இரண்டாயிரம் வருஷமாயிருந்தது; எனக்கப்பறமும் சாச்வதமா யிருக்க வேண்டியது. அதன் கௌரவத்துக்குக் கடுகத்தனைகூட பங்கம் வரத்துக்கு இடமா, ஸந்தேஹாஸ்பதமா நாம எதுவும் பண்ணக்கூடாது. மடத்து கௌரவம்னு வரச்சே நம்மோட சொந்த அபிமானம், அநுதாபம், பரிதாபம் எல்லாத்தையும் மூட்டை கட்டி வைக்க வேண்டியது தான். 'இப்படிக் கட்டி வைக்க வேண்டியிருக்கே'ன்னு உள்ளூர சந்திரமௌலீச்வரர் கிட்டே வேணா நாம் அழுதுக்கலாமே தவிர, காரியம்னு வரச்சே வெளியிலே எத்தனை கடுமையாத் தெரிஞ்சாலும் மடத்தோட நல்ல பேருக்கு யாரும் எந்தத் தோஷமும் கல்பிக்காதபடிதான் நடந்துக்கணும்.

"இதோ, இன்னிக்குச் சொல்றேன். 'மானேஜர்'னு இருக்கிற நீ இதை என் ஷஷ்டியப்த பூர்த்தி வரை நடத்திக் காட்டணும். இனிமேலே ஸ்திரீகள் என்கிட்ட தனியா வந்து விஞ்ஞாபனம் பண்ணிக்க விடவே கூடாது. என்னைத்தான் அவா நம்பியிருக்கா, என்கிட்டே சொல்லாட்டா அவா மண்டை வெடிச்சுப் போயிடும்னு உனக்குத் தோணினா,

டமாரச் செவிடா இருக்கிற ஒரு புருஷத் துணையோட அவாளை அனுப்பு.''

'யதோக்தகாரி', 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்று இறைவனுக்கு ஒரு பெயருள்ளது அல்லவா? மேலே சொன்னதை அப்படியே செய்து காட்டினர் நம் குரு பெருமானும், அவரது அரும் காரியதஸ்தரும்.

ராமசந்திரமூர்த்தி ராஜ தர்மத்தை முன்னிட்டு ஸீதா தேவிக்கே அக்னிப் பரீட்சை வைத்தார். பெரியவாள் மட தர்மத்தை முன்னிட்டுத் தாமே அக்னியில் இறங்குவார்.

அந்த அக்னிக்கு நம்மை உருக்குவதில் உள்ள சக்தியால்தான், எளிதில் உணர்ச்சி வசப்படாதவரும், பெரியவாளைப் பற்றிய விஷயங்களையும் சகஜமாகவே சொன்னவருமான விச்வநாதய்யர் இந்தச் சம்பவத்தைச் சொல்கையில் மட்டும் கண் கலங்கி விட்டார்.

மடத்து ஆசரணைகளையும் கௌரவத்தையும் அநுஸரித்தே போவதால் பலரை ஒதுக்கி வைத்து வருத்தத் தான் வேண்டியிருக்கும். ஆனால் வெளியில் கடுமையாயினும், உள்ளே கருணையேயான பெரியவாள், ஸ்தூலத்தில் ஒதுக்கியவர்களுக்கும் சூக்ஷ்மத்தில் அருள்பாலித்துத்தான் வருவார். ஒரு பங்கு கூடுதலாகவேகூடப் பாலிப்பார். மேலே ஒரு பெண் ஏமாறிப் போனாளே, அந்த ஏமாற்றந்தான் நமக்குத் தெரிந்தது. ஆனால் பிற்பாடு அவளது பிரச்னை களையும் பெரியவாளின் அருள் தீர்த்தே இருக்கும்.

* * *

ஸ்ரீ சந்திரசேகரேந்திரர் இந்திரிய நிக்ரகத்தின் விக்கிரகம். இருந்தாலும் தம்மையே சோதித்துக் கொண்டு நம்மைச் சோதிப்பார். இன்னொன்று பார்ப்போம்.

திடுமெனப் பெரியவாள் நிர்ஜல உபவாஸம் தொடங்கி விட்டார். ஒரு நாள், இரண்டு நாள் என்று ஓடிக் கொண்டே இருந்தது. உபவாஸமும் நீடித்தது.

என்ன காரணமாக இருக்கும் என்று ஸி.எஸ்.வி.யும் மற்றவர்களும் பல அநுமானங்களைச் செய்த போதிலும், இதுதான் என்று தீர்மானிக்க முடியவில்லை. அப்போது பெரியவர்களுக்கு பிக்ஷை தயார் செய்து வந்த பிரம்மசாரியைக் கூப்பிட்டு விசாரணை செய்யலானார், ஸ்ரீ ஸி.எஸ்.வி.

ஸாதுவான அந்தப் பையனுக்கே அப்போதுதான் உண்மை பளிச்சிட்டது. அழுதுவிட்டான். "என் தப்பினால் தான் மாமா, பெரியவா இப்படிக் காயக் காயக் கிடக்கிறா!" என்றான்.

அவன் செய்த தப்பு என்ன தெரியுமா? பிறத்தியாரிடம் அபிமானத்தை மூட்டை கட்டி வைப்பதுபோல் பெரியவாளிடங்கூட அபிமானத்தை மூட்டை கட்டி வைக்க வேண்டிய சந்தர்ப்பமும் உண்டு என்பதை அறியாததுதான் அவன் செய்த தப்பு.

பிக்ஷையில் இவன் ஏதோ ஒரு கீரையைப் பக்குவம் செய்து வைத்திருந்தான். நல்ல கீரையாக இருந்ததால் சற்று அதிக அளவிலேயே வைத்திருந்தான். பெரியவாள் அவ்வளவையும் அமுது செய்திருக்கிறார்கள். இதைப் பார்த்துச் சந்தோஷித்த பிரம்மசாரிக்கு 'அபிமானம்' வந்து விட்டது, மறுநாளும் அதை நிறையத் தயாரித்து பிக்ஷையில் சேர்த்திருந்தான். அன்றும் அதனைப் பெரியவாள் உட்கொண்டிருந்தார்கள். மூன்றாம் நாளும் கீரை தொடர்ந்தது. அன்று பெரியவாள் பிக்ஷை முடித்தபின், "மூன்று நாளாகக் கீரை" என்றார்கள்.

பெரியவாள் ஷொட்டு கொடுப்பதாக மகிழ்ந்தான் பிரம்மசாரி. "பெரியவா ருசிச்சுச் சாப்பிடறதாகத் தெரிஞ்சதாலேதான் இன்னிக்கும் பண்ணினேன்" என்று சொல்லிவிட்டான்.

அதில் பிடித்த அனர்த்தம்தான் இந்தக் கடும் உபவாஸம்.

அறியாத்தனத்தால் செய்த காரியத்துக்காக அழுத பிரம்மசாரியிடம் ஸி.எஸ்.வி., "சரி, இங்கே அழறதை ரெண்டு பேருமாப் போய் பெரியவாகிட்டேயே அழுது உபவாஸத்தை முடிக்கச் சொல்லி முறையிடுவோம்" என்றார்.

ஆனால் பெரியவாள் இவர்களை அழவிடவில்லை. பிரம்மசாரியிடம் அன்பு மயமாகச் சொன்னார்: "உங்கிட்ட என்ன தப்பப்பா? உங்கிட்ட கோவிச்சுண்டு நான் உபவாஸம் இல்லை. எனக்கு ஜிஹ்வா சாபல்யம் (நாவுச் சபலம்) போகலை என்கிற மாதிரி நான் நடந்துண்டா, அதுக்கு என்னை நானே தண்டிச்சுக்கத்தானே வேணும்?"

மானேஜரைப் பார்த்துச் சொன்னார்: "இந்த மாதிரி நான் ஒரு ஷாக்-ட்ரீட்மெண்ட் தராட்டா, இவன் நித்தியமும் இந்தக் கீரைக்காக யாரிடமாவது சொல்லி ஏற்பாடு பண்ண வேண்டியிருக்கும். பக்தாளும் சந்தோஷமாப் போட்டி போட்டுண்டு கொண்டு வந்து கொடுப்பா. ஆனா, வேறே தினுசான ஜனங்களும் இருக்கத்தானே செய்வா? அவா இதைக் கேள்விப்பட்டுட்டு, 'சங்கராசாரியாருக்குத் தினமும் கீரை கேக்கிறதாம்'னு சொல்லுவா. என்னை யார் திட்டினாலும், கொட்டினாலும் பரவாயில்லை. ஆனா என்னைத் திட்டறவா *சங்கராச்சார்யார்*-ங்கிற பேரைச் சொல்லி-ன்னா திட்டுவா? என்னாலே பகவத்பாதாள் பேருக்குத் திட்டு கிடைக்கிற மாதிரி ஆக்கலாமா?"

* * *

ஆதி ஆசாரியாளின் பெயர், அவரது ஸ்ரீமடத்தின் பெயர் இவற்றையே கண் குத்திப் பாம்பாகக் காத்து வரும் சாக்ஷாத் பெரியவர்கள் செய்யவிருந்த ஒரு காரியமே மடத்தினருக்கு அவ்வளவு உவப்பாக இல்லை. அப்போது அவரைவிடவும் இவர்கள் மடத்தின் கௌரவத்தில் தாங்களே அதிக அக்கறை கொண்டிருந்ததாக நினைத்தார்கள்!

அந்தக் காரியம் என்னவெனில், பெரியவாள் வேறொரு ஸ்வாமியாரின் இருப்பிடத்துக்குத் தாமே செல்லவிருந்தது தான். சமயத் தலைவர்கள் யாவரும் சேர்ந்து செயலாற்றினால் தான் சக்தி வாய்ந்த முறையில் ஆஸ்திகத்துக்குப் புது விழிப்புத் தர முடியும் என்று கருதி இத் திசையில் பல அற்புதத் திட்டங்களைச் செயற்படுத்தி வந்த பெரியவாள், அப்பெரு நோக்கத்தை முன்னிட்டு, தாம் மகிமை மிக்க ஜகத்குருவாயினும் பிற ஸ்வாமியார்களிடமும் தாமே சென்றதுண்டு. அதில் குறிப்பாக ஓரிடத்துக்குச் செல்வதைத் தான் மடத்தினர் ரஸிக்கவில்லை. மடத்தின் கௌரவத்தை மதிக்காமல் அந்த ஸ்வாமியாரோ அவரைச் சேர்ந்தவர்களோ ஏதேனும் இடக்காகச் செய்துவிடப் போகிறார்களே என்று அவர்களுக்குக் கவலை.

ஆனால் பெரியவாள் தீர்மானமாகப் புறப்பட்டு விட்டார்.

ஸ்ரீமடத்தினர் நினைத்ததற்கு நேர்மாறாக ஸ்வாமியார் அதி சிறப்பான முறையில் பெரியவாளைக் கௌரவித்து வரவேற்றார். அவரது திட்டங்களுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வாக்களித்தார்.

பிற்பாடு ஸி.எஸ்.வி., "பெரியவாளுக்குத் தெரியாத தில்லை. நாங்கதான் தப்பாக் கணக்குப் போட்டுட்டோம். அவா ரொம்ப கௌரவம் கொடுத்து நடந்துண்டுட்டா" என்றார்.

பெரியவாள் சிரித்தார். "நீ பாத்த மட்டிலும் அது வாஸ்தவந்தான். ஆனா ஒனக்கு ஒண்ணு தெரியாது. நான் மட்டும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்காட்டா ஒரு விஷயத்திலே அவா ஒன் மடத்துக்குத் துளி அவமானம் பண்ணியிருப்பா. அது என்னன்னா, அங்கே வேறே யார் போனாலும் சரி, அவாளைவிட அந்த ஸ்வாமியார்தான் ஒரு 'இன்ச்'சாவது உசரத்தில உக்காருகிற வழக்கம். எந்த இந்திரனானாலும் சந்திரனானாலும் அந்த இடத்திலே ஸ்வாமியாருக்கு ஒரு 'இஞ்ச்'சாவது கீழேதான் உக்காரணும். அப்படித்தான் அவா வழக்கம். அவாளை நான் குத்தம் சொல்ல வரவில்லை. ஆனா இந்த மாதிரி என்னைவிட உசந்த ஸ்தானத்திலே அவர் உக்கார்ந்திருந்தா நீ ஒன் மடத்துக் கௌரவமே போயிடுத்துன்னுதானே துக்கப்பட்டிருப்பே? நான் அங்கே போறச்சேயே குறிப்பாப் பார்த்துண்டுட்டேன். எனக்கு நீ மணை போட்டா அந்த மணையைவிட உசரமான மணை அவருக்குப் போடணும், எனக்கு இங்கேயிருந்தே சிம்மாசனம் கொண்டு போய்ப் போட்டா அதைவிட அவருக்கு உசரமான சிம்மாசனம் போடணும்னு அவரைச் சேர்ந்தவா ஏற்பாடு பண்ணிண்டு தினுசு தினுசா மணைகள், சிம்மாசனங்கள் எல்லாம் தயார் பண்ணிண்டு இருந்தா. அதனாலேதான்....."

ஸி.எஸ்.வி.க்கு உடல் புல்லரித்தது. 'ஓஹோ, அதுவும் அப்படியா?' என்று வியந்து கொண்டார்.

மேற்படி இடத்தில் ஸ்வாமியார் பெரியவாளை வெளியிலிருந்து உள்ளே அழைத்துச் செல்ல, சற்றும் எதிர்பாராத ஓரிடத்தில் பெரியவாள் சடக்கென்று தரையிலேயே குக்குடாஸனம் போலப் போட்டுக் கொண்டு அமர்ந்து விட்டார்கள். அதாவது தமது இடது பாதத்தைத் தரையில் குத்திட்டு ஊன்றிக் கொண்டு, அந்தக் குதிகாலையே ஆஸனமாகக் கொண்டு அதன் மீது அமர்ந்து விட்டார்கள்.

உடம்பை ரப்பர் பந்தாக்கிக் கொண்டுவிட்ட நம் பெரியவாளால்தான் துளிக்கூடச் சிரமமின்றி இப்படிப்பட்ட விசித்திர 'பாஸ்ச்சர்'களில் மணிக்கணக்காக இருக்க முடியும்.

பெரியவாள் மணையில் அமர்ந்திருந்தால் ஸ்வாமியார் பக்கத்திலேயே அதைவிட உயர்ந்த மணையில் அமர்ந்திருக்க முடியும்; இவர் சிம்மாஸனத்தில் வீற்றால், அவர் அதனினும் உயர்ந்த ஒன்றில் வீற்றிருக்க முடியும். ஆனால் பெரியவாள் தரையில் உட்கார்ந்தபோது, பக்கத்தில் இதைவிட உயர்ந்த தரைக்கு அவர் எங்கே போக முடியும்? வேறு வழியில்லாமல் அவரும் தரையிலேயே உட்கார வேண்டியிருந்தது.

ஆனால் அவருக்கு இந்தக் குதிகால் விநோதங்கள் வருமா? அதனால் சப்பணமிட்டே அமர்ந்தார். பெரியவாள் தம் அங்கத்தாலேயே ஆக்கிக் கொண்ட ஆஸனம் அதைவிட ஓரிரு அங்குலமாவது உயரமாகத்தான் இருந்தது.

"நான் அங்கே போனதற்கு ஒன் மடத்தின் கௌரவத்தைப் போக்கிவிடவில்லை" என்று மீண்டும் குறும்பு செய்தார் குருநாதர் — ஸி.எஸ்.வி.க்கே அந்தக் கௌரவத்தைக் கசடறக் கற்பித்தவர்.

* * *

இங்கே மடத்தின் கௌரவத்தைப் பற்றிப் பெரியவாளை விட அதிக அக்கறை காட்டிச் செல்லக் குட்டுப் பெற்றுக் கொண்ட ஸி.எஸ்.வி மடத்தின் திரவிய வரவு-செலவு விஷயத்தில் பல முறை பெரியவாளோடு சற்று வெளிப்படவே பிணங்க நேரிடுமாம். ஸ்ரீ மடத்தின் வருவாயைக் கருத்தில் கொண்டு வசதி வாய்ந்த ஊர்களில் முகாமிடலாம் என்று ஸி.எஸ்.வி எண்ணும்போது, பெரியவாளோ பிக்ஷை நடத்தவே சௌகரியமில்லாத ஒரு கிராமத்தில் தங்குவார்களாம். உடனேதான் இருவருக்கும் ஸ்வாதீனச் சண்டை வந்துவிடும். பிறகு தெரியுமாம், பெரியவாள் அங்கே

போகாததற்குக் காரணம் இருக்கவே செய்திருக்கிறது என்று. ஸி.எஸ்.வி. எண்ணிய ஊரில் மடத்துக்கான ஜாகையைச் சேர்ந்த சாரியிலேயே யாராவது இறந்து போயிருப்பாராம். இம் மாதிரியிருப்பின் ஆசௌசத் தீட்டால் மடம் அங்கு முகாமிடவே முடியாது. அல்லது அந்த ஊரில் ஏக மழை பெய்து, வெள்ளம் வந்து, வாராவதி உடைந்து வெளித் தொடர்பே துண்டிக்கப்பட்டிருக்குமாம். "ஆஹா, அங்கு போகாததே நல்லது" என்று நிம்மதியாகப் பெருமூச்சு விடுகிற மாதிரி இப்படி ஏதேனுமொன்று நடந்திருக்குமாம்.

"இருந்தாலும் பெரியவா எங்களுக்கு ஒரு உத்யோகம்னு கொடுத்து, நாங்க அன்றாடக் காரியங்களைக் கவனிக்கும்போது அவாளுடைய திரிகால ஞானம் எங்களுக்கு அப்பப்போ மறந்துதான் போயிடும். அதனாலே அவாள் அபிப்பிராயத்துக்கு வித்தியாசமாக நானே நிறையத் தடவை நினைச்சதுண்டு" என்று கூறிய விச்வநாதய்யர் ஓர் உதாரணம் காட்டினார்.

1933 ஸெப்டம்பர் மத்தியில் ஸ்ரீ பெரியவாள் தஞ்சை மாவட்டத்திலிருந்து காசி யாத்திரை சென்று கொண்டிருந்த போது அவ்வளவாக வசதியில்லாதிருந்த சமயம். அக்காலத்தில் ஸ்ரீமடத்துப் பரிவாரமோ மிக அதிகம். இத்தனை பட்டாளத்துடனும் தமிழக, ஆந்திர எல்லையைத் தாண்டிய பின் வடக்கத்திக்காரர்கள் எந்த அளவுக்கு பிக்ஷை, காணிக்கை முதலியன நடத்துவார்களோ என்று ஸி.எஸ்.வி. உள்படப் பலருக்குக் கவலையாகவே இருந்ததாம். ஆனால் பெரியவாளின் ஸங்கல்பம் காமாக்ஷியின் ஸங்கல்பமே அல்லவா? அதனால் சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெற்று, வட புலத்திலும் ஸ்ரீ காமகோடி பீடத்தின் புகழ்க் கொடியைப் பரப்புவதாக அமோக வெற்றியுடன் காசி யாத்திரை பூர்த்தி பெற்றது.

இந்த யாத்திரையின்போது ஆந்திர குக்கிராமம் ஒன்றில் பெரியவாள் முகாமிட்டபோது ஸ்ரீ ஸி.எஸ்.விக்குப் பொத்துக்

கொண்டு வந்து விட்டதாம். "எடுத்துச் செலவழிப்பதற்கு நம் மடத்தில் என்ன கொட்டிக் கிடக்கிறது? இந்தத் தரித்திரம் பிடித்த ஊரில் இத்தனை யானையையும் ஒட்டையையும் ஜனங்களையும் கட்டிச் சமாராதனை செய்வதென்றால் எப்படி?" என்கிற ரீதியில் பெரியவாள் காதுபடப் பொரிந்து தள்ளி விட்டாராம்.

பெரியவாள் அவரைக் கூப்பிட்டார். சாந்தமாக, "நீ ஏன் பதட்டப்படறே? நாம நல்ல காரியத்தை உத்தேசிச்சுப் புறப்பட்டிருக்கோம். நம் லக்ஷ்யம் நன்னாயிருந்தா அம்பாள் கை கொடுக்காமப் போவாளா? அவதானே எல்லாருக்கும் படியளக்கிறா? நமக்கும் நிறைய அளப்பா" என்றாராம்.

மறுநாள், விச்வநாதய்யரால் நம்பவே முடியவில்லை! அந்தக் கிராமத்தில் ஏதாவது திருவிழா நடந்ததா, அல்லது சந்தை கூடிற்றா, அல்லது இப்படி ஏதுமே நடக்காமல் பெரியவாளின் சக்தி மட்டும்தான் வேலை செய்ததா என்று அவருக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் சொல்லத் தெரிந்தது, மறுநாள் காலையிலிருந்து அந்த நிர்மாநுஷ்யக் குக்கிராமத்தில் புற்றீசலாகப் பக்தர்கள் பெரியவாளை வழிபட வந்து கொண்டேயிருந்ததுதான். வந்தது மட்டும் இல்லை. அக்காலத்தில் வெள்ளி ரூபாய் நாணயம் வழங்கி வந்ததல்லவா? வந்த பக்தர்கள் யாவரும் இப்படி நாணயங்களைக் கொண்டு வந்து கொட்டினார்கள்.

"நான் மடத்திலே இருந்திருக்கிற இந்த நாற்பது வருஷமா (இதை ஸி.எஸ்.வி. என்னிடம் கூறியது சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு) அந்த மாதிரி ஒத்தை ஒத்தை ரூபாயா வந்து குன்று மாதிரி குவிஞ்சதேயில்லை! மடத்து ஜாகையிலே எல்லாத்தையும் சேர்த்துக் குவிச்சு எண்ணிட்டுப் படியாலே எடுத்து எடுத்துச் சாக்கிலே போட்டுக் கட்டினோம். பெரியவாள், 'அம்பாள் படி அளப்பாள்னு சொன்னேன். ஒனக்கு நம்பிக்கைப் படலை. இப்ப நீயே படியாலே அளந்து அளந்து கொட்டறே, பாத்தியா?'-ன்னா! பெரியவாளுக்குத்

தெரியாதது எதுவும் இல்லை. பெரியவா செய்ய முடியாதது எதுவும் இல்லை. இருந்தாலும் எங்களைக் கூட வைச்சுண்டு ஆட்டம் போட்டிருக்கா.''

* * *

பெரியவாளின் சரித்திரம் ஒரு கற்கண்டு மலை. அதில் ஒரு பெரிய பாறையை ருசித்தவர் ஸி.எஸ். விச்வநாதையர். ஒருத்தர் ருசித்தால் அவரோடு தீர்ந்து விடாமல், மற்றவர்களுக்கும் கொடுக்கக் கொடுக்க வளர்கிற இந்த அக்ஷயக் கற்கண்டிலேயே சில பொடிகளைத் தீபாவளி ஸ்வீட்டாக உங்களுக்குத் தந்திருக்கிறேன்.

# சிரிக்க வைத்தே சிறக்க வைப்பார்!

குருநாதன் முகத்தில் குறு(ம்பு) நகை. விளையாட்டுப் பிள்ளை போல் கண்களில் ஓர் ஒளி. எதிரேயிருந்தவரிடம் கேட்கிறார்: "இப்போ இங்கே இருந்து போறானே, அவன் பேர் என்ன?"

"ஸ்ரீகண்டன்."

"இல்லை. அப்படிச் சொன்னால் ஸர்க்கார் அபிப்பிராயத்துக்கு விரோதமாயிடும்."

ஏன் என்று புரியாமல் அடியார் விழிக்கிறார். அவரை விழிக்க விட்டு சிறிது வேடிக்கை பார்த்த பின் பெரியவாள் சொல்கிறார்: "திருக்கண்டன்–னு சொன்னாத்தான் ராஜாங்கத்தார் ஒப்புக்கொள்வா."

அடியாருக்கு புரிந்து விடுகிறது. பெரியவாளோடு சேர்ந்து அவரும் சிரிக்கிறார். 'ஸ்ரீ' என்று வருமிடத்தி லெல்லாம் 'திரு' என்று மாற்ற வேண்டும்; ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர் போன்ற பெயர்களைத் திருவரங்கம், திருப்பெரும்புதூர் என்றே இனி வழங்க வேண்டும் என்று தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக அன்று காலைதான் செய்தி வெளியாகியிருந்தது. அதனால் ஸ்ரீகண்டன் என்று மட்டும் சொல்லலாமா?

பெரியவாள், "இந்த இடத்திலே ஸ்ரீகண்டனை திருக்கண்டன்–னு சொல்றது தப்பு; தெரியுமோ?" என்று கேட்கிறார். அது எப்படி தப்பு என்பதையும் விளக்குகிறார்.

"ஸ்ரீ என்றால் லக்ஷ்மி என்று மாத்திரம் நினைத்துக் கொண்டு, 'ஸ்ரீ'யைத் 'திரு' ஆக்கு என்கிறார்கள். ஆனால் 'ஸ்ரீ' என்பதற்கு வேறே பல அர்த்தங்களும் உண்டு. பாம்பு, பாம்பின் விஷம் இதற்கெல்லாங்கூட 'ஸ்ரீ' என்று பெயர். மங்கள காரியங்களுக்கு உதவாத செவ்வாய்க் கிழமைக்கு 'மங்கள வாரம்' என்று பெயர் வைத்த மாதிரி பாம்பை

'ஸ்ரீ' என்று சொல்வதுண்டு. 'ஸ்ரீகண்டன்' என்றால் லக்ஷ்மியைக் கண்டத்தில் (கழுத்தில்) வைத்துக் கொண்டிருக்கிற மஹா விஷ்ணு என்று அர்த்தமில்லை. மஹாவிஷ்ணு லக்ஷ்மியைக் வக்ஷஸ்தலத்தில் (மார்பில்)தான் வைத்துக் கொண்டிருக்கிறாரே தவிரக் கண்டத்திலே அல்ல. ஸ்ரீகண்டன் என்றால் ஸரியான அர்த்தம். ஸ்ரீ என்கிற பாம்பைக் கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கிற, அல்லது ஆலஹால விஷத்தைக் கழுத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நீலகண்டனான பரமசிவன் என்பதே.''

இப்படி அறிவுச் சுடர் தெறித்த பெரியவாளின் முகத்தில் மறுபடியும் நகைச் சுவையின் பச்சை ஒளி மேவியது.

''திருக்கண்டனோ இல்லையோ, அவன் திருடன்'' என்றார். மேலும் பரபரப்பூட்டும் விதத்தில், ''நீங்கள் எல்லோருமே திருடாள்!'' என்றார்.

''புரியவில்லையா? சீமான், சீனிவாஸன்–னு எல்லாம் சொல்கிறது எதை? ஸ்ரீமான், ஸ்ரீனிவாஸன் என்பதைத்தானே? 'ஸ்ரீ' தமிழில் 'சீ' ஆகுமென்றால், 'சீ' யை யெல்லாமும் இனிமேல் ''திரு'' என்றுதானே சொல்லணும்? என்னை 'ஜகத்குரு' என்று டைட்டில் கொடுத்து வைத்திருக்கிறீர்களோல்லியோ? அதனால் நீங்களெல்லாம் என் சீடர்கள்; சீ– டர்கள்; அதாவது திரு– டர்கள்.''

விழுந்து விழுந்து சிரிக்கிறார். அவர் மட்டுமா? அத்தனை பேருமே!

ஆனால் இந்தச் சிரிப்பிலேயே இதுபோன்ற மொழி பெயர்ப்புகளைக் குறித்து அவர்கள் சிந்தனையைச் சிறக்கவும் வைத்து விடுகிறார்!

ஜகத்குருவுக்கு உலகோர் அனைவரும் சீடர்தாம் எனினும், அவருக்கே நேராகக் கைங்கரியம் புரியும் பாரிஷதர்களை அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லலாம். தமது ஹாஸ்யப் பட்டாசை இவர்கள் மீதும் அவர் வீசுவதுண்டு.

இந்த சங்கரரின் அமாநுஷ்யப் போக்குக்கெல்லாம் மாநுஷமான அந்தக் கிங்கரர்களும் ஈடு கொடுத்து, 'மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல்' பணி செய்ததை நாம் எவ்வளவு போற்றிப் புகழ்ந்தாலும் போதாது. ஆயினும் அவர்களில் பலர் சராசரி மானுடராகவே இருந்ததால் அவர்கள் அடியார்களிடம் நடந்து கொண்ட விதத்தில் அந்த சராசரித்துவத்தின் குறைபாடுகள் நம்மைப் பாதித்து அவர்களிடம் குறைகாணச் செய்தது. சில சமயங்களில் பெரியவாளிடமுமே புகார் கொடுக்கவும் செய்திருக்கிறோம். அப்போது அவர் தமது ஆற்றிக் கொடுக்கும் ஆற்றலை நகைச்சுவையாகவே காட்டியிருப்பதும் உண்டு.

அவரது பாத பத்மம், கர கமலம், முக அரவிந்தம் ஆகியவற்றைப் போற்றியும், அவரையே பெரியதொரு தாமரையாக வர்ணித்தும் பாடிய பக்த கவி ஒருவர் இவ்வாறு குறையிரந்தார்.

பெரியவாள், "நான் பெரிய தாமரைன்னு பாடியிருக்கே நான் பெரிய தாமரைன்னா என்னை சுத்தி நிறையச் சேறு இருக்கத்தானே வேணும்" என்றார்!

பிறிதொரு சமயம், "என்னை சிவன்–கிறேள்.(கையை அழகாகச் சுழற்றி) சுத்தி 'கணம்' இருக்கோல்லியோ?" என்றார்.

அவர் அப்படிச் சொன்னதால் மெய்யாலுமே அவர்கள் அப்படிப்பட்டவர்தாம் என்று அர்த்தமாகி விடுமா என்ன? நாமெல்லாருங்கூட அந்த 'கண'த்தின் குணம் கொண்டவர் களாகவேதான் கால, தேசம் பார்க்காமல், ஒழுங்குக் கட்டுப்பாடும் இல்லாமல் பெரியவாளிடம் நம்முடைய அவிவேக முறையீடுகளைக் கூறிப் பிய்த்துப் பிடுங்கத் தயாராயிருந்த நிலையில் அவரது கிங்கரர்கள் கணமாக உருவம் காட்டினாலன்றி எப்படிச் சமாளிப்பது? நம்மிடமிருந்த அநுதாப, ஓட்டும் உளப்பாங்கில்தான்

பெரியவாள் அவர்களை மாத்திரம் பிரித்து அப்படிக் கூறியது.

தமது பாரிஷதர் மட்டுமின்றிப் பாரோர் அனைவருள்ளுமே ஹிரண்ய-ராவண-கம்ஸ ஜாதி குடி கொண்டிருப்பதையும் அவர் 'பொடி' வைத்துக் காட்டுவதுண்டே! பூர்வ அவதாரங்கள் அஸுர-ராக்ஷஸரை வதம் செய்தது போலன்றி, ஆசார்யாளவதாரத்தில் இறைவன் செய்யாமல் அனைவருக்கும் உபதேசமே செய்ததைச் சொல்லும் போதெல்லாம், "பூர்வ காலங்களில் **தனியாக** அஸுர ஜாதி என்று ஒன்று இருந்ததால் அதை அழித்து லோக க்ஷேமம் உண்டாக்க முடிந்தது. கலியிலே அப்படிச் செய்தால் லோகத்தில் யார் மிஞ்சுவார்கள்?" என்பாரே!

இதே போல அனைவரையும் 'இறக்கும்' இன்னொரு நுட்பமாக நகைச்சுவை மொழி: "**அநுஷ்டானம்** என்று தனியாக ஒன்று பண்ணுவோமோ, மாட்டோமோ என்பதால் நாம் பண்ணுகிற காரியங்களிலேயே பகவத் சிந்தனையை பகவத்பாதாள் போன்றவர்கள் சேர்த்துக் கொடுத்தார்கள். **போஜனம் நாம் ஒருபோதும் நிறுத்தாத காரியம்.** அதைச் செய்யும்போதே 'கோவிந்தா' 'கோவிந்தா' என்று ஒவ்வொரு கவளத்தையும் அள்ளிப் போட்டுக் கொண்டால் நாமும் ஒரு அநுஷ்டானம் பண்ணினதாகும்."

சீடர்களைச் சீண்டி விளையாடியது மட்டுந்தானா? குருவான தம்மையுமே எப்படியெல்லாம் பரிஹஸித்துக் கொண்டிருக்கிறார் சிறக்க வைக்கும் சிரிப்பாக மட்டுமின்றி உருக்க வைப்பதாகவும், உள்ளம் குருதி சுரக்க வைப்பதாகவும் கூட ஹாஸ்யம் செய்து கொண்டிருக்கிறார்!

Our sincerest laughter

With some pain is fraught

என்ற கவி வாக்கு எவ்வளவு உண்மை எனக் காட்டும் நகைச்சுவையில் தம்மையே நையாண்டி செய்து கொண்டிருக்கிறார்.

இருபதாண்டுகளுக்கு முன் காடராக்ட் ஆபரேஷன் ஆகிச் சில நாட்களுக்குப் பிறகு;

ஓர் அம்மாள் பெரியவாள் திருமுன் திடுமெனப் பாட ஆரம்பிக்கிறாள். பொருத்தமான பாடல். குரு ப்ரசம்ஸையாகத் தியாகையர் அருளியுள்ள '**நீ சித்தமு நிர்மலமு நிச்சலமநி**' என்ற தந்யாஸி ராகப் பாடல்.

சாஸ்திர தர்மத்திற்கே முற்றிலும் அடிபணிந்து வாழ்ந்து காட்டிய ராமபிரானைக் குருவாகத் துதிக்கும் பாடலை அதே குண நலம் படைத்த நம் குருவின் முன் பாட வேண்டுமென்று அப் பெண்மணிக்குத் தோன்றியது மிகப் பொருத்தந்தான். ஆயினும் ஏனோ அவள் உச்சரிப்பு சரியாயிருக்க வேண்டும் என்ற முக்யமான அம்சத்தைக் கவனிக்கவேயில்லை. ஸமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் க, ச, ட, த, ப முதலியவற்றிலுள்ள வல்லொலி, மெல்லொலி மாறுபாடுகளைக் கவனிக்காமல் பாடினாள். கிருதியில் ஓரிடத்தில், குரு அஞ்ஞான இருளைப் போக்கும் ஞான சூரியனாதலால் 'குருடே பாஸ்கருடு' என்றும், அடுத்து அவரே மங்கலம் நல்குபவர் என்பதால் 'குருடே பத்ருடு' என்றும் வருகிறது. இவ்விரு இடங்களிலும் 'gurude' என்பதை அவள் 'kurude' என்று பாடியது, 'நல்ல பாட்டைக் கெடுக்கிறாளே!' என்று வருத்தமே தந்தது.

அவள் போன பிற்பாடு குருநாதர் 'குருடு' பற்றிக் குறிப்பிட்டார். குருடு மட்டுமின்றிச் செவிடுமாகத் தம்மைக் காட்டிக் கொண்டவர், அவள் அவ்வளவாக உரத்த குரலில் இன்றி, அதிலும் பேச்சாக இன்றிப் பாட்டாகப் பாடியதில் ku–வுக்கும் gu–வுக்கும் எப்படி மாறுபாடு கண்டாரோ? "அவ பாடினது மட்டுமில்லே. நீ எழுதினாலும் அப்படித்தானே போடுவே?" என்று 'சீண்டினார்'! ஆம், தமிழில் ga–கார, ka–ரங்கள் இரண்டிற்கும் ஒரே 'க'தானே போட வேண்டும்?

பொட்டை, பொட்டை! இந்த gurudu நெஜமாகவே kurudu–தான்! நெஜத்தைத்தான் அவ பாடிட்டுப் போயிட்டா.

(கண்களைத் தொட்டுக்கொண்டு) இந்தக் குருட்டை ஆபரேஷன் பண்ணி ஸரி ஆக்கிக்கலாம். ஆனா, பூர்ணமான குரு—ன்னா இருக்க வேண்டிய ஞான த்ருஷ்டியிலே நான் (பொட்டை) குருடுதான். அதை ஆபரேஷன் ஸரி பண்ணாது!" என்று ஒரு போடு போட்டார்!

இது, 'குருடு'வை வைத்துச் செய்தது. 'மடாதிபதி', 'பீடாதிபதி' என்பவைகளை வைத்து அவர் சிரித்து சிரித்து ஒரு சமயம் சொன்னதும் அவரொருத்தரால்தான் முடியும்! 'மடம்', 'பீடம்' என்பவற்றில் நடுவே வரும் ta—வைத் தமிழ் மொழியில் எழுதும்போதும், தமிழ் வழக்கில் பேசும்போதும் da—வாகத்தானே ஆக்கிவிடுகிறோம்! இது தொடர்பாக, இங்கே எழுதுவதே அபசாரமோ என்று தயங்கும் விஷயத்தைத் தயக்கமே இல்லாமல், சிலும்பிச் சிலும்பிச் சிரித்தவாறே சொன்னார் – மடத்தனத்துக்கு அதிபதிதான் தாம் சொல்லும் மடாதிபதி; பீடைக்கு அதிபதிதான் பீடாதிபதி என்று!

(Gurudu—வைக் Kurudu—எனவும், matam, peetam என்பதை madam, peedam எனவும் தமிழில் எழுத வேண்டியிருப்பது போலவே இன்னும் பல உண்டு. இவைப் பற்றியும் ஒருநாள் நெடுநேரம் பல உதாரணங்கள் வேடிக்கை விளையாட்டுப்போல் காட்டிப் பேசினார். 'மதம்' என்று சமயத்தைச் சொல்லும்போதே 'mad(h)am' என்று d(h)அகாரமாகத்தானே சொல்கிறோம்? அது ஆனைக்குப் பிடிக்கும் மதத்தையும், உவமையணியாகத் திமிர்த்தனத்தையுந்தான் குறிக்கும். சரியான உச்சாரணம் 'தகப்பன்' என்பதில் வரும் 'த்'வாக 'mat(h)am' என்பதுதான். அவ்வாறு சொன்னால் மதியால் ஆலோசித்துப் பெறப்பெற்ற கொள்கை என்று பொருள். "வாஸ்தவத்தில் நாம் mat(h)a-த்தை mad(h)a-மாகத்தானே பண்ணிக் கொண்டிருக்கோம்? உச்சரிப்பும் அப்படியே பண்ணுகிறோம்" என்றார்.

இதெல்லாம் தமிழில் ஒலிக்கான எழுத்து இல்லாததால் தவிர்க்க முடியாமல் ஏற்படுவது. ஆனால் தமிழ்க் கவி மரபில்

தள்ளிய ஸ, ஹ, ஷ, ஷ ஆகிய கிரந்தாஷரங்களையும் உரைநடையில் கூட தள்ளிச் சிரிப்புக்கிடமான தப்பிதங்கள் ஏன் செய்ய வேண்டும் என்று கேட்டார்.

"'மந்தஹாஸத்'த்தை 'மந்தகாச'மாக்கிப் புன்னகையை slight T.B ஆக்குவானேன்? என்றுக் கேட்டு புன்னகையாயின்றிப் பெருநகையே புரிந்தார்! (மந்தமான காசம் என்றால் லேசான எலும்புருக்கி நோய்தானே?) ஜாதகம், ஸாதகம் (ஸாதக-பாதகம் என்பதில் வருவது), சாதகம் (வானிலிருந்து பெய்யும் மழைத் துளியை மட்டுமே பருகும் chaatakam என்ற பறவை) என்ற மூன்றையும் 'சாதகம்' என்று எழுதிக் குழப்புவானேன் எனக் கேட்டார். 'ஜபிப்பது' என்பதை '·பிப்பது' என்று எழுதிச் செய்யும் அர்த்த விபரீதத்தை எப்பேர்ப்பட்ட சிரிப்புடன் எடுத்துக் காட்டினார்? 'ஹ'வைக் 'க' ஆக்குவதில், வணங்கியோரின் துயரைப் போக்கும் 'பிரணதார்த்திஹரன்' வணங்குவோருக்குத் துயரை உண்டாக்கும் 'பிரணதார்த்திகரன்' ஆகி விடுகிறானே என்றார்! 'ரஸனை' என்பதே சுவை;'ரச(cha)னை' என்றால் உருவாக்குவது, உண்டாக்குவது எனப் பொருள். தற்காலத்தில் இலக்கியச் சுவையுணர்வை 'ரசனை' என்றெழுதுவது உண்மையில் இலக்கிய ', படைப்பைத்தான் குறிக்கும் என்று காட்டினார். அவசியமான இடத்தில் வட சொற்களை ஒற்றெழுத்திலேயே தொடங்கலாம்; இல்லாவிடின் 'த்ருட(திடமான) மனம் வேண்டும்' என்பது 'திருட (திருடுவதற்கு) மனம் வேண்டும்' என்றாகுமே என நகைத்தார்!

உலகனைத்தாலும் துதிக்கப்படுகிறோமே, அடி நாஸ்திகர் உள்பட எவரும் தம்மை இகழ மாட்டேன் என்கிறார்களே என்பதாலேயே தம்மைத் தாமே பொட்டையர், மடமைக்கு அதிபதி என்றிப்படியெல்லாம் தாழ்த்திக் கொண்டார் போலும்!

'பெரியவாள்' என்கிறோமே, அதை மட்டும் விட்டு வைத்தாரா? மனப்புண்ணை ஆற்றத் தமக்கு ஏது சக்தி? தாமே நன்றாகக் காயப்படுத்தும் பெரிய 'வாள்' அல்லவா என்று கூறிச் சிரித்தே புண்ணை ஆற்றினார்!

சட்டென்று பகவத்பாதாள் வாக்கு நினைவு வந்தது [1]**"விவேக விஜ்ஞான மஹா(அ)ஸி"** என்று அவர் கூறியிருப்பது!

'மஹா அஸி' என்றால் 'பெரிய வாள்'. விவேகத்தில் பழுத்த அநுபவ ஞானம் என்ற பெரிய வாளினாலேயே அநாதியான மாயா பந்தத்தை வெட்டி யெறிய முடியும் என்கிறார். எனவே மாயை களையவே வந்த விவேக விஜ்ஞான விக்கிரஹமான ஸ்ரீசரணரைப் 'பெரிய வாள்' என்பதும் சரிதானே?

இதனை நான் அவரிடம் நிவேதிக்க, குருபிரான் குழந்தையாகக் குதூஹலித்தார்! "ஞானாஸி"(ஞானவாள்) என்று கண்ணனும் மொழிந்திருப்பதை எடுத்துக் காட்டினார்.

கடோபநிஷத்தில் வாள்முனை நடையாகவே ஞான ஸாதனையைக் கூறி, குருவை அடைந்தே ஸாதனையில் ஸித்திகாணப் பணித்திருப்பதையும் விண்ணப்பித்தேன். அவ்வாறு வாள் முனையையும் மழுங்கச் செய்கிற குரு அதைவிடப் 'பெரிய வாளா'கத்தானே இருக்க வேண்டும் என்று கூற, மிகவும் ரஸித்தார். "குருன்னா ஹிம்ஸை ஸ்வருபம்னு ருபிச்சுட்டே!" என்று விசித்ர வியாக்யானமும் செய்து சிரித்தார்!

'பெரியவா' என்றுதானே பேச்சு வழக்கில் செல்கிறோம்? காய், பா, வாய் ஆகிய வார்த்தைகளைப் பேச்சில் கா, பா, வா என்றே சொல்வதை அவர் குறிப்பிட்டு, "வா(ய்) மூடாம ஓயாமப் பேசிண்டிருக்கே னோல்லியோ? அதுதான் பெரிய வா" என்று சிரித்தார்.

"மஹா வாக்கியம் (வேதத்தில் வரும் ஜீவ பிரம்ம ஐக்கிய வாக்கியம்) உபதேசிக்கிறது மஹா வாயாகத்தானே இருக்க வேண்டும்?" என்றேன். ஏதோ ஒரு துணிச்சலில் இதுப்போலப் பல சமயங்களில் சொல்லியிருக்கிறேன்.

---

1. 'விவேக சூடாமணி', ச்லோ. 147
2. கீதை, IV, 42,
3. III. 14

"ஒனக்கு மஹா வாயாப் போயிடுத்து! நீயும் பெரியவா தான்" என்று அத் தன்னிகரில்லாப் பெரியவர் சிரிக்க இச் சிறியேனும் அதில் கலந்து கொண்டேன்.

ஸ்ரீஜயேந்திர ஸ்வாமி ஆச்ரமமேற்றுச் சுமார் இருபதாண்டாகி, அவர் மத்திமப் பிராயத்தில் முன்னேறிய பின்னும் அவரைப் 'புது'ப் பெரியவாள் என்பது பொருந்தவில்லை என்ற ஓர் அபிப்பிராயம் ஏற்பட்ட சமயம். இனி அவரையே பெரியவர்கள் என்றும் நம் சரணரைப் பரமாச்சார்யர் என்றும் கூறலாம் எனச் சிலர் அன்பர் கருதினர். ஸ்ரீசரணர் செவிக்கும் விஷயம் கொண்டு வரப்பட்டது.

'பரமாசார்யர்' என்ற சொல் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் சைவ மடாலயங்களில் ஆதீன கர்த்தர்களுக்கே சூட்டப்படும் அடைமொழியாயிருப்பதால் அத்வைத மடாதிபரொருவரை அவ்வாறு சொல்வது மரபுக்கு மாறாகும் என்று ஸ்ரீசரணர் கூறினார். (ஆயினும் உலகம் அவர் சொன்னதில் அநேகமாக எதையுமே ஏற்காததற்கேற்ப, அவரது பெயர் விஷயமாக அவர் சொன்னதையும் ஏற்காமல் அவரைப் பரமாசார்யர் என்றே குறிப்பிடுவதாக ஆயிற்று!) "வித்யாஸம் தெரியணும், அவ்வளவுதானே? அப்படி யானால் புதுப் பெரியவாளைப் பெரியவா ன்னும் என்னைச் சின்னவான்னும் சொல்லிட்டாப் போச்சு!" என்று அவர் சிரித்தார். சிரிப்பினூடே தொடர்ந்து சொன்னது சிறந்த பண்பாட்டையும் தத்வைத்தையும் காட்டிக் கொடுத்தது "பால்யத்திலேந்து பெரியவா, பெரியவா-ன்னு கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போச்சு. பெரியவாளா மொழக்கின தெல்லாம் போறும்; யாருக்கும் தெரியாத சின்ன ஆஸாமியா எங்கேயாவது சுருட்டிண்டு கெடக்க மாட்டோமோன்னுத் தோணறது.அப்பப்பத்தான் தோணறதே தவிர அதுவே ஸ்டெடியா நெலச்சு நிக்கக் காணும்! அதனால்தான், மறுபடி மறுபடி அக்ஷதை போட்டுண்டு ஏதாவது ப்ளான், ஸ்கீம் போட்டுண்டே யிருக்கேன். சின்னவா, சின்னவான்–ன்னே எல்லோரும் சொல்ல ஆரம்பிச்சாலாவது 'சின்னவனாவேச்

சுருட்டிண்டு கெட'ன்னு அது வாயை, கையை அப்பப்பவும் கட்டிப் போடுமோ–ன்னு தோண்றது!'' என்றார்.

'மஹதோ மஹீயான்' எனப் பெரிதினும் பெரிதாக உள்ள தத்வமே 'அணோரணீயான்' என அணுவினும் அணுவாக இருப்பதுபோல மஹா பெரியவர் மிகவும் சின்னவராகவே தம்மைச் சொல்லிக் கொண்டவரன்றோ?

ஆயினும் அவரைச் 'சின்னவா' என்று சொல்ல எவருக்கேனும் மனம் வருமா? உலக நலன் ஒன்றே கருத்தாக அவர் போடும் ஒவ்வொரு ப்ளானையும் ஸ்கீமையும் விட்டுவிட்டுச் சுருட்டிக் கொண்டு கிடக்கும் 'சின்ன' நிலையையுந்தான் உலகம் விரும்புமா? அன்று சுமார் அறுபதாண்டு பீடாதிபத்யம் கண்டு த்வைத உலகுக்காக ப்ளானுக்கு மேல் ப்ளானாக, ஸ்கீமுக்கு மேல் ஸ்கீமாகப் போட்ட அவருக்கு வேண்டுமானால் உலகம் கடந்த அத்வைதத்திலேயே இனி இருப்போமெனத் தோன்றியிருக்கலாம்! பயனாளியான உலகம் எப்படி அதை ஏற்கும்? உலக காரணியான பராசக்தியும் அதன்பின் பதினைந்தாண்டுகூட அவரைத் திட்டங்கள் தீட்டிக்கொண்டே இருக்க நுந்திவிட்டு, கடைசி நாலைந்து ஆண்டுகளில்தானே ஓய்வளித்தாள்?

தாம் "பெரியவாளாகவே முழக்கிக்கொண்டு'' இருக்கத்தான் உலகம் விரும்புமே தவிரத் தம்மைச் சின்னவராக நினைப்பூட்டிக் கூப்பிடாது என்பதும் அவருக்குத் தெரியாதா? அதனால், 'பரமாசார்யர்' என்பது தள்ளப் பட்டப்பின் 'மஹா பெரியவாள்', 'மஹா ஸ்வாமிகள்' என்ற மரியாதைப் பெயர்களில் அவரைக் குறிப்பிடலாமென்று தெரிவிக்கப்பட்டபோது அதற்கு ஆக்ஷேபம் தெரிவிக்கவில்லை.

மீண்டும் அவரது நகைச்சுவை உணர்வு மலர்ந்தது "பக்தியிலேயும் மஹாப் பெரியவா– ங்கலாம். அப்டியில்லாட்டாலும் 'மஹா' பெரியவா–ங்கலாம்!'' என்று, அந்த இரண்டாவது 'மஹா'வுக்கு அவர் கொடுத்த நையாண்டி உச்சரிப்பு உண்டே!

அறிவில்லாதவனை 'மஹா' கெட்டிக்காரன் என்போமே; தகுதி மீறி ஏதேனும் சொல்பவரிடம், "மஹா' பெரியவன், சொல்ல வந்துட்டியாக்கும்!" என்போமே, அந்த 'மஹா' வையாக்கும் தமக்குத் தாமே சூட்டிக் கொண்டார் சின்னஞ்சிறு குழந்தையாகச் சிரித்த அந்த மஹா மஹா மஹா பெரியவர்!

பகல் சந்திரமௌளிச்வர பூஜை அப்போதுதான் முடிந்திருக்கிறது.

பிக்ஷைக்காரர்கள் எல்லாம் இந்தப் பக்கமாக வாருங்கோ" என்று உரக்க சொல்கிறார் மடத்துச் சிப்பந்தி ஒருவர்.

தமக்குத் தாமே பேசிக் கொள்வதுபோலப் பெரியவாள், "அப்போ நான்தான் அந்தப் பக்கம் போய் நிற்கணும்" என்கிறார். சிறிது போது செல்கிறது. "நான் தானே பிக்ஷைக்காரன்?" என்கிறார். இன்னம் சிறிது போது சென்ற பின் சொல்கிறார்: "(ஸமஸ்கிருதத்தில்) 'பிக்ஷை' என்று சொல்லி 'பிக்ஷைக்காரர்' என்றால் அது ஹோதாவாக இருக்கிறது. பிக்ஷை பண்ணி வைக்கிறவர்களும் அதைப் பெருமையாக எடுத்துக் கொள்கிறார்கள். ஸமஸ்கிருத 'பிக்ஷை' தான் தமிழில் 'பிச்சை' என்று ஆனது. 'பிக்ஷைக்காரர்கள்' என்பதையே 'பிச்சைக்காரர்கள்' என்றால் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்களா? நான்தான் பிச்சைக்காரன். பிச்சைப் போடுகிறவனா பிச்சைக்காரன்? வாங்குகிறவன்தானே பிச்சைக்காரன்?"

பிச்சாண்டி என்றும், பிக்ஷாடன மூர்த்தி என்றும் தமது உண்மை நிலையைச் சொல்லிக் கொண்டாரோ?

"ராமராஜ்யம், ராமராஜ்யம் என்கிறார்களே அப்படிப் பட்ட ராமர் இருந்த காலத்தில் நாம் இல்லையே என்று எல்லோரும் நினைக்கிறார்கள். எனக்கு நல்ல வேளையாக ராமர் பிறந்த காலத்தில் நாம் பிறக்கவில்லையே என்று ஸந்தோஷமாகத்தானிருக்கு" என்று பெரியவாள் கூறுகிறா ரென்றால் தூக்கி வாரிப் போடுகிறதா? ஹாஸ்ய

கலைஞரல்லவோ அவர்? ஸஸ்பென்ஸ், ஸர்ப்ரைஸ் எல்லாம் வைப்பதில் எல்லாம் வைப்பதில் தேர்ந்தவர் தொடர்கிறார்;

"ராமர் மநுஷ்யனாகத் தன்னை ரொம்பவும் குறைத்துக் கொண்டு க்ஷத்ரிய தர்மங்களையெல்லாம் சாஸ்திரப்படிப் பண்ணிக் காட்டியவர். அவர் காலத்தில் என் மாதிரி ஒரு ஸந்நியாஸியை, மடாதிபதியைப் பார்த்தால் என்ன பண்ணியிருப்பார்? அவரே ஓடிவந்து நமஸ்காரம் பண்ணியிருப்பார்! அதைவிட ஒரு கஷ்டம் உண்டா? அவர் காலத்தில் பிறக்காமல் இப்போ பிறந்திருப்பதால்தான் அவருக்கு நமஸ்காரம் பண்ணுகிற பாக்யம் எனக்கு கிடைத்திருக்கிறது!"

மஹா பூஜ்யர் என்று சொல்லப்பட்ட ஒரு நவீன கால ஸ்வாமிஜியை நாடிப்போய், ஏமாந்து திரும்பிய ஓர் அடியார் பெரியவாளிடம் தம் தாபத்தை கொட்டிக் கொண்டிருந்தார். "பூஜ்யருமில்லை; ஒன்றுமில்லை. ஞான சூன்யந்தான் கொஞ்ச நாளிலேயே தெரிந்து விட்டது" என்றார்.

பெரியவாளின் கண்களில், இதழில் குறுகுறு ஒளி!

"பூஜ்யர் என்றாலே சூன்யர் என்றும் அர்த்தம்தானே?" என்று ஒரு புதிரைப் போட்டுவிட்டு, பிறகு, "பூஜ்யம் என்றால் ஸைஃபர் இல்லையா?" என்றாரே பார்க்கலாம்!

பிராமணர்கள் கடல் கடந்து போவது ஆசாரக் காவலரான ஆசார்யப் பெருமானுக்கு உகந்ததல்ல என்று அறிந்த ஓர் அந்தண அடியார், சீமை சென்று திரும்பிய பின், அங்கும் நமது ஆசாரங்களைத் தாம் வழுவாது பின்பற்றியதைப் பெரியவாளிடம் தெரிவித்தால் அதை ஏற்றுக் கொள்வார் என்று எண்ணினார். "இங்கிலான்டில் கூட விடாமல் அமாவாஸைத் தர்ப்பணம் பண்ணினேன்" என்றார்.

"அதாவது நீ போனது போதாது என்று உன் பித்ருக்களையும் மேல் நாட்டுக்கு வரவழைத்து விட்டா யாக்கும்!" என்று பெரியவாள் சிரித்துக்கொண்டே ஒரு வெட்டு வெட்டினார்!

**பெ**ரியவாளின் முன் உளறிக் கொட்டிக் கிளறி மூடிய ஓர் உபந்நியாஸகர், "ஒரே அபத்தமாகச் சொன்னேன். விருத்தியாவதற்குப் பெரியவாள்தான் அநுக்கிரஹிக்கணும்" என்றார்.

"அபத்தம் விருத்தியாவதற்கு நான் வேறே அநுக்கிரஹிக்கணுமா?" என்றார் குறும்பர்!

**"நே**ரு kitchen religion– 'அடுப்பங்கரை மதம்'–என்று ஹிந்து மதத்தைப் பற்றி அடிக்கடி சொல்கிறபோது தாம் ரொம்ப நன்றாகப் பரிஹாஸம் செய்கிறோம் என்று நினைக்கிறார். வாஸ்தவத்தில் அவர்தான் ஹிந்து மதத்தின் ஸாரத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஸர்ட்டிஃபிகேட்– நற்சான்றிதழ்– தருகிறார்! நம் மதம் kitchen religionதான்; அடுப்பங்கரை மதந்தான்" என்பது நம் சிரிப்புச் சிற்பி வைத்த இன்னொரு ஸஸ்பென்ஸ்.

புதிர் அவிழ்கிறது இதோ:

"நாரதர் ஸநத்குமாரிடம் போய் ஆத்மவித்தை உபதேசிக்கச் சொன்னார். அப்போது ஸநத்குமாரர், 'ஆஹார சுத்தௌ ஸத்வ சுத்தி:" என்றுதான் ஆரம்பிக்கிறார். (சாந்தோக்ய) உபநிஷத்திலேயே இந்த விஷயம் இருக்கிறது. 'தூய உணவில் ஆரம்பி; அதுதான் குணம் தூய்மை யாவதற்கு வழி. இப்படி சித்த சுத்தி ஏற்பட்ட பின்தான் படிப்படியாக ஈச்வர ஸ்மரணம், கட்டுக்கள் விடுபட்ட மோக்ஷம் எல்லாம் ஸித்திக்கும் என்று ஸநத்குமாரரே kitchen religion–ல்தான் ஆரம்பிக்கிறார்"!

**மு**டிவாக ஒன்று – இதைக் கூறிமுடிக்கும்போது பெரியவாள் பேராசிரியர் 'கல்கி'யை நினைத்திருப்பாரோ என்று எண்ண வைக்கும் ஒன்று– பார்ப்போம்.

நடராஜப் பெருமானைக் குறித்து நடனத்தின் லய நயம் அற்புதமாக எதிரொலிக்கப் பதஞ்ஜலி முனிவர் "சரண ச்ருங்கரஹித ஸ்தோத்ரம்" என்று ஒரு துதி அருளியுள்ளார். இத் துதிக்கு இப் பெயர் வந்தது ஏன் என்பதற்குப் பெரியவாள் தாமே இட்டுக் கட்டியதாகக் கூறும் கதை:

"நடராஜாவைச் சுற்றியிருப்பவர்களில் நாலு பேர் முக்கியமானவர்கள். ஒருத்தர் நந்தி – அவருக்குக் கொம்பு விசேஷம். இன்னொருத்தர் ப்ருங்கி – இவருக்கு இரண்டுக்குப் பதில் மூன்று கால்; அதனால் கால் விசேஷம். மூன்றாமவர்–வ்யாக்ரபாதர். இவரும் ஈச்வரனிடம் வரம் கேட்டே புலிக்கால் பெற்றிருந்ததால் கால் விசேஷக் காரர்தான். நாலாவதுதான் பதஞ்ஜலி. அவர் ஆதிசேஷ ஸ்வரூபம். பாம்புக்குக் காலும் கிடையாது. கொம்பும் கிடையாதோல்லியோ? அதனால் மற்ற மூன்று பேரும் இவரை மட்டம் தட்டி கேலி பண்ணினார்கள். 'அவனுக்கு என்ன கொம்பு முளைச்சிருக்கோ?' என்று கேட்பதால் கொம்பு ரொம்பவும் பெருமைக்குரியது என்று ஆகிறது. அடியார், பகவத் பாதர் என்றெல்லாம் மஹான்களைச் சொல்வதால் காலும் விசேஷம் பெற்றது என்று தெரிகிறது. இந்தப் பெருமை தங்களுக்கு இருக்கிறதென்பதால், இல்லாத பதஞ்சலியை அந்த மூன்று பேரும் கேலி செய்தார்கள்.

"அவர் உடனே, 'எனக்குக் கொம்பும் காலும் மட்டும்தானா இல்லை? கண், காது என்றுகூடத் தனியாக இல்லை. பார்க்கிற கண்ணேதான் எனக்குக் கேட்கிற காதும். அதனால் 'கட்செவி' என்றே பேர். ஆனால் இது எனக்கு மட்டும் ஈச்வரன் பண்ணியிருக்கிற அநுக்ரஹம் என்றுதான் வைத்துக் கொள்கிறேன். உங்களுக்கெல்லாம் கண் வேறே, காது வேறே. அதனால் நீங்கள் நடராஜாவின் நாட்டியத்தில் கண்ணை ஒருமுகப்படுத்திப் பார்க்கும்போது பாட்டின் அழகிலே அந்த அளவுக்கு காதைக் கொடுக்க முடியாது; தாளகதிகளையும் அந்த அளவுக்கு மனஸில் வாங்கிக் கொள்ள முடியாது. ஸங்கீதத்தில் சொக்கிக் கண்ணை மூடிக் கொண்டாலோ, அல்லது லய ஜதிகளை நன்றாய்க் கவனிக்க வேண்டுமென்று காதைத் தீட்டிக் கொண்டாலோ அப்போது கண்ணின் 'கான்ஸென்ட்ரேஷன்' அந்த அளவுக்கு குறைந்து நாட்டியத்தின் தர்சனானந்தம் குறைந்து விடும். ஒன்றில் கவனம் இன்னொன்றில் 'டிஸ்ட்ராக்ஷ'னை உண்டாக்கும். எனக்குத்தான் கண்ணும் காதும் ஒன்றாயிருப்பதால்

நேத்ரானந்தமும், ச்ரோத்ரானந்தமும் ஒன்றுக்கொன்று clash ஆகாமல் பூரண ரஸாநுபவம் உண்டாகிறது. காலும் கொம்பும் இல்லாத ஒரு ஜீவனுக்குத்தான் ஈச்வரன் இப்படி விசேஷ அநுக்ரஹம் பண்ணினான் என்று லோகத்துக்குத் தெரியும்படியாக நான் காலும் கொம்பும் இல்லாத ச்லோகங்களாலேயே அவனை ஸ்தோத்ரம் பண்ணப் போகிறேன். அவன் அந்த ஸ்தோத்தரத்திலேயே தன்னுடைய ஸ்வரூப வர்ணனையோடுகூட (அதாவது தர்சனானனந்தத்தோடு கூட) ஸங்கீத லய விசேஷமும் (அதாவது ச்ரோத்ரானந்தமும்) ப்ரகாசிக்கும்படி அருளட்டும்' என்று கூறி ஸ்துதியைப் பண்ண ஆரம்பித்தார்.

"'அதென்ன ஸ்வாமி, காலும் கொம்பும் இல்லாத ச்லோகம் என்கிறீர்? ச்லோகத்துக்கு ஏது காலும் கொம்பும்?' என்று நந்தியும் ப்ருங்கியும் வ்யாக்ரபாதரும் பதஞ்ஜலியைக் கேட்டார்கள்.

"அதற்கு அவர், 'அதுவா? கா, ஙா, சா என்று நெடில்களை எழுதும்போது 'கால்' வாங்குகிறீர்களல்லவா? கோ, ஙோ, சோ முதலான எழுத்துக்களுக்குக் 'கொம்புப்' போடுகிறீர்களில்லையா? இப்படிக் காலும் கொம்பும் இருக்கிற எழுத்து ஒன்றுகூட இல்லாமல் என் மாதிரியுள்ள அக்ஷரங்களை வைத்தே ஸ்தோத்ரம் பண்ணப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு இந்த சரண-ச்ருங்க-ரஹித ஸ்துதியைச் செய்தார். அது முழுக்கக் குறில் சப்தங்களாலேயே ஆனது.

"சரண என்றால் கால்; ச்ருங்க என்றால் கொம்பு; ரஹித என்றால் இல்லாத, பதஞ்ஜலியும் சரண ச்ருங்க ரஹிதர்தான். சில ஆசிரியர்கள் தங்கள் பேரிலேயே பத்திரிகை நடத்துகிறது போலத் தம் பேரிலேயே அவர் ஸ்தோத்ரத்தைப் பண்ணிவிட்டார்!"

# பொருந்தக் காட்டும் விருந்து!

ஒன்றோடொன்று இசைவதே தெய்விகமானது. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக ஒன்றே இருப்பதால்தான் இந்த இசைவு ஏற்படுகிறது. பிரபஞ்சம் நானாகோடி வஸ்துக்களால் ஆனபோதிலும், அது பிரபஞ்சம் என்பதாக ஒரு கட்டுக்குள் இருந்து வருவது, இத்தனை கோடிக்குள்ளும் ஏற்பட்டுள்ள அற்புதமான இசைவினால்தான். ஒன்றே கோடி கோடியாயிற்று; எனினும் அத்தனைக்குள்ளும் அது இருப்பதால் எல்லாவற்றையும் ஒரு மகா வாழ்வில், மகத்தான ஒழுங்கில், அழகில், தர்மத்தில், நியதியில் இசைத்து விடுகிறது. ஜட உலக இசைவில் தொடங்கித் தாவர உலகில் இந்த இசைவை மேலும் மலர்வித்து 'அமீபா' என்ற ஒற்றையணு உயிரினமாகி, அப்பால் பல கோடிவிதமான அணுக்கூற்றை உடைய மனித இனத்துக்கு முடிவாக வந்து இசைவின் முற்றிப் பழுத்த நிலையைக் காட்டி விளையாடுகிறது மஹா சக்தி. பிரபஞ்சச் சட்டகமே இசைவுதான் – வேறுபட்டுத் தோன்றுபவை வேறுபடாது இழைவதுதான். இந்த இசைவு, இசை வீணையின் பல மெட்டுக்களில் போல் பல்லுயிர்களில் ஓடி உண்மை மானுடனிடம் தாரஸ்தாயி பஞ்சமத்தைப் பிடித்து விடுகிறது. இதைத்தான் ட்ரைடன் (Dryden),

From harmony, from heavenly harmony
　　This universal frame began:
　　From harmony to harmony
Through all the compass of the notes it ran,
The diapason closing full in Man

என்றான்.

அப்படிப்பட்ட முழு மனிதன் 'man' ஆக இன்றி 'காபிடல் எம்' போட்ட Man, அருமையிலும் அருமையாகத் தான் வருகிறான். அவன் நம்மைப்போல் ஒரு குட்டி ஜீவனின் அற்ப வாழ்க்கையை வாழ்பவன் அல்ல. வேறாகத் தோன்றியும் அனைத்துள்ளும் இசைந்து இழையும் அந்த ஒன்றே ஒன்றின்

மகாவாழ்விலேயே அவன் இசைந்து விடுகிறான். இதுதான் "வாழ்வாங்கு வாழ்வது". அப்படி வாழ்பவன் இந்த வையத்தில் இருந்தாலும் அவனை மனிதன் என்னாமல் தெய்வத்துட னேயே சேர்த்துவிடுகிறோம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

ஒன்றோடு வேறாக இராமல் இசைய வேண்டும் என்றால், தன்னில் சிறிதை இழந்து கொண்டு அந்த இன்னொன்றில் சிறிதை வாங்கிக் கொள்ள வேண்டும். தன்னில் சிறிதை மட்டும் இழக்காமல் பூரணமாகத் தான் என்பதையே இழந்து கொண்டால், "**எல்லாம் அற என்னையிழந்த நலம்**" என்று அருணகிரி சொல்கிற பரம நிலை வாய்க்கும். "**எல்லையில் அந்நலம்**" என்று ஆழ்வார் சொன்ன பூரண நன்மையான மகாசக்தியே முற்றத் தன்னை இழந்து கொண்டவனை ஆட்கொண்டு அவனை நிறைவித்து விடுகிறது. அப்போது அதன் இசைவுலீலை முழுவதையும் இவனும் அதுவாகவே இருந்து கொண்டு அநுபவிக்கிறான்.

இப்படி முழு மனிதராக, எனவே தெய்வமாக, பிரபஞ்ச மகா ஜீவனிடத்தில் தம்மை இணைத்து, இழைத்து, இசைத்துக்கொண்டவர் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்.

இங்கே படே படே வார்த்தையெல்லாம் போட்டிருக்கிறேன். ஆனால் அவரோ வெகு எளிமையாக, அநாயாஸமாக இந்த இசைவு வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தவர். சர்வ சகஜமாக இதை அவர் வெளிப் படுத்தியும் வந்திருக்கிறார். பல விஷயங்களைப் பாங்குற சேர்க்கிற விதரணையின் மூலம் இந்த இசைவை அவர் அன்றன்றும் ஆயிரம் விதத்தில் வெளிக்காட்டினார். அவர் செய்யும் ஒவ்வொரு செயலிலும், சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் பல வேறு விஷயங்களைக் கோத்து நெய்து பட்டாகத் தருகிற அழகைப் பார்த்தோம். முதலில் அது

நமக்குப் புரியாமல்கூடப் போகும். பிறகு "ஓஹோ! இதற்காகத்தான் அப்படிச் சொன்னாரா? ஆஹா! இதற்காகத்தான் அப்படிச் செய்தாரா? என்ன பொருத்தம், என்ன பொருத்தம்!" என்று எண்ணற்ற சந்தர்ப்பங்களில் நாம் வியந்து மகிழ்ந்தோம். இந்தப் 'பொருத்தம்' என்பது பிரபஞ்சத்தின் ஜீவஸாரமான இசைவில் துளிர்த்ததுதான்.

பேதத்தைப் பார்ப்பதாலேயே நமக்குப் பல விஷயங்கள் ஒன்றோடொன்று பொருந்தாமல் தோன்றுகின்றன. அபேதத்தில் ஒன்றிய நம் குருநாதனுக்கோ எங்கும் எதிலும் பொருத்தங்களே இயல்பாகத் தெரிகின்றன. உவமை முதலிய அணிகளால் ஒரு கவியானவன் இப்படிப் பொருந்தாதனவற்றில் பொருத்தம் காட்டுவதாலேயே, அனைத்தும் இசையப் பொருந்திய மகாவாழ்வை நாம் க்ஷணகாலம் அவற்றின் மூலம் ஸ்பரிசித்து விடுகிறோம். அதுவே நாம் பெறும் கலையின்பம் என்று மேல்நாட்டு இலக்கிய ஆய்வாளர் கூறுகிறார்கள். பேதம் நீங்கிப் பொருத்தம் காண்பதில் மேலே மேலே போனால் அதுவே மோட்சம் என்பதால்தான், "ஒன்றிரண்(டு) என்னாத பொருத்தமுறு சுத்த சிவாநந்த வெள்ளம்" என்றும், "பொருந்தி எலாம் செயவல்ல சித்தி" என்றும் வள்ளலார் பாடினார். கவிகளில் கவியாக, சித்தருள் சித்தராக கணத்துக்குக் கணம் சின்ன விஷயங்களையெல்லாம் பொருந்தக் காண்ட திவ்விய மருந்தாக இருந்தவர் நம் பெரியவாள். தனியாகப் பார்த்தால் இது சிறு விஷயம். ஆனால் எண்ணற்ற திருஷ்டாந்தங்களில் இதே பார்வை அவரிடம் இருப்பதைப் பார்த்தால் இதுவே உச்சத்தில் உச்சமாகிறது.

"எண்ணற்ற திருஷ்டாந்தம்" என்றேன். இப் புத்தகத்திலேயே அப்படிப் பல கண்டிருக்கலாம். அவர்களது ம[illegible]பாடல் தொகுப்புகளில் ஆங்காங்கே அதிசயப் பொருத்தங்கள் காணலாம். ஒரு சில இங்கு விருந்திடுகிறேன்.

சம்பிரமமாக, சம்பிரதாயமாகப் பிள்ளையாரில் தொடங்கலாம்.

* * *

**ரா**மேச்வரத்தில் அப்போது நிர்மாணமாகி வந்த ஸ்ரீ சங்கர மடத்துக்குச் சென்னையிலிருந்து சிலா விக்கிரகங் களுடன் சென்ற லாரி வழியே 'ஆக்ஸில்' உடைந்து நின்று விட்டது. இளையாத்த(ங்)குடியிலிருந்த பெரியவாளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

"எந்த இடத்தில் நின்று விட்டது?" என்று வினவுகிறார்.

"அச்சரப்பாக்கத்தில்" என்று பதில் வருகிறது.

பெரியவாள் முகத்தில் புன்னகை விரிகிறது. இடுக்கண் வருங்கால் நகைக்கிறார்!

இளையாத்தகுடிப் பிள்ளையாருக்குத் தாமே தள்ளாத வயதில், துள்ளும் பாலனைப் போல் முட்டிக் கால் தோப்புக்கர்ணம் போடுகிறார்.

ராமேச்வர விஷயம் விக்கினமின்றி நடைபெறவே இந்த விக்நேச்வர வழிபாடு என்பது வெளிப்படை.

மூர்த்தி வழிபாட்டுக்கு மேம்பட்ட முற்றிய அருள் நிலையில் இருந்து இவரே இடையூற்றைத் தீர்த்துவிடலாம். ஆயினும் விக்கினம் தீர்க்கவே ஏற்பட்ட தெய்வத்தை மானுடருக்கு முன்னுதாரணமாகத் தாமே வழிபட்டுக் காட்டுகிறார். அதைச் சொல்லாமல் சொல்லுகிறார்:

"பரமசிவன் பிள்ளையாரை வேண்டிக்கொள்ளாமலே திரிபுர தகனத்துக்குப் புறப்பட்டார். 'எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் பிள்ளையாரை முதலில் பூஜிக்க வேண்டும் என்று லோகத்துக்கு ஏற்பட்ட சம்பிரதாயத்தை ஈச்வரனே செய்து காட்டினால்தானே, மற்ற ஜனங்களும் அப்படிச் செய்வார்கள்? அதனால், ஈச்வரன் இப்படிப் பண்ணாத போது அவர் புறப்பட்ட ரதத்தின் அச்சு முறிந்து போயிற்று.

அப்புறம் அவர் விக்நேச்வரரைப் பிரார்த்தனை செய்து கொண்ட பிறகுதான் அது புறப்பட்டது. அச்சு இற்று முறிந்து போன இடம்தான் – 'அச்சரப்பாக்கம்' என்று இப்போது சொல்லும் அச்சிறுப்பாக்கமான ஊர். அங்கேயே தான் நம் லாரியும் அச்சு முறிந்து நின்றிருக்கிறது!''

எப்பேர்ப்பட்ட பொருத்தம்! பொருந்தாமல் இடையூறு ஏற்பட்டதிலேயே ஒரு பொருத்தம் கண்டுவிட்டார்.

''கைலாஸ் சங்கரன் ரதத்தில் போனபோது எங்கே அச்சு முறிந்ததோ, அதே ஊரில் காலடி சங்கரர் லாரியில் போகிறபோது ஆக்ஸில் உடைந்திருப்பதால் இவர் அவனுடைய அவதாரமே என்றும் நிரூபணம் ஆகிறது!'' என்று பின்னரும் ஒரு பொருத்தம் காட்டிவிட்டார்!

* * *

**ரா**மேச்வர சங்கர மடம் அற்புதமாக நிர்மாணமாயிற்று. கும்பாபிஷேக நன்னாள். அங்கே பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீ பகவத்பாத பிம்பத்துக்கு ஐந்து ஜதை சாமரம் வரவழைத்து வீச வேண்டும் என்றும், விநாயகர் மீது ஸ்ரீ பகவத்பாதாள் செய்துள்ள '*முதாகராத்த*' எனத் தொடங்கும் கணேச பஞ்சரத்னத்தை நல்ல தாளக்கட்டுடன் சொல்லிக் கொண்டே சாமரம் வீச வேண்டும் என்றும் பெரியவாள் ஆக்ஞாபித்தார்.

'ஐந்து ஜதை சாமரம்' என்றதன் பொருத்தம் என்ன தெரியுமா? மேற்சொன்ன 'பஞ்சரத்னம்' இயற்றப்பட்டுள்ள விருத்தத்துக்குப் 'பஞ்ச சாமரம்' என்றே பெயர்! சாமர கர்ணரான கணபதியை வாக்காலேயே பஞ்ச சாமரம் வீசி ஆதி ஆசார்யாள் ஆராதித்தார். இன்றைய ஆசார்யாள் அந்த ஆராதனையை ஸ்தூலமாகவே தமது மூலவருக்குச் செய்து விட்டார்!

* * *

"சங்கர ஜயந்தி – சங்கரர் வேறு, ஜயந்தி வேறு இல்லை. ஜயந்தியே சங்கர" என்று கூறி, கால தத்துவம் கடந்த வஸ்து ஆசாரியராக அவதரித்த காலத்திலேயே ஒரு பொருத்தம் காட்டினவர் நம் பெரியவாள்.

'அதெப்படி ஜயந்தியே சங்கரவாகும்?' என்றால்: அக்ஷரங்களை இலக்கங்களாக வைத்துக் கணக்குப் போடும் 'கடபயாதி ஸங்கியை'ப்படி 'ச(ம்)' என்பது ஐந்து; 'க' என்பது ஒன்று; 'ர' என்பது இரண்டு. சம்–க–ர என்பது 5–1–2. இதை திருப்பிப் போட வேண்டும் என்பது ஸங்கியை விதி. எனவே சங்கரர் அவதரித்த தினம் 2–1–5. ஆம், ஸ்ரீசங்கர ஜயந்தி மாதங்களில் இரண்டாவதான வைகாசியில், ஒன்றாவதான சுக்லபட்சத்தில், ஐந்தாவதான பஞ்சமி திதியில் நிகழ்கிறது!

இந்த அற்புதப் பொருத்தம் தோன்றியது நம் பெரியவாள் அறிவில்தான்!

"ஸ்வாதித் திருநாள், ஆயில்யம் திருநாள் என்றெல்லாம் திருவாங்கூர் ராஜாக்கள் ஜன்ம நக்ஷத்ரத்தையே பெயராக வைத்துக் கொள்கிறது. அந்த மலையாள தேசத்திலேயே பிறந்த ஆசார்யாளுக்கோ ஜன்மித்த மாஸம், பக்ஷம், திதிகள் ஒன்று சேர்ந்து பெயராகிவிட்டது" என்று பின்னரும் ஒரு பொருத்தம் கூட்டினார்!

* * *

பெரியவாள் ஒருவருடைய குலதெய்வத்தையோ, குடி வழக்கத்தையோ, அல்லது அவரது மனக்குறை, உடற் குறையையோ பொருத்துப் பிரஸாதம் வழங்கும் பொருத்தம் அதிசயமானது. இது அன்றன்றும் நடைபெறுவது. ஓரிரண்டு திருஷ்டாந்தம் மட்டும் சொல்லலாம்.

காட்டுப்பள்ளியில் பெரியவாள் முகாமிட்டிருந்த சமயம்.

ஒரு பக்தர் மனத்துக்குள் 'தேவீ புஜங்க'த்தில் வருகிற '**கதா வா மனோ மே ஸமூலம் விநச்யேத்?**' (எப்போது என் மனம் வேரோடு வெட்டி மாய்க்கப்படும்?) என்ற வரியையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். மனத்துக்குள்தான்.

தூய பொற்சோதியாகப் பூஜைக்குப் பெரியவாள் வருகிறார். வெட்டிவேரையே உருட்டி ருத்ராக்ஷங்கள் போலாக்கிச் செய்த மாலை இந்த மானுட மகாதேவனின் திரு மார்பில் திகழ்கிறது. பூஜைக்கு அமர வேண்டிய பெரியவாள் இந்த பக்தரிடம் வருகிறார். அந்த வெட்டி வேர் மாலையைத் தம் கழுத்திலிருந்து கழற்றி பக்தரது கையில் அழுந்த வைக்காத குறையாக மெத்தெனப் போட்டு அநுக்கிரஹிக்கிறார்.

மனத்தையே மாய்க்கும் வாசகத்தின் ஜபத்தில் இந்த அடியார் இருந்தார் எனினும், உண்மையில் மனம் முழுவதுமே அற்றுத் தீர்ந்துவிட வேண்டும் என எண்ணவில்லை. தாமே அநாவசியமாக ஏற்படுத்திக் கொண்ட ஒரு பெரிய புது பந்தம் மட்டுமே வெட்டி எறியப்பட வேண்டும் என்றுதான் தவித்து வந்தார். என்ன ஆச்சரியம்! அவர் சித்தத்தை ஸதாஸர்வ காலமும் பிடித்திழுத்து வந்த அந்த பந்தம், அன்று அவர் காட்டுப்பள்ளியிலிருந்து புறப்படும்போது, சுவடுகூட இல்லாமல் வற்றி மறைந்தே விட்டது! இது நடக்கக்கூடிய காரியமா என்று அவருக்கே அதிசயம். ஏன் நடக்கக் கூடாது? பெரியவாளின் கிருபா வேகத்தில் எதுதான் நடக்க முடியாது? "பந்தத்தை வெட்டி வேரோடு வீழ்த்து (ஸமூலம் விநச்யேத்) என்று பிரார்த்தித்தோம். வெட்டிவேர் மாலையையே பிரஸாதமாகத் தந்தார். அதனாலேயே வலிய தொந்தத்தை எளிசாக வெட்டி விட்டார்" என்று தெளிந்தார்.

* * *

**ம**டத்து ஆஸ்தான வித்வானாக ஒரு மிருதங்கக் கலைஞரை ஸ்ரீ பெரியவாள் அங்கீகரித்த தினம், பூஜையில்

அவர் 'தனி' வாசித்தார். பூஜை முடிந்து பிரஸாதம் வழங்குகையில் பெரியவாள் நந்திகேச்வரரிடம் செல்கிறார். சிவ நிவேதனம் நந்தியம்பெருமானுக்கு அர்ப்பிக்கப்பட்ட பின்னர்தானே மற்றோருக்கு உரியதாகும்? முதலில் சந்திரமௌலீசனுக்கு நிவேதனமாகிப் பிறகு நந்திகேசனுக்கு அர்ப்பிக்கப்பட்ட வாழைப் பழங்களைத் தேடி எடுத்து வந்து, மிருதங்க வித்வானுக்கு வழங்குகிறார் பெரியவாள்.

இதென்ன எவருக்குமில்லாத பிரஸாதம் இவருக்கு மட்டும் என்று பலருக்கு வியப்பு. ஆனால் பெரியவாள் பொருத்தமில்லாமல் ஒன்று செய்வாரா?

இவர் மிருதங்க வித்வான். நடராஜப் பெருமானின் நடனத்தில் மிருதங்கம் வாசிப்பவர் நந்தியம்பெருமான். "அடாடா, நம் வாத்தியத்துக்கான ஆதி ஆசாரியனின் பிரஸாதத்தையே வழங்கி விட்டாரே" என்று அந்தக் கலைஞர் மெய்யாலுமே கண்ணீர் வடித்தார்.

* * *

பெரியவர்கள் இறைவனாக இருந்து பிரஸாதம் வழங்குவது ஓர் அழகு எனில், இறைவனுக்கு அவர் காணிக்கை செலுத்துவதோ அதனினும் அழகு. ஒரு கோவிலிலுள்ள மூர்த்தி எனில் அந்த ஸ்தல ஐதிஹ்யத்துக்குச் சிறப்புறப் பொருந்தும்படி காணிக்கை செலுத்துவார்.

ஸ்ரீகாளஹஸ்தி கும்பாபிஷேகத்துக்கு இப்படித்தான் காணிக்கை அனுப்பினார். ஸ்வாமியின் அபிஷேகத்துக்குப் பால், தேன், கங்கையும், அணிவிப்பதற்குப் பட்டு வஸ்திரமும் அனுப்பியதை சாதாரண வழக்காகவே நாம் எண்ணக்கூடும். ஆனால் அவரோ பொருத்தம் பார்த்தே இவற்றை அனுப்பினார். "கண்ணப்பரின் எச்சிலைப் பிரீதியோடு ஏற்றவர் காளத்திநாதர். அதனால் அவருக்கு எல்லாம் எச்சில் காணிக்கையாகத்தான் இருக்க வேண்டும். பால் எச்சிலானது. கன்று தாய் மடியில் வாய் வைத்து எச்சிலாக்கினாலொழியப்

பால் கிடைக்காது. தேனீக்கள் வாயாலேயே எடுத்துச் சேர்க்கும் தேனும் எச்சில். கங்காதி தீர்த்தங்களில் மீன்கள் வாயைத் திறந்து திறந்து மூடிக்கொண்டு ஜலத்தைக் கொப்பளித்துக் கொண்டே போகும். அதனால் கங்கையும் எச்சில். பட்டுப்பூச்சி வாயால் நூற்பதுதானே பட்டிழை? அதனால் பட்டு வஸ்திரமும் எச்சில். காளஹஸ்தீச்வரருக்கு எல்லாம் எச்சிலாக அனுப்பியிருக்கிறேன்!'' என்றார்.

* * *

**'க**ண்டிரமாணிக்கம் செட்டியார்' என்று அவரை வெளியுலகில் சொல்வார்கள். 'ஆனந்தம் செட்டியார்' என்றாலே மடத்தில் அதிகம் பேருக்குத் தெரியும். தொழிலை விட்டு, காஷாயம் கட்டிக் கொண்டு பெரியவரிடம் வந்து விட்டார். ''ஆனந்தம் ஆனந்தம்'' என்று ஓயாமல் சொல்லிக் கொண்டு பெரியவாளைத் தரிசித்த வண்ணமிருப்பார். மடம் போகிற இடத்துக்கெல்லாம் தாமும் போய் பெரியவர்களுக்குக் கட்டி கட்டியாகச் சாம்பிராணியும் கப்பூரமும் ஏற்றிக் காட்டிக் கொண்டேயிருப்பார்.

ஒருநாள் பெரியவாள் அவரிடம் திருவாலங்காட்டுக்குப் போய் இருக்கும்படி ஆக்ஞாபித்தார்.

ஆனந்தம் செட்டியாரும் அவ்விதமே சென்றார். சிறிது காலத்திலேயே அங்கிருந்து **'நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தத்தை'**ச் சென்றடைந்து விட்டார்.

'அவரது அந்திம சமயத்தை முன்பே அறிந்த பெரியவாள் அவரைக் குறிப்பாகத் திருவாலங்காட்டுக்கு அனுப்புவானேன்?' என்றால், ''அவர் காரைக்கால் அம்மையார் குலம். காரைக்காலம்மையாருக்குத் திருவாலங்காட்டில்தான் முக்தி'' என்கிறார்கள் ஸ்ரீ பெரியவாள். அங்கே அவளது ஜீவ சாந்நித்தியம், தன் குல வழித் தோன்றலிடம் விசேஷமாகச் செயற்பட்டு, அதன் கர்ம பாரத்தைத் தீர்த்து வைத்திருக்குமோ? நாம் வாழ்வதற்குப் பொருத்தமான இடம்

பார்க்கிறோம். பெரியவாள் வாழ்வை முடிப்பதற்குக்கூட இடப் பொருத்தம் செய்து கொடுக்கிறார்!

* * *

ஸ்ரீமுக வருஷம் தில்லைக்கு முதன்முறை வந்த பெரியவர்கள் கண்களை முடிக்கொண்டே நகருக்குள் வருகிறார்கள். கண் மூடித் தியானத்தில் இருக்கிறார் என்றோ, வெளிச்சத்தின் கூச்சத்தால் கண் மூடியிருக்கிறார் என்றோ பெரும்பாலார் நினைத்திருப்பார்கள். மடத்தில் மிக நெருங்கி யிருப்பவர்களுக்கு மட்டும் இது சற்று வித்தியாஸமாகப் பட்டது. ஏனெனில் சிதம்பரத்துக்கு முந்திய முகாமான குமராக்ஷியை விட்டுப் புறப்படும்போதே பெரியவாள் கண்ணை மூடிக் கொண்டுவிட்டார். சிதம்பரப் பட்டணப் பிரவேசம் முழுவதும் பெரியவாள் கண்ணைத் திறக்காமல் இருந்ததோடு, பிறகு அங்கு ஜாகைக்கு வந்த பின்னரும் அவ்விதமேயிருந்து நித்திரை கொண்டு விட்டார்.

மறுநாள் அதிகாலை மடத்திலும் சரி, கோவில் தீக்ஷிதர்கள் உட்பட சிதம்பர மக்களுக்கும் சரி, எவருக்கும் தெரியாமல், ஒரே ஒரு கிங்கரரை மட்டும் அழைத்துக் கொண்டு பெரியவாள் 'கோயில்' என்றே பெருமை கொண்ட சபாபதி ஆலயத்துக்குச் சென்றார்கள். அப்போதும் கண் திறக்கவில்லை. ஏதோ பெயருக்குக் கிங்கரர் வழி சொன்னதாக அர்த்தம். அரையிருட்டு வேளையில் இந்தக் குருட்டு வேஷத்திலேயே குருபிரான் சிவகங்கைத் திருக்குளத்தில் தீர்த்தமாடி, மாற்றுத் துவராடை புனைந்து, திருநீறு அணிந்து, பிரத்தியக்ஷப் பரமசிவமாக சித்ஸபையை அடைந்தார். உஷக்கால பால் நைவேத்தியத்துக்காக மணியடிக்கப் பொன்னம்பலத்தின் மணிக் கதவுகள் திறந்தன.

பெரியவாளின் கண்களும் திறந்தன. நேரே நடராஜனின் சௌந்தரிய சமுத்திரமான மூர்த்தியில் மீன்களாக ஆழ்ந்து திளைத்தன!

***"தர்சனாத் அப்ரஸதஸி"*** – "காண முக்தி சிதம்பரத்தில்" என்பதைக் காட்டிக் கொடுத்து விட்டார்! ஆரூரில் பிறந்தாலும், அருணையை நினைந்தாலும், காசியில் மரித்தாலும், கோயிலில் (தில்லையில்) கண்டாலும் மோக்ஷம் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே ஞான சிதம்பரத்தில் இந்த ஊனக் கண் காணவேண்டிய முதல் வஸ்து ***'என் கண்ணின் மணியே, குருமணியே'*** என்று அடியார் பாடிய நடனசிகாமணியைத்தான் என்று நமக்குக் காட்டிவிட்டார் குருமணி. 'குமாரக' என்றால் 'கண்மணி' என்றொரு பொருள். 'அக்ஷி' என்றாலும் கண்தான். இந்தப் பெயர்ப் பொருத்தம் பார்த்துத்தான் 'குமராக்ஷி'யிலேயே தம் திவ்விய நயனங்களை மூடிக்கொண்டு விட்டார்.

அப்புறம் அந்த ஸ்ரீமுக ஆண்டிலே ஈசனின் திருமுகத்தை ஈசனின் அவதாரத் திருமுகம் 'முகமுக'மாக தரிசித்த பொருத்தம்'!

* * *

**ந**டராஜப் பெருமான் விஷயமாக முன்பே பார்த்த இன்னொரு பொருத்தம் — 'சிரிக்க வைத்தே சிறக்க வைப்பார்' என்ற கட்டுரையில் காலும் கொம்பும் இல்லாத பதஞ்ஜலி காலும் கொம்பும் இல்லாத துதி செய்த பொருத்தத்தைக் பெரியவாள் வாக்கில் கேட்டதையும் நினைவு கொள்வோம்.

* * *

**ப**ழைய கோயில் ஒன்றில் பதஞ்ஜலி பிம்பத்தின் கீழ் 'பதஞ் சொல்லி' என்று எழுதியிருக்கிறது. பெரியவாளின் கூடச் சென்றவர்கள் 'தப்பும் தாறுமாக எழுதியிருக்கிறான்' என்று சிரிக்கிறார்கள். பெரியவாளும் சிரிக்கிறார். ஆனால் இது இசைவு கண்ட இனிய சிரிப்பு. தப்பிலும் கூடச் 'சரி'யைக் காணும் பொருத்தக்காரர் அல்லவா? அதனால் "தப்புமில்லை, தாறுமில்லை. பதஞ்ஜலிதான் வியாகரண மஹாபாஷ்யம் எழுதினவர். பதங்களின் லக்ஷணங்களை யெல்லாம் அதிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார். வியாகரண

சாஸ்திரத்திற்கே பதம் என்று ஒரு பெயர். அதனால் அவர் 'பதஞ்சொல்லி'யும் கூடத்தான்'' என்கிறார்.

''அறியாமையில்கூட ஒரு ஞானம் இருக்கிறதென்று இதிலிருந்து தெரிந்து கொண்டேன்'' என்று அர்த்த புஷ்டியுடன் கூறுகிறார்.

* * *

ஒரே விதமான இலக்கிய மரபின் அடிப்படையில் பிறந்த திருப்பாவை – திருவெம்பாவையைக் கொண்டு சைவ, வைணவச் சழக்கு நீங்கி அவை இசையச் செய்தவர் ஸ்ரீ பெரியவாள். அர்த்தநாரீச்வரர் போல், திருவெம் பாவைக்குரிய ஈசனும், திருப்பாவைக்குரிய கண்ணனும் ஒரே மூர்த்தியில் பாதிப்பாதியாக இணைந்த சங்கரநாராயணனா யிருப்பதை வலியுறுத்துவார். இவர்கள் ரூபத்தில் பாதிப் பாதியாகச் சேர்ந்திருப்பவர்கள் என்பது முன்பே பலர் சொன்னதுதான். காலத்திலும் அப்படியே இவர்கள் ஆளுக்கொரு பாதியாக இருப்பதாக நமக்குப் பொருத்தம் காட்டியிருப்பது பெரியவாள்தான்! ''ஒரு வருஷத்தை இரண்டாக்கிக் கொண்டால் ஒரு பாதி கண்ணன், மறுபாதி ஈச்வரன். அந்த இரண்டு பேருக்கே ஜகத்குரு பிருதம் உண்டு. கறுப்புக் கண்ணன் தேவர்களுக்கு ராத்திரியான தக்ஷிணாயனத்தில் அவதாரம்; ஜ்யோதிர்லிங்கமோ அவர்களுக்குப் பகலான உத்தராயணத்தில் உத்பவம். கண்ணன் பிறந்த கோகுலாஷ்டமிக்கும், லிங்கம் உத்பவித்த சிவராத்திரிக்கும் இடையே சரியாக 180 நாட்கள் இருக்கும்'' என்ற அரிய விஷயத்தை அவர் சொல்லித்தானே நாம் அறிகிறோம்? சந்தேகமிருந்தால் பஞ்சாங்கத்தை எடுத்து வைத்துக் கொண்டு பாருங்கள்.

* * *

புராண விஷயமாகத்தான் என்றில்லை. எந்தத் துறையிலும் இப்படிப் பொருத்தம் காட்டுவார். சரித்திர ரீதியில் ஒன்று பாருங்கள்.

"சோழனைச் 'சோள' என்றே சம்ஸ்கிருதத்தில் சொல்கிறோம். சம்ஸ்கிருதத்தில் 'ழ' இல்லாததால்தான் 'ள'வாக்கி விட்டார்கள் என்று நினைக்கலாம். எனக்கோ 'சோள' என்பதே ரொம்பப் பொருத்தமாய்த் தோன்றுகிறது. சோளத்தின் விசேஷம் என்ன? தானிய வகைகளுக்குள்ளேயே சோளப் பொரிதான் தனக்கு உறை போட்டுக் கொண்டே பிறக்கிறது. சோளம் என்றாலே உறைதான். இதனால்தான் சட்டைக்குக் கூட 'சோளி' என்று பெயர் இருக்கிறது. சோழ நாட்டின் தலைநகர் எது? உறையூர் தானே?"

ஆஹாகாரம் போடத் தோன்றுகிறதல்லவா?

* * *

**இ**டையூறு, தவறு, தவறு மாதிரித் தோன்றுவது எல்லாவற்றிலுமே இப்படிப் பொருத்தங்களைக் காட்டியிருக்கிறார். குற்றம் செய்து விட்டோமே என்று அடியர் குழம்பிய ஒரு சமயத்திலும், பொருத்தம் காட்டி, வருத்தம் தீர்த்து யாவரையும் குலுங்கச் சிரிக்க வைத்தார்.

சென்னையில் ஒரு வித்வன்மகாசபைக்கு எழுந்தருளினார். பலர் பேசினார்கள். அவர்கள் எக்காரணத்தாலோ முதலில் ஸ்ரீ பெரியவாளுக்கு அளித்திருக்க வேண்டிய வரவேற்புரையை வாசித்து அர்ப்பணம் செய்யாமலிருந்து விட்டார்கள். விழா மத்தியில்தான், முதலில் செய்ய வேண்டியதை மறந்தோமே என்று நிர்வாகிகள் வெட்கமும், வருத்தமும் அடைந்தார்கள். ஒருவர் கூசிக் குறுகிக் கொண்டு, "ஸபா ஜனப் பத்திரிகை வாசித்துத் தரணும்" என்று பெரியவர்களிடம் ஈன ஸ்வரத்தில் கூறினார். அவர்களது கலக்கத்தைப் புரிந்து கொண்டார் அருளாளர். பலத்த களிப்புச் சிரிப்புடன், "ஸ பாஜனப் பத்திரிகைதானே? எப்போது தந்தால் என்ன?" என்ற இரண்டே வாக்கியங்களைப் பெரியவாள் சொன்னதுதான் தாமதம், கூடியிருந்தவரெல்லாம் புலவர்களானதால் புளகாங்கிதமாகிக் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்.

பாஜனம் என்றால் பக்தி செய்வது என்றும், பங்கு போட்டுக் கொள்வது என்றும் அர்த்தம். பக்தியோடு தரும் பத்திரிகை 'ஸ பாஜன'ப் பத்திரிகை. பக்திக்கு முன்பின் என்ற காலநிர்ணயம் எதற்கு? இன்னும் ஒரு படி மேலே போனால், பெரியவாள் சபையோரை பக்தர் என்றும் தம்மை பக்திக்குரியவர் என்றும் பிரித்து எண்ணவில்லை. எல்லோரும் தம்மோடு ஒன்றுகூடி ஆனந்தத்தைப் பங்கு போட்டுக் கொள்பவர்கள் என்றே எண்ணினார். அப்படி பங்குதாரர்களாக ஒட்டி நிற்கின்றபோது, சம்பிரதாய விதிகளுக்கு அங்கே ஏது இடம்?

'ஸபா ஜன'ப் பத்திரிகையை 'ஸ பாஜன'ப் பத்திரிகையாக க்ஷண நேரத்தில் மாற்றி, ஒரு கூட்டத்தின் கூம்பிய மனத்தையே சடேரென மலர்வித்து மாற்றிய அருமையே அருமை!

மகான்களின் மகத்தான சாதனைகளை விட அவர்களது சின்னச் சின்னக் காரியங்களிலேயே அதிக மகிமை விளங்குகிறது என்று விவேகாநந்தர் சொன்னதற்கு இதெல்லாம் எடுத்துக்காட்டு.

* * *

**பி**ள்ளையாரில் தொடங்கினோம். சம்பிரமமாக ஆஞ்ஜநேய ஸ்வாமியுடன் தலைக்கட்டுவோம்.

முதலில் சொன்ன ராமேச்வர சங்கர மடத்துக்கே அந்தாதி விதிப்படி திரும்புவோம்.

அக்னி தீர்த்தத்திற்கு எதிரே அமைந்த அம்மடத்தின் வாயிலில் நெடுங்காலமாகவே இருந்துவந்துள்ள மாருதிப் பிரபுவைப் புனர் பிரதிஷ்டை செய்கிறார் ஸ்ரீ பெரியவாள்.

மடத்தின் மத்திய ஸ்தூப உச்சியில் நாலு சீடர்களுடன் ஸ்ரீ பகவத்பாதாள். அவருக்கு முன்னுக்கு முன்னாக வாயிலில் வாதாத்மஜன்.

ஆயின், கடைசியில் வரும் மங்களப் பூர்த்தியின் மூர்த்தி முந்தி வந்து நிற்பது? ஆம், இத்தனை பொருத்தங்கள் கண்ட நமக்குப் பொருந்தாத ஒன்றாகவன்றோ இடறுகிறது?

சரி, இதோ பொருந்தக் காட்டும் நமது பெருந்தகையார் அநுமனின் கீழ் பொறிக்க வேண்டுமென்று சொல்லி ச்லோகம் ஒன்று கூறுகிறாரே, அதென்ன கேட்போம்!

ஆஹா!

**புரதோ மம பாது ஹநூமதோ மூர்த்தி:**

என்றல்லவோ அது முடிகிறது?

என்ன பொருத்தமப்பா! எந்த ஆசார்யாளுக்கு இன்றைய அவதாரர் பஞ்ச சாமரம் வீசி 'கணேச பஞ்சரத்ன'த்தை அர்ப்பணித்தாரோ, அதே ஆசார்யாள் 'ராமாயண மஹாமாலா ரத்ன'மான அநுமந்தனைத் துதித்துச் செய்த 'ஹநுமத் பஞ்சரத்ன'த்தில் வருவது இச்சுலோகம். இதில் அந்த முடிவுப் பாதம் ஆசார்ய பிம்பத்திற்கு **முன்னால்** ஆஞ்ஜநேயன் விளங்குவதற்கு அற்புதமாகப் பொருந்துகிறது.

"**புரதோ** மம பாது ஹநூமதோ மூர்த்தி:" என்றால் "எனக்கு **முன்னால்** அநுமனின் மூர்த்தி பிரகாசிக்கட்டும்" என்றே பொருள்.

அநுமன் போலவே அபரிமித சக்தி—புத்தி–பக்திகளும் அதற்கீடான அடக்கப் பாங்கும் வாய்ந்த பெரியவாள் என்றும் நம் அகக் கண் முன் பிரகாசிக்கட்டும்!

சுபம்